# பூவரசம் பொழுது 2002







புங்குடுதீவு கல்விக்கூடங்களின் சிறப்பிதழ்

புங்குடுதீவு பழையமாணவர் சங்கம் - கனடா

OSAP CANADA

VIMIKA

Vimika Banquet Halls

திருமணம், பிறந்ததினம், பூப்புனித
நீராட்டு விழா, கல்லூரி ஒன்றுகூடல்
மற்றும் சகல வைபவங்களுக்கும்





தமிழர்களின் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற விமிக்கா
நிர்வாகத்தின் கீழ் **Woodbine Banquet & Convention Halls** இல்
100 பேர் முதல் 2000 பேர் வரை அமர்ந்து விமரிசையாக
நிகழ்வுகளைக் கொண்டாடக்கூடிய 3 அழகிய சொகுசு
மண்டபங்கள்

**தொடர்புகளுக்கு**
**Giri or Perry**
**Tel: 416-704-9755, 416-746-1223**
**Cell: 416-917-1518**

ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைய உழைப்போம்

# பூவரசம் பொழுது! '2002

## சிறப்பு மலர்

அமரர் அ.க. கண்ணையா மாஸ்ரர் நினைவுக் கலையரங்கு

December 07, 2002
Saturday

Sir. John A. Mac Donald C.I
2300 Pharmacy Avenue
Scarborough, Ontario

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் - கனடா

www.osapcanada.com

TORONTO

# Mel Lastman



**Mayor**
City Hall, 2nd Floor
100 Queen Street West
Toronto, Ontario M5H 2N2

**Tel:** (416) 395-6464
**Fax:** (416) 395-6440
mayor_lastman@city.toronto.on.ca

**A Message from Mayor Mel Lastman**

It is with pleasure that I extend greetings and warm wishes to everyone attending the 7th annual Art and Cultural Variety Program, 'Poovarasam Pozhuthu 2002."

I applaud the many associations and organizations that promote and preserve the rich traditions and heritage of our many cultural groups. Each year, this wonderful art and cultural variety program provides an excellent opportunity for people of all ages to come together to celebrate this special occasion with family and friends.

Toronto is recognized as a culturally diverse city. It is home to people from 170 different countries, speaking more than 100 languages and dialects. Together, they create a vibrancy and tremendous spirit that make our City truly unique.

On behalf of Toronto Council and the 2.5 million people of our great City, I congratulate and thank the organizers for making this event possible, and offer my best wishes to everyone for a most memorable and joyous celebration.

Cordially,

Mel Lastman


Mel Lastman
Mayor

December 7th, 2002

3850 Finch Ave., East
Suite 206
Scarborough, Ontario
M1T 3T6
Tel: (416) 321-5454
Fax: (416) 321-5456

HOUSE OF COMMONS
CHAMBRE DES COMMUNES
OTTAWA CANADA
K1A 0A6

Room 231, West Block
House of Commons
Ottawa, Ontario
K1A 0A6
Tel: (613) 992-4501
Fax: (613) 995-1612



December 7, 2002

Dear Friends,

I would like to commend the Old Students' Association of Pungudutivu-Canada on hosting the 7th Annual Art & Cultural Variety Program "Poovarasam Pozhuthu 2002".

Through the hard work of the organizers, the students, all the participants and supporters, everyone in attendance will share in the artistry that is presented tonight.


In Canada, we live in very diverse communities. Sharing our traditions with each other will help us to respect one another, accept those around us, celebrate our differences and embrace our heritage.

Wishing you many more successful years.

Sincerely,

James Karygianni

Jim Karygiannis, M.P.
Scarborough-Agincourt



# மண்ணை நோக்கிய பயணங்கள்.....

புலம் பெயர்ந்து அகதியாக வந்த நாட்டிலும் இயந்திர மயமான வாழ்க்கைச் சூழலில் வாழும் நாம் புத்துணர்வோடு புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் என்ற அமைப்பினை 1996 ஆம் ஆண்டு நிறுவி எமது மக்களின் கலை, பண்பாட்டு, பாரம்பரிய கலைத் திறமைகளையும், கலை வெளிப்பாடுகளையும், தமிழ்மொழித் திறன்களையும் வெளிக் கொணர்வதற்கு களம் அமைத்துக் கொடுத்து வருவதோடு, தமிழ் ஈழத்தில் இடம் பெயர்ந்த தமிழ் மக்களின் துயர் துடைப்பு பணிகளிலும், எமக்கு கல்விச் செல்வத்தை வழங்கிய கல்விச் சாலைகளுக்கும், கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும், விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கும் எம்மால் முடிந்த உதவிகளை வழங்கி வந்துள்ளோம்.

அத்தோடு வருடா வருடம் எல்லா ஊர் மக்களாலும் ஆவலோடு எதிர்பார்த்திடும் "பூவரசம் பொழுது" எனும் கலை மாலைப் பொழுதினை நடாத்தி எமது மண்ணின் மக்களின் ஒற்றுமையையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்தி வருகின்றோம். இந்த வெற்றிக்கு எல்லாம் காரணமாய் அமைந்து விளங்கி வருபவர்கள் பெறுமதி மிக்க நேரங்களையெல்லாம் அர்ப்பணித்து என்னுடன் உடன் இருந்து செயல்பட்டு வரும் நிர்வாக சபையின் உறுப்பினர்களும், ஆரம்பம் முதல் இன்று வரை நிதி உதவி வழங்கிக் கொண்டிருக்கும் எமது மண்ணின் வர்த்தக அன்பு நெஞ்சங்களும், மதகுருமார்களும் என்பதனை பெருமையுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

கடந்த பத்து ஆண்டுகளாக அந்நியரின் ஆக்கிரமிப்பினால் கொடிய போர், மரணம், பசி, நோய், அடிக்கடி இடப்பெயர்வு என பல அவலங்களையும், அழிவுகளையும் தாங்கிக் கொண்டு தாம் பிறந்த தமிழ் மண் மீது கொண்ட பற்றுதலினால் இன்று வரை சொந்த மண்ணில் வாழந்து வரும் எமது உடன் பிறப்புக்களுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டிய வரலாற்றுக் கடமை எமக்கு முன்னே காத்திருக்கின்றது. திட்டமிட்ட தாக்குதல்களாலும், பொருளாதாரத் தடைகளாலும் சிதைக்கப்பட்டுள்ள எம் உறவுகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி மீண்டும் ஓர் வளம் கொழிக்கும் கவர்ச்சி மிக்க தேசமாக கட்டியெழுப்பி இடம் பெயர்ந்த எமது மண்ணின் மக்கள் அனைவரும் திரும்பவும் வந்து தங்களின் சொந்த இருப்பிடங்களில் குடியேறி வாழ்க்கையை தொடர்வதற்கு வேண்டிய அனைத்து தேவைகளை நிறைவேற்றி வைக்கும் பணி புலம் பெயர்ந்து வாழும் அனைத்து மக்களின் கடமையாகும்.

தீவகத்தில் எமது புங்குடுதீவு பிரதேசம் தான் மிகுந்த பாதிக்கப்பட்ட ஊராக காட்சியளிக்கின்றது. நிறைந்த அழிவுக்கும், கடின உடல் உழைப்பினால் கட்டப்பட்ட வீடு வாசல்கள் எல்லாம் உடைக்கப்பட்டு பொருட்கள் எல்லாம் சூறையாடப்பட்டும், அழகுபடுத்திய வீதிகளும், ஒழுங்கைகளும், பாழடைந்த வீடுகளும் காடு மண்டிக்கிடக்கின்றன என்பதை அறிகின்ற பொழுது இதயம் வேகிறது. காலத்தின் கட்டாயத்தில் இரவோடு இரவாக மக்களோடு மக்களாக புறப்பட்டு உயிரை உடலில் சுமந்து கொண்டு, உடுத்த உடுப்போடு ஓடி வந்தவர்களில் நானும் ஒருவன். எமது மண்ணின் மக்கள் யாழ் வந்து பட்ட துன்பதுயரங்களை நேரிற் கண்டு இந்த மண்ணுக்கு வந்து அவர்களுக்கு உதவுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட சங்கம் தான் எமது புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம். எமது சங்கம் முடிந்தவரை அவர்களின் துயரங்களில் பங்கு கொண்டு வந்துள்ளது.

புங்குடுதீவு மண்ணின் கல்வி பயிலும் 5 பாடசாலைகளின் மாணவர்களிற்கு மதிய உணவு வழங்கல் திட்டத்திற்கும், ஆசிரியர் பற்றாக்குறையினை நீக்குமுகமாக தொண்டர் ஆசிரியர்களை நியமித்தும், மாணவர்களின் விளையாட்டுதுறையினை ஊக்குவித்தும், பாடசாலையின் உடனடித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு வேண்டிய நிதி உதவிகளை வழங்கி செயல்படுத்தி வந்துள்ளோம். பாடசாலை அதிபர்களும் வரவு செலவு விபரங்களை உடனுக்குடன் எமக்கு அறியத்தருகின்றனர். தற்பொழுது ஏற்பட்டுள்ள சமாதான சூழலில் இடம் பெயர்ந்த மக்களின் சிறு தொகையினர் ஊர் திரும்பி வருகின்றனர். பாடசாலைகளில் மாணவர்களின் வரவும் சற்று அதிகரித்துள்ளதாக அதிபர்கள் கூறியுள்ளனர். அத்தோடு புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபர் கொழும்பிலிருந்து தொடர்பு கொண்டு பாடசாலைக்கு ஓர் மின் பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) யும், தொலைக்காட்சியும் தேவையென கேட்டுக் கொண்டதற்கு இணங்க இலங்கை ரூபா ஒரு லட்சம் தற்போது அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் அவசர உடனடித் தேவைகள் பற்றிய விபரங்களை அறியத்தருமாறு கேட்டுள்ளோம். அத்தோடு எமது தாயகத்தின் தீராத பிரச்சினையாகவுள்ள குடி தண்ணீர் வழங்கல் திட்டத்திற்கு ஓர் நிரந்தர தீர்வினைக் காண்பதற்காக சில முன்னெடுப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்த பாரிய பணியை நிறைவேற்றுவதற்கு கனடா வாழ் அனைத்து புங்குடுதீவு மக்களிடமிருந்து நிறைவான உதவியை வேண்டி நிற்கின்றோம். இப்பணியை நிறைவேற்றுவதற்கு பரந்துபட்டு வாழும் அனைத்து நாடுகளில் உள்ள புங்குடுதீவு மக்களும் உதவுவதற்கு ஆயத்தமாகவுள்ளனர் என்பதனை அறியத்தந்துள்ளனர். புலம் பெயர்ந்த நாடுகளில் எமது ஊரின் பெயர்களால் இயங்கிக் கொண்டிருக்கும் சங்கங்களில் எமது கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கமே முதன் முதலில். போர் கால நெருக்கடி மிக்க காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த புங்குடுதீவு பாடசாலைகளில் கல்வி பயின்ற மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு மதிய உணவு வழங்கல் திட்டத்திற்கு உதவி, அவர்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளியினை ஏற்படுத்தியவர்கள் நாம் என்பதனை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சென்ற வருடம் வெளியாகிய பூவரசம் பொழுது விழா மலர் எமது மண்ணின் எழுத்தாளர்களை இனம் காட்டியதோடு, அவர்களின் ஆக்கங்களை தாங்கிய சிறப்பு மலராக வெளிவந்தது. இந்த ஆண்டுக்குரிய மலர் எமக்கு கல்விச் செல்வத்தை அளித்த கல்விச் சாலைகளின் தோற்றம், அதன் வளர்ச்சி, கல்விக் கூடங்களுக்காக உழைத்த பெரியார்கள் போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய ஓர் வரலாற்று பொக்கிஷமாகவும், ஒரு தகவல் களஞ்சியமாகவும் வெளிவருவதையிட்டு பெருமையடைவதோடு இம்மலர் வெளிவருவதற்கு உதவிய மலர்க்குழுவினருக்கு எனது மனம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எங்களுடைய பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இற்றை வரை எங்களுக்கு ஓர் அரும் பெரும் பொக்கிஷமாகவும், சிறந்த ஆலோசகராகவுமிருந்து ஆக்கமும், ஊக்கமும் தந்து எம்மை தனது அனுபவ முதிர்ச்சியினால் நெறிப்படுத்தி சங்கத்தின் அனைத்து கூட்டங்கள், விழாக்கள் எல்லாவற்றிலும் தவறாது பங்கு கொண்டு வந்த அன்புருவம், மண் மறவா மனிதர் அன்புக்குரிய "கண்ணையா மாஸ்ரர்" (திரு.அ.க.கந்தையா) அவர்கள் இன்று எங்கள் மத்தியில் இல்லையே என்கின்ற ஏக்கம் எம் நெஞ்சங்களை வாட்டுகின்றன. எல்லா மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திட்ட சமூகத் தொண்டரின் நாமத்தினை தாங்கி நிற்கும் அரங்கிற்கு உறவுரிமை, நட்புரிமை, அன்புரிமை கொண்டு தங்களை அழைத்து செல்வதில் நிறைந்த மன மகிழ்ச்சி அடைகிறேன்.

"நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோம்."

**திரு . சோம சச்சிதானந்தன்**

தலைவர், புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்-கனடா

(முன்னாள் கிராமசேவை அலுவலர்)

## செயலாளரின் உள்ளத்திலிருந்து.......

**எமது அன்புக்குரியவர்களே!**

உங்கள் அனைவரையும் இவ்வினிய மாலைப் பொழுதில் இவ்விழாவில் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் சார்பாக வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துவரும் அனைத்துத் தரப்பினர்க்கும் என்றும் எமது சங்கம் நன்றி உடையதாயிருக்கின்றது. இச்சங்கம் ஆரம்பத்தில் இருந்து படிப்படியாக வளர்சியடைந்த போதும் இன்னும் பல உண்மைத் தொண்டர்கள் சங்கத்திற்குச் சேவையாற்ற வேண்டப்படுகின்றார்கள். பார்வையாளர்களாக மட்டுமன்றிச் சங்கத்தின் உறுப்பினர்களாக இணைந்து இச்சங்கத்தின் நோக்கம் ஈடேறவும், எமது தாய் மண்ணின் ஏற்றத்திற்காக உழைக்கவும் சில மணித்துளிகளை அர்ப்பணிக்க முன்வருமாறு இச்சங்கம் உங்களை இருகரம் நீட்டி வரவேற்கின்றது.

நாம் தாய் மண்ணின் மடியில் இருந்த வரை எமது முன்னோர் எதுவித வசதிகளுமற்ற நிலையில் எவ்வளவோ சிரமங்களின் மத்தியில் உருவாக்கி வைத்த அனைத்துச் செல்வங்களையும் எதுவித தயக்கமும் இன்றி உண்டு, உடுத்து, அனுபவித்துக் களிப்படைந்தோம். அவர்கள் அதை உருவாக்கும் பொழுது நாம் அதன் பயனை அனுபவிக்கப் போகின்றோமா? என்று நினைத்ததில்லை. தமக்குப் பின்வரும் சந்ததியினரின் நலன் கருதி அவர்கள் செயற்பட்டமையினாலேயே நாம் அவற்றை அனுபவிக்க முடிந்தது. அந்த வகையில் நாம் பிறந்த மண்ணிற்கென்று எமது வாழ்வில் எதைச் செய்தோம் என்றால் ஒன்றும் இல்லை என்றே துணிந்து கூறலாம்.

நாம் தான் அந்த மண்ணை விட்டுப் புலம் பெயர்ந்து வசதி நிறைந்த நாட்டில் வசதியாக வாழ்கின்றோமே. அங்கு தான் மக்கள் இல்லையே. இவர்கள் அங்கு யாருக்கு எதைச் செய்யப் போகின்றார்கள், யார் அங்கு போயிருக்கப் போகின்றார்கள் என்ற கேள்வி எம் மக்களில் பலருக்கு எழலாம். இங்கு தான் நாம் சற்று நிதானமாகச் சிந்திக்க வேண்டும். அப்படியாயின் எம்மை இந்நிலைக்கு உயர்த்தி, எம்மை வாழ்வித்த அன்னையைத் தலை விரிகோலமாகத் தள்ளிவிட வேண்டியதுதானா? நாம் துரிதமாகச் செயற்படா விட்டால் சன சஞ்சாரமற்ற கைவிடப்பட்டதோர் தீவாகவே எமது அன்னை காட்சியளிப்பாள். அதை எங்கள் நெஞ்சம் பொறுக்குமா? இல்லவே இல்லை.

எனவே எமது அன்னையைச் சீவி முடித்து சிங்காரித்து அலங்கரிக்க அனைவரும் அணி திரண்டு வாருங்கள். அவள் மீண்டும் சிரிக்க வேண்டும். அந்தச் சிரிப்பில் அனைவரும் ஈர்க்கப்பட்டு அன்னையின் மடியில் நாமில்லாவிடினும் நம் இனத்தைச் சேர்ந்த பல்லாயிரம் மக்கள் களிப்புற்று வாழ வேண்டும். அந்நிலை கண்டு நாம் களிப்படைய வேண்டும் என்பதே எமது பேரவா! அதுவே நாம் பிறந்த மண்ணிற்கு, நமக்கு வாழ்வளித்த அத்தெய்வத்திற்குச் செய்யும் கைமாறாகும். அதை நிறைவேற்ற இச்சங்கம் உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பினையும், உதவிக் கரத்தினையும் வேண்டி நிற்கின்றது. "தனிமரம் என்றும் தோப்பாவதில்லை" என்ற பொன் மொழிக்கேற்ப அனைவரும் அணி திரண்டு ஒன்றுபட்டு உழைப்போம். அன்னையின் அழகு கண்டு பூரிப்படைவோம் வாரீர்! வாரீர்!......................

வணக்கம்

**என்றும் அன்புடன்,**

**திரு.ச.சதாசிவம் (செயலாளர்)**

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் - கனடா

# CHIEF GUEST'S MESSAGE

**BRITISH CLOMBIA,**
**Dec.02.2002.**

**Dear Friends,**

**I am delighted to extend my warmest greeting to everyone participating in the poovarasam pozhuthu 2002.**

**This festival of Tamil cultural activities provides us with a golden opportunity to celebrate the traditions that have enriched our society. The organizers of this event are to be commended for helping to promote vital links from generation to generation, while also contributing to a deeper understanding of our culture.**

**It will give me great pleasure to join with you in marking this special occasion.**

**Dr.T.Yoganathan, Ph.D.**
**Chief Scientific Officer,**
**Med BioGene.**

Pungudutheevu Welfare Association (UK)
புங்குடுதீவு நலன்புரிச்சங்கம் (பிரித்தானியா)
web site: www.pungudutheevu.org e-mail: info@pungudutheevu.org
213, Exeter Road, Rayners Lane, Harrow, Middlesex, HA2 9PF, U.K.
Phone: +44 (0) 20 8429 1103



# ஆயிரமாயிரம் பூவரசம் பொழுதுகள் தேவை!

என் தமிழ் உறவுகளுக்கு இனிய வணக்கங்கள்!

வழமை போல் இவ்வாண்டும் பூவரசம் பொழுது இனிதாக மலர்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. தாம் நேசிக்கின்ற தமிழுக்காகவும், மண்ணிற்காகவும் கடுமையாக உழைக்கின்ற ஒரு பட்டாளமும், அதற்கு தலமை தாங்கும் செயல் வீரன் சச்சி அண்ணாவும் இருக்கும் பொழுது ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கின்றது.

கனடாவில் **பூவரசம் பொழுது!** லண்டனில் **காற்றுவழிக்கிராமம்!** இந்த தலைப்பைக் கேட்கின்ற அனைவரும் புங்குடுதீவு மக்களின் வித்தியாசமான இரசனையை பாராட்டத் தவறியதில்லை. பூவரசம் பொழுது என்ற பெயரை வைத்த புலவர் ஈழத்து சிவானந்தன் அவர்களும், காற்றுவழிக்கிராமம் என்கின்ற பெயர் வரக்காரணமாக இருந்த கவிஞர் சு.வில்வரத்தினம் அவர்களும் பாராட்டுக்குரியவர்களே! ஏதாவதொரு காரணத்திற்காக இதுவரை காலமும் எட்டி நின்ற ஈழத்தமிழ் மக்கள் ஒன்றுபடும் சமாதானக்காலம் இது. நம் ஊர்களில் யார் இருக்கின்றார்கள் அல்லது எந்தக்குழு இருக்கின்றது என்ற கேள்விக்கே இனி இடமில்லை.

சகல விதமான அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பிப்பதற்கான வேலைகளை சகல சங்கங்களும் முன்னெடுத்து அடிப்படை தேவைகளான தண்ணீர், கல்வி, மருத்துவம், போக்குவரத்து போன்றவற்றை வழங்குவதற்கான நிதியை புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் வழங்க வேண்டும். அந்த வகையில் பிரித்தானியாவில் வாழும் சில புங்குடுதீவு மக்கள் புங்குடுதீவின்பால் கொண்ட அக்கறையால் காலகாலமாக இருந்து வரும் தண்ணீர் பிரச்சினையை ஓரளவாவது தீர்க்கும் வகையில் அதன் ஆரம்ப கட்டமாக தண்ணீர் வண்டி ஒன்றை இருபத்தாறு இலட்சம் ரூபாய்க்கு இலங்கையில் வாங்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அதற்கு எமது சங்கமும் தனது பங்களிப்பை செய்கின்றது என்பதனை மகிழ்ச்சியோடு இங்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

செல்வந்த நாடான பிரித்தானியாவில் இருக்கின்ற அரசாங்க பாடசாலைகள் தமக்கு ஒரு கட்டிடமோ அல்லது வேறு ஏதாவது தேவை ஏற்படும் போது சில கலை நிகழ்ச்சிகளை நடாத்தி பணம் சேர்த்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றன. ஒரு செல்வந்த நாட்டிலேயே அந்த நிலை என்றால் ஈழம் போன்ற போரினால் அழிவுற்ற ஒரு மூன்றாம் உலக நாட்டில் இருக்கின்ற பாடசாலைகளின் வளர்ச்சிக்காக ஆயிரமாயிரம் பூவரசம் பொழுதுகள் தேவை!

என்றும் அன்புடன்,

President: Mr.S.Mohanarajah BSc, MSc
Vice President: Mr.S.Uthayakumar
Secretary: Mr.G.Thiruvarul
Asst. Sec.: Miss.G.Shanmuganathan BA(Hons)
Treasurer: Mr.K.Shanthakumar
Asst.Treasurer: Mr.S.Yogalingham
Committee:
Mr.S.Baskarathasan BSc, MCSE
Mr.k.Barathithasan
Mr.K.Ravindran
Mr.P.Suresh
Mr.P.Thayananthan

உ

மண்ணின் சேவையே மகத்தான சேவை

புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம்
PUNGUDUTIVU PEOPLES SOCIETY FOR AWARENESS
SWITZERLAND
POSTFACH 978, 3000 BERN –7 CREDIT SUISSE BERN AC.NO:(0094)777427-00

சுவிற்சர்லாந்து,
24.11.2002.

அனைவருக்கும் அன்பு வணக்கங்கள்!

புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழ் மக்களாகிய நாங்கள் எங்கள் கலை, கலாச்சாரம், பண்பாடு என்பனவற்றோடு வாழ்ந்து வருவதோடு மட்டுமல்லாமல் எமது தாய் மண்ணின் புகழோடும், பெருமையோடும் பிறந்த மண்ணிற்கு பெருமை சேர்க்கின்ற வகையில் வாழ்ந்து வருகின்றோம். அந்த வகையில் கனடா வாழ் எம் தேச உறவுகளாகிய நீங்கள், புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் - கனடா என்கின்ற அமைப்பை உருவாக்கி அதன் ஊடாக கனடா வாழ் எம் மண்ணின் சொத்துக்களாகிய அந்த மக்களை ஒன்று திரட்டி வருடா வருடம் நாடத்துகின்ற "**பூவரசம் பொழுது**" என்கின்ற நிகழ்வு இந்த ஆண்டு 07.12.2002 அன்று நடைபெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

கடந்த காலங்களிலே நடைபெற்ற நிகழ்வுகளின் மூலம் பெறப்பட்ட நிதிகளில் எம் தீவகத்தில் வாழ்ந்து வருகின்ற இளம் மாணவ சமுதாயத்திற்கு உணவளித்து வருவதையிட்டு மிகவும் பெருமையடைகின்றோம். "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானிதனில் நலிசிறந்தனவே" என்கின்ற முதுமொழிக்கமைய எம் மக்களின் உணர்வுகளோடு ஒன்று கலந்து இந்த விழாவை முன்னின்று நடாத்துகின்ற விழா அமைப்பினருக்கும், புங்குடுதீவு பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் விழா சிறப்பாக நடைபெற எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம்,
சுவிற்சர்லாந்து.

# யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்

යා / පුංගුඩුතීවු මහා විද්‍යාලය

## J/PUNGUDUTIVU MAHA VIDYALAYAM

Principal:
K. Tharmakunasingam, B.Com(Sp.)Dip.in Ed.

PUNGUDUTIVU,
SRI LANKA.

10/10/2002

## மகா வித்தியாலய அதிபரிடமிருந்து.......

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கக் கனடா கிளையினரின் "பூவரசம் பொழுது 2002" விழாவும், பாடசாலைகளின் சிறப்பு மலர் வெளியீடும் சிறப்புற அமைய எமது பாடசாலை சமூகத்தின் சார்பில் எங்களது இதய பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நீங்கள் புலம் பெயர்ந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் ஈழத்தமிழ் மக்களின் கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக்காத்து வருவதோடு, உங்கள் மண்ணையும், மக்களையும் நேசிப்பது கண்டு பெருமை அடைகின்றேன்.

2001 இல் தங்களால் எம்மாணவர்களுக்கு மதிய உணவும், தொண்டர் ஆசிரியர்களுக்கான வேதனமும் வழங்கப்பட்டமை கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தோம். எமது மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் பல்வேறு வசதியீனங்களின் மத்தியிலேயே நடைபெற்றுவருகின்றன. எனவே இச்சந்தர்ப்பத்தில் எங்களின் தேவைகள் சிலவற்றையும் தங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

பாடசாலைக்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டியையும், ஒரு ஜெனரேற்றரையும் கொள்வனவு செய்தல், பாடசாலை வளவில் ஒரு கிணற்றை அமைத்து மனையியல் கூடம், விஞ்ஞான கூடம் போன்றவற்றிற்கு குழாய் மூலம் நீர் வழங்குதல், கணனிப் பயிற்சியை அறிமுகம் செய்தல், சமய வழிபாட்டறையை திருத்தியமைத்தல், சேதமடைந்த கட்டிடங்களைப் புனரமைத்தல், விளையாட்டு மைதானத்தை புனரமைத்தல், படிப்படியாக பாடசாலையைச் சுற்றிச் சுற்று மதில் அமைத்தல் போன்றவை எமது பாடசாலையில் படிப்படியாக நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகளாகும். இத் தேவைகளை நிறைவு செய்வதில் தங்கள் சங்கத்தின் பங்களிப்பை எமது பாடசாலைச் சமூகம் பெரிதும் வேண்டி நிற்கின்றது.

-நன்றி-

**திரு.க.தர்மகுணசிங்கம்**
அதிபர்
யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்.

# புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் – பிரான்ஸ்

*Association des Habitants de Pungudutivu - France*

**11, Rue d;Aix, 75010 - PARIS. FRANCE.** Rgd.No. Ass.La loi depuis 1901 Art.5 est a la sous Prefecture de Pari


பேரன்புக்குரிய
புங்குடுதீவு பழையமாணவர் சங்க நிர்வாகிகளுக்கு
கனடா.

அன்புடையீர் ,

புலம்பெயர்ந்து வாழும் எம் கிராமத்து மக்கள் பிறந்த மண்ணைப் பிரிந்த சோகத்திற்கும், வதிவிட மண்ணின் வாழ்வியல் இறுக்கங்களுக்கு மத்தியிலும் தொப்புள் கொடி உறவை தொலைத்துவிடாது அதன் மீது கொண்ட துல்லியமான அன்பிற்காய் செயற்படும் செம்மை கண்டு நாம் பேருவகை கொள்ளுகின்றோம். அந்த வகையில் வருடாவருடம் எம் கிராமத்தின் இனிய நினைவுகளை மனதில் தடம்பதிய வைக்கும் வகையில், தங்களின் சங்கத்தினால் நடாத்தப்படும் பூவரசம் பொழுது – 2002 நிகழ்வு இந்த வருடமும் வெகு சிறப்பாக நடைபெற பிரான்ஸ் புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

பிறந்த மண்ணின் பெருமையும், இயற்கையின் வஞ்சனையால் வறுமைப்பட்டுப் போன வளத்தையும் கட்டி எழுப்பும் பாரிய பொறுப்பானது புலம் பெயர் எம் கிராமத்து மக்களாகிய நம் எல்லோருடைய பாரிய பொறுப்பு என்பதை நாம் உணர்வோம். அந்த வகையில் உங்களின் அயராத உழைப்பின் பெருமை கண்டு களிப்படையும் வேளையில், நாமும் உங்கள் பாதையில் இங்கு தொடர்ந்து பயணிக்கின்றோம் என்பதைக் கூறி இந்த வாழ்த்துச் செய்தியை கனடா வாழ் எமது உடன்பிறப்புக்களுக்குத் தெரிவிப்பதில் பெருமகிழ் வெய்துகின்றோம்.

இவ்வண்ணம்
அன்புடன்
தங்கள் சேவைக்குபிரிய
புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் – பிரான்ஸ்

# CANADIAN TAMIL DRIVING INSTRUCTORS ASSOCIATION
# கனடிய தமிழ் சாரதிப் பயிற்றுனர்கள் ஒன்றியம்



"பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும்
நற்றவ வானில் நனி சிறந்தனவே"
- பாரதியார்

'பூவரசம் பொழுது' ஏழாவது ஆண்டு மலருக்கு வாழ்த்து செய்தி தருவதில் பெருமை அடைகிறோம்.

கனடா - புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் பூவரசம் பொழுது விழா ஊடாக புங்குடுதீவுக்கும் தமிழ் ஈழத்திற்கும் அளப்பரிய சேவையாற்றி வருவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

பூவரசம் பொழுது நிர்வாகத்தினரின் மொழி, சமய, தேச, சேவை உணர்வுகளையும் கடின உழைப்பையும் நேர்மையையும் பூவரசம் பொழுதின் ஒவ்வொரு ஆண்டின் வளர்ச்சியே சான்றாக அமைகின்றது.

உலகமெலாம் பூவரசம் பொழுதின் சேவைகள் வளர்ந்து தமிழ் ஈழத்திற்கும் பிறந்த மண்ணுக்கும் பெருமையாக அமைய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்க வாழ்த்துக் கூறுவதில் 'கனடா தமிழ் சாரதிப்பயிற்றுனர் ஒன்றியம்' பெருமை அடைகின்றது.

நன்றி

தலைவர்

செ. சபாரெத்தினம்

செ. சபாரெத்தினம் (சபா)
டிசம்பர் 03, 2002

# ஆசிரியர் திலகம் அமரர் அ.க. கண்ணையா அவர்கள்.....



கண்ணையா அவர்களின் மறைவுச் செய்தியானது என் இதயத்தில் ஓர் இடி போல் இறங்கியது. என்னை ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்கே எனக்கு சில மணி நேரம் ஆனது. கண்ணையா என்று சொன்னவுடனே என்னுடைய கடந்த கால ஆசிரிய வாழ்க்கை என் உள்ளத்தில் நினைவானது. புங்குடுதீவு மகா வித்தியாலத்திற்கு நான் ஆசிரியராகப் போன போது அகவை 23 தான். அப்பொழுது அவர் 40 வயது இளைஞனாக நிமிர்ந்த நெஞ்சம் நேர் கொண்ட பார்வை பார்க்கின்ற போதே ஒரு உவகை. இத்தகைய உருவத்தை ஆசிரியராகப் பார்ப்பதற்கு எனக்குப் பேறு கிடைத்ததே என்று உள்ளம் பெருமிதம் கொண்டது. அந்தக் காலகட்டத்திலே சர்வ கலாசாலையை முடித்துக் கொண்டு முதன் முதலாக ஆசிரியனாக நான் சென்ற பொழுது ஓர் ஆசிரியர் தான் என்ன வகையில் தன்னுடைய சேவைகளை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக எனக்கு ஒரு ஆசானாக விளங்கியவர் ஆசரியர் திரு. கண்ணையா அவர்கள். அன்றைய காலகட்டத்தல் நாங்கள் எங்கள் கிராமங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பற்றி சமூகத்தில் ஒரு வித்தியாசமான பார்வையையும் ஒரு கிள்ளுக் கீரைகள், எடுப்பார் கைப்பிள்ளைகள் என்பது போன்ற கண்ணோட்டமே இருந்து வந்தது. அந்த நிலையில் அமரர் கண்ணையா அவர்களை நான் சந்தித்த பொழுது அந்த நினைவையும் நிலைப்பாட்டையும் முற்றாக மாற்றி ஆசிரியர் என்பவர்கள் ஒரு சமுதாய சிற்பிகள், ஒரு கிராமத்தின் ஒரு நாட்டின் எதிர்கால சந்ததியினரைக் கட்டியெழுப்பும் பாரிய பணியின் காரண கர்த்தாக்கள் என்பதை எனக்கு உணர்தியவர் திருவாளர் கண்ணையா அவர்கள்.

ஆரம்பத்தில் உரு காவல் துறை அதியாரியாக இருந்து கல்வித்துறைக்கு ஆசிரியராக வந்தவர் என்பதால் தன்னுடல் ஆரோக்கியத்தை மட்டமன்றி ஒழுக்கத்தையும் மிக்ப பேணி வந்திருந்தார். அதனால் அன்றைய காலகட்டத்தில் அவர் ஆசிரியர்கள் மத்தியில் ஆசிரியத்திலகமாக ஒழுக்கத்தின் ஒரு குன்றாக விளங்கினார். ஒழுக்கத்தின் விழுமியங்களின் அடிவருடியாக அவர் விளங்கிய காரணத்தினால் நான் அவரைக் காணுகின்ற பொழுதெல்லாம் வள்ளுவனின் அந்தக் குறளோவியம் போல் அவரைக் காண நேர்ந்தது.

ஒரு மனிதனிடத்திலே பணம் இல்லை என்று சொன்னால் அவனிடம் ஏதும் குறைந்து விட்டதாக சிந்திக்க வேண்டியதில்லை. உடல் நலம் குறைந்து விட்டால் ஏதோ ஒன்று அவனிடத்தில் குறைந்து விட்டதாக கருதப்படுகின்றது. ஆனால் அவனுடைய ஒழுக்கம் குன்றிப் போய்விடுமேயானால் அவனுடைய வாழ்க்கையே சூனியமாகி விட்டதாக கருதப்படுவான். இந்த அடிப்படையில் திருவாளர் கண்ணயைா அவர்கள் தன்னுடைய ஆசிரியத் தொழிலை ஓர் ஆசிரியர் என்ற இலக்கண வரம்பிற்குள் நின்று செயற்பட்டவர் என்பதை நான் அறிவேன்.ஒழுக்கம் என்பது மாணவருக்கு மாத்திரமல்ல ஆசரியர்களும் ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்பது போலவே அவருடைய செயற்பாடுகள் இருந்தன.

அவரைப் பற்றி எழுதுவதாய் இருந்தால் நாள் முழுவதும் பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டிருக்கலாம் அவரது சேவைக்காலத்தில் அவர் சேவையாற்றிய பாடசாலைகளில் எல்லாம் அவருடைய செயற்பாடுகளும் சேவைகளும் ஒரு வரலாறு ஆக பதியப்பட வேண்டியவையாகவே அன்று காணப்பட்டன. ஆசரியர் சேவை என்பது புனிதமும் சீலமும் தியாகமும் சேர்ந்தது என்பதை சமூகத்தில் நிலைநாட்டி ஆசிரிய சமுதாயம்

பெருமையோடு பீடு நடை போடவைத்தவர் அமரர் கண்ணையா அவர்கள். அதனால் கிராமங்களில் ஆசிரியர் சமுதாயத்தில் இருந்த இரண்டாம் தரச் சேவை என்கின்றமனப்பான்மையை கொண்ட கண்ணோட்டத்தினை கிராமங்களில் முற்றாக மாற்றி ஆசிரியர் சமூகமே அனைத்து உயர்வுகளிற்கும் வழிகாட்டிகள் என்ற நிலைப்பாட்டினை நிலை நிறுத்தியவர் அமரர் கண்ணையா அவர்கள்.

அது மட்டுமல்லாது தன்னோடு சேவையாற்றுகின்ற சக ஆசிரியர்களிடையே அபிப்பிராய பேதங்கள் ஏற்படுகின்ற பொழுது அவர்களிடையே எழுந்து நின்று தனது கம்பீரக் குரலினால் அவர்களின் கருத்து வேறுபாட்டினை களைந்து, வேற்றுமையிலும் ஒற்றுமை கண்டு, அவர்களை ஒற்றுமையாக்கி ஒன்றிணைத்து, ஒரு தாய் மக்கள் என்கின்ற மனோபாவத்தை வளர்த்தது அமரர் கண்ணையா அவர்களின் அன்பான பேச்சுக்களும் அரவணைக்கும் மனோபாவமும் அவரது ஒழுக்கத்தோடு இணைந்த ஆளுமையும் என்றே கூறலாம். பாடசாலையின் மற்றுமோர் உயர்ச்சிக்கு காரணமாக இருந்த சாரணர் இயக்கத்தை ஆரம்பித்து அதன் மூலம் நயினாதீவு நாகம்மாள் கோயில் திருவிழாக் காலங்களில் அளப்பரிய சேவைகள் ஆற்றிதோடு மட்டுமன்றி அவர் கிராமத்தை விட்டு மாற்றலாகி செல்கின்ற போது அந்த அளப்பரிய பணியை நான் தொடரக் காரணமாய் இருந்தவர் ஆசிரியர் அமரர் கண்ணையா அவர்கள் என்பதை நான் இங்கு குறிப்பிடுவதில் பெருமை அடைகின்றேன்.

சராசரியாக ஊரோடு வேலை செய்யும் ஆசிரியர்கள் கோயிலும் கும்பாபிஷேகமும் என்று வாழ்ந்த காலத்தில் பாடசாலைக் கென இரண்டு கட்டிடங்களை பெற்றார், ஆசிரியர் சங்கம் தான் அதனைக் கட்ட வேண்டும் என நானும் ஆசரியர் சரவணமுத்து அவர்களும் இயம்பிய பொழுது,அவற்றைக்க கட்டியெழுப்பும் பணியில் இரவு பகலாக தன்னை அர்பணித்து செயற்பட்ட பெருமை ஆசிரியர் கண்ணையா அவர்களையே சாரும். அந்த கட்டிடங்கள் அரைகுறையாக இருக்கும் போது அவருக்கு மாற்றம் கிடைத்தது. அவருக்களிக்கப்பட்ட பிரியாவிடையில் அவர் மீது மாணவர்கள் ஆசிரியர்கள் மட்டுமல்ல கிராம மக்களே எத்தனை அன்பையும் பாசத்தையும் கொட்டி வைத்திருந்தார்கள் என்பதை தெரியக் கூடியதாக இருந்தது. அவரது பிரியாவிடையின் போது எழுதப்பட்ட வாசகங்கள இன்னும் என் மனதில் நிழலாடுகின்றது கட்டிடங்கள் அரைகுறையாகக் காண்கிறோம் கண்ணீரில் நாங்கள் மிதக்கிறோம் என்பதாகும். இதிலிருந்து அவர்கள் மனதில் எத்தகைய உயர்வான ஸ்தானத்தில் வீற்றிருந்தார் என்பதை நினைக்கும் போது இப்போதும் என் கண்களில் கண்ணீர் உடைப்பெடுக்கின்றது.

ஆசிரியர் கண்ணையா அவர்கள் மாணவர்கள் மக்கள் மத்தியில் மட்டுமல்லாது ஆசிரியர்கள் மத்தியிலும் அன்பும் பண்பும் நிறைந்த செம்மலாகவும் ஒழுக்க சீலராக விளங்கினார் என்பதை இப்பொழுதும் என்னால் மறக்க முடியவில்லை. எனது கிராமத்தில் இளைய தம்பி எனும் ஆசிரியர் ஒருவர் ஒழுக்க சீலராக சிறந்து விளங்கக் கண்டிருக்கின்றேன். ஆனால் இளைய தம்பியைப் போல் பத்து இளைய தம்பிக்கு ஈடாக ஆசிரியர் கண்ணையா அவர்களைக் கண்டேன். அவருடைய அடியை ஒற்றி ஆசிரியர்கள் தங்களை வழிநடத்தும் வழிகாட்டிகளாக ஆசிரியர் திலகமாக விளங்கிய ஆசிரியர் கண்ணையா அவர்கள் இன்று இறைபதம்அடைந்த விட்டார். அவருடைய பாதையிலே வருங்கால ஆசிரிய சமுதாயம் வழிநடத்தி நல்லதொரு சமுதாயம் படைக்க வேண்டும். அதற்கு ஆசிரியர் கண்ணையா என்கின்ற ஆசிரியமணியின் வாழ்க்கை வரண்முறை ஒரு படிப்பினையாக அமைய வேண்டும். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன் அவரின் பேரிழப்பால் துயருறும் அவர் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவத்துக் கொள்கிறேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

சி. காரளபிள்ளை (அதிபர்)
ஸ்தாபக காப்பாளர்
பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்
பாரிஸ்

# "புங்குடுதீவு" என்ற பெயருக்கு அறிஞர்களின் கருத்துக்கள்

இலங்கையின் வடமாகாணத்திலே யாழ்ப்பாணக் குடாநாட்டின் கடற்பரப்பில் பல தீவுகள் பரந்து கிடக்கின்றன. சப்த தீவுகள் உட்பட பதினொரு பெரிய தீவுகளும் வேறுசில சிறிய தீவுகளும் காணப்படுகின்றன. அனலைதீவு, எழுவைதீவு, காரைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, மண்டைதீவு, வேலணைத்தீவு ஆகிய ஏழு தீவுகளும் ஒரே தொடராக யாழ்ப்பாணக் குடாநாட்டின் தெற்கே அமைந்துள்ளன. சற்றுத் தொலைவில் நெடுந்தீவு அமைந்துள்ளது. இவற்றைவிடக் கச்சதீவு, பாலைதீவு, மான்தீவு, கேரதீவு போன்ற சிறிய தீவுகளும் பரந்து கிடக்கின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள சப்த தீவுகளின் நடுநாயகமாக விளங்குவது புங்குடுதீவாகும். யாழ்ப்பாண நகரில் இருந்து கடற்பாதையால் இணைக்கப்பட்டுள்ள இத்தீவு "ப" வடிவில் அமைந்துள்ளது. 34 கிலோமீற்றர் சுற்றளவு உள்ள இத்தீவு 28.9 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்டதாகும்.

புங்குடுதீவு என்ற பெயர் இந்த ஊருக்கு நீண்டநாட்களாகவே வழங்கப்பட்டு வருகின்றது. இந்தப் பெயர் எப்படி வந்தது என்பதற்கு பலரும் பல்வேறு கருத்துக்கள் கூறுகின்றனர். "பியாங்குதீபம்" என்பது புங்குடு தீவினைக் குறித்துள்ளது என வல்லிபுரச் சாசனத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஐரோப்பியர் ஆட்சியில் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் தீவகத்தில் காணப்படும் தீவுகளுக்கு தங்கள் நாட்டில் உள்ள பெயர்களைச் சூட்டிக் கொண்டனர். போர்த்துக்கீசர் புங்குடுதீவுக்கு "கொங்கரடிவா" என்று பெயர் சூட்டினர். பலதீவுகளுக்கு மத்தியில் புங்குடுதீவு அமைந்திருந்ததால் ஒல்லாந்தர் தம் தீவுகளின் பெயர்களில் ஒன்றான "மிடில்பேர்க்" என்ற பெயரைச் சூட்டினார்கள்.

மஞ்சள் நிறமும் வாசனையும் கொண்ட "புயாங்கு" என்ற ஒருவகை மரம் இத்தீவில் அதிகமாகக் காணப்பட்டதாம். அதனால் இத்தீவுக்குப் புயாங்கு தீவு என்ற பெயர் வந்தது. இப்பெயர் காலப்போக்கில் புங்குடுதீவு என்று மாறியது என்றும் சிலர் கூறுவர். இன்னும் சிலர் இக்கதையை வேறுவிதமாக வும் கூறுகின்றனர். "புங்கை" என்ற ஒருவகை மரம் அக்காலத்தில் இத்தீவில் அதிகமாகக் காணப்பட்டதாம். அதனால் இத்தீவுக்குப் "புங்குடுதீவு" என்ற பெயர் வந்தது என்கின்றார்கள்.

இந்தியாவில் தமிழ் நாட்டில் பூங்குடி என்னும் கிராமம் இப்பொழுதும் இருக்கிறது. அக்காலத்தில் இக்கிராமத்தைச் சேர்ந்த சிலர் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் அவர்களது கொடுமைகளில் இருந்து தப்பி தமது பெண்களைப் பாதுகாப்பதற்காகத் தப்பி ஓடினார்கள். அப்படி தப்பி ஓடிய சிலர் குடியேறினர். அவர்கள் இத்தீவிற்கு "பூங்குடி" என்று பெயர் சூட்டினர். அந்தப் பெயரே திருப்பூங்குடி பின்பு புங்குடுதீவு என மாறியது என்றும் சிலர் கூறுகின்றனர். புங்குடுதீவு ஆதிகாலத்தில் செல்வம் கொழிக்கும் கிராமமாக இருந்தது. அதனால் அதற்கு "பொன்கையூர்" என்ற பெயர் வழங்கப்பட்டது. அதுவே பின்பு புங்குடுதீவு என்று மாறியதோ என்றும் சிலர் கருதுகின்றனர்.

டானியன் ஜோன் என்னும் அறிஞர் கந்தபுராணத்தைச் சான்று காட்டி பின்வருமாறு விளக்கம் கூறுகின்றார். புங்கம் + உடு + தீவு= புங்குடுதீவு இவ்வாறே புங்குடுதீவு வந்தது என்று கூறுகின்றார். புங்கம் = அம்பு உரு உருவுதல் = வேல் உருவிடப் பாய்தல் எனவே அம்பு அல்லது வேல் உருவிப் பாயந்த இடமே புங்குடுதீவு ஆகியது என்று அவர்கூறுகின்றார். குமாரசாமி என்ற அறிஞர் இன்னொரு கருத்தைக்கூறுகின்றார் அவர் புங்குடுதீவு என்னும் பெயர் சிங்களப் பெயரின் திரிபு என்று கூறுகின்றார். "புயங்கு திவயின" என்ற சிங்களச் சொல்லின் திரிபு என்று அவர் கூறுகின்றார். "திவயின" என்ற சிங்களச் சொல்லின் பொருள் தீவு என்பதாகும். புயங்கு திவயின என்ற சிங்களப் பெயரை தமிழர்கள் புங்குடைய தீவு என்று வழங்கினர் என்றும் அதுவே பின்பு புங்குடுதீவு என்றும் மாறி இருக்கலாம் என்று அவர் எழுதி இருக்கிறார். இவரது கருத்துக்கு எதிரான கருத்தை பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை வெளியிட்டுள்ளார். "நம்பொத்த" என்ற சிங்கள நிகண்டில் இது "பியங்குதிவம்" எனக்கூறப்பட்டுள்ளது. புங்குடுதீவு என்ற சொல்லே காலகதியில் "பியங்குதிவம்" என மாறி இருக்கலாம். அதனை புங்கு + உடு + தீவு எனப் பிரித்து புங்கமரம் நிறைந்த தீவு எனப் பொருள் கூறலாம். புங்கமரம்

நெய்தல் நிலத்துக் கருப்பொருள் என்று அவர் கூறுகிறார். புங்குடுதீவு என்ற

பெயர் எவ்வாறு வந்தது என்று இவ்வாறு பலரும் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றனர். புங்குடுதீவு என்பது நாற்புறமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும். இந்தத் தீவுக்குள்ளும் பலதீவுகள் காணப்படுகின்றன. இவ்வாறு இங்கு 7 தீவுகள் காணப்படுகின்றன. பல்லத்தீவு, கேரதீவு, ஊரைதீவு, களதீவு, வரதீவு, கண்ணாத்தீவு,

மண்டைதீவு என்று அழைக்கப்பட்டன.

இவற்றுள்ளே பல்லத்தீவும் கண்ணாத்தீவும் இன்றும் கடல் சூழ்ந்த சிறு தீவுகளாகவே உள்ளன. கேரதீவு ஒல்லாந்தர் காலத்திலேயே முருகைக்கல் பாதையால் பிரதான தீவுடன் இணைக்கப்பட்டு விட்டது. ஏனைய தீவுகள் இயற்கையாகவே கடல்தூர்ந்து மேடாகி பிரதான தீவுடன் ஒரே தரையாகி விட்டன. புங்குடுதீவு மிகநீண்ட கால வரலாற்றைக் கொண்டது. கண்ணகை அம்மன், பாணாவிடை ஐயனார் கோவில், பெரியபுலம் வீரகத்தி விநாயகர் ஆலயம் போன்ற ஆலயங்களின் வரலாறு காலத்தால் முந்தியது.

பழைய காலத்தில் இத்தீவுக்கு கடல்மூலமே பிரயாணம் செய்தார்கள். புங்குடுதீவுக்கும் வேலணைதீவுக்கும் இடையில் 1953ஆம் ஆண்டு வாணர் பாலம் அமைக்கப்பட்டதால் புங்குடுதீவு மக்கள் தரைமார்க்கமாகப் போக்கு வரத்தை ஆரம்பித்தனர். யாழ்ப்பாண நகரிலிருந்து வேலணையூடாக வரும் பிரதானவீதி புங்குடுதீவைத் தொடுகிறது. பிரதானவீதி மடத்துவெளி, குறிச்சிக்காடு, ஆலடி ஆஸ்பத்திரியடிச் சந்தியூடாக பெருங்காடு சென்று ஒரு பகுதி குறிகட்டுவானுக்கும் மறுபகுதி இறுப்பிட்டிக்கும் செல்கிறது.


போர் காலத்துக்கு முன்பு புங்குடுதீவில் 20,000க்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வந்தனர். 12 வட்டாரங்களாகப் பிரிந்து ஒரு கிராமசபையின் நிர்வாகத் தில் இயங்கியது. கிழக்கு, மத்தி, மேற்கு என்ற கிராமசேவகர்கள் பிரிவையும் கொண்டிருந்தது. வேலணை அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் இப்பொழுது இயங்கி வருகின்றது. போர்ச் சூழல் நிலைகளால் இங்குள்ள மக்கள் நாட்டின் தென்பகுதிக்கும் வெளிநாடுகளுக்கும் இடம் பெயர்ந்தார்கள். இப்பொழுது இந்தக் கிராமத்தில் கிட்டத்தட்ட 2000 மக்களே வாழ்கின்றனர். இக்கிராமத்தில் பிறந்த பலர் வெளி இடங்களில் வர்த்தகர்களாகவும் அறிஞர்களாகவும் எழுத்தாளர்களாகவும் பிரகாசிக்கின்றனர். இவ்வறிஞர்கள் இத்தீவின் புவியியல் தன்மைகளை ஆராய்ந்தால் மேலும் பல அரிய தகவல்களைப் பெறலாம்.***

நன்றி வீரகேசரி

## புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் கவனத்துக்கு 1998ஆம் ஆண்டு தொண்டர் "திரு" அவர்கள் அனுப்பிய கடிதங்களிலிருந்து ஒரு சில உருக்கமான வரிகள்

"நாட்டுப்பற்றுள்ள இளைஞர்களும், சிந்திக்கும் ஆற்றல் உள்ளவர்களும் நாட்டை விட்டு வெளியேறி வருவதால் நமது தாயகம் சூனியமாகி வருகிறது. 40 ஆண்டுகளாக நாம் அரும்பாடு பட்டு நம் கிராமத்தில் உருவாக்கிய அரும்பணிகள் நமது கண் முன்னாலேயே அழிக்கப் படுவதைப் பார்க்கின்றோம். கண்ணீரும் தண்ணீரும் விட்டு வளர்த்த மரங்கள் வீழ்த் தப்படுகின்றன. வீடுகள் உடைக்கப்பட்டு பொருள்கள் அள்ளிச் செல்லப்படுகின்றன. அழகுபடுத்திய ஒழுங்கைகளும் வீதிகளும் காடு மண்டிக்கிடக்கிறது. பரிசோதனை கள், கைதுகள், சித்திரவதைகள், அடக்கு முறைகள் சாதாரண நிகழ்வாகி வருகிறது. நம்மை வளர்த்த பனம்பழமும் இளநீரும் கடல்வாழ் உயிர்களும் முகம்வாடி நம்மைத் தேடுகின்றன. கிராமம் எங்கும் அவலக் காட்சிகள். மனித நடமாட்டம் இல்லாத பயங்கர அமைதி. மிகுதியை நீங்களே கற்பனை செய்து பாருங்கள். மனிதனென்று வாழக்கூடிய அனைத்தையும் இழந்து வாழ்வதைவிட செத்து மடிவதுமேல் என்ற நிலைக்கு வந்து கொண்டு இருக்கிறோம்."

"உங்கள் தாயகத்துக்கும் இனத்துக்கும் என்ன செய்யப் போகின்றீர்கள்? அன்னிய நாட்டில் அகதிகள் என்பதுதான் முடிவா? வாழ்வா? அந்தோ இதயம் வேகிறது!"



# மலருக்குள் நுழையு முன்......

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கக் கனடாக்கிளையின் மலர்க்குழு, பூவரசம் பொழுது - 2002 மலரை, இவ்வாண்டு "பாடசாலைகளின் சிறப்பு மலர்" ஆக வெளியிடுவதில் பெருமையடைகின்றது.

1991.10.17 இல் தீவுப்பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக 95 வீதமான புங்குடுதீவு மக்கள் சொந்த ஊரை விட்டு இடம் பெயர்ந்தனர். இதனால் புங்குடுதீவின் அபிவிருத்தி பல வழிகளிலும் பாதிப்புக்குள்ளானது. குறிப்பாக அபிவிருத்திக்கு அடிப்படையாக விளங்கும் கல்வித்துறை பெரும் பாதிப்புக்குள்ளானது. இடப்பெயர்வு ஏற்பட்டு ஒரு தசாப்தம் கடந்து விட்ட போதும் எமதூரின் கல்வி நிலை பழைய நிலைக்குத் திரும்பவேயில்லை. பழைய நிலைக்குத் திரும்புமா? என்ற கேள்வி எங்கள் எல்லோரிடமும் எழுகின்றது.

இடப்பெயர்வுக்கு முன்னர் புங்குடுதீவில் இயங்கி வந்த 15 பாடசாலைகளில் இன்று 5 பாடசாலைகள் மட்டுமே இயங்கி வருகின்றன. ஏனைய 10 பாடசாலைகளும் எதிர் காலத்தில் திறக்கப்படுமா? எங்களுக்கு கல்வி புகட்டிய அக்கல்விக் கூடங்கள் மீண்டும் பழைய நிலைக்கு வருமா? அல்லது வரலாற்றில் அப்பாடசாலைகள் எமக்காற்றிய சேவைகள் மறக்கப்பட்டு விடுமா? 15 பாடசாலைகள் புங்குடுதீவில் ஒரே சமயத்தில் இயங்கிய வரலாறு மறைந்தே விடுமா? போன்ற பல வினாக்கள் மலர்க் குழுவினரின் மனதில் தோன்றியதன் வெளிப்பாடே இம்மலரின் தோற்றமாகும்.

இம்மலரில் புங்குடுதீவில் இயங்கி வந்த 15 பாடசாலைகளின் வரலாற்றினை சிறப்பான முறையில் தருவதற்கு மலர்க்குழு பெரிதும் முயன்றுள்ளது. இப்பாடசாலைகள் யாரால், எவ்விடத்தில் ஆரம்பிக்கப்பட்டன? சைவ வித்தியா விருத்திச் சங்கம் எப்போது இப்பாடசாலைகளைப் பொறுப்பேற்றது? அரசாங்கம் எக்காலத்தில் தனது நிருவாகத்தின் கீழ் இவற்றைக் கொண்டு வந்தது? 1991 இல் ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னர் எவ்வளவு இடையூறுகளின் மத்தியில் எமது அதிபர்களும், ஆசிரியர்களும் சேர்ந்து யாழ்ப்பாணத்திலும், தென்மராட்சியிலும் எமது பாடசாலைகளை இயங்கச் செய்தார்கள்? தற்போது இயங்கும் 5 பாடசாலைகளும் மீண்டும் எவ்வாறு திறக்கப்பட்டன? போன்ற விபரங்களை இம்மலரில் உள்ள கட்டுரைகளை வாசிப்பதன் மூலம் நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

வெளிநாடுகளில் எமது பிள்ளைகள் சகல வசதிகளும் நிறைந்த பாடசாலைகளில் கல்வியை கற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எமதூர் பாடசாலைகள் அடிப்படை வசதிகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளன. எமது பாடசாலைகளின் தேவைகள் யாவை? அவற்றை பூர்த்தி செய்வதற்கு வெளிநாட்டில் உள்ளவர்கள் எவ்வாறு உதவி செய்யலாம் என்ற விபரங்களை "பாடசாலைகளின் அபிவிருத்தியில் வெளிநாட்டில் உள்ளோரின் உதவி" என்ற கட்டுரை தருகின்றது. இக்கட்டுரைகளை வாசிப்பதுடன் மட்டும் நின்று விடாமல் எமதூர் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு, வெளிநாட்டில் வாழும் புங்குடுதீவு மக்கள் ஒவ்வொருவரும் பங்களிப்புச் செய்ய வேண்டுமென புங்குடுதீவு பழைய மாணவர் சங்கக் கனடா கிளை எதிர்பார்க்கின்றது.

பாடசாலைகளின் அபிவிருத்திக்கு உதவி செய்யும் எண்ணத்தை எமதூர் மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்ற இன்னொரு சிறப்பான காரணமும் இம்மலரின் தோற்றத்திற்கு ஆதாரமாக அமைந்தது என்பதை மலர்க்குழு உங்களுக்குக் கூறக் கடமைப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வதியும் புங்குடுதீவு மக்களாகிய நாம் எமது பாடசாலைகளையும் உலக பாடசாலைகளின் தரத்திற்கு கொண்டு வருவதற்கு உதவி செய்வோம் என்றொரு சபதத்தினை மேற்கொண்டு இன்றே, இப்போதிருந்தே உதவி செய்யத் தொடங்குவோம்......

**மலர்க்குழு சார்பில்,**
**திரு.ந.பேரின்பநாதன்**
**திரு.ந.தர்மபாலன்**

# யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்

--ஓர் வரலாற்று நோக்கு--

திரு.ந.தர்மபாலன் B.A (Hons), Dip in Ed, S.L.P.S-1
(முன்னாள் அதிபர், யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்)

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் மேற்கத்தைய காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த காலப்பகுதியில் நாடெங்கிலும் உருவாக்கப்பட்ட ஆங்கிலப் பாடசாலைகளில் ஒன்றே யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம் ஆகும். இலவசக் கல்வியின் தந்தையென வர்ணிக்கப்படும் அன்றைய கல்வியமைச்சர் கௌரவ C.W.W.கன்னங்கரா அவர்களாலும், தீவுப்பகுதிப் பிரதிநிதியாகவும், அரசாங்க சபைத்தலைவராகவும் விளங்கிய சேர்.வைத்திலிங்கம் துரைச்சுவாமி அவர்களாலும் 17.01.1946 இல் அரசினர் கனிஷ்ட ஆங்கில வித்தியாலயம் (Government Junior English School) என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையே இன்றைய புங்குடுதீவு மகா வித்தியாலயம்.

எமது கிராமத்தில் ஆங்கிலப் பாடசாலை ஒன்றை உருவாக்குவதற்காக முன்னின்று உழைத்த உள்ளூர்ப் பிரமுகர்களான அன்றைய கிராமசபைத் தலைவர் திருவாளர் வ.பசுபதிப் பிள்ளை, திருவாளர் ஆ.சரவணமுத்து உடையார், திருவாளர் க.யோகுப்பிள்ளை திருவாளர் க.அம்பலவாணர் ஆகியோர் காலத்தால் போற்றப்பட வேண்டியவர்கள். இப்பாடசாலை புங்குடுதீவின் மத்தியில் ஏனைய பாடசாலைகள் அனைத்திற்கும் நடுவண்ணாக அமைந்துள்ளது. இவ்வித்தி யாலயத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டதனால் 17.01.1946 இல் புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாலயத்தின் ஒரு பகுதிக் கட்டிடத்தில் 150 மாணவர்களுடன் ஆரம்பிக்கப் பட்டது.

புங்குடுதீவின் மத்தியில் இப்பாடசாலையை அமைக்க வேண்டுமென விரும்பிய திருவாளர் க.அம்பலவாணர் அவர்கள் புங்குடுதீவின் மத்திய பகுதியில் அமைந்துள்ள சந்தையடியில் உள்ள தனது காணியைப் பாடசாலைக்கு அன்பளிப்பு செய்தார். இக்காணியில் உள்ளூர் மக்களினதும், தனவந்தர்களினதும் நிதி, பொருள் உதவியுடன் இப்பாடசாலைக்கென ஒரு நிரந்தர கட்டிடம் அமைக்கப்பட்டு, 03.03.1948 இல் இப்பாடசாலை புதிய கட்டிடத்திற்கு இடம் மாற்றப்பட்டது. அன்று ஒரு கட்டிடத்துடன் தனது கல்விப் பணியைத் தொடங்கிய இவ்வித்தியாலயம் பல கட்டிடத் தொகுதிகளுடன் கற்றல்--கற்பித்தல் செயற்பாட்டில் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றது. அரசினால் ஆங்கில மொழிக் கல்விக்காக ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயம் பின்னர் அரசின் சுய பாஷை கல்வித் திட்டத்திற்கமைய கற்றல்-கற்பித்தல் பணியை மேற்கொண்டு வருகின்றது. இங்கு தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இவ்வித்தியாலயத்ததின் ஆரம்பகால அதிபராக திரு.கே.எம்.தம்பையா அவர்கள் குறிப்பிடப்படுகின்றார். இவர் பெற்றோர்களின் பங்களிப்பினை பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் 15.09.1948 இல் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினை ஆரம்பித்தார். இதனூடாக பெற்றோர்களின் ஒத்துழைப்பைப் பெற்று பாடசாலையை கட்டி வளர்த்துள்ளார். இவருடைய காலத்தில் சங்கீதம், நெசவு, தையல் போன்ற மேலதிக விசேட பாடங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. இவருக்கு பக்க பலமாக திரு.அ.வில்வரெத்தினம், பண்டிதர் மு.ஆறுமுகம், திரு.என்.அருணாசலம், திரு.என்.இராசரெத்தினம், திரு.ரி.அம்பலவாணர், திரு.சி.முத்துக்குமாரசாமி, திருமதி.த.யோகாம்பிகை, செல்வி.தி.ஞானபூரணி போன்ற உதவி ஆசிரியர்கள் இருந்துள்ளனர். 1953 இல் முதன் முதல் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு (S.S.C. Examination) இங்கிருந்து மாணவர்கள் தோற்றியுள்ளனர். இப்பரீட்சையில் சித்தியடைந்த முதல் மாணவனாக செல்வன்.ஆர்.கனகலிங்கம் குறிப்பிடப்படுகின்றார்.

திரு.கே.எம்.தம்பபையா அவர்களுக்கு பின்னர் 01.04.1955 இல் திரு.சு. வில்வரெத்தினம் அவர்கள் பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்டார். இவருடைய காலத்திலேயே அதாவது 04.04.1955 இல் இப்பாடசாலை இரு நேரப்பாடசாலையாக மாற்றப்பட்டது. பாடசாலைக்குரிய காணி விஸ்தரிக்கப்பட்டதுடன் விளையாட்டு மைதானம் விரிவுபடுத்தப்பட்டு மறுசீரமைப்புச் செய்யப்பட்டது. 1960 இல் இப்பாடசாலையில் இருந்து கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரணதர) பரீட்சைக்கு [G.C.E.(O/L) Examination] தோற்றிய மாணவர்களில் எண்மர் சித்தியடைந்தனர். இவருடைய காலத்தில் அதாவது 01.01.1958 இல் இவ்வித்தியாலயம் மகா வித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டது. சைவ மாணவர்களுக்கான வழிபாட்டறை, வகுப்பறைக்கட்டிடம், உட்புறத் திறந்த வெளியரங்கு, கிணறு போன்றன அமைக்கப்பட்டன. இக்காலப்பகுதியில் 419 மாணவர்கள் கல்வி கற்றுள்ள அதேவேளை 15 ஆசிரியர்கள் கல்வி கற்பித்துள்ளனர்.

திரு.சு.வில்வரெத்தினம் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல 01.01.1963 இல் பாடசாலை அதிபராக திரு.வி.சோமசுந்தரம் அவர்கள் நியமனம் பெற்றார். இவருடைய சேவைக்காலம் குறுகியதாக இருந்த போதிலும் இவர் முன்னைய அதிபரின் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றுள்ளார்.

திரு.வி.சோமசுந்தரம் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல 01.01.1964 இல் முன்னைய அதிபர் திரு.சு.வில்வரெத்தினம் அவர்கள் மீண்டும் அதிபராகக் கடமையேற்றார். இவருடைய காலத்தில் கல்விச் செயற்பாடுகள் புதுமெருகு பெற்றது. குறிப்பாக விளையாட்டுத்துறையில் பாரிய சாதனைகள் படைக்கப்பட்டன. பாடசாலை மட்டத்தில் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதற்கு பக்கபலமாகத் திகழ்ந்த விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் திரு. C.செல்லையா அவர்களை நாம் என்றும் மறந்து விடமுடியாது. 1966 இல் இப்பாடசாலை மாணவனான செல்வன் சி.தனபாலசுந்தரம் யாழ்-மாவட்ட மட்டத்தில் 100 மீற்றர், 200 மீற்றர் குறுந்தூர ஓட்டங்களில் முதலாம் இடங்களைப் பெற்றது மட்டுமல்லாமல் மாவட்டச் சாதனைகள் படைத்தார். இவருடைய இச்சாதனைகள் 1970 வரை யாராலும் முறியடிக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் 1966 இல் அநுராத புரத்தில் நடைபெற்ற அகில இலங்கைக்கான மெய்வல்லுனர் போட்டியில் பங்குபற்றி 100 மீற்றர், 200 மீற்றர் குறுந்தூர ஓட்டங்களில் இரண்டாம் இடங்களைப் பெற்று பாடசாலையின் பெயரை அகில இலங்கைரீதியில் பிரபல்யப்படுத்தினார். இதனால் இவருக்கு அமெரிக்கப் புலமைப்பரிசில் கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவருடைய காலத்தில் இவருக்குப் பக்கபலமாக திரு.அ.க.கந்தையா (கண்ணையா), திரு.இ. குலசேகரம்பிள்ளை, திரு.சி.மாணிக்கம், திரு.க. தாமோதரம்பிள்ளை திருமதி.ம.யோ.பூராசா திருமதி.ந.இராசரெத்தினம், திருமதி.பொ. விஜயரெத்தினம், திருமதி.க.வடிவேலு ஆகிய உள்ளூர் ஆசிரியர்கள் இருந்துள்ளனர்.

திரு.சு.வில்வரெத்தினம் அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்ல 19.07.1967 இல் பாடசாலை அதிபராக திரு.சி.இராசநாயகம் அவர்கள் நியமிக்கப்பட்டார். இவருடைய காலத்தில் பாடசாலையில் இறுக்கமானதோர் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. பாடசாலையில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. பாடசாலை மாணவர்களுக்கு சீருடை அறிமுகப்படுத்தப்பட்டது. பாடசாலைக் காணி (Plan No: பி.பி.ஏ.971) மேலும் விரிவு படுத்தப்பட்டது. விளையாட்டுத்துறை புதுமெருகு பெற்றது. யாழ்-மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டியில் சாதனைகள் படைக்கப்பட்டன. இக்காலப்பகுதியில் புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக் கழகம் இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சியில் கூடிய கவனம் எடுக்கத் தொடங்கியது. கல்வி வளர்ச்சிக் கழகத்தினால் பாடசாலைக்கு விஞ்ஞான உபகரணங்கள், தளபாடங்கள், வாயுப் பிறப்பாக்கிகள், தட்டச்சுப் பொறிகள், ரோனியோ இயந்திரம் போன்றவை அன்பளிப்புச் செய்யப் பட்டன. இவை பாடசாலையின் வளர்ச்சிக்கு மேலும் உந்து சக்தியாக அமைந்தது. பாடசாலைக்கு இச்சேவைகளை வழங்கிய கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு.க.மதியாபரணம், J.P அவர்களும், செயலாளர் திரு.சு.யோ.பூராசா அவர்களும் என்றும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

திரு.சி.இரசநாயகம் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல 01.08.1968 இல் பாடசாலை அதிபராக திரு.இ.சச்சிதானந்தம் அவர்கள் நியமனம் பெற்றார். இவர் வெளியூரைச் சேர்ந்தவராக இருந்த போதிலும் பாடசாலையில் தங்கியிருந்து பாடசாலையின் கல்வி, விளையாட்டுத்துறை வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். இவருடைய காலத்திலும் பாடசாலை மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் சாதனைகளைப் படைத்தனர். விளையாட்டு வீரர்களுக்கு பாடசாலை முடிவடைந்த பின்னர் வழங்கப்படும் விசேட பயிற்சிகளில் திரு.C.செல்லையா ஆசிரியர் அவர்களுடன் அரைக்காற்சட்டையுடன் மைதானத்தில் இறங்கி பயிற்சி அளித்தவர். இவரே பாடசாலையில் பூமரங்களை நாட்டி பாடசாலைச் சூழலை அழகுபடுத்தியவர். இவரால் அன்று வைக்கப்பட்ட அலரி மரங்கள் இன்றும் பாடசாலையை அழகுபடுத்துகின்றன. 1969 இல் க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த செல்வன்.ப.சுந்தரலிங்கம் இங்கிருந்து பல்கலைக் கழகம் சென்ற முதல் மாணவனாகத் திகழ்கின்றார். இக்காலப்பகுதியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்பித்த ஆசிரியர்களில் திரு.மு.தளையசிங்கம், திரு.பொன்.கனகசபை, செல்வி.ந.குழந்தைவேலு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

திரு.இ.சச்சிதானந்தம் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல 01.07.1970 இல் திரு.கு.வி. செல்லத்துரை அவர்கள் அதிபராக நியமனம் பெற்றார். பிரபல ஆசிரிய தொழிற்சங்கவாதியான இவர் அகில இலங்கை தமிழாசிரியர் சங்கத் தலைவராக இருந்து தொழிற்சங்க கலந்துரை யாடல்களுக்காக சீனா வரை சென்று வந்தவர். இவருடைய காலத்திலேயே பாடசாலையின் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட்டது. புங்குடுதீவைச் சார்ந்த கொழும்பு பிரபல வர்த்தகர் திரு.நா.க.மயில்வாகனம் அவர்களின் நிதி (ரூபா 25,000) மூலம் புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் புதிய கிணறு ஒன்று அமைக்கப் பட்டு, அங்கிருந்து குழாய் மூலம் குடிநீர் வழங்கல் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. விளையாட்டுத் துறையில் மாவட்ட மட்டத்தில் சாதனைகள் படைக்கப்பட்டன. இப்பாடசாலை மாணவனான செல்வன் வே.சத்தியகுமார் (உயரம் பாய்தல்), செல்வன்.மு.அரியராசா (200 மீற்றர்) ஆகியோர் காலியில் நடைபெற்ற அகில இலங்கை மெய்வல் லுநர் போட்டியிலும் பங்குபற்றி உள்ளனர். செல்வன் சதானந்தன் பரிதி வட்டம் எறிதலில் மாவட்ட சாதனையை நிலை நாட்டியதோடு, அகில இலங்கை ரீதியிலான போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார். இதனால் இவருக்கு அமெரிக்கப் புலமைப்பரிசில் கிடைக்கப் பெற்றது.

திரு.கு.வி.செல்லத்துரை அவர்கள் இளைப் பாறிச் செல்ல பாடசாலையின் உதவி அதிபராக இருந்த திரு.மு.இராமலிங்கம் அவர்கள் 02.01.1972 இல் பாடசாலை அதிபராக நியமனம் பெற்றார். இவரும் பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு தன்னாலான பணியைச் செய்துள்ளார். இவருடைய காலத்தில் க.பொ.த. உயர்தர விஞ்ஞான, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. விளையாட்டு மைதானத்திற்குரிய பார்வையாளர் அரங்கு அமைக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் 651 மாணவர்களும் 23 ஆசிரியர்களும் இருந்துள்ளனர்

திரு.மு.இராமலிங்கம் அவர்கள் உயர் கல்வி கற்கச் செல்ல, 14.03.1973 இல் பாடசாலையின் அதிபராக திரு.க.மயில்வாகனம் அவர்கள் அதிபராக நியமனம் பெற்றார். இவருடைய காலத்திலும் கல்வி, விளையாட்டுத்துறை மேலும் வளர்ச்சி கண்டது. பாடசாலையில் ஏற்பட்ட இட நெருக்கடியைத் தீர்ப்பதற்காக இருமாடிக் கட்டிடம் ஒன்றை அமைப்பதற்காக அத்திவாரம் இடப்பட்டது.

திரு.க.மயில்வாகனம் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல 19.10.1973 இல் பாடசாலை அதிபராக பண்டிதர் வீ.வ.நல்லதம்பி அவர்கள் நியமனம் பெற்றார். இவருடைய காலத்திலேயே அத்திவாரம் இடப்பட்டிருந்த இருமாடிக் கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு, 17.03.1975 இல் திறந்து வைக்கப்பட்டது. இத்துடன் பாடசாலையின் வெள்ளி விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு, வெள்ளிவிழா மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. பாடசாலைக்கு மின்சார விநியோகம் பெறப்பட்டது. மாணவ தலைவர்கள் இலச்சினை, "ரை" அணியும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. 1976 இல் வர்த்தக அறை அமைக்கப்பட்டது. மல கூடங்கள் அமைக்கப்பட்டன. கோழிப்பண்ணை அமைக்கப் பட்டு கோழி வளர்ப்பு அறிமுகம் செய்து வைக்கப் பட்டது. புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக் கழகத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட வாயுப்பிறப்பாக்கிகளை

வைத்து இயக்குவதற்கு 1978 இல் புதிய கட்டிடம் அமைக்கப்பட்டு இயக்கி வைக்கப்பட்டது. கிறிஸ்தவ மாணவர்களின் வழிபாட்டிற்கென பெற்றோர்களின் நிதியுதவியுடன் செபகூடம் அமைக்கப்பட்டது. இம்முயற்சியில் திருமதி.மே.தி. வசந்தகுமார் ஆசிரியை அதிபருடன் பக்கபலமாக நின்று உழைத்துள்ளார். இக்காலப்பகுதியில் பாடசாலையில் 737 மாணவர்களும், 26 ஆசிரியர்களும் இருந்துள்ளனர். இவருடைய காலத்தில் திரு.த.சிவகுரு அவர்கள் பிரதி அதிபராக கடமையாற்றியுள்ளார்.

திரு.வீ.வ.நல்லதம்பி அவர்கள் ஓய்வு பெற 23.10.1980 இல் மீண்டும் திரு.சி.இராசநாயகம் அவர்கள் பாடசாலை அதிபராகவும், கொத்தணி அதிபராகவும் நியமிக்கப்பட்டார். இவருடைய காலத்தில் புங்குடுதீவைச் சேர்ந்த கொழும்பு பிரபல வர்த்தகர் திரு.பா.பாலசுந்தரம் அவர்களால் அவரது தந்தையார் அமரர் பொன்னையா பாலசிங்கம் அவர்களின் ஞாபகார்த்த பரிசளிப்பு நிதியத்துக்காக ரூபா 15,000 புங்குடுதீவு மக்கள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. இத்தொகை இன்று வட்டியுடன் ரூபா 80,000 ஆகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. பாடசாலையில் மீண்டும் இவருடைய காலத்தில் இறுக்கமான கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. கல்வித் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டினால் மரவேலைக் கூடம் அமைக்கப்பட்டது.

திரு.சி.இராசநாயகம் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல 01.03.1983 இல் திரு.க. செல்லத்துரை அவர்கள் பாடசாலை அதிபராகவும், புங்குடுதீவுக் கொத்தணி அதிபராகவும் நியமனம் பெற்றார். இவரும் பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக முன்னின்று உழைத்துள்ளார். இவருடைய காலத்தில் மனையியல்கூடம், வகுப்பறைக் கட்டிடம் ஒன்றும் கட்டப்பட்டது. புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் பாரிய குடிநீர் தொட்டி (2500 கலன்) அமைக்கப்பட்டது. பாடசாலையின் சிரேஷ்ட மாணவர் மன்றத்தினால் இடம் பெயர்ந்த மக்களுக்கு நிதி சேகரிக்கும் முகமாக பாடசாலை திறந்த வெளியரங்கில் மாபெரும் நாடக விழா நடாத்தப்பட்டு கிடைக்கப் பெற்ற நிதி மூலம் பொருட்கள் வாங்கி வழங்கப்பட்டன. பாடசாலையின் வளர்ச்சியில் இவருக்குப் பக்கபலமாக உள்ளூர் ஆசிரியர்களான திரு.ஐ.சண்முகநாதன், திரு.ந.தர்மபாலன், திரு.த. கருணாகரன், திரு.செ.ஈஸ்வரமூர்த்தி, திரு.ந. கலைநாதன், திரு.இ.ஜெயசீலன், திருமதி.மே.தி. வசந்தகுமார், திருமதி.ம.யோ.பூராசா, திருமதி.பி. கலைநாதன், திருமதி.ம.இராமச்சந்திரன் ஆகியோர் இருந்துள்ளனர்.

திரு.க.செல்லத்துரை அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்ல 15.06.1987 இல் திரு.ஏ.சி.நல்லையா அவர்கள் பாடசாலை அதிபராகவும், புங்குடுதீவுக் கொத்தணி அதிபராகவும் நியமனம் பெற்றார். இவருடைய காலத்தில் சத்துணவுத் திட்டம் அரசால் நடைமுறைப் படுத்தப்பட்டது. சைக்கிள் பாவனை அதிகரித்தமையால் பாடசாலை ஒழுங்கு கருதியும், அவற்றைப் பாதுகாக்கும் நோக்கிலும் துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் அமைக்கப்பட்டது. புங்குடுதீவு பிரபல வர்த்தகர் திரு.சந்திரன் அவர்களால் பாடசாலையின் முன்புறத்தில் 115 அடி நீளத்திற்கு மதில் அமைக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் 637 மாணவர்களும், 23 ஆசிரியர்களும் இருந்துள்ளனர். இவருடைய காலத்தில் பாடசாலையின் பிரதி அதிபராக திரு.ந.தர்மபாலன் அவர்கள் கடமையாற்றியுள்ளார்.

திரு.ஏ.சி.நல்லையா அவர்கள் வேலணை கல்விக் கோட்டத்திற்கு பதவி உயர்வு பெற்றுச் செல்ல 26.05.1990 இல் திரு.க.பேரம்பலம் அவர்கள் பாடசாலை அதிபராகவும், புங்குடுதீவுக் கொத்தணி அதிபராகவும் நியமனம் பெற்றார். இவருடைய காலத்திலேயே பாரிய இடப்பெயர்வு ஏற்பட்டது. 17.10.1991 இல் இலங்கை இராணுவத்தால் தீவுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கை காரணமாக புங்குடுதீவிலிருந்து 95 சதவீதமான மக்கள் யாழ்நகருக்கு இடம் பெயர்ந்தனர். இதன் விளைவாக புங்குடுதீவுப் பாடசாலைகள் பதினைந்தையும் யாழ்நகரில் ஆரம்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

இடம் பெயர்ந்த புங்குடுதீவுப் பாடசாலைகள் யாவும் சேர்ந்து யாழ்-சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் கொத்தணி அதிபரின் தலைமையில் மாலை நேரப்பாடசாலையாக சில நாட்கள் இயங்கின. பின்னர் இடப்பிரச்சினை காரணமாகப் பெரியபுலம் மகா வித்தியாலத்தில் சிறிது காலம் இயங்கியுள்ளன. மீண்டும் இடப்பிரச்சினை காரண

மாக இப்பாடசாலைகள் யாவும் தமது இடத்தை யாழ்-இந்து மகளிர் கல்லூரிக்கு மாற்றிக் கொண்டன. இங்கும் மாணவர்களுக்கு பூரணத் துவமான கல்வியை வழங்க முடியவில்லை. இக்கல்லூரியில் மாலை நேரப் பாடசாலையாக இயங்குவதால் மாணவர்களுக்கு பூரணத்துவமான கல்வியை வழங்க முடியாது என்ற முடிவுக்கு பாடசாலைச் சமூகம் வந்தது. இத்துடன் ஒவ்வொரு பாடசாலையும் தமது பாடசாலையின் தனித்து வத்தைப் பேணும் வகையில் தனித்துவமாகவும் இயங்க முன்வந்தன. இந்நிலையில் அதிபர்-ஆசிரியர்கள் கந்தர்மடம் யூனிவேர்சல் தனியார் கல்வி நிலைய அதிபர் திரு.க.ஐங்கரநேசன் அவர்களை அணுகியதன் மூலம் அவர் தனது கல்வி நிலையத்தின் ஒரு பகுதியில் இப் பாடசாலையைக் காலை நேரப் பாடசாலையாக இயங்குவதற்கு வழி செய்து உதவினார். இங்கு இப்பாடசாலை ஒன்றரை வருடங்களுக்கு மேலாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தொடர்ந்து இயங்கியுள்ளது. எனினும் இங்கும் இப்பாடசாலை பல்வேறு வசதியீனங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமைகள் தோன்றின. இதனால் இப்பாடசாலையை தனக்கென ஒரு தனியான கட்டிடத்தில் சுதந்திரமாக இயங்க வைக்க வேண்டுமென்ற அவா பாடசாலைச் சமூகத்தின ருக்கு ஏற்பட்டது.

திரு.க.பேரம்பலம் அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்ல 14.01.1994 இல் பாடசாலை அதிபராக திரு.ந.தர்மபாலன் அவர்கள் நியமனம் பெற்றார். இவருடைய காலத்திலேயே பாடசாலையை தனித்துவமாக அமைப்பதற்குரிய காணி 81 இலக்க பிறவுண் வீதி (நீராவியடி) யில் பாடசாலை சமூகத்தினரால் தெரிவு செய்யப்பட்டது. கல்வித் திணைக்களத்தை அணுகி நிதி கிடைக்கப் பெறாத நிலையில், அன்றைய அரசாங்க அதிபர் திரு.சி.மாணிக்கவாசகர் அவர்களை அணுகியதன் விளைவாக 100 x 20 அடியில் 3 கொட்டகைகளை அமைப்பதற்குரிய நிதியாக 2,50,000 ரூபாவை ஒதுக்கீடு செய்து உதவினார். யாழ்-கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன் இல 81, பிறவுண் வீதியில் இருந்த தனியார் காணியில் புதிய கட்டிடங்கள் (கொட்டகைகள்) அமைக்கப்பட்டன. பாடசாலைக்குரிய ஒரு தொகுதி தளபாடங்களான 50 நீள மேசைகளையும், 50 நீள வாங்குகளையும் புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் செய்து உதவியது. இவ்விடத்தில் அன்றைய சங்கத் தலைவர் திரு.ப.கனகலிங்கம், உபதலைவர் திரு.ஐ.சண்முகநாதன் ஆகியோர் என்றும் நினைவில் கொள்ளப்பட வேண்டியவர்கள். ஒரு பகுதி தளபாடங்கள் கல்வித்திணைக் களத்தின் ஊடாகப் பெறப்பட்டது.

பாடசாலைப் பழைய மாணவர் சங்கத்தால் பெற்றோர்களிடமும், பழைய மாணவர்களிடமும் இருந்து திரட்டப்பட்ட நிதி மூலம் பாடசாலை வகுப்பறைகள், நூலகம், விஞ்ஞான ஆய்வு கூடம் போன்றவை மாணவர்களுக்கு கொட்டகையில் இருந்து கற்பது போன்றதோர் உணர்வு ஏற்படாதவாறு அழகுற வடிவமைக்கப்பட்டது. பற்றாக்குறையான தளபாடங்கள், கற்பித்தல் உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

இக்கட்டிடத் தொகுதி யாழ்-அரசாங்க அதிபர் திரு.சி.மாணிக்கவாசகர் அவர்களால் 01.03.1994 இல் திறந்து வைக்கப்பட்டது. இப்பெரும் முயற்சியில் டாக்டர்.ஆ.பேரின்பநாதன் (தலைவர், பழைய மாணவர் சங்கம்) கிராமசேவையாளர் நா.சுந்தரராசா (செயலாளர், பழைய மாணவர் சங்கம்) திரு.சு.கருணாகரன் (செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்) திரு.தளைய சிங்கம் (கிராமசேவையாளர்), திரு.க.தர்மகுண சிங்கம் (பிரதி அதிபர்), திரு.ந.கலைநாதன் ஆசிரியர், திரு.ஐ.சண்முகநாதன் (அதிபர், றோமன்.க.வித்தியாலயம்), திரு.சு.யோ.பூராசா (அதிபர், புங்குடுதீவு மேற்கு அ.மி.வித்தியாலயம்), திரு.ம.பாலசிங்கம் (காவலாளி) போன்றவர்கள் அதிபருக்கு பக்கபலமாக இருந்து செயற்பட்டு உள்ளனர்.

யாழ்நகரில் இப்பாடசாலை தனித்துவமாக இயங்கிய இக்காலப்பகுதி இப்பாடசாலை மாணவர்களுக்கு ஓர் ஒளிமயமான காலப்பகுதி யாகும். சகலதுறைகளிலும் யாழ்ப்பாணக் கல்லூரிகளுடன் போட்டி போட்டு முன்னேறு வதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றன. பாடசாலையின் உதைபந்தாட்ட அணிகள் (16, 19 வயதுக்குட்பட்டோர்) யாழ்நகரில் வீறு நடை போட்டன. யாழ் குடாநாட்டின் பிரபல கல்லூரிகளின்

அணிகளுடன்மோதி பல வெற்றிகளை பெற்றதோடு, பாடசாலையின் பெயரை மாவட்ட மட்டத்தில் பிரபல்யமடையச் செய்தன. யாழ்-பரீஸ் ரெக்ஸ் உரிமையாளரான திரு.சோமசுந்தரம் அவர்கள் உதைபந்தாட்ட அணிக்கான சீருடைகளை (Jersey) பாடசாலைக் குரிய நிறத்தில் (பச்சை-மஞ்சள்) செய்து உதவினார். 1994 இல் 19 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணி மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்றது. பாடசாலை அணிகள் மாவட்ட மட்டப் போட்டியில் முறையே கால், அரை, இறுதி ஆட்டங்களில் யாழ்-இந்துக் கல்லூரி, யாழ்-மத்திய கல்லூரி, யாழ்-பரியோவான் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, சுண்ணாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி ம.ம.வி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றின் அணிகளுடன மோதிப் பல வெற்றிகளைக் குவித்து பலரையும் வியப்பில் ஆழ்த்தியமை என்றும் மறக்க முடியாத நிகழ்வுகள்.

இப்பாடசாலையின் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் அனைவராலும் பாராட்டப்படும் அளவிற்கு சிறப்பாக நடைபெற்றுள்ளன. மாணவர்கள் தாங்கள் இடம் பெயர்ந்தவர்கள் என்பதையே மறந்து கற்றலில் ஈடுபட்டனர். இடம் பெயர்ந்து வசதிக்குறைவான இருப்பிடங்களில் வசித்த மாணவர்களின் நன்மை கருதியும், யாழ்நகரில் காணப்பட்ட எரிபொருள் தட்டுப்பாட்டை கவனத்திற் கொண்டும் மாணவர்கள் இரவு நேரத்தில் பாடசாலையில் வந்து கல்வி கற்பதற்கு பாடசாலயில் ஒளி வசதி செய்து கொடுக்கப்பட்டன. பழைய மாணவர் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இல்ல விளையாட்டுப் போட்டி, கலைமகள் விழா, தமிழ் தினம், ஆங்கில தினம், ஆசிரியர் தினம் போன்றவை சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. இந்த வகையில் தனது கல்விப் பணியைச் சிறப்பாகச் செய்து கொண்டிருந்த வேளையில் இலங்கை இராணுவத்தினர் பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்குடாநாட்டைக் கைப்பற்றும் நோக்கில் பாரிய இராணுவ நடவடிக்கையில் இறங்கினர்.

இதனால் 30.10.1995 இல் இப்பாடசாலை தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்தது. தென்மராட்சியில் சாவகச்சேரி - கச்சாய் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலத்தில் இப்பாடசாலை 1996 ஜனவரியில் இருந்து 1996 ஏப்ரல் வரை மாலை நேரப் பாடசாலையாக நடைபெற்றுள்ளது. தென்மராட்சி இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம் திரும்பிய இப் பாடசாலை 17.06.1996 இல் தனது சொந்த இடத்திற்கு திரும்பியது. 17.10.1991 இல் பாடசாலை சமூகத்தினர் இடம் பெயர்ந்தபோது விட்டுச்சென்ற பாடசாலையின் தோற்றத்தை 17.06.1996 இல் திரும்பி வந்தபோது அவர்களால் காணமுடியவில்லை. பாடசாலை வேலிகள் அழிந்திருந்தன. பூவரச மரங்கள் ஐந்து வருடங்களாக வெட்டப் படாமல் தன்னிலையை இழந்திருந்தன. பாடசாலையிலிருந்த தட்டச்சுப் பொறிகள், தொலைக்காட்சிப் பெட்டி போன்றவற்றை காணவில்லை. அலுவலகத்திலிருந்த முக்கிய ஆவணங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. வகுப்புக்கள் நடைபெற்ற பகுதிகளை தவிர ஏனைய விஞ்ஞான கூடம், மனையியல் கூடம், மேல்மாடி மண்டபம், மரவேலைக்கூடம், ஆசிரியர்அறை, பழைய அலுவலகம் போன்றவை ஐந்து வருடங்களாக மனித சஞ்சாரமற்ற பகுதிகளாகி அலங்கோல நிலையில் இருந்தன. இவற்றைப் பழைய நிலைக்குக் கொண்டுவர பாடசாலைச் சமூகத்தினருக்குப் பல நாட்கள் எடுத்தன.

1997 இல் வேலணை பிரதேச சபை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (ரூபா 50,000) மூலம் மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டது. 1997 இல் நடைபெற்ற யாழ்-மாவட்டரீதியான சங்கீத, நடன, நாடகப் போட்டியில் இப்பாடசாலை மாணவர்களது நாட்டுக் கூத்து இரண்டாம் இடத்தை பெற்று பலரது பாராட்டையும் பெற்றுக் கொண்டது. மீண்டும் பாடசாலை மட்டத்தில் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நடாத்தப்பட்டன. வேலணை பிரதேசசபையினூடாகவும், அரசினூடாகவும் இரண்டு றோனியோ இயந்திரங்கள், விஞ்ஞான உபகரணங்கள் பெறப்பட்டன. இக்காலப்பகுதியில் பாடசாலயின் பிரதி அதிபராக திரு.க.தர்மகுணசிங்கம் அவர்கள் கடமையாற்றியுள்ளார்.

திரு.ந.தர்மபாலன் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல 25.03.1998 இல் பாடசாலையின் அதிபராக திரு.க.தர்மகுணசிங்கம் அவர்கள்

நியமனம் பெற்றார். இவருடைய காலப்பகுதியில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியினால் ஆண்களுக்கும் பெண்களுக்குமாக இரு மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கல்வி தரம் 1, தரம் 2 இற்கான செயற்பாட்டறை அமைக்கபப்பட்டது. விஞ்ஞானகூடம் புனரமைக்கப் பட்டது. கனடா-புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் உதவியினால் 2001 இல் சத்துணவும், தொண்டர் ஆசிரியருக்கான வேதனமும் வழங்கப் பட்டது. 2001 இல் சமூகக்கல்வி மன்றத்தினால் "துலக்கம்" என்னும் சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டது. தமிழ் தினம், சமூகக்கல்வி தினம், ஆசிரியர் தினம், இல்ல விளையாட்டுப் போட்டி, நவராத்திரி விழா, ஒளி விழா போன்ற நிகழ்ச்சிகள் வருடா வருடம் நடைபெற்று வருகின்றன. இன்று தரம் 1 இலிருந்து தரம் 13 வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தற்போது 256 மாணவர்களும், 17 ஆசிரியர்களும் (தொண்டர் ஆசிரியர்கள் உட்பட) உள்ளனர். பிரதி அதிபராக திரு.ச.கணேஸ்வரன் அவர்கள் கடமையாற்றி வருகின்றார்.

1991 ஐப்பசி 17ந் திகதி தீவுப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பின்னர் புங்குடுதீவு வேலணைத்தீவு, மண்டைதீவு ஆகியவற்றில் இடம் பெயராமல் தங்கியிருந்த மாணவர்களை ஒன்று சேர்த்து புங்குடுதீவு மகா வித்தியாலயக் கட்டிடத்தில் கல்வி கற்பிப்பதற்கான ஒழுங்குகளை அரசு மேற்கொண்டது. இந்த வகையில் மூன்று தீவுகளிலும் தங்கியிருந்த 90 மாணவர்கள் ஒன்று சேர்க்கப்பட்டனர். இவர்களுக்கு கல்வி கற்பிக்க புங்குடுதீவிலிருந்து இடம் பெயர முடியாமல் தங்கியிருந்த ஆசிரியர்களும், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் சிலரும் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இக்காலப்பகுதியில் இங்கு திரு.சொ. பகீரதன், திரு.சி.மாணிக்கம், திரு.சு.செல்லத்துரை, திரு.விக்னேஸ்வரன், திரு.மு.பொன்னம்பலம் ஆகியோர் கற்பித்தலில் ஈடுபட்டுள்ளனர். திரு.சொ.பகீரதன் அவர்கள் அதிபராகக் கடமை யாற்றியுள்ளார். 17.06.1996 இல் இடம் பெயர்ந்த புங்குடுதீவு மகா வித்தியாலயம் மீண்டும் தனது சொந்த கட்டிடத் தொகுதிக்கு திரும்பியதும் இங்கிருந்த ஏனைய தீவகப் பாடசாலை மாணவர்கள் தத்தமது சொந்தப் பாடசாலைகளுக்கு திரும்பினர்.

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் இன்று வரை சேவையாற்றியுள்ள அதிபர்களையும், அவர்களது சேவைக்காலத்தையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

**புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபர்களும், அவர்களின் சேவைக்காலமும்**

| அதிபர்கள் | சேவைக்காலம் |
|---|---|
| 1. திரு.கே.எம்.தம்பையா | 17.01.1946 - 31.03.1955 |
| 2. திரு.சு.வில்வரெத்தினம் | 01.04.1955 - 31.12.1962 |
| 3. திரு.வி.சோமசுந்தரம் | 01.01.1963 - 31.12.1963 |
| 4. திரு.சு.வில்வரெத்தினம் | 01.01.1964 - 18.07.1967 |
| 5. திரு.சி.இராசநாயகம் BSc., S.L.E.S | 19.07.1967 - 30.07.1968 |
| 6. திரு.சி.சச்சிதானந்தம் BSc. | 01.08.1968 - 31.06.1970 |
| 7. தி.கு.வி.செல்லத்துரை | 01.07.1970 - 31.12.1971 |
| 8. திரு.மு.இராமலிங்கம் BSc. | 01.01.1972 - 13.03.1973 |
| 9. திரு.க.மயில்வாகனம் BSc. | 14.03.1973 - 18.10.1973 |
| 10. பண்டிதர்.வீ.வ.நல்லதம்பி | 19.10.1973 - 22.10.1980 |
| 11. திரு.சி.இராசநாயகம் BSc. | 23.10.1980 - 31.02.1983 |
| 12. திரு.க.செல்லத்துரை B.A, S.L.E.S | 01.03.1983 - 14.06.1987 |
| 13. திரு.எ.சி.நல்லையா S.L.E.S | 15.06.1987 - 25.05.1990 |
| 14. திரு.க.பேரம்பலம் B.A, S.L.P.S-1 | 26.05.1990 - 13.01.1994 |
| 15. திரு.ந.தர்மபாலன் B.A (Hons), S.L.P.S-1 | 14.01.1994 - 24.03.1998 |
| 16. திரு.க.தர்மகுணசிங்கம் B.Com | 25.03.1998 - இற்றைவரை |

◆◆◆◆◆◆◆◆◆◆

# யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்

திரு.ச.சதாசிவம் (முன்னாள் அதிபர்)
(யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்)

"கன்னலொடு செந்நெல்விளை பொன்னகா்" என வரகவி முத்துக்குமாருப் புலவரால் போற்றப் பெறும் புங்குடுதீவின் கலைக் கோயிலாக மிளிர்வது ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம். சைவப் பிள்ளைகள் சைவச் சூழலில் சைவநெறிக்கமைய கல்வி பயில வேண்டும் என்னும் உன்னத இலட்சியத்தைக் குறிக்கோளாகக் கொண்டு நம் தீவகம் தந்த பெரியார் அமரா் வ.பசுபதிப்பிள்ளை அவர்களினால் உருவாக்கப்பட்டதே இக் கல்விக்கூடம். அந்நியா் ஆட்சியில் பிற மதத் தாக்குதலுக்கு மத்தியில் தனிப்பட்ட பாடசாலை ஒன்றை ஆரம்பித்து நடத்துவதென்பது இலகுவான காரியமல்ல. அத்தகையதோா் கால கட்டத்தில் குன்றாத மன உறுதியும், கலையாத இலட்சிய வேட்கையும் கொண்ட அமரா் வ.பசுபதிப்பிள்ளை அவர்கள் சைவப் பெருமக்கள் பலரது ஒத்துழைப்புடன் பெரியார் நீ.அம்பலவாணா் (மூத்ததம்பி) அவர்களது வளவில் முதன் முதலாக 1910 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் மூன்றாம் நாளில் (03-03-1910) இக் கல்விக் கூடத்தினை உருவாக்கினார்.

கவியரசா் தாகூரின் காந்தி நிகேதனத்தை நினைவூட்டும் வகையில் இத்திண்ணைப் பள்ளிக்கூடம் அன்று விளங்கியதென இங்கு கல்வி கற்றோர் பலா் இன்றும் கூறுகின்றனா். இயற்கைச் சூழலில் ஆலமர நிழலிலும், அரச மர நிழலிலும் மாணவா் மகிழ்ச்சியுடன் இங்கு கல்வி கற்றனா். இத்திண்ணைப் பள்ளிக் கூடத்தின் பக்கலில் நின்ற அரசமரம் இன்று வானளாவி வளா்ந்து நிற்பது இவ்வித்தியாலயத்தின் வளா்ச்சிக்குக் கட்டியங் கூறுவது போன்று அமைந்துள்ளது. இவ் வித்தியாலயம் 1914 ஆம் ஆண்டு வரை அரசினரின் நன்கொடைப் பண உதவி எதுவுமின்றி இயங்கியது. அமரா் பசுபதிப்பிள்ளை அவர்கள் தமது சுய முயற்சியினாலும், உள்ளூர்ப் பெரியார்கள் பலரது ஒத்துழைப்பினாலும் அரும்பாடுபட்டே இதனை நிருவகிக்க வேண்டியிருந்தது. 1914 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 10 ஆம் திகதி அரசினா் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக இவ் வித்தியாலயம் அங்கீகரிக்கப் பெற்றது. 1923 ஆம் ஆண்டு உயா்தர வகுப்புகளைக் கொண்ட மத்திய பாடசாலையாக இது பதிவு பெற்றது. திண்ணைப் பள்ளிக் கூடமாக இயங்கி வந்த இவ்வித்தியாலயம் இவ்வாண்டிலேயே நவீன வசதிகள் கொண்ட புதிய கட்டிடத்திற்கு (தற்பொழுது அமைந்துள்ள இடத்திற்கு ) இடம்மாறிற்று. 1936 ஆம் ஆண்டில் இவ் வித்தியாலயம் சிரேஷ்ட உயா் நிலைப் பாடசாலையாக தரம் உயா்த்தப் பெற்றது. 1940 ஆம் ஆண்டு இவ்வித்தியாலயப் பழைய மாணவா் சங்கம் எடுத்த பெருவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வித்தியாதிபதி எல்.எம்.டி. றொபிசன் அவா்களிடம் புங்குடுதீவிற்கு ஆங்கிலப் பாடசாலையொன்று வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அவ்வேண்டுகொளின் பயனாக புங்குடுதீவு மகாவித்தியாலயம் 17-01-1946ல் இவ் வித்தியாலய மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. 1967 இல் கல்விப் பகுதியின் பாடசாலைகள் புனரமைப்பின் காரணமாக இப்பாடசாலை 1972 ஆம் ஆண்டு முதல் கனிஷ்ட வித்தியாலயமாக்கப்பட்டது. பல்லாண்டுகளாக சிரேஷ்ட பாடசாலையாக விளங்கிய இவ்வித்தியாலயம் கல்வித் துறையிலும், மாணவா் தொகையிலும் பெருவளா்ச்சி கண்டது. இதன் காரணமாக மகா வித்தியாலயமாக இதனைத் தரம் உயா்த்த வேண்டுமென பெற்றோர்கள் விடுத்த கோரிக்கையின் பேறாக 05-02-1980 இல் இவ்வித்தியாலயம் கல்வியமைச் சினால் மகா வித்தியாலயமாகத் தரம் உயா்த்தப் பட்டது. க.பொ.த. உயா்தர கலை வகுப்புகளை நடத்துதற்கும் அங்கீகாரம் பெற்றது.

துரித வளர்ச்சி கண்ட எமது கலைக் கோவில் 1991 இல் நிகழ்ந்த இடப்பெயர்வினால் 1997 வரை சொந்த இடத்தில் இயங்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டது. யாழ்நகரிற்கு இடம் பெயர்ந்த புங்குடுதீவு பாடசாலைகளுடன் இணைந்து ஆரம்பத்தில் கொக்குவில் பெரியபுலம் வித்தியாலயத்தில் இயங்க ஆரம்பித்தது. இடப் பற்றாக்குறை காரணமாக பின்னர் கந்தர்மடம் தனியார் கல்வி நிறுவனமான யூனிவேர்சல் கல்வி நிறுவனத்தில் சில பாடசாலைகளுடன் இணைந்து இயங்கியது. அங்கும் இடநெருக்கடி காரணமாக சில வசதியீனங்களை எதிர்நோக்க வேண்டிய தாயிற்று. அதன் நிமித்தம் நிரந்தர கட்டிட வசதிகளை உள்ளடக்கிய முஸ்லீம் கதிஜா மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றப்பட்டு தனித்து இயங்கத் தொடங்கியது. பல கஷ்டங்களைத் தொடக்கத்தின் போது எதிர் நோக்கிய போதும் பழைய மாணவர் சங்கத்தினரதும், தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பினரதும், கல்வித் திணைக்களத்தினரதும் உதவியினால் ஓரளவு வசதிகளைப் பெற்று புது மெருகுடன் இயங்கத் தொடங்கியது.

அதிபர், ஆசிரியர்களது அயரா முயற்சி யினாலும், வேண்டும் பொழுதெல்லாம் வேண்டிய உதவிகளை வழங்கிய பழைய மாணவர் சங்கத்தின் பெருமுயற்சியினாலும் மேலும் பல வசதிகளைப் பெற்று நிரந்தர பாடசாலையைப் போன்று இயங்கலாயிற்று. மாணவர் தொகை அதிகரித்தது. யாழ்நகரப் பாடசாலைகளுடன் போட்டி போடக்கூடிய தகைமையைப் பெற்ற வித்தியாலயப் பரிசளிப்பு பிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் செல்வி.ம.பெரியதம்பி அவர்கள் தமதுரையின் பொழுது இவ்வித்தியாலயத்தை தான் ஒரு இடம் பெயர்ந்த பாடசாலையாகக் கருத வில்லை என்றும், இப்பரிசளிப்பு விழாவானது ஒரு பெரும் கல்லூரியொன்றில் நடைபெறும் விழாவாகவே கருதுகின்றேன் எனவும் வியந்து பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் எம்மக்களைத் தொடர்ந்து துரதிஷ்டம் துரத்தியது. யாழிலும் அதிக காலம் விட்டு வைக்கவில்லை. 1995 நவம்பரில் யாழநகர இடப்பெயர்வோடு வலிகாமத்தில் சிலரும்,வன்னியில் சிலருமாகச் சிதறடிக்கப்பட்டனர். வலிகாமத்தில் மட்டுவில் மகா வித்தியாலயத்தில் சில தினங்கள் புங்குடுதீவுப் பாடசாலைகள் இணைந்து நடந்த பொழுதிலும் சீராக இயங்க முடியவில்லை. 1996 இலிருந்து எமது வித்தியாலயம் இயங்காதிருந்த பொழுதிலும் பழைய மாணவர் சங்கத்தினரின் பெரு முயற்சியினால் புங்குடுதீவில் மீண்டும் 24-03-97 இல் இயங்க ஆரம்பித்தது. படிப்படியாக எமது கல்வித் தாய் பழைய நிலையை அடைய எல்லாம் வல்ல வெள்ளிப் பிள்ளையார் அருள் புரிவார் என்பது திண்ணம்.

## முகாமையாளர்கள்

புங்குடுதீவின் புகழ் பூத்த பெரியார் அமரர் பசுபதிப்பிள்ளையின் மேலான முகாமையின் கீழ் இவ்வித்தியாலயம் 1954ஆம் ஆண்டு வரை சிறப்பாக நிருவகிக்கப்பட்டமை அனைவரும் அறிந்ததே. இதனை நன்குணர்த்தும் வகையில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை அவர்கள் அமரர் பசுபதிப்பிள்ளையைப் பற்றி பின்வரும் வெண்பாமூலம் நம்மனைவருக்கும் சுட்டிக் காட்டியுள்ளமை என்றும் போற்றுதற்குரியது.

> புங்குடுதீ வென்றாற் புகல் பசுபதிப்பிள்ளை
> எங்கும் புகழ் நிறுவி ஏகினார் - இங்கிவர்போல்
> தோன்றிற் புகழொடு தோன்றுக அ∴திலார்
> தோன்றலிற் தோன்றாமை நன்று.

அமரர் வ.பசுபதிப்பிள்ளையின் பின்னர் அமரத்துவம் அடைந்த கிராமாதிகாரி திரு. க.மு.சின்னத்துரை அவர்கள் 1957 ஆம் ஆண்டு வரை இவ் வித்தியாலயத்தின் முகமையாளராகப் பணியாற்றினார். அவரது மறைவின் பின்னர் அமரத்துவமடைந்த திருமதி.தையல்நாயகி கதிரவேலு அவர்கள் முகாமையாளராகப் பணியேற்று கண்ணை இமைகாப்பது போல் காத்து வழி நடத்தினார். 1.5.1962 இல் அரசு இவ்வித்தியா லயத்தைக் கையேற்கும் வரை காத்து வழி நடத்திய இவர்களை நாம் என்றும் நன்றியுடன் போற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

## அதிபர்கள்

இவ்வித்தியாலயத்தின் முதற் தலைமையா

சிரியராக விளங்கியவர் நாவலர் பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நற்தொண்டாற்றிய வேணையூர் சைவப் பெரியார் கா.நமசிவாயம் பிள்ளை (நாகலிங்கம்) அவர்களாவார். பண்ணிசைப் புலவரான இப்பெரியாரே தேவாரத் திருமுறை களைப் பண்ணோடு ஓதும் பழக்கத்தைப் புகுத்தியவர் எனலாம்.

இவரின் பின் தலைமையாசிரியராக விளங்கியவர் பேராசிரியர் சி.இ.சதாசிவம்பிள்ளை (இளையப்பா உபாத்தியாயர்) அவர்கள். பழைய மாணவர் சங்கத்தைத் தோற்றுவித்து அதன்மூலம் இவ்வித்தியாலயத்துக்கும், புங்குடுதீவுக்கும் புத்தெழுச்சி ஊட்டியவர். அன்னாரின் பின் தலைமை ஆசிரியராக விளங்கியவர் அமரர் க.செல்லத்துரை அவர்களாவர். "வெள்ளையுள்ளம் படைத்த நல்லதுரை" யெனப் போற்றப்பட்ட இவரது சேவைகள் என்றும் நினைவு கூரத்தக்கன. இவ்வித்தியாலயத்தில் "பாலர் களரி" ஒன்றைத் தோற்றுவித்த பெருமையும் இவரையே சாரும். ஸ்ரீ கணேச வித்தியாலயமே அவரது உயிர் மூச்சாக விளங்கியது. அன்னாரது அயரா உழைப்பி னாலேயே புங்குடுதீவின் தலை சிறந்த கல்விக் கூடமாக இவ்வித்தியாலயம் மிளிர்ந்ததெனலாம்.

அமரர் செல்லத்துரையின் பின்னர் அயலவரான திரு.வை.கந்தையா அவர்கள் அதிபரானார். இவரது சேவைக் காலத்தில் இவ்வித்தியாலயத்தின் கட்டிடங்கள் திருத்தி அமைக்கப்பட்டன. ஓலைக் கட்டிடம் ஓட்டுக் கட்டிடமாக மாறிற்று. உயர் வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பமாயின.

1971 ஜனவரி முதல் இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவரான திரு.நா.கார்த்திகேசு அவர்கள் அதிபராகப் பணியேற்று 1981-10-20 வரை சீரிய சேவையாற்றினார். இக்காலம் ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் பொற்காலம். கனிஷ்ட வித்தியாலயமாக விளங்கிய இவ்வித்தியாலயம் மகா வித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டதுடன் மாடிக் கட்டிடம் உட்பட பல புதிய கட்டிடங்கள் நிறுவப்பட்டன. பெற்றோர்களது நிதியுதவியுடன் 8 பரப்புக் காணி இவ்வித்தியாலயத்திற்கெனக் கொள்வனவு செய்யப்பட்டது. திரு.நா.கார்த்திகேசு அவர்களைத் தொடர்ந்து திரு.சோ.சேனாதிராசா அவர்கள் 31-08-1982 வரை இவ் வித்தியாலயத்தின் அதிபராக நற்பணியாற்றினார்.

1982 செப்ரெம்பர் முதல் இலங்கை கல்விச் சேவையைச் சேர்ந்த திரு.த.துரைசிங்கம் அவர்கள் இவ்வித்தியாலயத்தின் அதிபராக நியமனம் பெற்றதைத் தொடர்ந்து வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்கள் படிப்படியாகச் செயலுருப் பெற்றன. மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள் தொடரப்பட்டு நிறைவு செய்யப்பட்டது. நூலகம் திருத்தியமைக்கப்பட்டு புதிய கட்டிடத்தில் திறந்து வைக்கப்பட்டது. இவரது சேவையைத் தொடர்ந்து நயினாதீவைச் சேர்ந்த திரு. K.T.தர்மலிங்கம் அவர்கள் அதிபராகக் கடமை யாற்றினார். இவரின் சீரிய சேவையிற் துலங்கிய வித்தியாலயம் புங்குடுதீவின் இடப்பெயர்வினால் யாழ்நகரிற்கு இடம் பெயர்ந்தது. இவர் 8-06-1992 இல் ஓய்வு பெற்றதை அடுத்து எமது கிராமத்தைச் சேர்ந்த திரு.செ.ஈஸ்வரமூர்த்தி அவர்கள்9-06-92 இல் அதிபராகக் கடமையாற்றினார். பல நெருக்கடி நிறைந்த கால கட்டத்தில் பொறுப்பேற்ற இவர் தனது அயரா உழைப்பினால் வித்தியாலயத்தின் தனித்துவத்தைப் பேணப்பாடு பட்டார். இடம் பெயர்ந்த நிலையில் கஷ்டப்பட்ட போதும் தமது புத்தி சாதுரியத்தினால் நிரந்தர கட்டிட வசதிகள் நிறைந்த கைவிடப்பட்ட நிலையிற் கிடந்த முஸ்லிம் கதிஜா மகா வித்தியாலயத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு ஆரம்பித்த ஒரு மாத கால இடைவெளியில் 30-05-1993 இல் வவனியாவிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அவரைத் தொடர்ந்து வித்தியாலயத்தின் உப அதிபராகக் கடமை யாற்றிய திரு.ச.சதாசிவம் அதிபராகக் கடமை யாற்றினார்.

இவரது குறுகிய கால சேவையில் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தினரின் உதவியுடன் வித்தியாலய தளபாடங்கள் உட்பட பல தேவைகள் நிறைவு செய்யப்பட்டன. இவரைத் தொடர்ந்து இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட முன்னாள் ஆசிரியர் திரு. பொ.சபாரெத்தினம் அவர்கள் அதிபர் நியமனம் பெற்று வந்தார். முதல் நாள் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் கையெழுத்திட்டு விட்டு கொழும்பு சென்று திரும்பி வந்ததும் வித்தியாலயத்திற்குச் சமூகமளிப்பதாகக் கூறிச் சென்றார். கொழும்பு

புறப்பட்டுச் சென்றவரின் வருகைக்காக யமதாமராசன் கிளாலிக் கடலின் மறு கரையில் காத்திருந்து அவரை அழைத்துச் சென்றான். எமக்கு அவரின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளவே முடிந்தது. பின்னரும் சில காலம் திரு.ச.சதாசிவம் அவர்களே அதிபராகக் கடமை யாற்றினார். அவரைத் தொடர்ந்து வேலணையூர் சரவணையைச் சேர்ந்த திரு.ச.அமிர்தலிங்கம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றுக் கடமை யாற்றினார். மிகுந்த துடிதுடிப்புடைய இளைஞரான இவரது சேவைக் காலத்தில் இவ்வித்தியாலயம் கல்வித்துறையில் துரித வளர்ச்சி கண்டது. இவரின் சேவைக் காலத்தில் நடத்தப் பெற்ற பரிசளிப்பு விழா பலரது பாராட்டையும் பெற்றது நினைவு கூரத்தக்கது.

இந்நிலையில் யாழில் இருந்தும் இடம் பெயர்ந்தமையினால் 1996 இல் இவ்வித்தியாலயம் இயங்க முடியாது போகவே அதிபராக இருந்த திரு.ச.அமிர்தலிங்ம் அவர்கள் பத்தான கல்விக் கல்லூரி கணித விரிவுரையாளராகப் பதவியேற்றார். உப அதிபராக இருந்த திரு.ச.சதாசிவம் அவர்களும் பதவியினின்றும் இடையிலேயே ஓய்வு பெற்றார். 1997 இல் யாழ்நகர் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்த பின்னர் புங்குடுதீவுப் பாடசாலைகள் சில இயங்க ஆரம்பித்தன. 24.03.1997 இல் இவ்வித்தியாலயம் மீண்டும் தனது கல்விப்பணியை ஆரம்பித்துள்ளது. தற்பொழுது வித்தியாலயத்தின் அதிபராக திரு.சு.கு. சண்முகலிங்கம் அவர்கள் கடமையாற்றி வருகின்றார். தற்பொழுது இவ்வித்தியாலயம் புத்துயிர் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## இவ்வித்தியாலயத்தைத் தரிசித்தோர்

இந்நாட்டின் கல்வித்துறை வல்லுநர்கள், அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள் ஆகியோரும் தமிழகத்து அறிஞர் பெருமக்கள் பலரும் இவ்வித்தி யாலயத்தைத் தரிசித்துள்ளனர். முத்தமிழ் வித்தகர் **சுவாமி விபுலானந்தர், சுவாமி உருத்திர கோடீஸ்வரர்**, கல்வியதிபதி **திரு.லெ.எம்.டி. றொபிசன்**, பிரதிக் கல்வியதிபதி **திரு.கே.எஸ். அருணந்தி** மாவட்டக் கல்வியதிகாரி **திரு.W.R. வாட்சன் முகாந்திரம், தி.சதாசிவஐயர், கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், சேர்.வை.துரைசுவாமி**, முன்னாள் அமைச்சர்களான **திரு.ஈ.எ.டி.கவெல, திரு.பி.ஜீ.ஜீ.கலுகல்ல**, பிரதிக்கல்விமாஅதிபர் **யூ.டி.சிறிசேன**, கல்விப் பணிப்பாளர் **திரு.ஸ்டேலிங் பெரேரா** ஆகியோர் இவ்வித்தியாலயத்தைத் தரிசித்தவர்களில் குறிப்பிடத்தக்கோராவர்.

## நூலகம்

நூலகம் இலங்கைத் தேசிய சர்வோதய சிரமதான இயக்கத் தலைவர் கலாநிதி ஏ.ரி.ஆரியரத்தினா அவர்களால் 6-3-1973 இல் திறந்து வைக்கப்பட்டது. இந்நூலகம் சிறப்புற இயங்குவதற்குத் தனியான கட்டிடமொன்றை எங்கள் வித்தியாலயத்தின் பழைய மாணவரான திரு.நா.சுப்பிரமணியம் அவர்கள் தமது தாயார் சின்னம்மா நாகலிங்கம் அவர்களின் நினைவாக அமைத்து உதவினார். 10-10-1984 அன்று மிக விமரிசையாகத் திறந்து வைக்கப்பட்டது.

## சமயத்துறையில்

செந்தமிழும், சிவநெறியும் செழித்தோங்க வேண்டுமென்னும் பெரு நோக்குடன் செயற்பட்டு வரும் இவ் வித்தியாலயம் ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை சமயப் பணிகளில் முன்னின்று உழைத்து வருகின்றது. மாணவர்களுக்குச் சைவ சமய தீட்சையினைப் காலத்திற்குக் காலம் வழங்கி வந்ததோடு சைவ நாயன்மார்களது குருபூசை களையும், சைவப் பெரியார்களது நினைவு விழாக்களையும், நவராத்திரி விழாவையும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றது. மாணவர்களின் தினசரி வழிபாட்டிற்கு உதவும் வகையில் இவ் வித்தியாலயத்தில் 1956 புரட்டாதியில் ஆலய மொன்று தனியாக அமைக்கப்பட்டது. இவ்வாலயக் கட்டிடம் பழுதானதைத் தொடர்ந்து வித்தியாலய மேடையின் தென்புறத்தில் புதிய ஆலயமொன்று பெரியார் திரு.நீ.மு.குமாரசுவாமி அவர்களால் அவரது பாரியார் சின்னம்மாவின் நினைவாக நிறுவப்பட்டுள்ளது.

## விழாக்கள்

1910 ஆம் ஆண்டில் உதயமான இவ் வித்தியாலயம் தனது வெள்ளிவிழா, பொன்விழா,

வைரவிழா, பவளவிழா அனைத்தையும் கடந்து நூற்றாண்டு விழாவை எதிர் நோக்கி நிற்கின்றது. இந்நூற்றாண்டு விழாவின் நினைவாக ஆக்க பூர்வமான வேலைத் திட்டங்கள் சிலவற்றைப் புலம் பெயர்ந்து வாழும் கலைத்தாயின் புதல்வர்கள் ஆற்றுவார்கள் என நம்புகின்றேன்.

**பழைய மாணவர் சங்கம்**

புங்குடுதீவின் புகழை அகில இலங்கையிலும் நிலைநாட்டிய பெருமைக்குரிய நமது பழைய மாணவர் சங்கம் 1925 ஆம் ஆண்டு தை மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமானது. இதன் முதலாவது விழா குரோதன வருஷம் சித்திரை மாதம் ஆறாந்திகதி (21.4.1925) சனிக்கிழமை பிற்பகல் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் கணேச மூர்த்திக்கு அபிஷேக ஆராதனை முதலியன செய்யப்பட்டு அங்கிருந்து வெள்ளியினாலான கணேசப் பெருமானின் திருவுருவப்படம் மேள வாத்திய சகிதம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு வித்தியாலய மண்டபத்தில் ஸ்தாபித்து பூசிக்கப்பட்டது. அப்போது சங்கத்தின் தலைவராக பேராசிரியர் சி.இ.சதாசிவம் பிள்ளையவர்களும், காரியதரிசியாக திரு.க.நாகலிங்கம் அவர்களும் விளங்கினர். புங்குடுதீவு மகாசன சபை, புங்குடுதீவு-கொழும்பு மகாசன சேவா சங்கம், பழைய மாணவர் பயிற்சிக்கழகம் முதலிய மூன்று சங்கங்களையும் தோற்றுவித்த பெருமை எங்கள் தாய்ச் சங்கத்திற்கே உரியது. புங்குடுதீவு உயரப்புலம் முற்ற வெளியைப் பொது விளையாட்டு மைதானமாக்கிய பெருமையும் இச்சங்கத்தினையே சாரும். இக்கலைத்தாயின் குழந்தைகள் கொழும்பிலும் அதன் கிளைச் சங்கத்தினை நிறுவி காலத்திற்குக் காலம் வித்தியாலயத்தின் தேவைகளை நிறைவேற்றுவதில் வெற்றி கண்டனர். அதற்குக் கொழும்பு வாழ் வர்த்தகப் பெருமக்கள் முன்னின்று உழைத்தமையை யாராலும் மறந்து விட முடியாது.

அண்மைக் காலத்தில் வித்தியாலயத்தின் பழையமாணவரும், ஆசிரியருமான திரு.ச.சதாசிவம் அவர்கள் சம்பளமற்ற விடுமுறையில் சுவிற்சலாந்து சென்றிருந்த சமயம் தமது அயரா முயற்சியினால் அங்கும் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் கிளைச் சங்கத்தை நிறுவி எமது வித்தியாலயத்தின் புகழை நிலை நாட்டினார். அங்கு வாழும் எமது கலைத் தாயின் குழந்தைகள் அனைவரதும் ஒத்துழைப்புடன், 1992 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் விஜயதசமியன்று எமது கிளைச் சங்கத்தின் பெயரால் மிகப் பிரமாண்டமானதொரு வாணி விழா சூரிச் மாநகரில் நடைபெற்றமை என்றும் நினைவு கூரத்தக்கது. அது மட்டுமல்லாமல் கலைத்தாயின் வளர்ச்சிக்காக அவள் தம் குழந்தைகளினால் வழங்கப்பட்ட நிதி 344,760 ரூபா சுவிற்சலாந்துக் கிளையினால் 22.04.1994 இல் வித்தியாலய பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை வங்கிக் கணக்கில் நிரந்தர வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இதேபோல் ஏற்கனவே கொழும்புக் கிளையினாலும் 20.09.1993 இல் 30,000 ரூபா அக்கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. தற்போது வங்கியில் வட்டியும், முதலுமாக ரூபா 830,000 (எட்டு இலட்சத்து முப்பதினாயிரம் ரூபா) கையிருப்பாகவுள்ளது. தற்பொழுது நாட்டு நிலைமை சீரடைந்து வருவதைத் தொடர்ந்து வித்தியாலய தாய்ச் சங்கத்தின் பெயரில் இப்பணம் நிரந்தர வைப்புச் செய்யப்படவுள்ளது. இப்பணத்தின் வட்டிமூலம் பாடசாலையின் அவ்வப்போதைய தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. இதனால் எமது சங்கம் எதுவித இடையூறும் இன்றித் தொடர வழி பிறந்துள்ளது. இன்று கொழும்பு கிளைச் சங்கத்தின் தலைவராக திரு.சி.முருகானந்தவேல் கடமை புரிந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. எம்தாயின் குழந்தைகள் எவ்விடத்திலிருப்பினும் அவர்கள், தாய்நாட்டுப் பற்றும், சிநேகபாவமும், சகோதரத்துவமும், நடுவு நிலைமையும் உடைய சன்மார்க்கர்களாய் இருக்கின்றார்கள் என்பது எம்மாற் போற்றப் படற்குரியதொன்றே.

**புலமைப்பரிசில்கள்**

இவ்வித்தியாலயத்தில் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் ஆண்டு தோறும் அதி உயர்ந்த சித்திகளைப் பெறும் மாணவருக்கு புலமைப்பரிசில் வழங்கி ஊக்குவிக்கும் திட்டத்தினை, அதிபராகக் கடமையாற்றிய திரு.த.துரைசிங்கம் அவர்கள் இவ்வித்தியாலயத்தில் கடமையாற்றி அமரத்துவமடைந்த அவர் தம் பாரியார் திருமதி.புவனேஸ்வரி துரைசிங்கம் அவர்களின் நினைவாக ஏற்படுத்தினார். அதனைத் தொடர்ந்து இவ்வித்தியாலயத்தின்

பழைய மாணவியான அமரத்துவமடைந்த திருமதி. நிர்மலா நடேசன் அவர்களின் நினைவாக அவர் தம் கணவர் திரு.சு.நடேசன் அவர்கள் (ரூபா10,000) பத்தாயிரம் இலங்கை ரூபாவை வங்கியில் நிரந்தர வைப்புச் செய்து அதன் வட்டியை பரிசிலாக வழங்கும் திட்டத்தினையும் ஏற்படுத்தினார். இவர்கள் முயற்சி பாராட்டற்குரியது.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

இவ் வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு பல்லாற்றானும் துணை நின்று துடிப்புடன் செயலாற்றி வரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் காலத்துக்குக் காலம் ஏற்படும் கல்வி மாற்றங் களுக்கமைய இதன் தேவைகளை நிறைவேற்றி வருகின்றது. தற்காலிக கட்டிடங்கள் அமைத்தல் மாணவருக்கு குடிநீர் வழங்குதல், வித்தியாலய வீதி அமைத்தல், காணிக் கொள்வனவு ஆகிய பல்வேறு பணிகளைச் சிறப்புற நிறைவேற்றியுள்ளது.

இச்சங்கத்தில் முன்னின்று உழைத்தவர்கள் வரிசையில் திருமதி.இ.திருமேனிப்பிள்ளை ஆசிரியை, திரு.நா.தில்லைநாதன் J.P, திரு.இ. பரமேஸ்வரன், திருமதி.யோகம்மா பசுபதிப்பிள்ளை, அமரத்துவம் அடைந்த ஆசிரியர்களான ஆசிரிய மணி சி.க.நாகலிங்கம், திரு.ச.கனகரெத்தினம், திரு.து.வசந்தகுமார், திரு.பொ.சபாரெத்தினம் மற்றும் திரு.சி.குழந்தைவேலு திரு.நா.கந்தையா ஆகியோர் குறிப்பிடத்தக்கோராவர்.

இவ்வித்தியாலய மாணவியும், ஆசிரியை யுமான திருமதி.இ.திருமேனிப்பிள்ளை அவர்களது சேவையை இவ்வித்தியாலயம் எளிதில் மறந்து விட முடியாது. தம் வீட்டின் ஒரு பகுதியாகவே இவ்வித்தியாலயத்தைக் கருதி கண்ணை இமை காப்பது போல் காத்து வந்தார் என்றால் இக்கூற்று மிகையன்று. பாடசாலைத் திறப்பு எந்த அதிபர் கடமையாற்றினாலும் அவரிடமே இருக்கும். நேரத்திற்கு வந்து பாடசாலை திறப்பதிலிருந்து பின்னர் பாடசாலை முடிவடைந்து பூட்டிச் செல்வது வரை அவரது கடமையாகவே இருந்தது. அவரின் குடும்பமே இவ்வித்தியாலயத்தில் கரிசனை யுடையதாய் விளங்கி வந்ததை யாராலும் மறந்துவிட முடியாது. அமரரான திரு.ச. கனகரெத்தினம் ஆசிரியர் அவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர் களைத் தயார்படுத்தி அதிகமான மாணவர்களை வருடந்தோறும் சித்தியடையச் செய்த பெருமைக் குரியவர். மொத்தத்தில் இக்கலைத் தாயின் குழந்தைகள் அனைவருமே அன்னையின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றி உள்ளனர் என்றால் மிகையாகாது.

**நாளை**

இவ்வித்தியாலயத்தின் கடந்த கால வரலாறு பெருமைக்குரியது. இக்கால நிகழ்ச்சிகள் எழுச்சிக்குரியன. எதிர்காலம் ஏற்றமுடையதாய் அமையும். நாளை மலரும் புதிய சமுதாயம் நம் தீவகத்திற்கும், இவ்வித்தியாலயத்திற்கும் பெருமை தேடித்தர வேண்டும். இவ்வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி பயின்று ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்து யாழ்-இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற எமது வித்தியாலய பழைய மாணவன் செல்வன் அ.இளங்குமரன் 1999 ஆம் ஆண்டு நடை பெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் அதிகூடிய உச்சப் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து எமக்குப் பெருமை சேர்த்தமை பாராட்டுதற்குரியது. திரை கடலோடியும் திரவியம் தேடும் நம் இளைஞர்கள் தாம் கற்ற இவ்வித்தியாலயத்தை மறவாது என்றும் நன்றியுடன் நினைவு கூருவர் என்பது திண்ணம். "கல்வி அழகே அழகு" என்னும் இலட்சியத்துடன் செயற்படும் இவ்வித்தியாலயம் வருங்கால சந்ததியினருக்கு நல்விளக்காய் விளங்க வேண்டும். எல்லாம் வல்ல கணேசப் பெருமான் என்றும் எம் தாயின் வளர்ச்சிக்குத் துணை புரிவாராக!

"பல்லோர் பயிலவரும் பாரதனில் மேலோங்கும்
நல்லோர் நவிலவுயர் நற்கூடம் - வல்லோரின்
சொல்லாண்ட தூய கணேச மாவித்தியாலயமே
பல்லாண்டு வாழ்க பயின்று"

**அடிக்குறிப்புகள்:**


1. இராசரெத்தினம்.சு. புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாலயப் பழைய மாணவர் சங்க வெள்ளி விழா மலர் 1951
2. கணபதிப்பிள்ளை.சி, அமரர்பசுபதிப்பிள்ளை நினைவு மலர் 1954.
3. துரைசிங்கம்.த, எங்கள்வித்தியாலயம்-1984

## ஸ்ரீ கணேச மகா வித்தியாலய கீதம்

வாழி கணேச மகாவித்தியாலயம்
வையகம் போற்றிட என்றும் - வாழி
ஈழ மணித் திருநாட்டினில் நாவலர்
ஏற்றிய சைவ நற்றீபம் - என்றும்
வாழ வழி செய்த பொன் ராம நாத
வள்ளலார் ஊக்கிய கழகம் (வாழி)

ஏழ் பெரும் தீவகம் ஏத்திட நற்பணி
இயற்றிய பசுபதிப்பிள்ளை - சைவச்
சூழலில் மாணவர் கல்வி தொடர்ந்திடத்
தொடக்கிய கணேச கல்லூரி (வாழி)

மகா வித்தியாலயமாக மலர்ந்தது
மாபெருங் கணேச கல்லூரி
அகம்மிக மகிழ்ந்தனம் அன்புடன்அறம்மிக
அன்னையைப்போற்றுவம் என்றும்-எங்கள்
அன்னையைப் போற்றுவம் நன்றே

வெல்லுக! வெல்லுக!கணேசவித்தியாலயம்
வித்தைகள் ஓங்கியே என்றும்
"நல்லவர் வல்லவர்" தம்மையே ஆக்கியே
நாடொறும் இலங்குக நன்றே

வாழி கணேச மகாவித்தியாலயம்
வரசித்தி விநாயகர் அருளால்
வாழி கணேச மகாவித்தியாலயம்
மாண்புடனே யுயர்ந் தென்றும்.

வாழ்க! வாழ்க! வாழ்க!
வள இள ஞாயிறு போல
வளருக ஊழி தோறூழி.
(ஆக்கம்: வித்துவான் சி.ஆறுமுகம்)

## ஸ்ரீ சித்திவிநாயக மகா வித்தியாலய கீதம்

ஸ்ரீ சித்தி விநாயகர் மகாவித்தியாலயம்
ஜெயம் பெற்றோங்குகவே - அன்புச்
சேய் எமைத் தாங்குகவே (ஸ்ரீ சித்தி)

பொன்கொழி புங்குடு தீவிலோர்
பசுபதி விசுவலிங்கம் - நிறுவிய
பண்பார் கலையரங்கம் (ஸ்ரீ சித்தி)

செந்தமிழ் சைவம் கலைகளோ டாங்கிலம்
சீர்மிகும் அறிவியலும் - வளர்த்தே
திகழ்ந்திடு நிறைமதியும் (ஸ்ரீ சித்தி)

அன்னையர் தந்தையர் ஆகவே - அதிபர்
ஆசார் வழிகாட்ட - எந்தம்
அறிவினில் ஒளியூட்ட (ஸ்ரீ சித்தி)

விக்கினம் போக்கிடும் விநாயகர் அருளால்
மேன்மைகள் பெற்றிடுவோம்
மேதமை ஏற்றிடுவோம் (ஸ்ரீ சித்தி)

# யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயம்

திரு.ந.கலைநாதன் (அதிபர்)
யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயம்

"அன்னசத்திரம் ஆயிரம் நாட்டுவதிலும் ஓர் ஏழைக்கு எழுத்தறிவிப்பதும் கல்விக்காக உழைப்பதும் மேலான புண்ணியம்" என்பதை உணர்ந்த பல பெரியார்கள் நம் நாட்டின் பல பகுதிகளிலும் பாடசாலைகளை ஆரம்பித்த காலத்தில் பெரிய இறுபிட்டி என அழைக்கப்படும் எமது கிராமத்திலுள்ள சில பெரியார்கள் ஒன்று சேர்ந்து நம் கிராம மக்களையும் நல்லதொரு மேதைகளாய், நாட்டின் தலைவர்களாய் ஆக்கிவிட வேண்டும் என ஆவல் கொண்டனர். இவர்களுள் பரமசிவம் என அழைக்கப்படும் எமது ஊர் வைத்திலிங்கம் உடையாரின் மகனான பசுபதிப்பிள்ளை விதானையார் அவர்கள் திரு.வேலாயுதர் விசுவலிங்கம் என்பவருடனும் மற்றும் சில பெரியார்களுடனும் சேர்ந்து பெரு முயற்சி எடுத்தார். அம்முயற்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து நல்ல தண்ணீர் உடையதும் போக்குவரவு வசதி நிறைந்ததுமான நான்கு பரப்புக்காணியை இலவசமாக அன்பளிப்புச் செய்து, பிரம்மஸ்ரீ நடராசா ஐயர் அவர்கள் ஆசியுரை கூறினார். இவரின் ஆசியுடன் ஒரு சிறிய கட்டிடம் அமைக்கப்பட்டது. இக்கட்டிடம் புங்குடுதீவு இறுபிட்டி பெரியபுலம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் இருந்தமையால் இதற்கு ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாலயம் என பெயரிட்டு 30 (முப்பது) மாணவர்களையும், திருவாளர் ச.நாகலிங்கம் அவர்களை தலைமை ஆசிரியராகவும் கொண்டு 1914 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இறுப்பிட்டிக் கிராம மக்களின் கலைக் கோவிலாக விளங்குவது இப்பாடசாலை. புங்குடுதீவின் மேற்கில் இறுபிட்டிக் கிராமத்தில் இது அமையப் பெற்றிருந்தாலும் பாரெல்லாம் புகழும் பல்லாயிரக் கணக்கான மாணவர்களை உலகெங்கும் அனுப்பி ஒளிபெற்று விளங்குகின்றது. ஈழத்துக் கல்வி உலகில் இப்பாடசாலையை அறியாதார் இல்லை என கூறலாம்.

திருவாளர்.வை.பசுபதிப்பிள்ளை அவர்களின் முகாமைத்துவத்தில் இருந்த இப்பாடசாலை 1926ம் ஆண்டு சைவ வித்தியா விருத்திச் சங்கம் தம்மிடம் கையளிக்குமாறு கேட்டதன் பேரில் அவர்களிடம கையளிக்கப் பட்டது. இக்கால கட்டத்தில் திரு.ஆறுமுகம் சுப்பிரமணியம் என்பவர் தலைமை ஆசிரியராக கடமையாற்றினார். இவர் இப் பாடசாலையில் பல வருடங்கள் தொடர்ந்து அப்பதவியை வகித்து வந்தார்.

பல வருடகாலமாகத் தற்காலிக கட்டிடத் துடனேயே தன் வளர்ச்சியைப் பெருக்கி வந்த இப்பாடசாலை இடையிலே தீயினால் அழிந்த போது சைவ வித்தியா விருத்திச் சங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைத்து புதியதொரு நிலையான கட்டிடத்தை உருவாக்கிய பெருமை எம் கிராம மக்களையும், முக்கியமாக பிரபல வர்த்தகர் திரு.சி.செல்லத்துரை அவர்களையும், திரு.மா. முருகேசு உடையார் அவர்களையும் சாரும்.

புனருத்தாரணம் செய்யப்பட்ட இப்பாடசாலை மீண்டும் கிராம மக்களின் அறிவுக் கண்ணைத் திறக்கும் பணியில் வெகு துரிதமாக ஈடுபட்டது. கடமை வீரர் அதிபர் திரு.நா.சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் பலதுறைகளிலும் பாரிய வீறுநடை போட்டது. காலத்துக்குக் காலம் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள், கலைவிழாக்கள், கதம்ப நிகழ்ச்சிகள், பேச்சுப் போட்டிகள் என்பவற்றில் பங்கு கொண்டதன் மூலம் மாணவர்களுக்குப் பரிசில்களும், பாராட்டுக்களும் கிடைத்தன. வருடா வருடம் நடைபெறும் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் கலந்து நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு இலவசக் கல்வியை பெறும் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்ததுடன், இறுபிட்டி மாணவர்கள் இயற்கை விவேகிகள் என்னும்

பெயரையும் ஏற்படுத்திய பெருமை இப் பாடசாலைக்கும். இப்பாடசாலையில் காலம் தோறும் கடமையாற்றிய ஆசிரியர் குழாமிற்கும் உரியது.

வசதி வாய்ப்பின்றி ஏங்கிய பெற்றோரும், மாணவர்களும் இப்பாடசாலை மூலமாக உயர்கல்வி பெற்று இன்று பெரும் டாக்டர்களாக, எஞ்சினியர்களாக, பேராசிரியர்களாக, கல்விப் பணிப்பாளர்களாக, கணக்காளர்களாக பல்வேறு துறைகளிலும், எம்மத்தியிலும், உலகில் இப் பாடசாலையினதும் பெருமையையே கூறிக் கொள்கிறார்கள் என்பதில் இப்பாடசாலை பெருமை அடைகின்றது. இப்பாடசாலை மூலம் 1958 ஆம் ஆண்டு க.பொ.த பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் அப்பரீட்சையில் உலகம் மெச்சும் உன்னத வெற்றியைத் தட்டிக் கொண்டு எல்லோருடைய பாராட்டையும் பெற்றது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். இதன் பின் 1962 ஆம் ஆண்டு ஏனைய பாடசாலைகளுடன் அதனையும் அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது.

இப்பாடசாலையைப் பல வழிகளிலும் முன்னேற்றமடைய வைத்தும், அதற்கு ஒரு விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்றையும் அமைப்பதற்கு உதவியதுடன் இப்பாடசாலையை ஒரு முதலாந்தர மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தியதில் அரும் பாடுபட்டவர்களில் கு.வி.செல்லத்துரை அதிபர் அவர்களும், தொடர்ந்து அதிபராகப் பணியாற்றிய அவரது மனைவி திருமதி.ப.செல்லத்துரை அவர்களும், திரு.கா.து.கனகசுந்தரம் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களைத் தொடர்ந்து திரு.சி.நடேசு, திரு.க.ஏரம்பு, திரு.ந.தர்மலிங்கம் ஆகியோர் அதிபர்களாக கடமையாற்றியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து 700 க்கு மேற்பட்ட மாணவர்களையும், 25 க்கு மேலான ஆசிரியர் களையும் தன்னகத்தே கொண்டு பலதுறைகளிலும் முன்னணி வகித்த இம்மகா வித்தியாலயம் 1991 இல் இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் யாழ்ப்பாணம் இடம் பெயர்ந்த வேளை அதிபர் திரு.நா.தர்மலிங்கம் அவர்களினதும், பிரதி அதிபர் திரு.த.தவராசா அவர்களினதும், பெருமுயற்சி களினால் ஆனைப்பந்தி பட்டப்படிப்புகள் கல்லூரி வளாகத்தில் தற்காலிக கொட்டகை அமைத்து இயங்கி வந்தது. தொடர்ந்து 1995 இல் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக் கைகள் காரணமாக மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கு இடம் பெயர்ந்தனர். பின் 1996 ஆம் ஆண்டிலிருந்து இப்பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டது. இப்பாடசாலையில் பதில் அதிபராக கடமையாற்றியதன் மூலம் அதிபர் தரம்-1 இற்கு நியமனம் கிடைத்து அதிபராக கடமையாற்றி வந்த திரு.நா.தர்மலிங்கம் அவர்களும், பிரதி அதிபராக கடமையாற்றிய திரு.த.தவராசா அவர்களும் வேலணை கோட்டக் கல்வி அலுவலகத்துடன் இணைக்கப்பட்டதுடன் ஏனைய ஆசிரியர்களுக்கும் இடப் பெயர்வுகளினால் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது.

புங்குடுதீவின் பெரிய நிலப்பரப்பை உள்ள டக்கியதும், இடப்பெயர்வுகளுக்கு முன்பு 5 பாடசாலைகளான,

1. புங்குடுதீவு அரியநாயகம்புலம் அ.த.க.வி.
2. புங்குடுதீவு இறுபிட்டி அமெரிக்கன் மிஷன் த.க.வி.
3. புங்குடுதீவு துரைச்சுவாமி வித்தியாலயம்
4. புங்குடுதீவு பராசக்தி வித்தியாலயம்
5. புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயம்

ஆகியவற்றை உள்ளடக்கிய இடமாகவும் இருந்த இப்பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த பின் ஐந்து பாடசாலைகளும் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டதால் அங்கு வசிக்கின்ற மாணவர்களின் கற்றல் செயற்பாடு முற்றாகத் தடைப்பட்ட நிலையில் காணப்பட்டதையும், அம்மாணவர்களின் பாடசாலை இடைவிலகலையும் அவதானித்து இக்கிராமப் பெரியார்களினதும், தீவக வலய கல்விப்பணிப்பாளரினதும் பெரு முயற்சிகளினால் இப்பாடசாலை 2000 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் தனது சொந்த இடத்திலேயே மீள ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறந்த முறையில் தனது பணியைத் தொடர்கின்றது. இதன் தற்போதைய அதிபராக திரு.ந.கலைநாதன் அவர்கள் கடமையாற்றி வருகின்றார். இப்பாடசாலை எதிர்காலத்திலும் கடமை உணர்வு மிக்க அதிபர்களையும், ஆசிரியர்களையும் பெற்று பல வழிகளிலும் சிறப்புற்று விளங்குவதற்கு எல்லாம் வல்ல ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டி அமைகின்றோம்.

◆◆◆◆◆◆◆◆

# யா/புங்குடுதீவு ஸ்ரீ கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயம்

திரு.எஸ்.எம்.தனபாலன் (முன்னாள் ஆசிரியர்)

புங்குடுதீவ 8 ஆம் வட்டாரம் மடத்துவெளியில் அமைந்துள்ள யா/புங்குடுதீவு ஸ்ரீ கமலாம்பிகை வித்தியாலயமானது புங்குடுதீவு 7ம், 8ம் வட்டார மக்களினதும், 9ம் வட்டாரத்தை சேர்ந்த ஒரு பகுதி மக்களினதும் கல்வித் தேவையை நிறைவேற்றும் கலைக்கோவிலாக விளங்குகின்றது. புங்குடுதீவின் நெல்விளையும் பெரும் பிரதேசமான மடத்து வெளியின் பயிர் செய்நிலங்களின் நடுவே புங்குடுதீவு யாழ்ப்பாணம் பெருந்தெருவருகே அமைந்துள்ள இவ்வித்தியாலயத்தின் முன்றலில் பிரசித்தி பெற்ற மடத்துவெளி வயலூர் முருகன் ஆலயமும், தெற்கே புங்குடுதீவில் "A" தரத்தை பெற்று இயங்கி வரும் மடத்துவெளி சனசமூக நிலையமும் குறிப்பிடத் தக்கவையாகும்.

வயலும் வயல் சார்ந்த மருத நில மக்களுக்கும், கடலும் கடல் சார்ந்த நெய்தல் நில மக்களுக்குமான கல்வித்தேவையை இன்று நிறைவேற்றும் இவ்வித்தியாலயம் 1935 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி ஐந்து மாணவர்களுடனும், இரண்டு ஆசிரியர்களுடனும் யாழ்ப்பாணம் சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வித்தி யாலயம் படிப்படியாக வளர்ந்து 1991 ஆம் ஆண்டின் இடப்பெயர்வின்போது 428 மாணவர் களையும், 14 ஆசிரியர்களையும் கொண்ட ஒரு கனிஷ்ட மகா வித்தியாலயமாக விளங்கியது என்பது இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது.

ஆரம்பத்தில் சைவத்தமிழ் வளர்ச்சியில் இலங்கையில் தமிழ் மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் முழுமூச்சாக சேவை புரிந்து வந்த யாழ்ப்பாணம் சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கத்தின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வந்த இப்பாடசாலை கல்வி அமைச்சின் 908 ஆம் இலக்க அரச சுவீகரிப்புக் கட்டளைச் சட்டப்படி 1962 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி அரசுடமை யாக்கப்பட்டது. அத்தோடு இதன் அருகே இருந்ததும், ஐரோப்பிய காலனித்துவக் காலத்தில் மிஷனரிமார்களினால் ஸ்தாபிக்கப்பட்டதுமான பழமை வாய்ந்த யா/புங்குடுதீவு வடக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலையும் 1962 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் திகதி 1318 ஆம் இலக்க அரச சுவீகரிப்புக் கட்டளைச் சட்டப்படி சுவீகரிக்கப்பட்டு இவ்விரு பாடசாலைகளும் 1962 ஆம் ஆண்டு செப்படம்பர் மாதம் முதலாம் திகதி ஒன்றிணைக்கப்பட்டு, இது யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம் என்ற பெயருடனேயே இயங்கி வந்தது.

ஆரம்பகாலம் முதல் இப்பாடசாலையின் வளர்ச்சியில் ஆசிரியர்கள், அதிபர்கள் மாத்திரமன்றி பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர், மற்றும் மடத்துவெளி மக்களினதும், இளைஞர் களினதும் முன்னேற்றத்துக்காக அயராது உழைத்து வரும் மடத்துவெளி சனசமூக நிலையத் தினரின் ஒத்துழைப்பு என்பன இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளன. அதனால் இப்பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சி உச்சநிலையை அடைந்தது. 1972 ஆம் ஆண்டு அரசினால் இப்பாடசாலை கனிஷ்ட மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டு யாழ்/ புங்குடுதீவு ஸ்ரீ கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயம் என்ற பெயரில் தரம் 10 வரை மாணவர்களுக்கு கல்வி போதிக்கும் தரத்தைப் பெற்றுள்ளது.

ஆரம்பத்தில் இரு கட்டிடத் தொகுதிகளில் இயங்கி வந்த இப்பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையினாலும், கனிஷ்ட மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டு கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் வரை கல்வி

போதிக்கும் தேவை ஏற்பட்டமையினாலும் தோன்றிய இடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஊர்காவற்றுறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரின் அனுசரணையுடனும், கல்வித் திணைக்களத்தின் உதவியுடனும் விஞ்ஞான கூடம், விஸ்தரிக்கப்பட்ட மலசல கூடம், மற்றும் ஒரு தொகுதி வகுப்பறைக் கட்டிடம் என்று படிப்படியாகக் கட்டிடத் தொகுதிகள் கட்டப்பட்டது. 1983 ஆம் ஆண்டு அழகிய இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்றையும் கொண்டதாக இவ்வித்தியாலயம் வளர்ந்தது. அத்தோடு G.C.E. O/L பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 90 சத வீதத்தினர் சிறந்த பெறுபேற்றை பெற்றதன் மூலம் கற்பித்தலிலும் சிறந்து விளங்கியது. அத்தோடு விளையாட்டுத் துறை, கலைத்துறைகளோடு தொழில்சார் கல்விப் பொருட்காட்சிகளிலும் வட்டாரரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் கலந்து பரிசில்களும், சான்றிதழ்களும், பாராட்டுக்களும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய மாணவரே எதிர்கால மாமனிதராவர் என்பதற்கிணங்க இவ்வித்தியாலய மாணவர்கள் இன்று வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களாக, சட்ட நிபுணர் களாக, அதிபர்களாக, ஆசிரியர்களாக, சிறந்த கலைஞர்களாக, எழுத்தாளர்களாக, பேச்சாளர் களாக உருவாகி இப்பாடசாலையின் பெருமைக்கு சான்றாக இருக்கின்றார்கள்.

இவ்வாறான இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு ஒளி விளக்குகளாகத் திகழ்ந்த அதிபர்களை இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும்.

திரு.வி.கந்தையா
திரு.எஸ்.மாணிக்கம்
திரு.வி.நாகமுத்து
திரு.வி.கணபதிப்பிள்ளை
திரு.என்.பசுபதிப்பிள்ளை
திரு.கே.இளையதம்பி (ஏரம்பு ஆசிரியர்)
திரு.ஆர்.துரையப்பா
திரு.எஸ்.சொக்கலிங்கம்
திரு.ரி.பொன்னையா
திரு.த.சிவகுரு
திரு.சு.யோ.பூராசா
திரு.த.சண்முகலிங்கம்
திரு.மு.மகேந்திரன்
திரு.ந.இராஜதுரை (தற்போதைய அதிபர்)

மேற்குறிப்பிடப்பட்ட பாடசாலைத் தலைவர் களின் அரும் பெரும் சேவையால் வளர்த்தெடுக்கப் பட்ட இவ்வித்தியாலயம் 1991 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளினதும் இலங்கை அரசுக்குமான பதினைந்து வருட விடுதலைப் போரில் முதல் முறையாக புங்குடுதீவு அரச கட்டுப்பாட்டு பகுதியாக மாறிய அந்த துர்ப்பாக்கிய நிலையில் மக்கள் சொந்த மண்ணை விட்டு கண்ணீரோடு இடம் பெயர்ந்தனர். இந்நிலையில் அக்காலத்தில் இவ்வித்தியாலயத்தின் அதிபராக இருந்த திரு.மு. மகேந்திரன் அவர்கள் மாணவர்களின் கல்வியை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இவ்வித்தியாலய மாணவர் களை ஒன்றிணைத்து புங்குடுதீவு சித்திவிநாயகர் கனிஷ்ட மகா வித்தியாலயம், குறிகாட்டுவான் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம், மற்றும் ஊரதீவு திருநாவுக்கரசு வித்தியாலய மாணவர்களையும், ஆசிரியர்களையும், அதிபர் களையும் ஒன்றிணைத்து யாழ்-ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி என்ற தனியார் கல்வி நிறுவனத்தில் தமிழ் மக்களின் உயிரோடு கலந்து விட்ட அருஞ் செல்வமாம் கல்விச் செல்வத்தை அழியாது பாதுகாத்ததோடு, எம் மாணவர்களுக்கு தொடர்ந்தளித்த ஆசிரியர்கள், அதிபர்களின் சேவை காலத்தால் மறக்க முடியாததாகும்.

இவ்வாறு இடப்பெயர்வின் போது புங்குடுதீவுப் பாடசாலைகள் அனைத்தும் ஒன்றிணைந்து கூட்டாக யாழ்-சன்மார்க்க வித்தியாலயத்தில் சிறிது காலமும், பின்னர் யாழ்-பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் சிறிது காலமும், அதன் பின்னர் யாழ்-இந்து மகளிர் கல்லூரியில் சில மாதங்களுமாக நெருக்கடியான கால கட்டத்தில் பல வசதிக் குறைவுகளோடு இயங்கிய பின்னரே கமலாம்பிகை வித்தியாலயம் ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரிக்கு இடம் மாறி 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 30ந் திகதி வரை இயன்றளவு சிறப்பாக தொடர்ந்து நடைபெற்றுள்ளது.

மீண்டும் 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ந் திகதி மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் தென்மராட்சியை நோக்கி இடம்பெயர்ந்தனர். போர் உக்கிரம் அடைந்

திருந்த சில மாதங்கள் உயிருக்கே உத்தரவாத மின்றி பசியுடனும், பட்டினியுடனும் வீதியோரம் வெட்டியெறிந்த குப்பைகளாய் மக்கள் அவதிப் பட்டுக் கிடந்த 06 மாதங்களும் தெருவோர மரங்களின் கீழும், அகதி முகாம்களிலும் தாங்களே சுயமாக கல்வியை தேடும் பரிதாப நிலைக்கு ஆளாகியிருந்த மாணவர்களைக் கண்டு மனம் நொந்த சில பாடசாலைத் தலைவர்கள் மண்ணுக்கு திரும்பினர்.

1996 ஆம் ஆண்டு மே மாதம் புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயத்தின் உப அதிபராக இருந்த திரு.ந.இராஜதுரை அவர்கள் மண்பற்றுடன் ஒரு தொகை மாணவர் களோடும், ஆசிரியர்களுடனும் தமது சொந்தக் கட்டிடத் தொகுதிக்குத் திரும்பி புனர்நிர்மாணம் செய்து பாடசாலையை ஆரம்பித்துள்ளார். அதே காலத்தில் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தை அதிபர் திரு.ந.தர்மபாலன் அவர்களும், புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தை அதிபர் திரு.ந.பஞ்சலிங்கம் அவர்களும் புனர்நிர்மாணம் செய்து ஆரம்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

அந்தப் புனர்நிர்மாண காலத்தில் குறைந்த தொகை மாணவர்களே சொந்தப் பகுதிக்கு திரும்பி யிருந்தனர். எனினும் பாடசாலையை தொடர்ந்து இயக்கிய அதிபர் அவர்களின் அயராத முயற்சி யினால் இன்று 212 மாணவர்களும், 9 ஆசிரியர் களும் மூன்று தொண்டர் ஆசிரியர்களுமாக மொத்தம் 12 ஆசிரியர்களும் உள்ளனர். இந்த வருட G.C.E.O/L பரீட்சைக்கு 12 மாணவர்கள் தோற்ற இருக்கின்றார்கள். இத்தொகை புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் தொகைக்கு ஈடானது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தப் பாடசாலையினை புனர்நிர்மாணம் செய்வதற்காக அயராது உழைத்த அதிபர் திரு.ந.இராஜதுரை, உப அதிபர் திரு. நா.நாகராஜா, மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் பெரு முயற்சியால் மீண்டும் பாடசாலை தன்னிலை அடைந்து கொண்டிருக்கின்றது. பாழடைந்து போயுள்ள எமது பூமியில் பாடசாலைகளை இயக்கி மாணவர்களின் கல்வியைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் பரந்தமனமுள்ள எமது பாடசாலை ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் தேவை களை அறிந்து அவற்றை ஈடுசெய்ய நாம் ஆவன செய்வோமாக!

♦♦♦♦♦♦♦♦♦♦

## யா/புங்குடுதீவு வடக்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம்

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் (1850 களில்) அமெரிக்கன் மிஷனரிமார்களால் புங்குடுதீவில் அமைக்கப்பட்ட மூன்று மிஷனரிப் பாடசாலைகளில் ஒன்று புங்குடுதீவு வடக்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயமாகும். இப் பாடசாலை புங்குடுதீவின் வட பகுதியில் தற்போதைய புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியா லயத்திற்கு அருகாமையில் அமைந்திருந்தது. இப்பாடசாலைக் கட்டிடம் சுணண்ணாம்புக் கற்களினாலான சுவர்களையும், கிடுகினால் வேயப்பட்ட கூரையையும் கொண்டதாக அமைந் திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப் பாடசாலையின் ஆரம்பகால அதிபராக திரு.ஏ. நல்லதம்பி அவர்கள் கடமையாற்றி உள்ளார். இப்பாடசாலை இலங்கை காலனித்துவ ஆட்சி யிலிருந்து விடுபட்ட பின்னரும் 1962 வரை தனது கல்விப் பணியைச் செய்துள்ளது. இப்பாடசாலை இலங்கை அரசின் 1318 ஆம் இலக்க பாடசாலைச் சுவீகரிப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 15.06.1962 இல் அரசுடமையாக்கப்பட்டது. புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயமும், இப்பாடசாலையும் ஒரே வேலியால் பிரிக்கப்பட்ட இரு பாடசாலை களாக நீண்ட காலம் இயங்கி வந்துள்ளன. அரசாங்கத்தினால் இவ்விரு பாடசாலைகளும் 01.09.1962 இல் ஒன்றிணைக்கப் பட்டதுடன் புங்குடுதீவு வடக்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம் செயலிழந்தது.

திரு.ஏ.நல்லதம்பி அவர்களைத் தொடர்ந்து திரு.எம்.ஆர்.இராமநாதன், திரு.என்.ஐ.நவரெத் தினம், திரு.ஏ.டீ.தம்பையா, திரு.ரி.பொன்னையா, திரு.ஆர்.கதிர்காமு (செல்லத்தம்பி), திரு.ஆர்.ஜே. நவரெத்தினம், ஆகியோர் இப்பாடசாலையில் அதிபர்களாக கடமையாற்றி உள்ளனர்.

♦♦♦♦♦♦♦♦♦♦

# யா/புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் கனிஷ்ட மகா வித்தியாலயம்

### தோற்றம்

புங்குடுதீவு வல்லன், மாவுதிடல், பெரியகிராய் மக்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் பெரியார் மார்க்கண்டு சோதிநாதர் அவர்களால் 1925 இல் அவரது சொந்தக் காணியில் (2ஏக்கர்) உருவாக்கப்பட்டதே புங்குடுதீவு சண்முகநாதன் வித்தியாலயமாகும். இவர் இப்பாடசாலையின் ஆரம்ப கால அதிபராக இருந்ததோடு சைவத்தையும், தமிழையும் கட்டி வளர்த்த பெருமகனாகவும் இருந்துள்ளார்.

இப்பாடசாலை பின்னர் சைவத்திற்கும், தமிழுக்கும் அரும் சேவை ஆற்றிய சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினரால் சிறப்பாக நடத்தப்பட்டு வந்த இப்பாடசாலை 1962 இல் அரசால் பொறுப்பேற்கப்பட்டது. இக்காலப்பகுதியில் இப்பாடசாலையில் திரு.லோறன்ஸ், திரு.சேதுபதி, திரு.வி.செல்லையா, திரு.வை. கந்தையா, திரு.த.கனகரெத்தினம், திரு. பொன்னுத்துரை, திரு.சு.சீவரெட்னம் போன்றோர் தலைமையாசிரியர்களாக கடமையாற்றியுள்ளனர்.

1970 காலப்பகுதியில் பாடசாலையில் ஏற்பட்ட இடப்பற்றாக்குறை காரணமாக பெற்றோர் கல்விப்பகுதியுடன் தொடர்பு கொண்டு 1972 இல் 80'X20' சதுரஅடி கட்டிடத்தைப் பெற்றனர். இக்கட்டிடம் இடப்பற்றாக்குறையை நீக்க போதாதென்பதை உணர்ந்த பெற்றோர், பழைய மாணவர் சங்கத்தினர், மற்றும் அபிமானிகளால் இன்னுமொரு 60'x20' சதுரஅடி கட்டிடமும் இதேகாலப்பகுதியில் கட்டப்பட்டது. இக்கட்டிடங்களுக்கு 1970 இல் தீவுத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திருவாளர் வ.நவரெத்தினம் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னர் 1972 இல் இக்கட்டிடங்கள் தீவுத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திருவாளர் கா.பொ.இரத்தினம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. விஞ்ஞானக் கல்வியை ஊக்குவிப்பதற்காக விஞ்ஞானகூடம் அமைக்கப்பட்டது. இங்கு இக்காலப்பகுதியில் நெசவுசாலை, வாசிகசாலை என்பனவும் இயங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் பாதுகாப்புக் கருதி பழைய மாணவர் சங்கத்தினரால் பாடசாலையைச் சுற்றி மதில் அமைக்கப்பட்டது. 1925 இல் இருந்து 1971 வரை ஆரம்பப் பாடசாலையாக இயங்கி வந்த இப்பாடசாலை 1972 இல் பெற்றோரின் தீவிர முயற்சியினால் கனிஷ்ட மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது.

### கல்வித்துறை

அகில இலங்கை ஆசிரியர் சங்கம் நடாத்திய பரீட்சைகளிலும், வட இலங்கை ஆசிரியர் சங்கம் நடாத்திய பரீட்சைகளிலும் இப்பாடசாலை தொடர்ந்து பங்குபற்றி வருடாவருடம் 80 வீதத்துக்கும் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்து உள்ளனர். கொழும்பு விவேகானந்தா சபையால் நடாத்தப்படும் சமயபாடப் பரீட்சைகளிலும் பங்கு பற்றிச் சிறந்த பெறுபேறுகளையும், பரிசில்களையும் பெற்றுள்ளார்கள். 1973 ஆம் ஆண்டு யாழ்-மத்திய கல்லூரியில் நடைபெற்ற யாழ்-மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கல்விப் பொருட் காட்சியில், விஞ்ஞானத்துறையில் இப்பாடசாலை மாணவர்களால் அமைக்கப் பெற்ற ஒளிக்கதிர் அமைப்புப் பெட்டி சிறப்புப் பரிசிலைப் பெற்றதோடு, வேறு சில சாதாரண பரிசில்களையும் பெற்றுக் கொண்டது. 1973 இல் நடைபெற்ற யாழ்-பிரதேசப் பாடசாலைகளுக்கான சங்கீத, நடன, நாடகப் போட்டியில் நாடகத்தில் இப்பாடசாலை மாணவர்கள் நடித்த "சாம்ராட் அசோகன்" என்னும் நாடகம் இரண்டாம் இடத்தைப் பெற்றதோடு, அகில இலங்கை நாடகப் போட்டியிலும் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

**விளையாட்டுத்துறை**

இப்பாடசாலையில் வருடா வருடம் இல்ல விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடைபெற்றுள்ளன. இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பழைய மாணவர் சங்கம் சிறந்த பரிசில்களைக் வழங்கிக் கௌரவித்துள்ளது. ஊர்காவற்றுறை வட்டாரப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் வருடா வருடம் பங்கு பற்றி முதலிடங்களைப் பெற்றுள் ளனர். 1973 இல் நடைபெற்ற ஊர்காவற்றுறை வட்டார பாடசாலைகளுக்கான மெய்வல்லுநர் போட்டியில் இப்பாடசாலை 13 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**சமயப்பணிகள்**

வித்தியாசாலையின் சமயப்பணிகளில் இந்து இளைஞர் மன்றம் கடமை உணர்ச்சியோடு பணியாற்றி உள்ளது. பழைய மாணவர் சங்கம், பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஆகியற்றின் பொருள் உதவியோடு பாடசாலையில் வருடா வருடம் சிவராத்திரி விழா, நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நால்வர் குருபூசைத் தினங்களில் இப்பாடசாலை இந்து இளைஞர் மன்றம் மாணவர்களுக்கிடையில் தேவார திருவாசக, மனனப் போட்டிகளையும் நடாத்தி யுள்ளது. பழைய மாணவர் சங்கம் பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி யதோடு, பிள்ளைகளின் திறமைக்கும், வரவு ஒழுங்கிற்கும் சிறந்த பரிசில்களைக் கொடுத்து மாணவர்களை ஊக்குவித்துள்ளது. மாணவர்கள் சிறந்த முறையில் விஞ்ஞான கல்வியைக் கற்க வேண்டும் என்பதற்காக விஞ்ஞான உபகரணங் களையும் அன்பளிப்புச் செய்துள்ளனர். இக்காலப் பகுதியில் திரு.மூ.நடராசா (கோபாலபிள்ளை), திரு.நாகரெத்தினம் (கந்தசாமி), திரு.இ.நடராசா, திரு.செ.சண்முகவடிவு ஆகியோர் இப்பாடசாலை யின் அதிபர்களாகக் கடமையாற்றி உள்ளனர். 1991.10.17 இல் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த இப் பாடசாடலை யாழ்நகரில் புங்குடுதீவு பாடசாலைகளுடன் இணைந்து முதலில் யாழ்-சன்மார்க்க மகா வித்தியாலயத்திலும், பின்னர் பெரியபுலம் மகா வித்தியாலயத்திலும் இதனைத் தொடர்ந்து சிறிது காலம் யாழ்-இந்து மகளிர் கல்லூரியிலும் இயங்கியுள்ளது. 1992 இல் இப்பாட சாலை தென்மராட்சியில் உள்ள கெற்பலி பண்டிதர் குடியிருப்புக்கு இடம் மாற்றப்பட்டது. பண்டிதர் குடியிருப்பில் கல்வி திணைக்களத்தின் உதவி யுடன் தற்காலிக கொட்டகைள் அமைக்கப்பட்டு அங்கு தனது கல்வி செயற்பாடுகளை சிறப்பாக செய்துள்ளது. தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்த ஒரு பகுதி மக்களுக்காக உருவாக்கப்பட்ட தற்காலிக குடியிருப்பு திட்டம் ஒன்றில் இப்பாடசாலை இயங்கியமை இங்கு குறிப்பிடத் தக்கது.

இக்காலப்பகுதியில் இப்பாடசாலையில் புங்குடுதீவு, வேலணைத்தீவு, மண்டைதீவு ஆகிய வற்றைச் சேர்ந்த 1026 க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர். இப்பாடசாலை 1992 தொடக்கம் 1996 மாசி வரை தமது கல்விப் பணியை இதே இடத்தில் சிறப்பாகச் செய்துள்ளது. இக்காலப்பகுதியில் இப்பாடசாடலையின் அதிபராக திரு.செ.சண்முகவடிவு அவர்கள் கடமையாற்றி யுள்ளார். 1996 இல் மேற்கொள்ளப்பட்ட தென்மராட்சி மீதான இராணுவ நடவடிக்கை காரணமாகவும், இப்பாடசாலையின் அதிபர் திரு.செ.சண்முகவடிவு அவர்கள் இடப்பெயர்வின் போது கிளாலிக் கடலில் எதிர்பாராத விதமாக மரணமடைந்தமையினாலும் பாடசாலையின் செயற்பாடுகள் செயலிழந்தன. புங்குடுதீவில் 1991 இல் மூடப்பட்ட இப்பாடசாலை இன்னும் அங்கு மீளத் திறக்கப்படவில்லை.

-மலர்க்குழு

◆◆◆◆◆◆◆

# யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்

திரு.த.பஞ்சலிங்கம் (அதிபர்)
யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்

சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் யாழ்ப்பாணத்தில் வடபகுதியில் அமைந்துள்ள தீவுகளில் புங்குடுதீவும் ஒன்றாகும். இது சீரிய செந்தமிழ் வளர்ச்சிக்கும் செம்மைசால் சைவசமய மேம்பாட்டிற்கும் நிலைக்களனாய் நின்று நிலவுகின்றது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வர். இன்றைக்கு ஒரு நூற்றாண்டு காலத்துக்கு முன்னே யாழ்ப்பாணத்தில் தோன்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் தமிழுக்கும் சைவத்துக்கும் செய்த அளப்பரும் சேவையைச் சைவத் தமிழுலகு என்றென்றும் மறக்கமாட்டாது.

தமிழ் மொழியும் சைவ சமயமும் தழைத்தோங்க வந்துதித்த பெருமான் ஆறுமுக நாவலர் அவர்கள் ஆற்றிய திருத்தொண்டின் பயனாய் எமது தீவகத்திலும் சில நற்றமிழ்ப் புலமை வாய்ந்த சான்றோர்கள் சிறந்து விளங்கினார்கள். அவர்களின் பெரு முயற்சியால் பாடசாலைகள் அமைத்து நன்மாணாக்கரை உருவாக்கும் பணி தொடங்கப் பெற்றது. முதலில் திண்ணைப் பள்ளிக் கூடங்கள் மூலம் செந்தமிழ் பயிற்றப்பட்டு வந்தது. ஆயினும் கல்வித் தாகம் கொண்ட பல மாணவர்க்கும் பணி செய்ய முடியாத திண்டாட்டம் இருந்து வந்தது. இதை உணர்ந்த சைவ கலா மன்றம் 1926 ஆம் ஆண்டு இப் பாடசாலையை அமைத்தது. இதன் வளர்ச்சிக்கு யாழ்ப்பாணம் சைவ வித்தியாபிவிருத்திச் சங்கம் பேருதவி புரிந்து வந்தது. அப்பாடசாலையை யாழ் இந்துக் கல்லூரி அதிபராய் விளங்கிய திரு.டிரூப் அவர்கள் திறந்து வைத்தார். ஆரம்பப் பாடசாலையின் தலைமையாசிரியராக உயர்திரு நமசிவாயம் ஆசிரியர் அவர்கள் பணிபுரிந்தார்கள். அன்னாரின் திவ்விய தலைமையில் பாடசாலையின் கல்விப் பணி சிறப்பாக வளர்ச்சிப் பாதையில் வீறு நடைபோடத் தலைப்பட்டது.

பின்னர் V.J.சின்னையா ஆசிரியர் தலைமையாசிரியராகத் தொடர்ந்து பணியாற்றி வந்தார். தொடர்ந்து 1929ம் ஆண்டு முதல் பேராசிரியர் உயர்திரு சி.இ.சதாசிவம்பிள்ளை அவர்கள் இப்பாடசாலையின் தலைமைப் பீடத்தில் அமர்ந்து அரும் பணி புரிந்தார்கள். 1935ம் ஆண்டு புரட்டாதி மாதம் இப்பாடசாலை துவிபாஷா பாடசாலை (bilingual) யாக மாறியது. செந்தமிழும் ஆங்கிலமும் பயிலக்கூடிய ஒரு சிறந்த பாடசாலையாக இது அமைந்தது எனினும் வெகு சீக்கிரத்தில் இந்நிலை மாறியது. இப்பகுதி முகாமையாளராக உயர்திரு வ.பசுபதிப்பிள்ளை அவர்கள் விளங்கினார். புங்குடுதீவின் புண்ணியம் போன்று பொலிந்த செம்மல் பசுபதிப்பிள்ளை அவர்களின் அயரா உழைப்பினாலும் சிறந்த மதிநுட்பத்தினாலும் இப்பாடசாலை உயர்நிலை அடைந்தது. 1966ம் ஆண்டு வரை எஸ்.எஸ்.சி வகுப்புள்ள உயர்தர பாடசாலையாக மிளிர்ந்தது. இக்காலத்தில் சில சிறந்த தலைமை ஆசிரியர்களும், உதவி ஆசிரியர்களும் கடமை ஆற்றினர். தலைமை யாசிரியர்களில் குறிப்பிடத்தக்க சேவை புரிந்தவர் திரு.கு.வி.செல்லத்துரை ஆசிரியர் அவர்களாகும். அவர் இப்பாடசாலைக் கட்டிடத்தைச் சிறந்த முறையில் திருத்தி அமைத்தார். அத்தோடு இப்பாடசாலையைப் பெண்கள் கல்லூரியாக மாற்றி அமைப்பதற்குப் பெரு முயற்சி எடுத்தார்கள். 1.5.1960 தொடக்கம் 03.05.1964 வரை உள்ள காலப்பகுதியில் கல்வி நிலை உன்னத நிலையில் இருந்தது. உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய திரு.அ.கனகரெத்தினம் ஆசிரியர் அவர்கள் புலமைப் பரிசில் பரீட்சை (scholarship) யில் பல மாணவர்கள் சித்தியெய்த உதவி புரிந்தார்.

புங்குடுதீவின் மத்தியில் கிராஞ்சியம்பதி முருகப்பெருமான் ஆலய முன்றிலில் பிரதான வீதிக் கருகாமையில் அழகுற அமைந்திருக்கும் இப்பாடசாலையில் கல்விபயின்று மேனிலை யடைந்தவர் அனேகர்.

இப்பாடசாலை 1980ம் ஆண்டு யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய கனிஷ்ட மகா வித்தியாலயம் எனும் பெயரிலிருந்து யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது ஓர் மகளிர் வித்தியாலயமாக இருந்தாலும் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை இரு பாலரும் கற்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1973 இலிருந்து 1985 வரையான காலப்பகுதியல் திரு.யோ.சா.செல்வராசா அதிபராகக் கடமையாற்றி வந்தார். அதனைத் தொடர்ந்து திருமதி மனோன்மணி தனபாலசிங்கம் அவர்களும் பின் 1988ல் இருந்து 1997 வரையான காலப்பகுதியில் செல்வி ம.சுப்பிரமணியம் அவர்களும் அதிபராக கடமையாற்றினர். 1991ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18ம் திகதி நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணம் நோக்கி 95 வீதமான மக்கள் இடம் பெயர்ந்து வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. 1992ல் இருந்து 1995 ஒக்ரோபர் வரை யாழ்/இந்து மகளிர் கல்லூரியின் விடுதிக் கட்டிடத்தில் எமது பாடசாலை இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

1995 ஒக்டோபர் 30ந் திகதி நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அனைத்து மக்களும் தென்மராட்சி நோக்கி இடம் பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பின்னர் மீண்டும் 1996 மே மாதம் 6ம் திகதி யாழ்ப்பாணம் திரும்பி பஸ் போக்குவரத்தின்மை காரணமாக யா/வேலனை கிழக்கு மகா வித்தியாலயத்தில் சிறிது காலம் தற்காலிகமாக இயங்கி 1997ம் ஆண்டு தை மாதம் 15ந் திகதியில் இருந்து பாடசாலையின் நிரந்தரக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. இக்காலப் பகுதியானது பாடசாலையின் சோதனை நிறைந்த காலப்பகுதியாகும். இருந்தும் 1994, 1995ம் ஆண்டுகளில் மாணவர்களின் கல்விப் பெறுபேறு சிறப்பாக அமைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**இன்றைய நிலை**

1997ம் ஆண்டு மீண்டும் பாடசாலை சொந்தக் கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியதில் இருந்து மாணவர் எண்ணிக்கை சற்று அதிகரித்து வருகின்றது. 24.08.1997ந் திகதியிலிருந்து திரு.நா.பஞ்சலிங்கம் அதிபராகக் கடமையாற்றி வருகின்றார். எமது பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் நல்லொழுக்கமும், நல்லறிவும் மிக்கவர்களாய் வளரவேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து நல்ல மனப்பாங்கு உள்ளவர்களாய் வாழ வழிகாட்டு நெறிகள் மேற் கொள்ளப் படுகின்றன. மாணவர் மன்றங்கள் மூலம் மாணவரின் பேச்சு, எழுத்து, பாட்டு, நடனம், நாடகம் முதலிய கலைகள் வளர்வதற்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. கலைத்துறையில் இன்னும் மேம்பாடு பெறுவதற்கு சங்கீதம், நடனம் போன்ற கவின்கலை ஆசிரியர்களின் சேவை அவசியம் தேவை.

எமது படசாலைக்கு விளையாட்டு மைதானம் இல்லாதது பெரும் குறையாக இருந்து வருகிறது. பெற்றோரும், கல்வித் திணைக்களமும் இணைந்து இக்குறையை தீர்த்து வைப்பது அவசியமாகும். மற்றும் மாணவரின் வாசிப்பு, எழுத்தாற்றலை விருத்தி செய்வதற்கு சிறந்த நூலகம் ஒன்றும் உருவாக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் நல்ல கல்வி அறிவுள்ள சமுதாயத்தை இக்கல்வி நிலையம் உருவாக்கித் தரும் என்பது உறுதியாகும்.

♦♦♦♦♦♦♦♦♦♦

"குஞ்சி அழகும் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு"

-- நாலடியார்

# யா/புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் வித்தியாலயம்

1816 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு வருகை தந்த அமெரிக்கன் மிஷனரிமார் யாழ்குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தேவாலயங்களையும், பாடசாலைகளையும் ஸ்தாபித்தனர். இந்த வகையில் புங்குடுதீவிற்கும் வருகை தந்த அமெரிக்கன் மிஷனரிமாரினால் புங்குடுதீவில் ஓர் தேவாலயமும், மூன்று பாடசாலை களும் நிறுவப்பட்டன. இப்பாடசாலைகளில் முதலில் நிறுவப்பட்ட பாடசாலையாக விளங்குவது புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் வித்தியாலயமாகும். அமெரிக்கன் மிஷனரிமார்களால் ஆரம்பத்தில் ஒரு திண்ணைப் பள்ளிக் கூடமாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1872 இல் தனக்கென ஓர் தனிக்கட்டிடத்தைத் தேடிக்கொண்டது.

இப்பாடசாலை தோற்றுவிக்கப்பட முன்னர் அமெரிக்கன் மிஷனரிமார்களால் அமெரிக்கன் மிஷன் தேவாலயம் ஸ்தாபிக்கப்பட்டது. இத்தேவாலயம் இப்பாடசாலைக்கு அருகிலேயே அமைந்துள்மை இங்கு குறிப்பிடத்தக்கது. இத் தேவாலய திருச்சபை ஊழியராக இருந்த "நிச்சாட் கணபதிப்பிள்ளை" அவர்களே இப்பாடசாலையின் முதல் அதிபராகவும், முதல் ஆங்கில ஆசிரிய ராகவும் இருந்து நல்லூழியம் புரிந்துள்ளார். இவரைத் தொடர்ந்து "டானியல் ஞானப்பிரகாசம்" (அ.நாகலிங்கம்) அவர்களும், அமரசிங்கச் சட்டம்பியார் என்றழைக்கப்பட்ட திரு.வே. அமரசிங்கம் அவர்களும் அதிபராக இச் சேவையைத் தொடர்ந்துள்ளனர். இவர்களைத் தொடர்ந்து பதவிக்கு வந்த அதிபரான திரு.நா.பொன்னையா அவர்கள் பாடசாலையின் வளர்ச்சியில் அயராது உழைத்து வந்துள்ளார். இவரைத் தொடர்ந்து பல கிறிஸ்தவ சமய ஆசிரியர்கள் இப்பாடசாலையின் தலைமைப் பதவியில் இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்துள்ளனர். 1962 இல் இப்பாடசாலை அரசு டமையாக்கப்பட்டது. 1968 இலிருந்து இப் பாடசாலையின் அதிபராக திரு.நா.நடராஜா அவர்கள் கடமையாற்றி உள்ளார். இக்காலத்தில் இப்பாடசாலையில் புதிய திருப்பம் ஏற்பட்டது. இந்து சமய நிகழ்வுகள் பல இடம் பெற்றன. பெற்றார் ஆசிரியர் சங்கம் உருவாக்கப் பட்டது. பாடசாலையில் ஏற்பட்ட இடநெருக்கடியைத் தீர்ப்பதற்கு பெற்றார் ஆசிரியர் சங்கத்தால் ஏழரை பரப்புக் காணி விலைக்கு வாங்கி கொடுக்கப்பட்டது.

இவரைத் தொடர்ந்து இவரது மனைவியாரான திருமதி.சிவபாக்கியம் நடராஜா அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். 1972 இல் புதிய கல்வித் திட்டத்திற்கமைய அரசால் இவ்வித்தியாலயம் ஓர் ஆரம்பப் பாடசாலையாக தரம் குறைக்கப்பட்டது. இவருடைய காலத்தில் அரச உதவியுடனும், பெற்றோர் ஆசிரிய சங்கத்தின் உதவியுடனும் புதியதோர் கட்டிடம் அமைக்கப்பட்டது. 14.03.1974 இல் கட்டிடத்திறப்பு விழாவுடன் இப்பாடசாலை தனது நூற்றாண்டு விழாவையும் சிறப்பாகக் கொண்டாடியதோடு நூற்றாண்டு நினைவு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் இங்கு 217 மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர்.

இவரைத் தொடர்ந்து அதிபராக நியமனம் பெற்ற திரு.சு.யோ.பூராசா அவர்களின் காலப்பகுதி இப்பாடசாலையின் பொற்காலமாகும். பாடசாலை சகல துறைகளிலும் துரித வளர்ச்சி கண்டது. பாடசாலைக்கு புதிய கட்டிடங்கள் அமைக்கப் பட்டன. பாடசாலைக்காணி விஸ்தரிப்புச் செய்யப்பட்டது. மாணவர்கள் வெள்ளிக் கிழமைகளில் அயலிலுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டனர். கல்வித் திணைக்களத்தினூடாக தளபாடங்கள், கற்பித்தல் உபகரணங்கள் பெறப்பட்டன. பாடசாலையில் பாலர் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலை மட்டத்தில் இல்ல

மெய்வல்லுநர் போட்டி ஆண்டு தோறும் சிறப்பாக நடாத்தப்பட்டது. தமிழ்தினம், ஆங்கிலதினம், நவராத்திரி விழா போன்றவை சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. யாழ்-கல்வித் திணைக் களத்தினால் முதல் தர ஆரம்பப் பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டது. இக்காலப்பகுதியில் இப்பாடசாயைில் 230 மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர்.

தீவுப்பகுதியில் 17.10.1991 இல் மேற்கொள்ளப் பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக இப்பாடசாலை யாழ்நகருக்கு இடம் பெயர்ந்தது. இப்பாடசாலை யாழ்நகரில் ஏனைய புங்குடுதீவுப் பாடசாலைகளுடன் இணைந்து சிறிது காலம் பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கியுள்ளது. பின்னர் அதிபர் திரு.சு.யோ.பூராசா அவர்களின் முயற்சியினால் 1992 இலிருந்து யாழ் செட்டித்தெரு மெதடிஷ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையுடன் இணைந்து காலை நேரப் பாடசாலையாக சிறப்பாக இயங்கியுள்ளது. இப்பாடசாலை 30.10.1995 இல் தென்மராட்சிக்கு இடம் பெயரும் வரை தனது கல்விப்பணியைச் சிறப்பாக செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையில் மாணவர் தொகை அதிகரித் தமையாலும், செட்டித்தெரு மெதடிஷ் மிஷன் பாடசாலையில் இடப்பிரச்சினை ஏற்பட்டமையாலும் கல்வித் திணைக்களத்தின் உதவியினூடாக இரண்டு (100'x20') தற்காலிக கட்டிடங்கள் (கொட்டகைகள்) இப்பாடசாலை வளாகத்திலேயே அமைக்கப்பட்டு தனித்துவமாக இயங்கியுள்ளது. பின்னர் ஒரு கொட்டகையின் கூரைக்கு கல்வித் திணைக்களத்தினூடாக அஸ்பெஸ்ரஸ் சீற் மாற்றப்பட்டது. இக்காலப்பகுதியில் இங்கு பாட, இணைபாடவிதானச் செயற்பாடுகள் யாவும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இல்ல மெய்வல்லுநர் போட்டி, தமிழ்தினம், ஆங்கிலதினம், நவராத்திரி விழா போன்றவை சிறப்பாக நடாத்தப்பட்டுள்ளன. இங்கும் பாலர் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றுள்ளது. இக்காலப்பகுதியில் 219 மாணவர்கள் இங்கு கல்வி கற்றுள்ளனர்.

இவ்வாறு பல்வேறு துறைகளிலும் வீறுநடை போட்ட இப்பாடசாலை 30.10.1995 இல் இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கை காரணமாக தென் மராட்சியூடாக வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு இடம் பெயர்ந்தது. வன்னிப் பெருநிலப்பரப்புக்கு இடம் பெயர்ந்த இப்பாடசாலை, அதிபரின் தீவிர முயற்சியினால் இராமநாதபுரத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு தனது கல்விப்பணியைத் தொடர்ந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் இப்பாடசாலையின் அதிபராக திரு.சு.யோ.பூராசா அவர்கள் கடமையாற்றி உள்ளார். 30.10.1995 இல் வன்னிக்கு இடம் பெயர்ந்த பாடசாலை இன்று வரை புங்குடுதீவில் மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை.

-மலர்குழு

◆◆◆◆◆◆◆◆◆◆

## மேலைத்தேசத்தவரால் தீவுகளுக்கு வழங்கப்பட்ட பெயர்கள்

| தீவுகள் | போத்துக்கீசர் | ஒல்லாந்தர் |
|---|---|---|
| வேலணை | தனடிவா | லெய்டன் |
| காரைநகர் | கார்டிவா | அம்ஸ்ரடாம் |
| புங்குடுதீவு | கொங்கரடிவா | மிடில்ஸ்போர்க் |
| நயினாதீவு | நாயடடிவா | ஹார்லெம் |
| அனலைதீவு | --------------- | ஹொட்டர்பம் |
| நெடுந்தீவு | நெறுங்டிவா | டெல்வற் |

# யா/புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியாலயம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமேற்கே அமைந்துள்ள சப்த தீவுகளில் மையமாக விளங்கும் புங்குடுதீவின் மத்தியில் அமைந் துள்ளதே புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியாலயமாகும். இவ்வித்தியாலயம் 1833 ஆம் ஆண்டளவில் கத்தோலிக்க மிஷனரி மாரினால் ஸ்தாபிக்கப்பட்டது. சமயம் பரப்பும் நோக்குடன் இப்பாடசாலை உருவாகிய போதும் சகல மத மக்களுக்கும் கல்வி வாய்ப்பளித்த ஒரே பாடசாலையாக இது ஆரம்பத்தில் இயங்கி வந்துள்ளது.

இப்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்ட காலம் தொட்டு 1950 ஆம் ஆண்டு வரை இப்பாடசாலை ஓர் ஆரம்பப் பாடசாலையாகவே இயங்கி வந்தது. 1950 ஆம் ஆண்டு சிரேஷ்ட பாடசாலை என்னும் தரத்திற்கு உயர்த்தப்பட்டு கல்விப் பொதுத் தராதர சதாரண தரம் வரை வகுப்புகள் நடைபெற்றுள்ளன. 1972 இல் கொண்டு வரப்பட்ட கல்விச் சீர்திருத் தத்துக்கு அமைய மீண்டும் தரம் குறைக்கப்பட்டு தரம் 8 வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. எனினும் 1950 தொடக்கம் 1972 வரை இப்பாடசாலையின் செயற்பாடுகள் உச்ச நிலையில் இருந்துள்ளது. இதனை இப்பாடசாலை காணப் படுகின்ற கல்வி, விளையாட்டுத் துறைச் சான்றிதழ்களும், கேடயங்களும் சான்று பகருகின்றன.

பாடசாலை முன்றிலில் ஓங்கி வளர்ந்து கிளை பரப்பி நிற்கும் நிழல் தரும் வேப்ப மரங்களும், தென்னை மரங்களும் பாடசாலைத் தோற்றத்திற்கு மேலும் பொலிவைத் தருவனவாக விளங்குகின்றன. இப்பாடசாலைக்கு எதிரே புனித பிரான்சிஸ் சவேரியாரின் ஆலயமும், அண்மையில் மகா வித்தியாலயம், வைத்தியசாலை, தபாற்கந்தோர் போன்றவை அமைந்திருப்பதும், பிரயாண வசதியுள்ள இடத்தில் இப்பாடசாலை அமைந்து இருப்பதும் அதற்கு ஒரு தனிச் சிறப்பைத் தருகின்றன. பெற்றோர் ஆசிரியர் உறவும், ஆசிரியர் மாணவர் தொடர்பும் நட்புறவான சூழ்நிலையில் சிறப்பாக இருந்துள்ளது.

ஓலையினால் வேயப்பட்ட கூரையையும், மண் சுவர்களையும், குந்துகளையும் கொண்ட இப்பாடசாலை பின்னர் போதிய இடவசதி, தளபாட வசதிகளைக் கொண்ட ஒரு பெரும் கட்டிடத்துடன் ஒரு பாடசாலையாக தலை நிமிர்ந்து ஒளிவீசும் ஒரு ஸ்தாபனமாகத் திகழ்ந்த பெருமை பெற்றோரையே சாரும். 1974 இல் பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் யாவரும் சேர்ந்து நடாத்திய கலைவிழா ஆசிரியர்களின் விடாமுயற்சியையும், மாணவர்களின் திறமையையும், பெற்றோரின் ஒத்துழைப்பையும் காட்டுவதாக அமைந்தது. இவ்வாறாக இக்காலப்பகுதியில் இவ்வித்தியாலயம் சகல வகையிலும் உச்சநிலையை அடைந் திருந்தது.

பாடசாலை பதிவேடுகள் அழிவடைந் தமையால் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்த பாடசாலையின் ஆரம்ப கால அதிபர்கள் பற்றிய முழு விபரங்களையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இங்கு கடமையாற்றிய அதிபர் களில் திரு.யோ.சிங்கராயர், திரு.மைக்கேல் விஜயரெத்தினம், திரு.திருச்செல்வம், திரு.சு.யோ. நடராசா, திரு.லியோன்சியஸ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். 01.03.1990 இல் திரு.ஐ.சண்முகநாதன் அவர்கள் பாடசாலை அதிபராக நியமனம் பெற்றார். இவரது காலப் பகுதியில் பாடசாலைக் காணி விஸ்தரிக்கப்பட்டது. மாணவர்களுக்கு சீருடை அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ் தினம், ஆங்கில தினம், இல்ல விளையாட்டுப் போட்டிகள் போன்றவை சிறப்பாக நடைபெற் றுள்ளன. இக்காலப்பகுதியில் இங்கு 350 மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர். இங்கு தரம் 1

இலிருந்து தரம் 8 வரை வகுப்புக்கள் நடை பெற்றுள்ளன. இப்பாடசாலையில் தரம் 8 வரை கல்வி கற்ற மாணவர்கள் தரம் 9 இற்கு புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்குச் சென்று கல்வியை தொடர்ந்துள்ளனர்.

17.10.1991 இல் தீவகத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இப் பாடசாலையும் ஏனைய பாடசாலைகளைப் போன்று யாழ்நகருக்கு இடம் பெயர்ந்தது. யாழ்நகரில் இப்பாடசாலை ஏனைய புங்குடுதீவுப் பாடசாலை களுடன் இணைந்து ஆரம்பத்தில் சில நாட்கள் யாழ்-சன்மார்க்க மகா வித்தியாலயத்திலும், பின்னர் சிறிது காலம் யாழ்-பெரியபுலம் மகா வித்தியால யத்திலும் மாலை நேரப் பாடசாலையாக இயங்கி யுள்ளது. பின்னர் இடப்பிரச்சினை காரணமாக புங்குடுதீவுப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகள் யாவும் (தரம் 1 இலிருந்து தரம் 5 வரை) ஒன்றிணைந்து யாழ்-கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும், தரம் 6 தொடக்கம் தரம் 8 வரையான வகுப்புக்கள் யாழ்-இந்துமகளிர் கல்லூரியில் ஏனைய பாடசாலைகளுடனும் சேர்ந்தும் இயங்கியுள்ளது.

பின்னர் புங்குடுதீவுப் பாடசாலைகள் காலை நேரப் பாடசாலையாக தனியார் கல்வி நிலையங் களுக்கு தங்களது கல்விச் செயற்பாடுகளை மாற்றிக் கொண்டபோது இப்பாடசாலையின் தரம் 6 தொடக்கம் தரம் 8 வரையிலான வகுப்புக்கள் புங்குடுதீவு மகா வித்தியாலயத்துடன் இணைந்து யாழ்-கந்தர்மடம் யூனிவேர்சல் கல்வி நிலையத்தில் இயங்கியுள்ளது. இக்காலப்பகுதியில் இப் பாடசாலையின் அதிபராக திரு.ஐ.சண்முகநாதன் அவர்கள் கடமையாற்றியுள்ளார். இங்கு 24 மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர். 1994 இல் புங்குடுதீவு மகா வித்தியாலயம் யாழ்-பிறவுண் வீதிக்கு இடம் மாற்றப்பட்டதுடன் இப் பாடசாலையின் செயற்பாடுகள் செயலிழந்தது. 1994 இல் செயலிழந்த இப்பாடசாலை இன்றுவரை மீள ஆரம்பிக்கப்படவில்லை.

-மலர்க்குழு

◆◆◆◆◆◆◆◆◆◆

## தீவகத்தின் குடித்தொகை 1871 - 1991

| ஆண்டு | வேலணை | புங்குடுதீவு | மண்டதீவு | நயினாதீவு | அனலைதீவு | எழுவைதீவு | நெடுந்தீவு | தீவகம் மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1871 | 11,244 | 3,966 | 1,153 | 775 | 1,064 | 290 | 3,025 | 21,517 |
| 1881 | 10,504 | 3,499 | 1,248 | 942 | 1,296 | 277 | 2,637 | 20,353 |
| 1891 | 12,201 | 4,098 | 1,429 | 1,193 | 1,411 | 316 | 2,826 | 23,474 |
| 1901 | 13,014 | 5,201 | 1,890 | 1,318 | 1,543 | 324 | 3,906 | 26,996 |
| 1911 | 13,859 | 5,188 | 1,964 | 1,460 | 1,633 | 368 | 3,728 | 28,200 |
| 1921 | 13,663 | 5,888 | 1,874 | 1,722 | 2,042 | 323 | 4,051 | 29,563 |
| 1946 | 18,263 | 9,149 | 2,461 | 2,640 | 2,215 | 400 | 6,338 | 41,466 |
| 1953 | 20,158 | 9,773 | 2,536 | 3,181 | 2,410 | 403 | 5,987 | 44,448 |
| 1963 | 24,929 | 12,028 | 2,721 | 3,954 | 2,874 | 405 | 5,945 | 52,856 |
| 1971 | 28,025 | 13,766 | 3,078 | 4,090 | 3,030 | 440 | 5,607 | 58,006 |
| 1981 | 31,551 | 14,622 | 3,706 | 4,247 | 3,853 | 528 | 5,620 | 64,134 |
| 1991 | 33,446 | 15,121 | 4,116 | 4,346 | 4,021 | 656 | 5,611 | 67,317 |

# யா/புங்குடுதீவு இராசராஜேஸ்வரி வித்தியாலயம்

யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுகநாவலர் வழி ஒழுகி சைவத்திற்கும், தமிழுக்கும் அருந் தொண்டாற்றி வரும் யாழ்ப்பாணம் சைவ வித்தியா விருத்திச் சங்கம் புங்குடுதீவிலும் தமது சேவையைத் தொடரலானது. புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில் ஸ்ரீ இராசராஜேஸ்வரி அம்பாள் என வழங்கும் கண்ணகி அம்மன் ஆலயத்தின் அணித்தாய் மக்கள் துயர் துடைத்து கல்விச் சுடரை ஒளிர வைக்கும் உயர் நோக்கம் மக்கள் மனதில் உதயமாயிற்று. பொருள் வளம் படைத்த தருமசீலர் பலரைக் கொண்ட இக்கிராமத்தில் திருவாளர்கள் வைத்திலிங்கம், கண்ணையா, சின்னத்தம்பி என்போரின் இடையறா முயற்சியின் பெறுபேறாய் பல எதிர்ப்புக்களின் மத்தியில் 1937 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் விஜயதசமி நன்நாளில் திரு.நீ.சேதுபதி ஆசிரியர் அவர்களால் புதியதோர் ஓலைக் கட்டிடத்தில் பல மாணவர்களுக்கு ஏடு தொடக்கப்பட்டதுடன் இவ்வித்தியாலயம் உதயமாயிற்று. எனினும் அக்கட்டிடம் அடுத்த ஒரு வருட காலத்தில் காற்றின் கடும் தாக்கத்தினால் தரை மட்டமாகியது.

இதனால் கிராமப் பெரியார் பலர் மீண்டும் அக்கட்டிடம் முழுவதையும் 1938 இல் உருப்பெறச் செய்தனர். பின்னர் சைவ வித்தியா விருத்திச் சங்க முகாமையாளர் திரு.சு.இராசரெத்தினம் அவர்களது உதவியை நாடினர். அதன் பயனாய் வித்தியாலயப் பொறுப்பை அப்பெரியார் கையேற்றார். திரு.சி.சின்னத்துரை ஆசிரியர் அவர்கள் முதலில் ஆசிரியராய் அமர்த்தப்பட்டார். கொழும்பு வாழ் இக்கிராம பொதுமக்களிடம் நிதி உதவி பெற்று அதன் மூலம் மிகுதி அரைவாசிக் கட்டிடத்தையும் தற்காலிகமாக அமைத்துக் கொண்டார். இப்பாடசாலையின் முதல் தலைமை யாசிரியராய் அளவெட்டியூர் விசுவநாதன் ஆசிரியர் அவர்கள் நியமனம் பெற, திரு.வை.கணபதிப் பிள்ளை அவர்களும் இங்கு சேவையைத் தொடர லானார். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பெரு முயற்சியால், 1944 ஆம் ஆண்டில் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக அங்கீகாரம் பெற்றது. பின்னர் திரு.நீ.சேதுபதி அவர்கள் அதிபராக திரு.நீ.ஆறுமுகம், திரு.சி.சின்னத்துரை, திரு.வை.கணபதிப்பிள்ளை ஆகியோர் உதவி ஆசிரியர்களாயினர். இதன் பின் திரு.வை.கணபதிப் பிள்ளை அவர்கள் அதிபரானார். இவ்வித்தியா லயத்திற்கு உரிய காணி முழுவதையும் இவரது தந்தையார் திரு.அ.வைத்திலிங்கம் அவர்களே கையளித்துள்ளார். இவ்வித்தியாலயத்தின் மேற்குப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இராசராஜேஸ்வரி சனமூக நிலையக் கட்டிடமும், அதன் காணியும் இவ்வித்தியாலயத்திற்கு கையளிக்கப்பட்டது.

1962 ஆம் ஆண்டில் அரசாங்க உடைமை யாக்கப்பட்ட இப்பாடசாலை உயர் வகுப்புக்களுடன் இயங்கியது. 1972 இல் இவ்வித்தியாலயம் புனரமைக்கப்பட்ட புதிய கல்வித் திட்டத்திற்கமைய ஒரு ஆரம்ப பாடசாலையாக தரப்படுத்தப்பட்டது. திரு.வை.கணபதிப்பிள்ளை அவர்களைத் தொடர்ந்து திரு.நா.நடராசா, திரு.கா.சு.பொன்னம்பலம் ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றி உள்ளனர்.

14.09.1986 இல் திரு.செ.தனபாலசிங்கம் அவர்கள் அதிபராக நியமனம் பெற்றார். இக்காலப் பகுதியில் இப்பாடசாலை சகல துறைகளிலும் துரித வளர்ச்சி கண்டது. இக்காலப்பகுதியில் 131 மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர். இப்பாடசாலை யில் ஏற்பட்ட இடப்பற்றாக்குறையை நீக்குமுகமாக இக்கிராமத்தைச் சேர்ந்த திரு.த.கிருஷ்ணசாமி அவர்களால் காணி வாங்கிக் கொடுக்கப்பட்டது. பின்னர் பெற்றோர்களின் நிதியுதவியினால் பாடசா லையைச் சுற்றி மதில் அமைக்கப்பட்டது. ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, பெற்றோர்

ஆசிரியர் சங்கத்தினால் வேதனம் வழங்கப் பட்டது. பாடசாலை மட்டத்தில் இல்ல மெய் வல்லுநர் போட்டிகள், தமிழ் தினம், வாணி விழா போன்றவை சிறப்பாக நடைபெற்றுள்ளன. மாணவர்கள் கொத்தணி மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுள்ளனர்.

இராணுவ நடவடிக்கை காரணமாக 17.10.1991 இல் யாழ்நகருக்கு இடம் பெயர்ந்த இப்பாடசாலை யாழ்நகரில் சிறிது காலம் ஏனைய பாடசாலை களுடன் இணைந்து இயங்கியுள்ளது. 1992 இல் இடம் பெயர்ந்த புங்குடுதீவுப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகள் (புங்குடுதீவு மேற்கு அ.மி.த.க. வித்தியாலயம் தவிர்ந்த) யாவும் ஒன்றிணைந்து யாழ்-கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கி உள்ளது. இப்பிரிவுக்குப் பொறுப்பாக இப்பாடசாலை அதிபர் திரு.செ.தனபாலசிங்கம் அவர்கள் கடமை யாற்றியுள்ளார். சிறிது காலம் யாழ்-கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் சேர்ந்து இயங்கிய இப்பாடசாலைகள் பின்னர் தனித் துவத்தைப் பேணும் வகையில் தங்களுக்கென தனியிடங்களைத் தேடிக்கொண்டன.

அந்தவகையில் புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி வித்தியாலயம், இறுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம், அரியநாயகம்புலம் வித்தியாலயம், சேர்துரைச்சுவாமி வித்தியாலயம் ஆகிய நான்கும் ஒருங்கிணைந்து யாழ்-இந்து மகளிர் கல்லூரி விடுதிக் கட்டிடத்தின் ஒரு பகுதியில் தங்களது கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளன. மீண்டும் 30.10.1995 இல் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக தென்மராட்சி நோக்கிய இடப்பெயர்வுடன் செயலிழந்த இப்பாடசாலை இன்னும் திறக்கப்படவில்லை.

-மலர்க்குழு

◆◆◆◆◆◆◆◆◆◆

## இடம் பெயர்ந்த பின்னர் மீண்டும் இயங்காத பாடசாலைகள்

| பாடசாலைகளின் பெயர் | தோற்றம் |
|---|---|
| யா/புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயம் | 1925 |
| யா/புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க த.க.வித்தியாலயம் | 1833 |
| யா/புங்குடுதீவு மேற்கு அமரிக்கன் த.க.வித்தியாலயம் | 1850 |
| யா/புங்குடுதீவு பராசக்தி வித்தியாலயம் | 1910 |
| யா/புங்குடுதீவு குறிகாட்டுவான் அரசினர் த.க.வித்தியாலயம் | 1957 |
| யா/புங்குடுதீவு இறுப்பிட்டி அரசினர் த.க.வித்தியாலயம் | 1850 |
| யா/புங்குடுதீவு சேர் துரைச்சாமி வித்தியாலயம் | 1939 |
| யா/புங்குடுதீவு அரியநாயகம்புலம் வித்தியாலயம் | 1948 |
| யா/புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம் | 1935 |
| யா/புங்குடுதீவு இராசராஜேஸ்வரி வித்தியாலயம் | 1937 |

# யா/புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம்

இப்பாடசாலை புங்குடுதீவிலுள்ள ஊரைதீவு என்னும் கிராமத்தில் பாணாவிடை என்ற இடத்தில் அமைந்துள்ளது. இக்கிராமத்திலே சைவத்துக்கும், தமிழுக்கும் பெரும் பணியாற்றிய பல பெரியார்கள் காலத்துக்குக் காலம் தோன்றியுள்ளார்கள். அவர்களுள் தலை சிறந்தவர் உயர்திரு சிவக்கன்று மருதப்பு சுவாமி அவர்கள். இவருடைய சைவப்பற்றுக்கு வித்திட்டவர் பாணாவிடை என்னும் பதியிலே கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் தான்தோன்றி ஈஸ்வரராகிய இராமலிங்கேஸ்வர சுவாமிகளே.

இந்தக் கிராமச் சிறுவர்களின் குறையைத் தீர்க்கவும், இக்கிராமத்திலே சைவத்தையும், தமிழையும் வளர்க்கவும் எண்ணிய திரு.மருதப்பு சுவாமி அவர்களும், ஆசிரியர் சி.நல்லதம்பி அவர்களும், மற்றும் பல பெரியார்களும் சைவ வித்தியா விருத்திச் சங்க முகாமையாளர் திரு.சு.இராசரத்தினத்திடம் சென்று, ஊரதீவில் முக்கியமாக ஒரு பாடசாலை அமைக்க வேண்டு மென வாதாடினார்கள். அதன் பிரகாரம் 1935 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் நவராத்திரி ஆரம்ப தினத்தில் தற்காலிகமாக ஊரதீவு திருநாவுக்கரசு நாயனார் மடத்தில் திருநாவுக்கரசு வித்தியாசாலை என்னும் பெயரில் இப்பாடசாலை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தால் நிறுவப்பட்டது. ஸ்தாபகத் தலைமையாசிரியராக திரு.நா.சோமசுந்தரம் அவர்களும், உதவி ஆசிரியர்களாக திரு.சி. நல்லதம்பியும், திருமதி.ந.நல்லதங்கமும் நியமிக் கப்பட்டனர். தற்காலிக மடத்தினை திரு.கந்தர் அவர்களிடமிருந்து மருதப்பு சுவாமிகள் பத்து வருடக் குத்தகைக்குப் பெற்று சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் ஒப்படைத்தார்.

1935 ஆம் ஆண்டு கல்வியதிகாரியாகக் கடமை யாற்றிய திரு.A.சரவணமுத்து அவர்கள் புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டினால்தான் அரசாங்க உதவியைப் பெற்றுக் கொடுக்கலாம் எனக் கூறியதன் பேரில் திரு.சி.நல்லதம்பி ஆசிரியர் தனது செலவில் பத்துப் பரப்புக் காணியை திரு.வை. சின்னையா என்பவரிடம் வாங்கி சைவ வித்தியா விருத்திச் சங்கத்திற்குக் கையளித்தார். அதில் ஒரு கட்டிடத்தினை அன்று தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு.நா.சோமசுந்தரம் அவர்கள் தனது செலவில் கட்டிக் கொடுத்தார். இதன் விளைவால் 1936 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புதிய கட்டிடத்திற்கு இப்பாடசாலை மாற்றப்பட்டது.

இப்பாடசாலையிலேயே பல்வேறு கஷ்டங் களின் மத்தியில் தலைமையாசிரியர்களாகப் பின்வருவோர் கடமையாற்றியுள்ளனர். திரு.நா. சோமசுந்தரம், திரு.சு.சபாரெத்தினம், திரு.எஸ். செல்லையா, திரு.சி.நாகமுத்து. திரு.ஆ. சுப்பிரமணியம், திரு.சி.சிவசுப்பிரமணியம், திரு.த.சிவகுரு, திரு.மூ.நடராசா, திரு.க.தரும லிங்கம், திரு.சி.இரத்தினசபாபதி, திரு.அ.க. கந்தையா, திரு.த.சிவகுரு, திரு.செ.இலகுப்பிள்ளை திரு.சோ.சேனாதிராசா ஆகியோர் சேவை ஆற்றியுள்ளனர்.

1936 ஆம் ஆண்டுப் பழைய கட்டிடத்துடனும், தளபாடங்களுடனும் இயங்கி வந்த இப்பாடசா லைக்குத் திரு.சோ.சேனாதிராசா அதிபரின் காலப்பகுதியில் முதல் முறையாகத் தளபாடங்கள் கிடைக்கப் பெற்றன. இப்பாடசாலைக்கு வித்திட்ட திரு.மருதப்பு சுவாமிகள் 1960 ஆம் ஆண்டு சிவபதமடைந்ததும் அவருடைய பணியைத் தொடர்ந்து இக்கிராமத்தைச் சேர்ந்த திரு.பொ.மதியாபரணம், திரு.அ.ப.பாலசுப்பிர மணியம், திரு.எஸ்.கே.மகேந்திரன் (சட்டத்தரணி) ஆகியோர் செய்து வந்துள்ளனர்.

இப்பாடசாலை போக்குவரத்து வசதிகளற்ற ஒதுக்குப் புறத்தில் அமைந்திருந்தமையால் இப்

பாடசாலையில் நீண்ட காலமாக ஆசிரிய பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக இருந்துள்ளது. இதனால் இதன் வளர்ச்சி நீண்டகாலமாகப் பின் தள்ளப்பட்டிருந்தது. இப்பகுதி மக்களின் அயராத முயற்சியினால் இப்பாடசாலை ஊரதீவுக் கிராமத் தின் மத்திய பகுதிக்கு மாற்றப்பட்டது. இப் பாடசாலைக்கான தற்காலிகக் கட்டிடம் ஊரதீவு கிராம முன்னேற்றச் சங்கக் (அறிவகம்) கட்டிடத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டு பாடசாலை இடம் மாற்றப்பட்டது.

பின்னர் அரசின் நிதி உதவியினால் பாடசாலைக்கான நிரந்தரக் கட்டிடம் அமைக்கப் பட்டது. இம்முயற்சியால் ஊரதீவு கிராம முன்னேற்றச் சங்க உறுப்பினர்களும், ஊரதீவு சனசமூக நிலைய உறுப்பினர்களும் பெரும் பங்காற்றியுள்ளனர். இக்காலப்பகுதியில் இக் கிராமத்தைச் சேர்ந்த திரு.செ.இலகுப்பிள்ளை, திருமதி.த.தியாகராசா ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றி உள்ளனர். இக்காலப்பகுதியே இப்பாடசாலையின் பொற்காலமாகும். போதியளவு ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். மாணவர் தொகை படிப்படியாக அதிகரித்துச் சென்றது. பாடசாலை மட்டத்தில் விளையாட்டுப் போட்டி, தமிழ் தினம், வாணி விழா போன்றவை சிறப்பாக நடைபெற்றுள்ளன. இக்காலப்பகுதியில் 98 மாண வர்கள் இங்கு கல்வி கற்றுள்ளனர். இலங்கை இராணுவத்தால் தீவுப்பகுதியில் மேற்கொள்ளப் பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக 17.10.1991 இல் இப்பாடசாலை யாழ்நகருக்கு இடம் பெயர்ந்தது. இப்பாடசாலை யாழ்நகரில் ஏனைய புங்குடுதீவுப் பாடசாலைகளுடன் இணைந்து சிறிது காலம் யாழ்-பெரியபுலம் மகா வித்தியாலயத்திலும், பின்னர் யாழ்-கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியால யத்திலும் மாலை நேரப் பாடசாலையாக இயங்கியுள்ளது.

பல்வேறு சிரமங்களின் மத்தியில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கிய புங்குடுதீவுப் பாடசாலைகள் தங்களது தனித்துவத்தை பேணும் வகையில் தனித்து, காலை நேரப் பாடசாலையாக இயங்க முன்வந்தன. இந்நிலையில் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம், புங்குடுதீவு சித்தி விநாயகர் மகா வித்தியாலயம், குறிகாட்டுவான் அ.த.க.வித்தியாலயம், புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளும் இணைந்து தனியார் கல்வி நிறுவனமான ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் காலை நேரப் பாடசாலையாக இயங்கியுள்ளன. மீண்டும் 30.10.1995 இல் ஏற்பட்ட தென்மராட்சி நோக்கிய இடப்பெயர்வுடன் செயலிழந்த இப்பாடசாலை இன்று வரை மீள ஆரம்பிக்கப்படவில்லை.

-மலர்க்குழு

••••••••••

### தாய்மொழி

செந்தமிழைப் பேசுகின்ற தமிழருக்கே
சிறிதளவும் தம்மொழிமேல் பற்றே இல்லை
எந்தவகை யிலும்தமிழ்க்குப் பணிசெய் யாமல்
ஏதிலரின் ஆங்கிலமே நலமென் கின்றார்.
இந்தஇழி நிலையில்வாழ் தமிழர் நெஞ்சில்
இனியேனும் மொழிப்பற்றுத் துலங்க வேண்டும்
சிந்தையிலே தாய்மொழிமேல் பற்று வைத்துச்
சீராகத் தொண்டுசெய்தல் சீர்பண் பாகும்.

-கவிஞர் முருகதாசன்

# யா/புங்குடுதீவு அரியநாயகம்புலம் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம்

யா/புங்குடுதீவு அரியநாயகம்புலம் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம் கழுதைப்பிட்டித் துறைமுகத்திற்கு அருகாமையிலுள்ள பிரதான வீதி யோரத்தில் உள்ள அரியநாயகம்புலம் என்னும் பெயரையுடைய ஒன்றரை ஏக்கர் விஸ்தீரணம் உள்ள காணியில் இப் பாடசாலைக்கான தற்காலிக கட்டிடம் அமைக்கப்பட்டு 03.05.1948 இல் 125 மாணவர்களுடன் வித்தியாதரிசி சி.முத்தையா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அரிய நாயகம்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் தோற்றத்திற்கு இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு.சு.கந்தையா அவர்களின் முயற்சியே பிரதானமான காரணி என்பதை அக் கிராமத்தைச் சேர்ந்த பலரும் ஒத்துக் கொள்ளு கின்றனர். தற்போது கனடாவில் வாழும் திரு.சு.கந்தையா ஆசிரியர் அவர்கள் மூலம் பெற்ற தகவல்களையும், அரியநாயகம்புலத்தைச் சேர்ந்த சிலரின் கருத்துக்களையும் அடிப்படையாக வைத்து இப்பாடசாலையின் தோற்றம் பற்றிய இக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

### எண்ணக் கருவின் தோற்றம்

1917 இல் பிறந்த திரு.சு.கந்தையா ஆசிரியர் அவர்கள் தமது இளம் வயதிலேயே புங்குடுதீவு' கணேச வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணி புரியத் தொடங்கி விட்டார். அப்போது காந்தியக் கருத்துக்களை உள்வாங்கியவராகவும், சமூகத் திற்கு தொண்டாற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்ட இளைஞராகவும் இருந்துள்ளார். இவ்வாறு எண்ணம் கொண்டிருந்த இளைஞனான இவருக்கு இக்கிராமத்தின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டிருந்த திரு.வி.கார்த்திகேசு அவர்கள் புங்குடுதீவு அரியநாயகம்புலத்தில் ஒரு பாடசாலையைக் கட்ட முடியும் என்ற தகவலை கொடுத்தார்.

அக்காலத்தில் பாடசாலைக்கு தலைமை ஆசிரியராக வருபவர்கள் தகுதியிருப்பதுடன் பாடசாலையின் அபிவிருத்திக்கு பணரீதியான, உடல்ரீதியான பங்களிப்பைச் செய்திருக்க வேண்டும் என்ற நிலை காணப்பட்டிருக்க வேண்டும். புங்குடுதீவின் பல பாடசாலைகளில் ஆரம்ப காலங்களில் தலைமை ஆசிரியர் பதவியைப் பெற்றவர்கள் அப் பாடசாலைகளின் தோற்றத்திற்கு ஆரம்பத்திலிருந்தே பெரும் பணியாற்றி உள்ளனர். திரு.சு.கந்தையா அவர்கள் தன்னை ஒத்த இளம் வயது ஆசிரிய நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த போது அரியநாயகம்புலத்தில் பாடசாலையொன்றை தொடங்குவதற்தான சந்தர்ப்பம் உண்டென்றும் ரூபா 500 கொடுக்கத் தயாராக உள்ளவரை தலைமையாசிரியர் ஆக்கலாம் என்றும் கூறினார். நண்பர்களின் ஒருவரான திரு.சரவணமுத்து ஆசிரியர் தான் 500 ரூபா தரலாம் என்றும், அது மட்டுமல்லாமல் கொழும்பில் வர்த்தகம் செய்யும் தனது சகோதரர்கள் மூலம் மேலும் 1000 ரூபா திரட்டித் தரலாம் என்றும் கூறினார். இது திரு.சு.கந்தையா அவர்களுக்கு உற்சாகத்தைத் தரவே தீவிரமாக பாடசாலையை அமைக்கும் வேலையில் இறங்கத் தொடங்கினார்.

### பொதுசன சேவா சங்கம்

1946 இல் அக்கால முறைப்படி பிரசித்தக் காரன் மூலம் மேளம் அடித்து பாடசாலை தொடங்குவது சம்பந்தமாக கிராமத்தவர்களின் கருத்தினைப் பெறுவதற்காக அரியநாயகம்புலம் பிள்ளையார் கோவிலில் கூட்டம் நடைபெற இருப்பதாக கிராம மக்களுக்கு கூறப்பட்டது. இவ்விடயத்தில் ஆசிரியருக்கு உறுதுணையாக வித்துவான் ஆறுமுகம் (நல்லையா) இருந்ததாக திரு.கந்தையா கூறுகிறார். கோவிலில் கூட்டப்பட்ட

கூட்டத்தில் "அரியநாயகம்புலம் பொதுசன சேவா சங்கம்" அமைக்கப்பட்டது. அச்சங்கத்திற்கு தலைவராக பெரிய சோமர் என அழைக்கப்பட்ட சோமசுந்தரம் அவர்களும் காரியதரிசியாக திரு.சு.கந்தையாவும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் நிர்வாக சபையில் திரு.சரவணமுத்து (பிருந்தாவனம் பொன்னையா அவர்களின் மாமனார்) ஐ.கந்தையா, வைத்தியர் தம்பிப்பிள்ளை, மு.சதாசிவம் (சின்னத்தம்பி) ஆகியோரும் நிருவாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தீவுப்பகுதியைச் சேர்ந்த வைத்திலிங்கம் துரைச்சாமி அவர்கள் சபாநாயகராக 15-12-1936ல் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். இவர் 1946 வரை சபாநாயகராக இருந்துள்ளார். அவர் தீவுப் பகுதியின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டவர். சபாநாயகருடைய செல்வாக்கைப் பயன்படுத்திப் பாடசாலையை உருவாக்கலாம் என்ற எண்ணத் துடன் யாழ்ப்பாணத்தில் உள்ள சபாநாயகரது இல்லத்திற்கு பெரிய சோமர் அவர்களையும், திரு.மு.சதாசிவம் அவர்களையும் திரு.சு.கந்தையா ஆசிரியர் அழைத்துச் சென்றார். 1947 தேர்தலில் போட்டியிட ஆயத்தமாக இருந்த திரு.வை. துரைச்சுவாமி அவர்களிடம் பாடசாலை கட்டும் எண்ணத்தை வெளியிட்டதாக திரு.சு.கந்தையா அவர்கள் கூறுகிறார். அப்போது தீவுப்பகுதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு சபாநாயகர் துரைச்சுவாமி ஆயத்தமாக இருந்ததால் உடனடியாக தொலைபேசி மூலம் அப்போதைய கல்வி மந்திரியாக இருந்த C.W.W.கன்னங்கரா அவர்களுடன் கதைத்து பாடசாலையைத் தொடங்குவதற்கான அனுமதியைப் பெற்றுத் தந்ததாகக் கூறுகின்றார். இத்தேர்தலில் அவர் தோல்வி அடைந்தமையினால் பாடசாலை ஆரம்பிப்பதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டது.

**எதிர்ப்புக்கள்**

இவ்வாறு அனுமதி பெற்ற போதும் பாடசாலை தொடங்குவதற்கு எதிர்ப்புக்கள் இல்லாமல் இருக்க வில்லை. அக்காலத்தில் 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற ஆசிரியர், மாணவர்விகிதம் கடைப்பிடிக்கப்பட்டது. அரியநாயகம்புலம் பாடசாலை அமைய இருந்த இடத்திலிருந்து ஏறக் குறைய ஒரு மைல் தூரத்திற்குள் சித்திவிநாயகர் வித்தியாசாலை இயங்கிக் கொண்டிருந்தது. அப்பாடசாலைக்கு அச்சமயத்தில் சில புதிய ஆசிரியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். அரியநாயகம் புலத்தில் பாடசாலை அமைக்கப்பட்டால் சித்தி விநாயகர் வித்தியாசாலையில் பயிலும் பல மாணவர்கள் இப்பாடசாலைக்கு வந்து விடுவர், அதனால் புதிய ஆசிரியர்களுக்கு வேலை யில்லாமல் போகலாம் என்ற பயம் ஏற்பட்டது. இதனால் சித்தி விநாயகர் வித்தியாசாலையில் புதிதாக வேலைக்குச் சேர்ந்த ஆசிரியர்களும், அவர்களுடைய உறவினர்களும் அரியநாயகம் புலத்தில் பாடசாலை தொடங்குவதை எதிர்த்தனர் என்று கந்தையா ஆசிரியர் கூறுகின்றார். இக் கருத்தை தற்போது கனடாவில் வாழும் அக்கிராமத்தைச் சேர்ந்தவர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

**பாடசாலை கட்டுவதற்கான பணம்**

ஆரம்பத்திலேயே திரு.சரவணமுத்து ஆசிரியர் 500 ரூபா பணத்தினை தன்னிடம் தந்திருந்ததாக கந்தையா ஆசிரியர் கூறுகின்றார். இதனை விட திரு.நாகலிங்கம் (S.K.மகேந்திரனின் மாமனார்) திரு. மு.சதாசிவம் ஆகியோர் கொழும்பு சென்று 1000 ரூபா பணம் திரட்டியதாகவும் கூறுகின்றார். அவ்வாறு திரட்டிய பணத்தில் 300 ரூபாவை திரு.நாகலிங்கம் அவர்களிடமும், 700 ரூபாவை திரு.மு.சதாசிவம் அவர்களிடமும் கொடுத்து வைத்திருந்ததாகவும் பாடசாலைக்குத் தளபாடம், கட்டிடச் சாமன்கள் வாங்க ஆரம்பிக்கும் போது அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்று கூறியிருந்த தாகவும் கூறுகின்றார்.

**தலைமையாசிரியருக்கான போட்டி**

பாடசாலை அமைவது நிச்சயம் என அறிந்தவுடன் தலையாசிரியராக யாரை நியமிப்பது என்ற போட்டி கிளம்பி விட்டது. திரு.முருகேசு உடையார் அவர்கள் பிரசித்தம் போட்டு திரு. பசுபதிப்பிள்ளை அவர்களை தலைமை ஆசிரியராகக் கொண்டு வர வேண்டும் என்று பிரேரணை கொண்டு வந்ததாகவும், இதற்கு திரு.ஐ.கந்தையா அவர்கள் கையை உயர்த்தி ஆதரவு தெரிவித்ததாகவும், அதற்காக மக்களிடையே கையெழுத்து வாங்கப்பட்டதாகவும்

கந்தையா ஆசிரியர் கூறுகின்றார். இதற்கிடையில் திரு.ஐயாத்துரை நடராாசன் என்பவர் தன்னை தலைமை ஆசிரியராக போடவேண்டும் எனக் கூறியதாகவும், திரு.கு.வி.செல்லத்துரை ஆசிரியர் அவர்கள் திரு.முத்துத்தம்பி அவர்களை தலைமை யாசிரியராக்க வேண்டுமென்று கூறியதாகவும், இதற்கிடையில் திரு.செல்லத்தம்பி ஆசிரியர் அவர்கள் தான் தலைமையாசிரியராக வர வேண்டும் என்பதற்காக 500 ரூபா பெறுமதியான பாடசாலை தளபாடங்களை வாங்கி பாடசாலைக்கு அருகாமையில் இருந்த திரு.மு.சின்னத்தம்பியின் வீட்டில் வைத்திருந்ததாகவும் கூறுகின்றார். ஆனால் அவர்கள் ஒருவருமே அப்பாடசாலையின் முதல் அதிபராக வரவில்லை.

1948 இல் பாடசாலை தொடங்கப்பட்ட போது அளவெட்டியைச் சேர்ந்த திரு.எம்.நாகராசா அவர்கள் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். இணுவிலை சேர்ந்த திரு.பேரம்பலம், அவரின் மனைவியார் மற்றும் புங்குடுதீவைச் சேர்ந்த யோகாம்பிகை ஆசிரியை ஆகியோரே அப் பாடசாலையின் ஆரம்ப ஆசிரியர்களாவர். பொது மக்களிடம் பணத்தைத் திரட்டி திரு.செல்லத்தம்பி ஆசிரியர் அவர்களுக்கு அவர் தளபாடங்களுக்காக செலவு செய்த 500 ரூபாவும் திருப்பிக் கொடுக்கப் பட்டது.

**பாடசாலைக்கான கட்டிடம் அமைத்தல்**

பாடசாலைக்கான காணியை திரு.கந்தையா அவர்களே வாங்கிக் கொடுத்ததோடு, அரசாங் கத்தின் பெயரில் அக்காணி எழுதப்பட்டு மண் பறித்து, மேடாக்கி, பனைகள் தறித்து, பெரிய கொட்டகை போட்டு, தென்னை ஓலையால் வேய்ந்தும், சுற்றி வர அடைக்கப்பட்டும் தற்காலிகப் பாடசாலை கட்டிடம் அமைக்கப்பட்டது. இப் பாடசாலை கட்டிட அமைப்பினை முன்னின்று நடத்தியவர் அரியநாயகம்புலத்தில் மிகவும் பிரசித்தமான திரு.முத்துவேலு அவர்களின் மகன் மு.சதாசிவம் (சின்னத்தம்பி) அவர்களாவர். அரியநாயகன்புலம் என்ற இடத்தில் இருந்தவர் களில் 80 வீதமானோர் முத்துவேலு அவர்களின் பரம்பரையினரே. அப்பரம்பரையில் ஏறக்குறைய 300 பேரளவில் ( முத்துவேலரின் பேரன், பேத்தி, பூட்டன், பூட்டி, கொப்பாட்டப் பிள்ளைகள் ) கனடாவில் வசிப்பது குறிப்பிடத்தக்கது.

**மாணவர்கள்**

அரியநாயகம்புலத்தையும் அதனைச் சுற்றி யுள்ள பகுதிகளையும் சேர்ந்த பல மாணவர்கள் சித்திவிநாயகனில் கல்வி கற்று வந்தனர். அரிய நாயகன்புலம் பாடசாலை ஆரம்பித்ததும், திரு. கந்தையா அவர்கள் வேறு சிலருடன் சித்தி விநாயகர் வித்தியாசாலைக்குச் சென்று அங்குள்ள அதிபர், ஆசிரியர்களுடன் வாதாடி 125 மாணவர்களின் பாடசாலை விடுகைப் பத்திரத்தைப் பெற்று அரியநாயகம்புலம் பாடசாலையில் அவர்களைச் சேர்த்ததாகவும் கூறுகின்றார். இதனால் தான் ஆசிரியர்களினதும், அவர்களின் உறவினர்களினதும் எதிர்ப்பினை சம்பாதிக்க வேண்டி ஏற்பட்டதாகவும் கூறுகின்றார்.

1955 இல் அரசினால் நிரந்தர கட்டிடம் ஒன்றும், சகல வசதிகளும் உள்ளடங்கிய ஆசிரியர் விடுதியும் அமைக்கப்பட்டது. ஆரம்ப வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி போதிக்கப்பட்டு வந்த இப்பாடசாலையில் 1962 இல் இருந்து எட்டாம் வகுப்புவரை வகுப்புகள் நடைபெற்றுள்ளன. அரசினால் காலத்துக்கு காலம் தளபாடங்கள், கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இங்கு சைவப் பிள்ளைகள் கல்வி கற்றதால் நாயன்மார் குருபூசைகளும், சரஸ்வதி பூசையும் வருடம் தோறும் சிறப்பாக நடைபெற்றுள்ளன. விவேகானந்த சபையினரால் ஆண்டு தோறும் நடத்தப்பட்ட சைவசமய பாடப் பரீட்சையில் இப்பாடசாலை மாணவர்கள் சிறப்பு சித்திகளையும், பல பரிசில்களையும் பெற்றுள்ளனர்.

இப்பாடசாலை அரியநாயகம்புலம் பிள்ளை யார் கோயிலுக்கு அண்மையில் அமைந்துள்ள மையால் மாணவர்கள் வெள்ளிக்கிழமை தோறும் ஆலயத்துக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டுள்ளனர். இப்பாடசாலை மாணவர்கள் காலத்துக்கு காலம் இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் கல்வி சுற்றுலா சென்று பல்வேறு விடயங்களைக் கண்டும், கேட்டும் வந்துள்ளனர்.

இப்பாடசாலையில் 1962 இல் இருந்து எட்டாம் வகுப்புவரை வகுப்புக்கள் நடை பெற்றுள்ளன. 1975

இல் இப்பாடசாலை அரசினால் கனிஷ்ட வித்தியாலயம் ஆக்கப்பட்டு மீண்டும் ஐந்தாம் வகுப்புவரை மட்டுமே வகுப்புகள் நடைபெற்று உள்ளன. இக்காலப்பகுதியில் திரு.சோ. சுப்பிரமணியம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றி உள்ளார். திரு.முத்துத்தம்பி, திரு.நடராசா, திரு.தம்பு ஆகியோரும் இப்பாடசாலையில் அதிபர்களாகக் கடமையாற்றி உள்ளனர். இவரின் பின் திரு.கா.கனகசபை அவர்கள் பாடசாலை அதிபராக நியமிக்கப்பட்டார். இவருடைய காலப் பகுதியில் பாடசாலையின் கல்வி நிலை அதி யுன்னத நிலையில் இருந்துள்ளது.

இவர் ஓய்வு பெற்றுச் செல்ல இவரது மனைவியாரான திருமதி பொன்னம்மா கனகசபை அவர்கள் அதிபராக கடமையாற்றி உள்ளார். இவரைத் தொடர்ந்து திரு.சு.செல்லத்துரை அவர்கள் அதிபராக பணியாற்றி உள்ளார். இவருடைய காலப்பகுதிலேயே இராணுவ நடவடிக்கை காரணமாக புங்குடுதீவு மக்கள் யாழ்ப்பாணம் நோக்கி இடம் பெயர்ந்தனர். அதிபரின்றி இடம் பெயர்ந்த இப்பாடசாலை சிறிது காலம் ஏனைய புங்குடுதீவுப் பாடசாலைகளுடன் சேர்ந்து யாழ்நகரில் இயங்கியுள்ளது. பின்னர் இறுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம், புங்குடுதீவு இராசராஜேஸ்வரி வித்தியாலயம், சேர் துரைச்சாமி வித்தியாலயம் ஆகியவற்றுடன் இணைந்து யாழ்-இந்து மகளிர் கல்லூரி விடுதிக் கட்டிடத்தில் 30.10.1995 வரை இயங்கிய இப்பாடசாலை இராணுவ நடவடிக்கை காரணமாக ஏற்பட்ட தென்மராட்சி நோக்கிய இடப்பெயர்வுடன் செயலிழந்துள்ளது. 1991 ஆம் ஆண்டு இடப் பெயர்வுடன் மூடப்பட்ட இப்பாடசாலை இன்னும் திறக்கப்படவில்லை. எனினும் 1948 தொடக்கம் 1991 வரை ஏறக்குறைய 43 ஆண்டுகள் இப்பாடசாலை அரியநாயகம்புலத்தையும், அதனைச் சூழ்ந்திருந்த பகுதிகளில் இருந்த மாணவர்களின் ஆரம்பக்கல்வி முன்னேற்றத்திற்கு ஆற்றிய பாரிய உதவியை யாராலும் மறுக்க முடியாது. இப்பாடசாலையை நிறுவ முன்னின்று உழைத்த திரு.கந்தையா ஆசிரியர் அவர்களுக்கு அக்கிராம மக்கள் என்றென்றும் நன்றிக் கடன் உடையவர்களாக இருப்பார்கள்.

-மலர்க்குழு

* * * * * * * * * *

## இணையத் தொலைபேசி (Internet Telephone)

இன்ரநெற் ஊடாகப் பேசுவதனையே இணையத் தொலைபேசி எனலாம். இதனூடாகப் பேசுவதன் மூலம் ஏற்படும் செலவு சாதாரண தொலைபேசிக் கட்டணத்தை விட மிகக் குறைவாகும். இன்று உலகம் இன்ரநெற் மூலம் பல கோடிக்கணக்கான கணனி (Computer) களால் இணைக்கப்பட்டுள்ளது. மின் அஞ்சல் (E-mail), இன்ரநெற் சட் (Internet Chat) ஆகியவற்றினூடாக நாங்கள் இன்ரநெற் வசதியை கொண்டுள்ள இன்னொருவருடன் தொடர்பு கொள்ளலாம்.

இணையத் தொலைபேசி மூலம் நீங்கள் தொடர்பு கொள்வதற்கு தொடர்பு கொள்பவரிடமும் இன்ரநெற் வசதியுள்ள கணனி இருத்தல் வேண்டும். இத்துடன் ஒரு ஒலிவாங்கி (Micro Phone), ஒலிபெருக்கி (Speaker) இருத்தல் அவசியம். இந்த தொலைபேசி வசதியைப் பயன்படுத்துவதற்கு ஒரு மென்பொருளும் (Software) அவசியம். இந்த மென்பொருளை இன்ரநெற்றினூடாக நாங்கள் இலவசமாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். இவற்றில் Netscape இன் Cool talk, Microsoft இன் Net Meeting போன்றவை குறிப்பிடத்தக்கவை. இதில் ஒன்றை உங்களது கணனியில் பதிவிறக்கம் செய்ததும் நீங்கள் இணையத் தொலைபேசியை பாவிக்கலாம். இதனுடன் தொடர்பு கொள்ளும் இருவரிடமும் கம்பியூட்டர் வீடியோ கமராவும் இருக்குமானால் நீங்கள் இருவரும் பரஸ்பரம் உங்களை கம்பியூட்டர் திரையில் பார்க்கலாம்.

# யா/புங்குடுதீவு இறுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் வித்தியாலயம்

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வருகை தந்த அமெரிக்கன் மிஷனரிமார்களால் 19 நூற்றாண்டின் நடுப்பகுதியில் அதாவது 1850 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டதே புங்குடுதீவு இறுப்பிட்டி அடிமரிக்கன் மிஷன் தமிழ் கலவன் வித்தியால யமாகும். இப்பாடசாலை புங்குடுதீவின் மேற்குப் பகுதியிலுள்ள இறுப்பிட்டி கிராமத்தில் ஆரம்பிக்கப் பட்டது. ஆரம்பகாலத்தில் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக பாடுபட்ட அதிபர்கள் பற்றிய விபரங்கள் ஒழுங்காகப் பேணப்படாமையாலும், அழிந்தொழிந்தமையாலும் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

ஆரம்பகால அதிபர்களைத் தொடர்ந்து திரு.நா.பொன்னையா, திரு.சி.ஆறுமுகம், திரு.மு. நாகலிங்கம், திரு.த.சிவகுரு. திரு.ந.பசுபதிப்பிள்ளை, திரு.தி.சதாசிவம் ஆகியோர் பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டு உழைத்துள்ளனர். இவர்களைத் தொடர்ந்து திரு.ஜே.ஜே.சற்குணராஜா அதிபராகக் கடமையாற்றி உள்ளார். இக்காலப் பகுதியில் பாடசாலையில் விளையாட்டுப் போட்டிகள், கலை விழாக்கள் சிறப்பாக நடை பெற்றுள்ளன. 1975 இல் ஊர்காவற்றுறை கல்வி வட்டார மட்டத்தில் நடைபெற்ற உற்பத்திப் போர் இயக்கத்தில் முதலாம் இடத்தைப் பெற்றமையும், புதுமுறைக் கல்விக் கருத்தரங்கில் பங்கு பற்றி கல்விப் பகுதியினரின் விசேட பாராட்டையும் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவரைத் தொடர்ந்து திரு.மு.நடேசு, திரு.சு.வீரசிங்கம் ஆகியோர் அதிபர்களாகக் கடமை யாற்றியுள்ளனர். திரு.சு.வீரசிங்கம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் இப் பாடசாலையின் வளர்ச்சி அதி உன்னத நிலையில் இருந்துள்ளது. இல்ல விளையாட்டுப் போட்டிகள், தமிழ் தினம், ஆங்கில தினம், வாணி விழா, கலை நிகழ்வுகள் காலத்திற்கு காலம் சிறப்பாக நடாத்தப்பட்டன. இக்காலப்பகுதியில் இப்பாடசாலை யில் 143 மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர்.

17.10.1991 இல் தீவுப்பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக மற்றைய பாடசாலைகளைப் போன்று இப்பாடசாலையும் யாழ்நகருக்கு இடம் பெயர்ந்தது. யாழ்நகரில் ஏனைய புங்குடுதீவுப் பாடசாலைகளுடன் இணைந்து சிறிது காலம் யாழ்-பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் இப்பாடசாலை இயங்கி உள்ளது. பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் ஏற்பட்ட இடப்பிரச்சினை காரணமாக இப் பாடசாலைகளை வேறிடத்திற்கு மாற்ற வேண்டிய தேவை பாடசாலை அதிபர்களுக்கு ஏற்பட்டது. இதனால் புங்குடுதீவு பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகள் யாவும் இணைந்து சிறிது காலம் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இயங்கியுள்ளது.

1992 இல் தனித்துவத்தைப் பேணும் வகையில் யாழ்-இந்து மகளிர் கல்லூரி விடுதியில் காலை நேரப் பாடசாலையாக இயங்கியுள்ளது. யாழ்-இந்து மகளிர் கல்லூரி விடுதியில் இப்பாடசாலையுடன் இணைந்து புங்குடுதீவு இராசராஜேஸ்வரி வித்தியாலயம், அரியநாயகம்புலம் வித்தியாலயம், சேர் துரைச்சாமி வித்தியாலயம் ஆகிய பாடசாலை களும் இயங்கியுள்ளன. இக்காலப்பகுதியில் இப்பாடசாலையின் அதிபராக திரு.சு.வீரசிங்கம் அவர்கள் கடமையாற்றியுள்ளார். 58 மாணவர்கள் இங்கு கல்வி கற்றுள்ளனர். மீண்டும் 30.10.1995 இல் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இப்பாடசாலை தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்ததுடன் இப்பாடசாலையின் செயற்பாடுகள் செயலிழந்தன. 1995 இல் செயலிழந்த இப் பாடசாலை இன்னும் மீண்டும் திறக்கப் படவில்லை.

-மலர்க்குழு

◆◆◆◆◆◆◆◆

# யா/புங்குடுதீவு சேர் துரைச்சாமி வித்தியாலயம்

ஈழ நாட்டின் வடபாகத்தில் உள்ள தீவுகளில் கேந்திர ஸ்தானமாக விளங்கி வருவது புங்குடுதீவு என்பதை யாவரும் அறிவர். இத்தீவகம் உள்ளூராட்சி மன்ற நிர்வாகத்தில் பன்னிரண்டு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு உள்ளது. இவ்வட்டாரங்களில் ஒன்றான நான்காம் வட்டாரத்திலே ஒரு சைவப் பாடசாலை வேண்டுமென்று மக்கள் ஆவல் கொண்ட நேரத்திலே சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்கு நாவலர் காட்டிய வழியிலே நின்று உழைத்த சைவ வித்தியாவிருத்திச் சங்க பிரதம நிர்வாகஸ்தர் உயர்திரு சு.இராசரெத்தினம் அவர்கள் அக்காலத்திலே பாராளுமன்ற சபாநாயகராக இருந்த சேர்.வை.துரைச்சாமி அவர்களோடும், இவ்வட்டார மக்களோடும் கலந்துரையாடி இப்பாடசாலையைக் கட்டத் தீர்மானித்தார்கள். கட்டிடம் கட்டுவதற்கு முடவன்தோட்டம் என்னும் காணியை திரு.சு. செல்லத்துரை ஆசிரியர் பெருமுயற்சி எடுத்துத் தமது தந்தையாரைக் கொண்டு சைவ வித்தியா விருத்திச் சங்கத்திற்கு 11.09.1939 ஆம் ஆண்டு நன்கொடையாக வழங்குவித்தார். பெற்றோரின் பெருமுயற்சியால் 1400 சதுரஅடி கொண்ட கட்டிடம் கட்டப்பட்டது.

13.11.1939 ஆம் ஆண்டில் சைவ வித்தியா விருத்திச் சங்க முகாமைத்துவத்தின் கீழ் திரு.சி. கனகசுந்தரம் அதிபராகவும், திரு.தி.சதாசிவம், திரு.ம.கைலாயபிள்ளை ஆகியோர் உதவி ஆசிரியர்களாகவும் நியமனம் பெற்றுப் பாடசாலையை நடாத்த ஆரம்பித்தார்கள். 1941 ஆம் ஆண்டு திரு. S.கதிரவேலு அவர்களும், 1943 ஆம் ஆண்டு திரு.வ.முத்துலிங்கம் அவர்களும் அதிபராக இருந்து சிறப்பாகச் செயற்பட்டுள்ளனர். திரு.சு.இராசரெத்தினம் அவர்களின் விடா முயற்சியாலும், திரு.வை.துரைச்சாமி அவர்களின் பேருதவியாலும் 01.09.1943 ஆம் ஆண்டில் இப்பாடசாலை பதிவு செய்யப்பட்ட பாடசாலையாக அரசாங்க வர்த்தமானிப் பிரசுரம் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. இப்பெருமையால் இப் பாடசாலைக்கு சேர்.துரைச்சாமி வித்தியாசாலை எனப்பெயரும் சூட்டப்பட்டது. 01.01.1944 ஆம் ஆண்டில் திரு.ஆ.சுப்பிரமணியம் அவர்கள் அதிபராக நியமனம் பெற்றார். இக்காலத்தில் இப்பாடசாலை ஏழு ஆசிரியர்களைக் கொண்ட முதலாந் தர ஆரம்ப பாடசாலையாகத் திகழ்ந்தது.

01.09.1952 இல் திரு.சு.சபாரெத்தினம் அவர்கள் அதிபராக நியமனம் பெற்றுச் சிறப்பாக நடாத்தியுள்ளார். 01.01.1963 தொடக்கம் திரு.வை.குமாரசாமி அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இக்காலப்பகுதியில் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றகத் தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் இப்பாடசாலையும் 01.01.1963 இல் அரசாங்கத்தால் கையேற்கப்பட்டது. 19.08.1964 இல் திரு.ம.சி.பொன்னம்பலம் அவர்கள் அதிபராக கடமையாற்றியுள்ளார். இவரைத் தொடர்ந்து 01.01.1965 இலிருந்து திரு.யோ.செல்வராசா அவர்களும், 01.01.1966 இலிருந்து திரு.வை. குமாரசுவாமி அவர்களும் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர்.

இக்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.வ.நவரெத்தினம் அவர்கள் இப் பாடசாலைக்குச் செய்த சேவையை எம்மால் என்றும் மறக்க முடியாது. 1400 சதுர அடி கொண்ட கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்கு உதவியுள்ளார். ஆசிரியர்களின் உதவியுடன் 200 சதுர அடி மேலதிகமாக சேர்த்து இக்கட்டிடம் 1600 சதுர அடிக் கட்டிடமாகக் கட்டப்பட்டது. இக்கட்டிடத்திற்கான அத்திவாரக்கல் கிராமசபை உப தலைவரும், வட்டார உறுப்பினருமாகிய திரு.பெ. கார்த்திகேசு அவர்களால் நாட்டி வைத்தார்கள். அன்றைய ஆசிரியர் பற்றாக்குறையையும் தீர்த்து வைத்தவர் திரு.வ.நவரெத்தினம் அவர்களேயாவார்.

இக்காலத்திலேயே இவ்வித்தியாலயம் கனிஷ்ட வித்தியாலயமாக மாற்றப்பட்டது. 01.01.1968 இல் திரு.செ.இலகுப்பிள்ளை அவர்களும், 15.07.1968 இல் திரு.க.தர்மலிங்கம் அவர்களும், 01.01.1969 இல் மீண்டும் திரு.செ. இலகுப்பிள்ளை அவர்களும், 01.03.1969 இல் திரு.ஆ.செல்லத்துரை அவர்களும் 01.01.1971 தொடக்கம் திரு.சோ.பொன்னம்பலம் அவர்களும் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர். மீண்டும் 01.08.1971 இலிருந்து திரு.செ.இலகுப்பிள்ளை அவர்கள் அதிபராக இருந்துள்ளார். இவரைத் தொடர்ந்து திருமதி.சண்முகலிங்கம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இக்காலப் பகுதியில் இப்பாடசாலையில் 127 மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர்.

இராணுவ நடவடிக்கை காரணமாக 17.10.1991 இல் யாழ்நகருக்கு இடம் பெயர்ந்த இப்பாடசாலை யாழ்நகரில் சிறிது காலம் யாழ்-பெரியபுலம் மகா வித்தியாலயத்திலும் பின்னர் யாழ்-கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் ஏனைய பாடசாலகளுடன் மாலை நேரப் பாடசாலையாக சேர்ந்து இயங்கியுள்ளது. பின்னர் இடம் பெயர்ந்த புங்குடுதீவுப் பாடசாலைகள் தங்களது கற்பித்தல் செயற்பாடுகளை காலை நேரத்திற்கு மாற்றி அமைத்தபோது இப்பாடசாலை யாழ்-இந்து மகளிர் கல்லூரி விடுதிக் கட்டிடத்தில் இறுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம், புங்குடுதீவு இராசராஜேஸ்வரி வித்தியாலயம், அரியநாயகம் புலம் வித்தியாலயம் ஆகியவற்றுடன் சேர்ந்து இயங்கியுள்ளது. பின்னர் 30.10.1995 இல் இராணுவ நடவடிக்கை காரணமாக தென்மராட்சி நோக்கிய இடப்பெயர்வுடன் செயலிழந்த இப்பாடசாலை இன்று வரை மீண்டும் ஆரம்பிக்கப் படவில்லை.

-மலர்க்குழு

♦♦♦♦♦♦♦♦♦♦

## சுதந்திரச் சிலை

நியூயோர்க் துறைமுகத்தை ஒட்டி லிபர்ட்டி ஐலண்ட் என்னும் சிறிய தீவு ஒன்று உள்ளது. அதில் தான் பிரமாண்டமான சுதந்திரச் சிலை நிர்மாணிக்கப் பட்டுள்ளது. அது 10 தளங்களை அடித்தளமாய்க் கொண்டது. இதன் உயரம் 152 அடி. அச்சிலை விண்ணளாவிய தோற்றத்தோடு, ஒரு கையில் தீப்பந்தத்தையும், மறு கையில் சட்டப் புத்தகத்தையும் ஏந்திக் கொண்டு நிற்கிறது. அச்சுதந்திரச் சிலை பல கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பாலிருந்தும் பார்க்கக் கூடிய கம்பீரமான தோற்றத்தைக் கொண்டது. லிபர்ட்டி சிலை என்று வழங்கப்படும் அந்தச் சிலை முற்றிலும் செப்புத் தகடுகளால் செய்யப்பட்டதாகும். அதன் மொத்த எடை 225 தொன்களாகும். இச்சிலையை பிரான்ஸ் அரசு 1886 இல் அமெரிக்காவுக்கு தனது நட்பின் அடையாளப் பரிசாக செய்தளித்தது. இச்சிலை அதே ஆண்டில் அமெரிக்க ஜனாதிபதி குரோவர் கிளீவ்லாண்ட் அவர்களால் நியூயோர் நகர லிபர்ட்டி தீவில் திறந்து வைக்கப்பட்டது. இச்சிலையின் இடக்கரத்தில் உள்ள சட்ட நூலின் முகப்பில் "1776 யூலை 4" என பொறிக்கப்பட்டுள்ளது. இத்திகதியில் தான் அமெரிக்கா சுதந்திரம் பெற்றது.

# யா/புங்குடுதீவு ஸ்ரீ பராசக்தி வித்தியாலயம்

இப்பாடசாலை 1910 இல் புங்குடுதீவு குறிகாட்டுவான், நடுவுத்துருத்தி ஆகிய பகுதி மாணவர்களின் கல்விக்காக பெரியார் திரு.வ.பசுபதிப்பிள்ளை அவர்களால் குறிகாட்டுவான் திரு.மா.நாகலிங்கம் அவர்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையை அமைப்ப தற்காக அரசின் அனுமதியை திரு.மா.நாகலிங்கம் அவர்கள் அவரின் நண்பரான உயர்திரு. S.K.லோட்டன் அவர்கள் மூலம் பெற்றுக் கொடுத்துள்ளார். திரு.S.K.லோட்டன் அவர்களே இப்பாடசாலையின் முதல் முகாமையாளராகவும் இருந்துள்ளார். இவரைத் தொடர்ந்து பாடசாலையின் முகாமையாளராக பெரியார் வ.பசுபதிப்பிள்ளை அவர்கள் இருந்துள்ளார். இப்பாடசாலையின் முதல் அதிபராக திரு.வ.சுப்பிரமணியம் அவர்கள் கடமையாற்றியுள்ளார்.

இப்பாடசாலை 1910 தொடக்கம் 31.12.1956 வரை குறிகாட்டுவானில் இயங்கியுள்ளது. திரு.வ.சுப்பிரமணியம் அவர்களைத் தொடர்ந்து திரு.நா.தில்லையம்பலம், திரு.ந.அ.தேவசகாயம், புலவர் இ.இளையப்பாபிள்ளை, திரு.ஆ.செல்லத் துரை ஆகியோர் அதிபர்களாக இருந்துள்ளனர். திரு.ஆ.செல்லத்துரை அவர்கள் காலத்திலேயே இப்பாடசாலை முனையுப்புலத்திற்கு இடம் மாற்றப்பட்டது.

01.01.1957 இல் முனையுப்புலத்திற்கு மாற்றப்பட்ட இப்பாடசாலை 31.12.1967 வரை முனையுப்புலத்திலேயே இயங்கியுள்ளது. இப் பாடசாலை அரசு சுவீகரிப்புக் கட்டளைச் சட்டப்படி 03.04.1963 இல் அரசுடமையாக்கப்பட்டது. மீண்டும் இப்பாடசாலை புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக் கழகம், பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் முயற்சிகளினால் 01.01.1968 இல் சங்கத்தா கேணியில் அமைக்கப்பட்ட தற்காலிக கட்டிடத்திற்கு இடம் மாற்றப்பட்டது. இம்முயற்சிக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.வ. நவரெத்தினம் அவர்களும், அன்றைய வட்டாரக் கல்வி அதிகாரி எம்.ஜே.சீமான்பிள்ளை அவர்களும் பேருதவி புரிந்தனர். இப்பாடசாலைக்கு 1967 இல் வடமாநில அரசாங்க அதிபர் அவர்களால் 3 ரூட் 26 பேர்ச் காணி வழங்கப்பட்டது.

இவரைத் தொடர்ந்து 01.03.1969 தொடக்கம் 08.09.1970 வரை திரு.சு.சுப்பிரமணியம் அவர்களும் 09.09.1970 தொடக்கம் 01.08.1971 வரை திருமதி.சி.நடராசா அவர்களும், 05.08.1971 தொடக்கம் 02.01.1972 வரை திரு.நா.சோமசுந்தரம் அவர்களும், 03.01.1972 தொடக்கம் 31.08.1973 வரை திரு.சோ.சுப்பிரமணியம் அவர்களும் அதிபர்களாகக் கடமையாற்றி உள்ளனர். திரு.சோ.சுப்பிரமணியம் அவர்களின் காலத்திலேயே ஸ்தாபகர் உயர்திரு வ.பசுபதிப்பிள்ளை அவர்களின் நினைவாக அவரது மைந்தன் சட்டத்தரணி ப.கதிரவேலு அவர்கள் வழங்கிய கட்டிடப் (ரூபா 15,000) பொருட்களினாலும், பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட நிதி உதவியினாலும் பாடசாலைக்கு நிரந்தரக் கட்டிடம அமைக்கப்பட்டது. இம்முயற்சிக்கு பூரண ஒத்து ழைப்பு வழங்கிய திரு.க.நல்லதம்பி (செயலாளர், பெற்றார் ஆசிரியர் சங்கம்) திரு.க.விசுவலிங்கம் (பொருளாளர்,பெ.ஆ.சங்கம்) திரு.கு.நாகமுத்து. திரு.சு.திருநாவுக்கரசு, திரு.வே.க.சுப்பிரமணியம் திரு.ச.கந்தப்பிள்ளை, திருமதி.ந.மகேஸ்வரி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இவரைத் தொடர்ந்து 01.09.1973 இலிருந்து 1976 வரை பாடசாடலை அதிபராக திரு.சு.யோ. பூராசா அவர்கள் கடமையாற்றி உள்ளார். இவரின் பின்னர் திரு.சி.வரராசசிங்கம், திரு.ஐ. சண்முகநாதன், திரு.கா.திருநாவுக்கரசு ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றி உள்ளனர். 17.10.1991 இல் தீவகத்தில் மேற்கொள்ளப்பட்ட

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த இப்பாடசாடலை யாழ்நகரில் சிறிது காலம் ஏனைய பாடசாலை களுடன் சேர்ந்து இயங்கியுள்ளது. பின்னர் இப்பாடசாலையின் அதிபர் திரு.கா.திருநாவுக்கரசு அவர்கள் யா/ ஆனைக்கோட்டை வைத்திலிங்கம் வித்தியாலய அதிபருடன் தொடர்பு கொண்டு இப்பாடசாலையை ஆனைக்கோட்டை வைத்திலிங்கம் வித்தியால யத்துடன் காலை நேரப்பாடசாலையாக இணைத்துக் கொண்டார். மேற்படி பாடசாலை அதிபர் 1992 இல் மலையகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதுடன் செயலிழந்த இப்பாடசாலை இன்று வரை மீளத்திறக்கப்படவில்லை.

-மலர்க்குழு

♦♦♦♦♦♦♦♦♦♦♦

## புங்குடுதீவின் சனத்தொகை

| நூலாசிரியர்கள் | ஆண்டு | மக்கள் |
|---|---|---|
| குவைரோஸ் என்பவரின் கணிப்பு | 17ம் நூற்றாண்டின் பிற்பகுதி | 800 |
| போல்டயஸ் | 1658 - 1665 | 800 |
| சைமன் காசிச்செட்டி | 1834 | 2,415 |
| இலங்கை குடிசனமதிப்பு | 1824 | 1,802 |
| | 1871 | 3,966 |
| | 1881 | 3,499 |
| | 1891 | 4,098 |
| | 1901 | 5,201 |
| | 1911 | 5,188 |
| | 1921 | 5,888 |
| | 1946 | 9,149 |
| | 1953 | 9,773 |
| | 1963 | 12,028 |
| | 1971 | 13,766 |
| | 1981 | 14,622 |
| | 1990 | 15,634 |
| இடப்பெயர்வின் பின் ...................... | 1991 | 857 |
| | 2002 | 2,582 |

ஆதாரம்: "தீவகம் பல்துறை நோக்கு"
பேராசிரியர்-- கா.குகபாலன்.

# யா/புங்குடுதீவு குறிகாட்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம்

எதைப் பெற்றாலும் பெறாவிட்டாலும் அறிவைப் பெறவேண்டும். அதற்கு வழி கல்வி. "கற்றனைத் தூறும் கல்வி" என்பது உண்மை. இந்த உண்மையை நன்கு உணர்ந்த பெருமக்களால் உருவாக்கப்பட்ட கல்விக்கூடம் தான் புங்குடுதீவு குறிகாட்டுவான் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம்.

அமரர்வ.பசுபதிப்பிள்ளையினால் குறிகாட்டு வானில் 1910 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஸ்ரீ பராசக்தி வித்தியாசாலை 1956 ஆம் ஆண்டில் குறிகாட்டுவான் கிராமத்திற்கு வெளியே இடமாற்றம் செய்யப்பட்டது. இதனால் இக்கிராம மக்கள் மத்தியில் பெரும் புயலொன்று மெல்லென வீசி மறைந்தது. ஸ்ரீ பராசக்தி வித்தியாசாலைக்குப் பதிலாகப் புதியதோர் கல்விக் கூடம் இங்கு தோன்ற வேண்டுமென மக்கள் ஒருமித்துச் செயற்பட்டனர். இவ்வேளையில்தான் குறிகாட்டுவான் மக்களின் குறை தீர்க்க முன்வந்தார் அமரர் வீ.ஏ.கந்தையா அவர்கள். தீவுப்பகுதியின் பிரதிநிதியாகப் பாராளு மன்றத்திற்குத் தெரிவு பெற்றுச் சென்றதும் குறிகாட்டுவான் வாழ் குழந்தைகளின் குறை தீர்க்க, அவர் தம் அறிவுக் கண்ணைத் திறக்க வழி வகுப்பேன் என அவர் வாக்குறுதி அளித்தார். அவரது வாக்குறுதியின் மீது கொண்ட பற்றினால் உந்தப்பட்ட திரு.நாகநாதி கந்தையா, திரு.விசுவர் கணபதிப்பிள்ளை ஆகியோரும் மற்றும் பொதுமக்களும் ஒன்றிணைந்து குறிகாட்டுவான் தமிழ் வித்தியாலயத்தை உருவாக்கினர். அதற்கெனப் பத்துப் பரப்புக் காணியையும் மக்கள் நன்கொடையாக வழங்கினர். இவர்களது கடும் உழைப்பினால் உருவாக்கப்பட்டதே குறிகாட்டுவான் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயமாகும்.

1957 ஆம் ஆண்டு விஜயதசமி தினம் குறிகாட்டுவான் மக்களால் என்றும் மறக்க முடியாத பொன்னாள். இந்நன்னாளில் தான் அமரர் வீ.ஏ. கந்தையா அவர்கள் இவ்வித்தியாலயத்தைத் திறந்து வைத்தார்கள். முதுபெரும் தமிழாசிரியர் திரு.நா.தில்லையம்பலம் அவர்கள் மாணவர்களுக்கு அன்று வித்தியாரம்பம் செய்து வைத்தார்கள். இதை தொடர்ந்து அமரர்.சு.ந.பிரான்சிஸ் சேவியர் அவர்களின் பெருமுயற்சியின் பேறாகத் திரு.சு.யோ. பூராசா, செல்வி மங்கையர்க்கரசி ஆகியோர் ஊதியம் எதுவும் பெறாது இப்பாடசாலையில் மாணவர்களுக்குக் கல்வி போதித்து வந்தனர். அமரர் வீ.ஏ.கந்தையாவின் அயரா முயற்சியினால் 08.10.1958 இல் இவ்வித்தியாலயத்தை அரசு பொறுப்பேற்றுக் கொண்டது. இதன் பின்னர் இப்பாடசாலையின் வளர்ச்சி துரிதமடைந்தது.

திரு.நா.நடராசா, திருமதி.சி.நடராசா ஆகியோர் இவ்வித்தியாலயத்தின் அதிபர்களாகக் கடமை யாற்றிய காலத்தில் கல்வித்துறையில் மாணவர்கள் முன்னணியிற் திகழ்ந்துள்ளனர். திரு.சோ. சேனாதிராசா அவர்கள் அதிபரானதும் இவ் வித்தியாலயத்தின் வரலாற்றில் புதியதோர் அத்தியாயம் உருவாக்கப்பட்டது. அதாவது இவரது சேவைக் காலத்தில் தான் சுமார் 15,000 ரூபா செலவில் புதியதோர் கட்டிடமொன்று கல்விப் பகுதியினரால் இங்கு அமைக்கப்பட்டது. இதன் மூலம் இங்கு கல்வி பயிலும் மாணவர்களுக்குப் போதிய இடவசதி கிடைக்கப் பெற்றது. இவரின் பின்னர் திரு.க.காமாட்சிசுந்தரம் அவர்கள் இவ்வித்தியாலயத்தின் அதிபராக இருந்து சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

1975 இல் 53 பிள்ளைகள் இவ்வித்தி யாலயத்தில் கல்வி பயின்றுள்ளனர். அதிபர் உட்பட இருவர் மட்டுமே இங்கு ஆசிரியர்களாகப் பணியாற்றியுள்ளனர். புதிய கல்வித் திட்டத்தின் அடிப்படையில் முதலாம், இரண்டாம் வகுப்புகளில் மாணவர்கள் செயல் மூலம் கற்றற்குரிய வசதிகள் பல இங்கு செய்யப்பட்டன. இதற்காக பல்வேறு

உபகரணங்கள் உருவாக்கப்பட்டன.

மாணவர்களிடையே சமய நம்பிக்கையையும் தெய்வ பக்தியையும் வளர்க்கும் வகையில் வெள்ளிக் கிழமைகள் தோறும் மாணவர்கள் இங்கு உள்ள ஸ்ரீ மனோன்மணியம்மன் ஆலயத்திற்குச் சென்று வழிபடுவதற்கான வசதிகள் செய்யப் பட்டன. இவரைத் தொடர்ந்து திரு.சி.இரத்தின சபாபதி, திரு.த.தவராசா ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றி உள்ளனர். திரு.த.தவராசா அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் பாடசாலை சகல துறைகளிலும் வளர்ச்சி கண்டது. பாடசாலை மாணவர்கள் கொத்தணி மட்ட விளையாட்டுப் போட்டிகளிலும், தமிழ்தினப் போட்டிகளிலும் பங்குபற்றிச் சான்றிதழ்களைப் பெற்றனர். இக்காலப்பகுதியில் இப்பாடசாலையில் 35 மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர்.

17.10.1991 இல் தீவுப்பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக ஏனைய பாடசாலைகளைப் போன்று இப்பாடசாலையும் யாழ்நகருக்கு இடம் பெயர்ந்தது. இடம் பெயர்ந்த இப்பாடசாலை யாழ்நகரில் இடம் பெயர்ந்த ஏனைய பாடசாலைகளுடன் இணைந்து சிறிது காலம் யாழ்-பெரியபுலம் மகா வித்தியாலயத்திலும், பின்னர் சிறிது காலம் யாழ்-கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் மாலை நேரப்பாடசாலையாக இயங்கி உள்ளது. பின்னர் புங்குடுதீவுப் பாடசாலைகள் காலை நேரப்பாடசாலையாக மாற்றப்பட்டபோது தனியார் கல்வி நிறுவனமான ஆனைப்பந்தி உயர் கலைக்கல்லூரியில் புங்குடுதீவு சித்திவிநாயகர் மகா வித்தியாலயம், புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம், புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம் ஆகியவற்றுடன் இணைந்து சிறப்பாக இயங்கியுள்ளது. இக்காலப்பகுதியில் இங்கு 11 மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர். திரு.த.தவராசா அவர்கள் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். 30.10.1995 இல் ஏற்பட்ட தென்மராட்சி நோக்கிய இடப்பெயர்வின் பின்னர் செயலிழந்த இப்பாடசாலை இன்னும் மீண்டும் திறக்கப்படவில்லை. பாடசாலை அதிபர் திரு.த.தவராசா அவர்கள் வேலணைக் கல்விக் கோட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளார்.

-மலர்க்குழு

◆◆◆◆◆◆◆◆◆◆

## அல் நினோ (El Nino)

இலையுதிர் காலம், இலைதுளிர் காலம், மாரி காலம், கோடை காலம் போன்று அல்நினோவும் ஒரு காலநிலை மாற்றமாகும். ஆனால் இம்மாற்றம் மற்றைய சாதாரண மாற்றங்களைப் போன்று ஒரு சீரான கால இடைவெளியில் நடைபெறுவதில்லை. பொதுவாக இரண்டிலிருந்து ஏழு வருட இடைவெளியில் எப்போதாவது தோன்றும். இது ஒன்றிலிருந்து இரண்டு வருடங்கள் வரை நீடிக்கும். ஒரே கால கட்டத்தில் உலகின் ஒவ்வொரு மூலையிலும் வெவ்வேறு வடிவங்களில் ( வரட்சி, வெள்ளப் பெருக்கு, சூறாவளி, பஞ்சம், பனிப்புயல்) திடீரெனத் தோன்றி உலகின் காலநிலைச் சமநிலையை சீர்குலைக்கும் இயற்கையின் ஒரு தோற்றப்பாடே அல்நினோவாகும். இது எப்போது தோன்றும், எப்படி தோன்றும் என்பது வானிலை ஆய்வாளருக்கே ஒரு புரியாத புதிராக உள்ளது.

# இடம் பெயர்ந்த புங்குடுதீவுப் பாடசாலைகள்

## - ஓர் மீளாய்வு -

-கதிரவன்

1991 ஐப்பசி 17ந் நாள் எம்மக்களால் என்றுமே மறக்க முடியாத நாள். இலங்கை இராணுவம் பெருமெடுப்பில் தீவக மக்களை ஆக்கிரமிக்கப் புறப்பட்ட நாள். ஊர்காவற்றுறை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வேலணை நோக்கி தமது பரிவாரங்களுடன் நகரத் தொடங்கிய நாள். இச்செய்தி கேட்டு புங்குடுதீவு, வேலணைத்தீவு, மண்டைதீவு மக்கள் தங்கள் உடைமைகளை விட்டு கையில் கிடைத்தவற்றுடன் யாழ்நகரை நோக்கிக் கால்நடையாக இடம் பெயர்ந்த நாள்.

1991 ஐப்பசி 17ந் நாள் காலை இலங்கை இராணுவம் ஊர்காவற்றுறையில் இருந்து வேலணை நோக்கி நகரத் தொடங்குகின்றது. பாரிய குண்டுச் சத்தங்களும், யுத்தவிமானங்களின் இரைச்சல்களும் இச்செய்தியை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தன. ஒருகணம் செய்வதறியாது திகைத்த மக்கள் மறுகணம் கையில் கிடைத்தவற்றுடன் தம் குடும்பத்தவர்களுடன் ஓடத் தொடங்கினார்கள். ஏன் இந்த ஓட்டம்? புங்குடுதீவையும், யாழ்நகரையும் இணைக்கும் தரைப்பாதை வேலணையூடாகவே யாழ்நகருக்குச் செல்கின்றது. இராணுவம் வேலணையைக் கைப்பற்றி விட்டால்? அவர்களின் நிலை! அதுதான் இந்த அவசரம்.

இதன் விளைவாக புங்குடுதீவு, வேலணைத் தீவு, மண்டைதீவு ஆகியவற்றிலிருந்து 95 சத வீதமான மக்கள் யாழ்நகருக்கு இடம் பெயர்ந்தனர். இதன் விளைவாக இத்தீவுகளிலிருந்த பாடசாலை களும், கல்விக் கோட்டங்களும் யாழ்நகருக்கு இடம் பெயர்ந்தது. இந்த வகையில் புங்குடுதீவில் கல்விப் பணி ஆற்றிக் கொண்டிருந்த 15 பாடசாலைகளும் யாழ்நகருக்கு இடம் பெயர்ந்தது. ஏற்கனவே அடிப்படை வசதிகள் மிகவும் குறைந்த நிலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த எம்மாணவர்கள் புதிய சூழலில் அடிப்படை வசதி களற்ற நிலையில் தமது கல்வியைத் தொடர வேண்டியதோர் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

எம்மாணவர்களின் எதிர்காலக் கல்விச் செயற்பாடுகள் பற்றி ஆராய்வதற்காக இடம் பெயர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அலுவலர்கள் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் கூடினர். தீவகப் பாடசாலைகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் வரை தற்காலிகமாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து எம் மாணவர்களுக்கான கல்விப் பணியைத் தொடர்வ தென்ற முடிவினை எடுத்தனர். இச்சந்தர்ப்பத்தில் வேலணை கோட்டக் கல்வி அதிகாரி திரு.சி. புலேந்திரன், திரு.த.சிவபாலன் (F.A), திரு.செ. மெற்றாஸ்மயில் (O.A), காலஞ்சென்ற திரு.பொ. சபாரெத்தினம் ஆசிரியர் ஆகியோரின் பணிகள் எங்களால் என்றும் மறக்க முடியாதவை.

புங்குடுதீவு பாடசாலை அதிபர்கள் யாழ்-சன்மார்க்க மகா வித்தியாலய அதிபரைச் சந்தித்ததன் விளைவாக புங்குடுதீவு பாடசாலை களை தமது பாடசாலையில் மாலை நேரம் தற்காலிகமாக இயங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்து உதவினார். புங்குடுதீவு கொத்தணி அதிபர் திருக.பேரம்பலம் அவர்களின் தலைமையில் எமது பாடசாலைகள் யாழ்-சன்மார்க்க மகா வித்தியால யத்தில் மாலை நேரப் பாடசாலையாகச் சில நாட்கள் இயங்கியது. சொந்த உடமைகளை இழந்த நிலையில் திடீர் இடப்பெயர்வுக்கு உள்ளாக்கப்பட்ட எம்மக்களுக்கு மீண்டும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப நீண்ட நாட்கள் எடுத்தது. இதன் விளைவு பாடசாலைக்கு மாணவர்களின் வரவு மிகக் குறைவாகவே இருந்தது. இதே நேரம் இப்பாடசாலையின் ஒரு பகுதியில் தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினரும் தங்கியிருந்தனர்.

இதனால் எமது பாடசாலைகள் தமது கற்பித்தல் செயற்பாடுகளை யாழ்--பெரியபுலம் மகா வித்தியாலயத்துக்கு மாற்றிக் கொண்டது. இப் பாடசாலை அதிபர் திரு.கனகசிங்கம் அவர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி தமது பாடசாலையில் மாலை நேரப் பாடசாலையாக எமது பாடசாலைகள் இயங்க வழி செய்து தந்தார். யாழ்-பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் சிறிது காலம் இயங்கிய எமது பாடசாலைகளை பல்வேறு வசதியீனங்கள் காரணமாக வேறோரிடத்துக்கு மாற்ற வேண்டிய தேவை பாடசாலைச் சமூகத்தினருக்கு ஏற்பட்டது. பாடசாலைச் சமூகத்தினர் யாழ்-கல்வித்திணைக் களத்துடனும், யாழ்-இந்து மகளிர் கல்லூரி அதிபருடனும் தொடர்பு கொண்டதன் விளைவாக எமது பாடசாலைகளின் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையிலான வகுப்புக்களை யாழ்-இந்து மகளிர் கல்லூரியில் மாலை நேரப்பாடசாலையாக இயங்குவதற்கு வழியேற்படுத்தப்பட்டது.

இதேசமயம் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையிலான வகுப்புக்களை யாழ்-கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் இயங்கு வதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டது. யாழ்-கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் திரு.சிவராசா அவர்கள் புங்குடுதீவுப் பாடசாலை களின் ஆரம்பப் பிரிவுகளை தமது பாடசாலையில் மாலை நேரப்பாடசாலையாக இயங்குவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி உதவியுள்ளார். ஒன்றிணைக் கப்பட்ட புங்குடுதீவுப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகளுக்கு திரு.செ.தனபாலசிங்கம் அதிபர் அவர்கள் பொறுப்பாக இருந்துள்ளார். யாழ்-இந்து மகளிர் கல்லூரியில் மாலை நேரப்பாடசாலையாக இயங்குவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிய கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசா அவர்கள் இவ்விடத்தில் நினைவில் கொள்ளப்பட வேண்டியவர். யாழ்-இந்து மகளிர் கல்லூரியில் இயங்கிய காலத்தில் மாணவர்களின் வரவில் படிப்படியாக அதிகரிப்பு ஏற்பட்டது. பாடசாலைகள் இந்து மகளிர் கல்லூரியில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருந்த வேளையில் மற்றைய பாடசாலைகளில் ஏற்பட்டது போன்ற வசதியீனங்கள் இங்கும் எமது பாடசாலைகளுக்கு ஏற்பட்டன.

மேலும் தொடர்ந்து எமது பாடசாலைகளை மாலை நேரப்பாடசாலையாக நடாத்துவதால் கற்றல் -கற்பித்தல் செயற்பாடுகள் பூரணத்துவமாக அமையாது என்ற எண்ணமும் எம்பாடசாலைச் சமூகத்தினருக்கு ஏற்பட்டது. இதனால் மீண்டும் ஒரு முறை பாடசாலைச் சமூகத்தனர் எம்மாணவர் களின் கல்விச் செயற்பாடுகள் பற்றி கூடி ஆராய்ந்தனர். இதன் விளைவாக எமது பாடசாலைகளை காலை நேரப்பாடசலையாக இயங்க வைப்பதற்கு ஆவன செய்வதெனவும், இதற்கான இடங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தனியார் கல்வி நிலையங்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதெனவும் முடிவெடுக்கப்பட்டது. இதனடிப்படையில் பாடசாலை அதிபர்கள் தனியார் கல்வி நிலைய அதிபர்களைச் சந்தித்தனர். இச்சந்திப்புக்களின் மூலம் யாழ்-கந்தர்மடம் யூனிவேர்சல் கல்வி நிலைய அதிபர் திரு.க. ஐங்கரநேசன் அவர்களும், ஆனைப்பந்தி உயர் கலைக்கல்லூரி அதிபர் திரு.குழந்தைவேலு அவர்களும் முழுமனதுடன் தங்களது கல்வி நிலைய வகுப்பறைத் தொகுதிகளைத் தந்து உதவினர்.

புங்குடுதீவு மகா வித்தியாலயம், புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியா லயம் ஆகிய இரு பாடசாலைகளும் இணைந்து கந்தர்மடம் யூனிவேர்சல் கல்வி நிலையத்தின் ஒரு பகுதியில் காலை நேரப்பாடசாலையாக தம் கல்விப் பணியை ஆரம்பித்தது. இக்காலப் பகுதியில் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் திரு.க.பேரம்பலம், திரு.ந.தர்மபாலன் ஆகியோரும் றோமன் க.த.க.வித்தியாலயத்தில் திரு.ஐ. சண்முகநாதன் அவர்களும் அதிபராகக் கடமை யாற்றியுள்ளனர். புங்குடுதீவு மகா வித்தியாலயம் பிறவுண் வீதிக்கு இடம் மாற்றப்பட்டதுடன் அதிபருடன் மட்டும் இயங்கி வந்த றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியாலயம் செயலிழந்தது.

புங்குடுதீவு கணேச மகாவித்தியாலயம், சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், இறுப்பிட்டி மேற்கு அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம், இராசராஜேஸ்வரி வித்தியாலயம், சேர் துரைச்சுவாமி வித்தியாலயம், அரியநாயகம்புலம் வித்தியாலயம் ஆகிய ஆறு பாடசாலைகளும் இணைந்து கந்தர்மடம் யூனிவேர்சல் கல்வி நிலையத்தின் இன்னோர் பகுதியில் காலை நேரப்

பாடசாலையாக தமது பணியை ஆரம்பித்தன. இக்காலப்பகுதியில் கணேச மகா வித்தியாலயத்தில் திரு.கே.ரி.தர்மலிங்கம், திரு.செ. ஈஸ்வரமூர்த்தி ஆகியோரும், சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் செல்வி.ம.சுப்பிரமணியம், இறுப்பிட்டி மேற்கு அ.த.க.வித்தியாலயத்தில் திரு.சு.வீரசிங்கம், இராசராஜேஸ்வரி வித்தியாலயத்தில் திரு.செ.தனபாலசிங்கம் ஆகியோரும் அதிபர்களாகக் கடமையாற்றி உள்ளனர்.

புங்குடுதீவு சித்திவிநாயகர் மகா வித்தியாலயம், கமலாம்பிகை வித்தியாலயம், குறிகாட்டுவான் அ.த.க.வித்தியாலயம், திருநாவுக்கரசு வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளும் இணைந்து ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் காலை நேரப்பாடசாலையாக இயங்கத் தொடங்கியது. இக்காலப்பகுதியில் சித்திவிநாயகர் மகா வித்தியாலயத்தில் திரு.நா.தர்மலிங்கம், கமலாம்பிகை வித்தியாலயத்தில் திரு.மு.மகேந்திரன், குறிகாட்டுவான் அ.த.க.வித்தியாலயத்தில் திரு.த.தவராசா, திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் திருமதி.த. தியாகராசா ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றி உள்ளனர். இப்பாடசாலைகள் இராணுவ நடவடிக்கை காரணமாக தென்மராட்சிக்கு இடம் பெயரும் வரை தொடர்ந்து இத்தனியார் கல்வி நிலையத்தில் சிறப்பாக தங்களது கல்விச் செயற்பாடுகளை ஆற்றியுள்ளன.

புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் வித்தியாலய அதிபர் யாழ்-செட்டித்தெரு மெதடிஷ் தமிழ் கலவன் வித்தியாலய அதிபருடன் தொடர்பு கொண்டு தமது பாடசாலையை செட்டித்தெரு மெ.த.க.வித்தியாலயத்துடன் காலை நேரப்பாடசாலையாக இணைத்துக் கொண்டார். இப்பாடசாலையும் இராணுவ நடவடிக்கை காரணமாக மீண்டும் 30.10.1995 இல் இடம் பெயரும் வரை இதே பாடசாலையில் சிறப்பாகத் தம் கல்விப் பணியைச் செய்துள்ளது. புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம் இணைந்து செயற்படத் தொடங்கிய பின்னரே செட்டித்தெரு மெதடிஷ் த.க.வித்தியாலயம் என்றொரு பாடசாலை யாழ்நகரில் இருப்பது பலருக்குத் தெரிய வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலை வன்னிப் பெரு நிலப்பரப்பிற்கு இடம் பெயர்ந்த பின்னரும் இராமநாதபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து தம் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றுள்ளது. இக்காலப்பகுதியில் இப் பாடசாலையின் அதிபராக திரு.சு.யோ.பூராசா அவர்கள் கடமையாற்றி உள்ளார்.

புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயம் தென்மராட்சி கெற்பலி பண்டிதர் குடியிருப்பிற்கு இடம் மாற்றப்பட்டது. பண்டிதர் குடியிருப்பில் கல்வித் திணைக்களத்தின் உதவியுடன் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு அங்கு தமது கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்தது. தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்த ஒரு பகுதி மக்களுக்காக உருவாக்கப்பட்ட தற்காலிகக் குடியிருப்புத் திட்டம் ஒன்றில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலையில் புங்குடுதீவு, வேலணைத் தீவு, மண்டைதீவு ஆகியவற்றைச் சேர்ந்த 1026 க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர். இப்பாடசாலை 1992 இலிருந்து 1996 மாசி வரை தமது கல்விப் பணியை இதே இடத்தில் சிறப்பாகச் செய்துள்ளது. இப்பாடசாலையின் அதிபராக திரு.செ.சண்முகவடிவு அவர்கள் கடமையாற்றி உள்ளார். மீண்டும் 1996 இல் இராணுவத்தினரின் தென்மராட்சி மீதான இராணுவ நடவடிக்கை காரணமாகவும், இப்பாடசாலையின் அதிபர் திரு.செ.சண்முகவடிவு இடப்பெயர்வின் போது கிளாலிக் கடலில் துரதிஷ்டவசமாக மரணம் அடைந்தமையாலும் இப்பாடசாலையின் செயற்பாடுகள் செயலிழந்தன.

புங்குடுதீவு ஸ்ரீ பராசக்தி வித்தியாலய அதிபர் ஆனைக்கோட்டை வைத்திலிங்கம் வித்தியாலய அதிபருடன் தொடர்பு கொண்டு தமது பாடசாலையை ஆனைக்கோட்டை வைத்திலிங்கம் வித்தியாலயத்துடன் காலை நேரப்பாடசாலையாக இணைத்துக் கொண்டார். இக்காலப்பகுதியில் திரு.கா.திருநாவுக்கரசு அவர்கள் இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி உள்ளார். மேற்படி பாடசாலை அதிபர் மலையகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதுடன் இப்பாடசாலையின் செயற்பாடுகள் செயலிழந்தன.

யூனிவேர்சல் கல்வி நிலையத்தில் தொடர்ந்து

ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிய பாடசாலைகள் தங்களது கல்விச் செயற்பாடுகளில் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்கின. எல்லாவற்றிற்கும் மேலாக இடம் பெயர்ந்த பாடசாலைகள் இன்றோ அல்லது நாளையோ தங்கள் மண்ணிற்குத் திரும்புவோம் என்ற நம்பிக்கையும் இழந்தன. இந்நிலையில் இங்கு இயங்கிய பாடசாலைகள் ஒவ்வொன்றும் தனித்து இயங்குவதற்கான முடிவுகளை எடுத்தன.

இந்நிலையில் புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய பாடசாலை சமூகத்தினர் கல்வித் திணைக்களத்தின் உதவியுடன் யாழ்-இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் விடுதிக் கட்டிடத்தை பெற்றுக் கொண்டது. 1994 ஜனவரியில் இப்பாடசாலை தமது கல்விச் செயற்பாடுகளை இந்து மகளிர் கல்லூரி விடுதிக் கட்டிடத்திற்கு மாற்றிக் கொண்டது. இப்பாடசாலை 30.10.1995 இல் தென்மராட்சிக்கு இடம் பெயரும் வரை தமது கல்விப்பணியைச் சிறப்பாக ஆற்றியுள்ளது. இக்காலப்பகுதியில் இப்பாடசாலையின் அதிபராக செல்வி.ம.சுப்பிர மணியம் கடமையாற்றி உள்ளார். இறுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் வித்தியாலயம், இராசராஜேஸ்வரி வித்தியாலயம், சேர் துரைச்சாமி வித்தியாலயம், அரியநாயகம்புலம் வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளும் இணைந்து இந்து மகளிர் கல்லூரி விடுதிக் கட்டிடத்தின் இன்னோர் பகுதிக்கு தமது கல்விச் செயற்பாடுகளை மாற்றிக் கொண்டது. இப்பாடசாலைகளும் தென்மராட்சிக்கு இடம் பெயரும் வரை தமது கல்விப் பணியைச் சிறப்பாகச் செய்துள்ளது. இக்காலப்பகுதியில் இறுப்பிட்டி மேற்கு அ.மி.த.க.வித்தியாலய அதிபராக திரு.சு.வீரசிங்கம் அவர்களும், இராசராஜேஸ்வரி வித்தியாலய அதிபராக திரு.செ.தனபாலசிங்கம் அவர்களும் கடமையாற்றி உள்ளனர்.

புங்குடுதீவு கணேச மகா வித்தியாலய பாடசாலை சமூகத்தினர் கல்வித் திணைக் களத்துடன் தொடர்பு கொண்டு இயங்காதிருந்த யா-கதீஸா முஸ்லிம் மகா வித்தியாலயக் கட்டிடத் தொகுதியைப் பெற்றுக் கொண்டனர். இப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கமும், பெற்றோர்களும், இப்பாடசாலைக்குரிய தளபா டங்கள், ஏனைய உபகரணங்கள் ஆகியற்றைச் பெற்றுக் கொள்வதற்குரிய நிதியுதவியை வழங்கி உதவினர். இப்பாடசாலை 1994 இல் இக்கட்டிடத் தொகுதிக்கு தமது கல்விச் செயற்பாடுகளை மாற்றிக் கொண்டது. 1994 இலிருந்து 30.10.1995 இல் தென்மராட்சிக்கு இடம் பெயரும் வரை இப்பாடசாலை தமது கல்விப் பணியைச் சிறப்பாக ஆற்றியுள்ளது. இக்காலப்பகுதியில் திரு.செ. ஈஸ்வரமூர்த்தி, திரு.ச.சதாசிவம், திரு.ச. அமிர்தலிங்கம் ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றி உள்ளனர்.

புங்குடுதீவு மகா வித்தியாலய சமூகத்தினர் தமது பாடசாலையை அமைப்பதற்கு பிறவுண் வீதி நீராவியடியில் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்தனர். நிதியுதவி கோரி கல்வித் திணைக் களத்தை அணுகினர். ஆனால் எதிர்பார்த்த நிதியுதவி கல்வித் திணைக்களத்திலிருந்து கிடைக்கவில்லை. இதனால் அப்போதைய அரச அதிபராக இருந்த திரு.சி.மாணிக்கவாசகரை அணுகித் தமது கோரிக்கையை முன் வைத்தனர். அரச அதிபரின் தனிப்பட்ட முயற்சியினால் எதிர்பார்த்த நிதியுதவி கிடைத்தது. அரச நிதியுதவியுடனும், கல்வித் திணைக்கள அனுசரணையுடனும் இல. 81 பிறவுண் வீதியிலுள்ள தனியார் காணியில் தற்காலிக கொட்டகைகளில் வகுப்பறைகள் அழகுற அமைக்கபபட்டன. 1994.03.02 இல் இப்பாடசாலைக் கட்டிடத்தொகுதி அரச அதிபர் திரு.சி.மாணிக்கவாசகர் அவர்களி னாலேயே திறந்து வைக்கப்பட்டது. இப்பாடசாலைக் குரிய தளபாட தொகுதியில் ஒரு பகுதியை புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ.கூ.சங்கம் செய்து உதவியது. மற்றைய தொகுதி பாடசாலைப் பழைய மாணவர் சங்கத்தால் எம்மக்களிடமிருந்து பெறப்பட்ட நிதியுதவி மூலம் செய்யப்பட்டது. இப்பாடசாலை 1994.03.02 இலிருந்து 1995.10.30 இல் தென்மராட்சிக்கு இடம் பெயரும் வரை தனது கல்வி செயற்பாடுகளைச் சிறப்பாக ஆற்றியுள்ளது. இக்காலப்பகுதியில் திரு.ந.தர்மபாலன் அவர்கள் அதிபராகக் கடமையாற்றியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் எமது பாடசாலைகளின் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் அனைவராலும் பாராட்டப்படும் அளவிற்குச் சிறப்பாக அமைந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மாணவர்கள் தாங்கள் இடம் பெயர்ந்தவர்கள்

என்பதையே மறந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுமளவிற்கு எமது ஒவ்வொரு பாடசாலைகளும் தங்களது கல்விப் பணியைச் சிறப்பாகச் செய்து கொண்டிருந்த வேளையில் மீண்டும் ஓர் இராணுவ நடவடிக்கை. பலாலி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் யாழ்குடாநாட்டைக் கைப்பற்றும் நோக்கில் பாரிய இராணுவ நடவடிக்கையில் இறங்கினர். இதனால் யாழ்ப்பாண மக்களில் நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் தென்மராட்சிக்கும், வன்னிப் பெரு நிலப்பரப்பிற்கும் இடம் பெயர்ந்தனர். இந்த வகையில் எம்மக்களும் மீண்டும் ஓர் இடப்பெயர்வை எதிர் நோக்கினர். தங்கள் உடமைகளையும், தங்களால் கட்டி வளர்க்கப்பட்ட கல்விக் கூடங்களையும் கைவிட்டு தென்மராட்சி நோக்கி இடம் பெயர்ந்தனர். இடம் பெயர்ந்த எம்மவர்களில் ஒரு பகுதியினர் வன்னிப் பெரு நிலப்பரப்பைச் சென்றடைந்தனர்.

தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்த எமது பாடசாலைச் சமூகத்தனர் தமது எதிர் காலம் குறித்து ஆராய மட்டுவில் மகா வித்தியாலயத்தில் கூடினர். ஆனால் அவர்களால் தங்களது மாணவர்களை ஒன்று சேர்க்கவோ, மீண்டும் பாடசாலைகளை ஆரம்பிக்கவோ முடியவில்லை. இத்தகையதோர் நெருக்கடி நிலையிலும் புங்குடுதீவு மகா வித்தியாலயம் சாவகச்சேரி கச்சாய் அ.த.க. வித்தியாலயத்தில் மாலை நேரப் பாடசாலையாக 1996 ஜனவரியில் இருந்து 1996 ஏப்ரல் வரை இயங்கி உள்ளது. தென்மராட்சி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பின்னர் எமது பாடசாலைகள் 19.04.1996 இல் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பியது. ஆனால் வன்னிப் பெரு நிலப்பரப்பிற்கு இடம் பெயர்ந்த எம்மாணவர்களும், ஆசிரியர்களும் வன்னிப் பிரதேசப் பாடசாலைகளில் இணைக்கப்பட்டனர். ஆனால் புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் வித்தியாலயம் இராமநாதபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டு தனது கல்விப்பணியைத் தொடர்ந்துள்ளது.

யாழ்ப்பாணம் திரும்பிய புங்குடுதீவு மகா வித்தியாலயம், சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், கமலாம்பிகை வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளும் 05 வருடங்களின் பின்னர் தமது சொந்த மண்ணிற்குத் திரும்பி தமது சொந்தக் கட்டிடத் தொகுதிகளில் மீண்டும் தமது கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன. பின்னர் 1997 இல் கணேச மகா வித்தியாலயமும், 2000 இல் சித்திவிநாயகர் மகா வித்தியாலயமும் தமது கல்விச் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பித்துள்ளன. இப்பாடசாலைகளில் அதிபர்களாக முறையே திரு.க.தர்மகுணசிங்கம், திரு.நா. பஞ்சலிங்கம், திரு.ந.இராசதுரை, திரு.கு. சண்முகலிங்கம், திரு.ந.கலைநாதன் ஆகியோர் கடமையாற்றுகின்றனர். கீழே தரப்பட்டுள்ள அட்டவணை எமது பாடசாலைகள் இடம் பெயருவதற்கு முன்னரும், இடம் பெயர்ந்த பின்னரும் உள்ள நிலைமைகளைத் தெளிவாகக் காட்டுகின்றது. 1991 இல் புங்குடுதீவுப் பாடசாலைகள் இடம் பெயருவதற்கு முன்னர் புங்குடுதீவில் இயங்கி வந்த 15 பாடசாலைகளிலும் மொத்தமாக 3730 மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர். அதேசமயம் 127 ஆசிரியர்கள் கல்வி கற்பித்துள்ளனர். ஆனால் இன்று 05 பாடசாலை களில் மட்டுமே கல்விச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இப்பாடசாலைகளில் 876 மாணவர்களும், 49 ஆசிரியர்களுமே (13 தொண்டர் ஆசிரியர்கள் உட்பட) இன்று காணப்படுகின்றனர்.

தீவுப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பின்னர் புங்குடுதீவு, வேலணைத் தீவு, மண்டைதீவு ஆகியவற்றில் இடம் பெயராமல் தங்கியிருந்த மாணவர்களை ஒன்று சேர்த்து புங்குடுதீவு மகா வித்தியாலயக் கட்டிடத்தில் கல்வி கற்பிப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டது. தீவகப் பாடசாலைகளின் கல்வி நிர்வாகத்தைக் கவனிப்பதற்காக நெடுந்தீவில் கோட்டக் கல்வி அலுவலகம் அமைக்கப்பட்டது. கோட்டக் கல்வி அதிகாரியாக திரு.சின்னதம்பி அவர்கள் நியமிக்கப்பட்டார்.

இந்த வகையில் மூன்று தீவுகளிலும் இருந்து ஒன்று சேர்க்கப்பட்ட 90 மாணவர்களுடன் இப்பாடசாலையில் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இடம் பெயர முடியாமல் தங்கியிருந்த ஒரு சில ஆசிரியர்களும், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் சிலரும் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இடம் பெயர்ந்த புங்குடுதீவு மகா வித்தியாலயம் 17.06.1996 இல் மீண்டும் தனது சொந்த இடத்திற்குத் திரும்பியதும் இப்பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த

| இடம் பெயர்ந்த பாடசாலைகளின் மாணவர் விபரம்: 1991 - 2002 | | | | |
|---|---|---|---|---|
| இல: பாடசாலைகளின் பெயர் | தரம் | மாணவர் தொகை 1991-முன் | மாணவர் தொகை 1991-பின் | மாணவர் தொகை 2002 |
| 01. புங்குடுதீவு மகா வித்தியாலயம் | 1AB | 623 | 338 | 241 |
| 02. புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயம் | 2 | 397 | 260 | 102 |
| 03. புங்குடுதீவு சித்திவிநாயகர் மகா வித்தி. | 2 | 322 | 102 | 120 |
| 04. புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம் | 2 | 428 | 143 | 212 |
| 05. புங்குடுதீவு சண்முகநாதன் வித்தியாலயம் | 2 | 304 | 1,026 | ----- |
| 06. புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தி. | 2 | 448 | 188 | 201 |
| 07. புங்குடுதீவு றோமன் க.த.க.வித்தியாலயம் | 3 | 350 | 24 | ----- |
| 08. புங்குடுதீவு மேற்கு அ.மி.த.க.வித்தி. | 3 | 230 | 219 | ----- |
| 09. புங்குடுதீவு இறுப்பிட்டி அ.மி.த.க.வித்தி. | 3 | 143 | 58 | ----- |
| 10. புங்குடுதீவு சேர் துரைச்சாமி வித்தி. | 3 | 127 | 16 | ----- |
| 11. புங்குடுதீவு அரியநாயகம்புலம் வித்தி. | 3 | 45 | 16 | ----- |
| 12. புங்குடுதீவு இராசராஜேஸ்வரி வித்தி. | 3 | 131 | 22 | ----- |
| 13. புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தி. | 3 | 98 | 21 | ----- |
| 14. புங்குடுதீவு குறிகாட்டுவான் அ.த.க.வித்தி. | 3 | 35 | 11 | ----- |
| 15. புங்குடுதீவு பராசக்தி வித்தியாலயம் | 3 | 49 | 36 | ----- |
| மொத்தம் | | 3,730 | 2,480 | 876 |

ஏனைய தீவகப் பாடசாலைகளைச் சார்ந்த மாணவர்கள் தத்தமது சொந்தப் பாடசாலை களுக்குத் திரும்பினர். இக்காலப்பகுதியில் இப் பாடசாலையின் அதிபராக திரு.சொ.பகீரதன் அவர்கள் கடமையாற்றியுள்ளார்.

◆◆◆◆◆◆◆◆◆◆

## இடம் பெயர்ந்த பின்னர் மீண்டும் இயங்கும் பாடசாலைகள்

| பாடசாலைகளின் பெயர் | தோற்றம் |
|---|---|
| யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம் | 1946 |
| யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம் | 1935 |
| யா/புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம் | 1926 |
| யா/புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயம் | 1910 |
| யா/புங்குடுதீவு சித்தி விநாயகர் மகா வித்தியாலயம் | 1914 |

# பாடசாலைகளின் அபிவிருத்தியில் வெளிநாட்டில் உள்ளோரின் உதவி

திரு.ந.பேரின்பநாதன் M.A
(முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியற்றுறை,யாழ்-பல்கலைக்கழகம்.)

புங்குடுதீவு பொருட் செல்வத்தில் மட்டுமன்றி கல்விச் செல்வத்திலும் பெருமை பெற்று விளங்கியதொரு காலம் இருந்தது. எமது ஊரில் பதினைந்து பாடசாலைகள் இயங்கின என்ற உண்மை இலங்கையைச் சேர்ந்த பல வெளியூர் மக்களுக்கு ஆச்சரிய மூட்டுவதாகக் காணப் பட்டதை அவர்களுடன் உரையாடியபோது உணரக் கூடியதாக இருந்தது. இன்று உலகெங்கும் கல்வித்துறை போன்ற பல துறைகளில் இப் பாடசாலைகளில் கல்வி கற்ற பலர் பிரபல்யம் பெற்று விளங்குகின்றார்கள் என்று கூறுவது மிகைப் பட்டதொரு கூற்றல்ல. ஆனால் மாணவர்களுக்கு கல்வி வசதியை அளித்த 10 பாடசாலைகள் 1991 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மூடப்பட்டுள்ளன என்பதை அறிகின்ற போது எமதூர் மக்கள் பலர் பெருந்துயரில் ஆழ்ந்து விடுவதை நாம் கண்ணாரக் காணக் கூடியதாக உள்ளது.

1991 ஆம் ஆண்டில் எமது பகுதிகளில் ஏற்பட்ட இராணுவ முன்னெடுப்பு எமதூரைப் பொறுத்த வரையில் பிரளயம் ஒன்றையே ஏற்படுத்தி விட்டது. எமதூரில் இயங்கி வந்த பாடசாலைகளில் மூன்றில் இரண்டு பங்கு எண்ணிக்கையுடைய பாடசாலைகள் என்றுமே இயங்காத நிலைக்கு வந்துவிட்டன. மூன்று நேர நித்திய பூசைகள் செய்யப்பட்டு வந்த கோவில்கள் பல ஒரு நேரப் பூசை கூட செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றன. 2000 க்கு மேற்பட்ட பெரிய கல் வீடுகள் வசிப்பதற்கு ஆட்களின்றி வெறுமையாக உள்ளன. விளை நிலங்கள் கவனிக்கப்படாமலும் பாரிய குளங்கள் தூர்ந்தும் காணப்படுகின்றன. பிரதான வீதியைத் தவிர ஏனைய பல சிறிய ஒழுங்கைகள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றன. 15000 க்கு மேற்பட்ட மக்கள் வசித்த எமதூரில் 3000 க்கும் குறைவான மக்களே தற்போது வசிக்கின்றனர். விவசாயம், மீன்பிடி, சிறு கைத்தொழில்கள், வர்த்தகம், போக்குவரத்து யாவுமே 1991 க்கு பின்னர் பெருமளவு பாதிக்கப் பட்டு விட்டன. இதனால் தான் 1991 இல் ஏற்பட்ட இராணுவ நகர்வு எமது ஊரில் பிரளயம் ஒன்றையே ஏற்படுத்தி விட்டதெனக் கூறுகின்றேன்.

புங்குடுதீவின் இயக்கத்திற்கு, உயிரோட்டத் திற்கு, அபிவிருத்திக்கு காரணமாக இருந்த பல துறைகள் பாதிக்கப்பட்ட போதும், பெருமளவு பாதிப்பைக் கண்ட துறையாக கல்வித்துறை விளங்குகின்றது. தற்போது 10 பாடசாலைகள் மூடப்பட்டும் 5 பாடசாலைகள் மட்டுமே இயங்கு கின்றன. அத்துடன் அவை பல்வேறு குறைபாடு களுடன் இயங்குவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. பாடசாலைகளின் தேவைகள் பல நிறைவேற்றப்படாமல் உள்ளன. இப்பாடசாலைகளின் தேவைகள் யாவை என்பதையும் அத்தேவைகளை நிறைவேற்றுவதில் வெளிநாடுகளில் குறிப்பாக கனடா, இங்கிலாந்து, சுவிற்சலாந்து, பிரான்ஸ், போன்ற நாடுகளில் இயங்கும் பழைய மாணவர் சங்கங்கள் எவ்வாறான உதவிகளைச் செய்யலாம் என்பதை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். தேவைகளை ஒவ்வொன்றாக கூறி, அத் தேவைகள் குறித்து வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கங்கள் எவ்வாறான உதவியை செய்யலாம் என்பதை உடனுக்குடன் கூறும் அணுகு முறையே இக்கட்டுரையில் கையாளப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் உள்ள சங்கங்கள் என இக் கட்டுரையில் குறிப்பிடப்படுபவை வெளிநாடு களிலுள்ள புங்குடுதீவு பழைய மாணவர் சங்கங்களே என்பதை மனதில் இருத்திக் கொள்வது நல்லது.

**தேவை: 1**

**அதிக செலவுடைய, நீடித்த பாவனை கொண்ட (25 வருடங்களுக்கு மேற்பட்ட) தேவைகள்**

கட்டிடங்கள், விளையாட்டு மைதானம் போன்றன இத்தேவைக்குள் அடங்கும். கட்டிடங்கள் என்பதற்குள் வகுப்பறைகள், நூலகம், செய்முறைத் தொழிற்பாட்டறை, களஞ்சிய அறை, ஆசிரியர் ஓய்வு அறை, கணணி அறை, விஞ்ஞான ஆய்வுகூடம், தொழில்நுட்ப பாட அறை, மேடையுடன் கூடிய அரங்கு, சுற்று மதில், அலுவலக அறை, அதிபர் அறை, விஞ்ஞான அறை, மலசல கூடம் போன்றன அடங்கும். இத்தகைய தேவைகளை நிறைவேற்றுவதில் வெளிநாட்டில் உள்ள சங்கங்கள் எவ்வாறான பங்கை ஆற்றலாம் என்பதை ஆராய்வோம். இலங்கையில் தற்போது சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் நடந்து கொண்டு இருக்கின்றனவே யொழிய இன்னும் சமாதானம் வந்து விடவில்லை. இந்நிலையில் அதிகளவு செலவை ஏற்படுத்தும் புதிய கட்டிடங்களைக் கட்டுவதில் வெளிநாட்டில் உள்ள சங்கங்கள் தற்போது அதிக அக்கறை கொள்ளத் தேவையில்லை என்பதே எனது கருத்து. எனினும் சில விடயங்களை இங்கு கவனத்தில் கொள்ளலாம். தற்போது இயங்கும் பாடசாலை களில் மலசலகூட வசதி இல்லாவிடில் அதனைக் கட்டிக் கொடுப்பதில் கவனம் செலுத்தலாம். விளையாட்டு மைதானம் இல்லாத பாடசாலைக்கு அதனை வாங்கிக் கொடுக்கலாம். பாடசாலைக்கு அருகாமையில் உள்ள காணியே விளையாட்டு மைதானத்துக்கு பொருத்தமானதாக இருக்கும். அக்காணிகளுக்கு சொந்தமானவர்கள் வெளி நாட்டில் இருப்பார்களாயின், அவர்களுடன் கலந்துரையாடி இலவசமாகவே அக்காணிகளை பாடசாலைக்கு வழங்குமாறு சங்கங்கள் பரிந்துரை செய்யலாம். அல்லது மிகக் குறைந்த விலைக்கு அக்காணிகளை கொள்வனவு செய்து பாடசாலை களுக்கு அன்பளிப்பு செய்யலாம்.

தற்போது இயங்கும் 5 பாடசாலைகளும் 50 வருட காலத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டவை ஆகும். அப்பாடசாலைகளின் கட்டிடங்கள் சில சேதமடைந்தவையாகவும், கூரைகள் திருத்தப்பட வேண்டிய நிலையிலும் உள்ளன. இத்தகைய திருத்த வேலைகளை செய்வதற்கு வெளிநாட்டில் உள்ள பழைய மாணவ சங்கங்கள் உடனடி யாகவே உதவி செய்ய வேண்டும்.

**தேவை: 2**

**தளபாடங்கள்**

இந்த வகையான தேவைக்குள், இரும்பு அலுமாரி, அலுவலக மேசை (உருக்கு) மாணவர் கதிரை, மாணவர் மேசை, ஆய்வுகூட மேசை, ஆய்வுகூட கதிரை, ஆசிரியர் மேசை, ஆசிரியர் கதிரை, பாலர் மேசை, பாலர் கதிரை, கரும்பலகை, கரும்பலகை தாங்கி போன்ற விடயங்களை இதற்குள் அடக்கலாம். தற்போது இயங்குகின்ற 5 பாடசாலைகளில் இத்தேவை பூர்த்தி செய்யப்படாமல் இருக்குமாயின், அவற்றை உடனடியாகப் பூர்த்திசெய்ய வேண்டிய கடமை வெளிநாட்டில் உள்ள சங்கங்களுக்கு உண்டு. குறிப்பாக மாணவர்க்கான கதிரை, மேசை பற்றாக்குறையாக காணப்படுமாயின் அவற்றைப் பூர்த்தி செய்வதில் சங்கங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

**தேவை: 3**

**ஓரளவு செலவுடைய, நடுத்தரக் கால பாவனை யுடைய (3 தொடக்கம் 7 வருடங்கள்) தேவைகள்**

இந்தவகையான தேவைக்குள் தட்டச்சு இயந்திரம் (தமிழ், ஆங்கிலம்) கணணி, தொலைக் காட்சிப் பெட்டி, றேடியோ, றோனியோ இயந்திரம், ஜெனரேற்றர், ரேப்றெக்கோடர், வீடியோ டெக் போன்றவை அடங்கும். இயலுமானவளவு இத் தகைய தேவைகளை பூர்த்தி செய்வதில் வெளிநாட்டிலுள்ள பழைய மாணவர் சங்கங்கள் உடனடி நடவடிக்கை எடுத்தால் நல்லது. எனினும் மின்சார வசதி இல்லாமை இத்தகைய உபகர ணங்களை இயக்குவதற்கு முக்கிய தடையாக உள்ளது. இதற்காக மின்சார உற்பத்தி யாக்கி (Generator) யும் பாடசாலைகளுக்கு கொள்வனவு செய்து கொடுக்கலாம்.

**தேவை: 4**

**விளையாட்டு உபகரணங்கள்**

இந்த வகையான தேவைக்குள் உதைபந்து, உதை பந்துவலை, வலைப்பந்து, கரப்பந்து, கரப்பந்து வலை, குண்டு, தட்டு, ஈட்டி, அஞ்சல் தடிகள், அளவு நாடாப்பெட்டி, நிறுத்தற் கடிகாரம், கிரிக்கட் உபகரணங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை அதிகளவு செலவு உடையன வல்ல. இவற்றைக் கொள்வனவு செய்து கொடுப்பதில் உடனடிக் கவனம் செலுத்துதல் நல்லது.

**தேவை: 5**

**சங்கீதம், நடனம் போன்ற அழகியல் பாடத்திற்கான உபகரணங்கள்**

சுருதிப் பெட்டி, மிருதங்கம், உடுக்கு, கைத்தாளம், (சல்லாரி) மெலோடிக்கா, காற் சலங்கை போன்றவற்றைக் கூறலாம். எமது ஊர் சங்கீதக் கலைஞர்களால் பெருமை பெற்ற ஊராகும். ஆனாலும் அச்சங்கீத கலைஞர்கள் பலர் வெளியூரிலிருந்து சேவையாற்றினார்களே ஒழிய உள்ளூரில் இருந்து சேவையாற்றியது குறை வென்றே கூறலாம். அழகியற் பாடங்களுக்குத் தேவையான உபகரணங்களும், அவற்றிற்கான ஆசிரியர் பற்றாக்குறை எமது பாடசாலைகளில் காணப்படுகின்றன. இவற்றைப் பூர்த்தி செய்வதில் உடனடிக் கவனம் செலுத்தப் படுதல் வேண்டும்.

நுண்கலைகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர் களை நியமிக்குமாறு உள்ளூரில் உள்ளவர்கள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அவ்வாறு முடியாவிடில் பிறிதொரு வகையில் இத்தேவைகளைப் பூர்த்தி செய்ய வெளிநாட்டில் உள்ள பழைய மாணவர் சங்கங்கள் உதவலாம். யாழ்-பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தில் இறுதி வருடத்தில் படித்துக் கொண்டிருக்கும் திறமையான மாணவர்கள் சிலருக்கு குறிப்பிட்டளவு ஊதியம் வழங்குவதன் மூலம், சனி, ஞாயிற்றுக்கிழமை களில் குறிப்பிட்ட பாடசாலைகளில் (எமதூரில் உள்ள) இப்பாடங்களை எமது ஊர் மாணவர் களுக்குப் போதிக்கும் வசதியை ஏற்படுத்தலாம். இதற்கு தேவைப்படும் நிதி உதவியை வெளிநாட்டில் உள்ள சங்கங்கள் செய்யலாம்.

**தேவை: 6**

**நூலகம்**

எந்த வித தண்டனையும் கொடுக்காமல் மனதைத் துன்பப்படுத்தும் வார்த்தைகளைப் போசாமல் நல்ல அறிவைப் புகட்டுகின்ற ஆசிரியர்களாக நூல்கள் விளங்குகின்றதென அறிஞர்கள் கூறுவர். ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒவ்வொரு பெறுமதி வாய்ந்த நூலகங்கள் இருக்க வேண்டியது அவசியம். பாடசாலைகளில் மாணவர் களின் வாசிப்பு ஆர்வத்தினைத் தூண்டுகின்ற நல்ல நூல்கள், கதைப் புத்தகங்கள், விஞ்ஞான நூல்கள், சமய நூல்கள், மாவீரர் பற்றிய நூல்கள் யாவும் நூலகங்களில் காணப்படுதல் வேண்டும். இந்தியாவில் தமிழில் நிறையப் புத்தகங்கள் வெளிவந்து கொண்டிருகின்றன. அவற்றில் நல்ல நூல்களை கொள்வனவு செய்து எமது பாடசாலை நூலகங்களுக்கு வெளிநாட்டில் உள்ள பழைய மாணவ சங்கங்கள் அன்பளிப்புச் செய்தல் வேண்டும். ஆங்கிலப் புத்தகங்களையும் கொள்வனவு செய்து அன்பளிப்புச் செய்ய வேண்டும். ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகப் பயில்வோருக்காக ஆங்கில இலக்கியத்தில் உள்ள சிறந்த நாவல்கள், சிறு கதைகளை இலகுவான ஆங்கிலத்தில் கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் வெளியிட்டு வருகிறார்கள். அவ்வாறான புத்தகங்களை எல்லாம் கொள்வனவு செய்து எமது பாடசாலைகளின் நூலகங்களை விருத்தி செய்வதற்கு சங்கங்கள் உதவி செய்ய வேண்டும்.

**தேவை: 7**

**ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களில் பிரத்தியேக வகுப்புக்கள்**

எமது பாடசாலைகளில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களைப் பயிற்று விப்பதற்குத் தேவையான ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவே காணப்படுகின்றனர். 8ந் தரத்திற்கு கீழ் உள்ள மாணவர்களுக்கு பிரத்தியேகமாக கணிதம் போதிப்பதற்கு எமது ஊரில் உள்ள உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்கள் சிலரைப் பயன்படுத்தலாம். அவர்கள்


நியூ
சீமாட்டி சில்க்
இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா, இங்கிலாந்து, சிங்கப்பூர், அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்படும் எவர் சில்வர் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள் யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
துரித பணமாற்றுச் சேவையும் தருகிறோம்
ஸ்ரீ அம்பாள் ஜுவலறி
3415 Dixie Road, Mississauga, ON
905.602.9059


AERO CANADIAN
TOUR & TRAVEL
AC TT
Something Special on Land & Air
உல்லாச வலமா? உலக வலமா? ஊர்வலமா? கோயில் வலமா?
எங்கு செல்ல விரும்புகிறீர்கள்? எம்மை நாடுங்கள்!!
உங்களுக்காக எமது சேவைகள்
• பிரயாணச்சீட்டுக்கள்
• இந்திய திருத்தல யாத்திரை
• கொட்டேல் பதிவு
• பயண காப்புறுதி
• சொகுசு பஸ் சேவை
• கார் றென்ரல்
• கப்பல் பயணம்
எமது சேவை நம்பிக்கை, முழுமைக்கும் அப்பால்....
"Service beyond believe"
Tel: 416-299-8687(TOUR)
TOLL FREE:1-866-304-AERO(2376) Fax: 416-299-5767
www.aerocanadiantourandtravel.com
E-mail: info@aerocanadiantourandtravel.com
3300 McNicoll Ave. Suite 218, Scarborough, ON M1V 5J6 (McNicoll & Middlefield)

தமிழ் மகன் ஒருவரின் பிரமாண்டமான தளபாடக் காட்சியறைகள்

# LIVING FURNITURE



**LIVING FURNITURE**
1149 Kennedy Road
Scarborough, ON M1P 2K8
Tel: 416.752.9503
Fax: 416.752.3343

**LIVING FURNITURE**
1475 Dundas St. E (at Dixie)
Mississauga, ON L4X 1L3
Tel: 905.624.3569
Fax: 905.624.3717

**KIDS CASTLE**
1153 Kennedy Road
Scarborough, ON M1P 2K8
Tel: 416.752.9503
Fax: 416.752.3343



# R ROYAL ACCIDENT BENEFITS

**EXPERIENCE EXCELLENT**

**We fight for your rights**



நீங்கள் வாகன விபத்துக்களினால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா? இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்

வாகன விபத்தினால் பாதிப்பானவர்களுக்குரிய
- உரிமைகள்
- நன்மைகள்
- பாதுகாப்புக்கள்

உங்களுக்குரிய
- சம்பள / எதிர்கால சம்பள இழப்புக்கள்
- கல்வி / வணிக இழப்புகள்
- வீட்டுப்பராமரிப்பு / குழந்தைப் பராமரிப்புச் செலவுகள்
- மருத்துவ வசதிகள்

போன்றவற்றை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்வதற்கு அழையுங்கள்

**ALL TRAFFIC TICKETS**
- Speeding
- Seat Belt
- Stop Sign
- Red Light
- Lane Change
- No Insurance
- License Suspension
- Careless Driving...

To claim proper compensation for your damages, wage loss and all insurance benefits you are legally entitled to receive.

1200 Markham Road, Suite #105
Scarborough, ON (Markham & Ellesmere)
**Call: Kumar**
Tel: 416.283.8000 Fax: 416.283.3567


பல ஆண்டுகள் வெற்றியின் அனுபவங்கள்
பீற்றர் ஜோசப்
Tel: 416-757-7707 Fax: 416-757-7709
"தமிழர் சங்கமம்"
பீற்றர் ஜோசப் அன்ட் அசோசியேட்ஸ்
அகதிநிலைக் கோரிக்கைகள், மேன்முறையீடுகள், கருணை மனு
ஸ்பொன்சர்
குடும்ப அங்கத்தவர்
உறவினர்
தத்தெடுத்தல்
குறூப் ஸ்பொன்சர்
Inland Sponsor
விசா முறைகள்
INDEPENDENT IMMIGRANT
INVESTORS VISA
STUDENT VISA
SKILLED WORKERS
VISITOR VISA
LIVE IN CARE GIVER
TRAFFIC TICKETS - PETER JOSEPH
DETENTION REVIEWS
BAIL HEARINGS
CRIMINAL MATTERS
FAMILY MATTERS
WORK PLACE? E.I.? O.W.?
CAR ACCIDENT INJURY CLAIMS
அனைத்துச் சேவைகளும்
ஒரே இடத்தில்.
முதலில் அழையுங்கள்
email: peterjoseph@bellnet.com
www.callpeterjoseph.com
2425 Eglinton Ave. East, # 212., Scarborough, ON. M1K 5G8

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் - கனடா

## நிர்வாக சபையினர்

2002





றொறன்ரோ மாநகரில்
புடவை வியாபாரத்தின் முன்னோடிகள்
6 Kumars SILK HOUSE
புடவையொன்று புன்னகை புரிகிறது!
காஞ்சி, காவேரி, மகிமா, மாலவிகா, கோலம், Dakshinotri, பனாரஸ் சற்றின் சில்க், Gold Silver மணவறை பட்டுக்கள், Diamond, Crystal முகூர்த்தப் பட்டுகள் இப்படி பலவிதமான பட்டு வகைகள் 1000க்கு மேற்பட்ட தெரிவுகள்
புத்தம் புதிய பஞ்சாபி, லங்கா சூட் வகைகள், Short Top, Long Jacket, Tight Qlot style pants suits, All over Embroidery work suits, Children two color, shade color silver tissue, golden tissue
Party Frock, Skirt & Blouse, Maternity Frock, Batik Frock (short & Full), Half saree set (3pcs) Full work & check tissue skirt pcs
இரண்டு இடங்களில்...
Eglinton & Midland
(Rainbow Village)
2466 Eglinton Ave. East
416 261 3666
Gerrard Indian Buzzer
1400 Gerrard St. East
416 465 7131
6 குமார்ஸ் சில்க் கவுஸ்
புதிய வரவு
புதிய தெரிவு
புதிய அழகு
புதிய உறவு
புதிய நிறைவு
அதுவே எமக்கும் மன நிறைவு!

பூவரசம் பொழுது 2002 சிறப்புற எமது இனிய வாழ்த்துக்கள்

Law offices of:

**YASO SINNADURAI**

BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC

# பூவரசம் பொழுது 2002

**பிரதம விருந்தினர்**
***Dr. T.* நாதன் யோகநாதன்** Ph.D
Chief Scientific Officer, Med BioGene

***Orchestra***
***Mega Tuners***
இசைக்குழுவினர்

## நிகழ்ச்சி நிரல்

- மங்கள இசை
  *சித்திரவேல் குழுவினர்*
- மங்கள விளக்கேற்றல்
- கனடிய தேசிய கீதம் இசைத்தல்
  *ப. ஜனோஷா, ப. ஜதீபன், ச. நிவேதா,*
  *ச. துஷான், வ. ஜனனி, வி. பவித்ரா,*
  *வி. றஜீவன், ச. தாரணி, து. விபீதா, கோ. தாரணி*
  **Keyboard - *S. சன்ராணா***
- தமிழ்மொழி வாழ்த்து
  *ராகவி ரவி, கீர்த்தனா பத்மநாதன்*
- அமரர் அ.க. கண்ணையா மாஸ்ரர் நினைவு அஞ்சலி உரை
  *சு. குணரட்ணம் - **Former Cultivation Officer***
- வரவேற்பு நடனம்
  நடன அமைப்பு: *சிலம்பொலி நாட்டியாலய*
  *ஆசிரியை திருமதி வனஜா ரவிகரன்*
  பங்குபற்றுவோர்: *சகானா விஸ்வநாதன், சங்கரி மனோ, தனுசியா தவேந்திரராஜா, லாவண்யா தயானந்தன், கனுஜா காந்திமகான், கயூலா காந்திமகான், பிறீத்தி லஷ்மிகாந்தன்*
- வரவேற்புரை
  *திருமதி ம. தனபாலசிங்கம் - முன்னாள் அதிபர்*
  *ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்*

3160 EGLINTON AVE. E, UNIT #3, SCARBOROUH, ON, M1J 2H3
TEL: 416-269-7198

# யசோ சின்னத்துரை

சட்டத்தரணி

**SCARBOROUH**

**2100 ELLESMERE RAOD, UNIT 202, SCARBOROUH, ON, M1H 3B7**

**416-265-3456**


# பூவரசம் பொழுது 2002

- **கீர்த்தனம்**
  நடன அமைப்பு - தமிழ் தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரியை திருமதி கிருபாநிதி ரட்ணேஸ்வரன்
  பங்குபற்றுபவர்கள்: சுபாங்கி கலாநாதன், சிவப்பிரியா சிவலிங்கம்

- **தலைவர் உரை**
  திரு. சோம சச்சிதானந்தன்

- **நூல் அறிமுகமும் ஆய்வுரையும்**
  திரு. N.K. மகாலிங்கம் B.A.

- **காவடிச் சிந்து**
  நடன அமைப்பு: அபிநயலயா நாட்டியக் கல்லூரி ஆசிரியை ரஜனி பாலேந்திரா
  பங்குபற்றுவோர்: வைசாலி திருச்செல்வன், வைஷ்ணவி திருச்செல்வன், வைதேகி திருச்செல்வன், பிரணவி சண்முகசுந்தரம், சஞ்சனா சண்முகசுந்தரம், தாமிரா சண்முகநாதன், அபிநயா அருள்பிரரங்கா, மாதங்கி ஜெயக்குமார், கிசாந்தி ஜெயக்குமார், ஜீபா எமில்

- **பிரதம விருந்தினர் உரை**

- **திரையிசை நடனம்**
  ந. மயூரா, ந. சிந்துஜா, ந. மயூரன், ந. சிந்துஜன், அ. அருந்தவராஜா, அ. அஜந்தினி, அ. அனுசா, பே. கௌதமன்

- **இடைவேளை**

- **வயலின் இசை ஆரம்**
  பங்குபற்றுவோர்
  நாதலயா இசைக்கல்லூரி ஆசிரியை ஶ்ரீமதி விஜயலக்ஷ்மி சீனிவாசகம் அவர்களின் மாணவிகள் பகீரதி செல்வராஜ், கீர்த்திகா துரைராஜா, டிலானி பாலசுப்ரமணியம்
  மிருதங்கம்: M. மயூரன்

- **இன்னிசை**
  இன்னிசை வேந்தர் திரு. பொன் சுந்தரலிங்கம் அவர்களின் மாணவன் ஶ்ரீ ரமணசர்மா கிருஷ்ணராஜக் குருக்கள் அவர்கள்
  வயலின்: லசந்தி ராஜ்குமார்
  மிருதங்கம்: M. மயூரன்

- **திரையிசை நடனம்**
  சாயினி இளங்கோவன், ஜெனார்த்தனி இளங்கோவன், சாயிநிவாசினி ஶ்ரீதரன்

- **கடவுள் பாதி கனடா பாதி**
  நகைச்சுவை நாடகம்
  வழங்குபவர்கள்
  வி. தரன், வி. மோகன், திருமதி. கோதை செல்வம்

- அடங்காப்பிடாரி நாடகப்புகழ் K.S. நடராஜனின் நடிப்பில்
  **"உதிர்வு"**
  சமூக நாடகம்
  கதை, வசனம்: அமல்குமார் சின்னத்தம்பி
  நெறியாள்கை: புங்கையூர் விசுவலோகன்

- **நன்றியுரை**
  திரு. சண் சதாசிவம் - செயலாளர்
  முன்னாள் அதிபர் ஶ்ரீ கணேச மகாவித்தியாலயம்

- **Master of Ceremonies - Mr. Ken Kirupa**




*Kanagaambikai*

**GOLD HOUSE**

- Finest Quality 22 k Gold
- Singarpore Jewellery
- Diamonds
- Birth Stones
- Watches
- Jewellery Repairs

# மஞ்சுளா பஷின்

மலிவின் மறு பெயர்



5635 Finch Avenue East, Unit 3, Scarborough, ON

**Tel: 416.297.9875**

Fax: 416.297.7595




**Drapery • Shutters • Wood Venetians • Vertical/Horizontal Blinds**





**Roller Blinds • 2"P.V.C. Venetians • Pleated shades**

**15 Years Experience of Professional Service**
**Please Call for FREE ESTIMATE and FREE SHOP at home service**




50 பேர் தொடக்கம் 700
பேர் வரையில்
கொள்ளக்கூடிய
அலங்கரிக்கப்பட்ட 3
மண்டபங்கள் ஒரே
இடத்தில்
அமைந்துள்ளன.
தொடர்புகளுக்கு Jegan
Eastown
RESTAURANT & BANQUET HALLS
2648 Elinton Ave. East
Scarborough, ON
Tel: 416.265.3333
416.266.3841


Best Quality 22k, 24k
Gold, Diamonds,
Pearl, Custom created
Jewellery and all
kinds of repairs
Amman's
Jewellers
Inc.
ஆடவர் மங்கையர்,
சிறுவர், சிறுமியர் மற்றும.
அனைவருக்கும் ஏற்ற
சகலவிதமான ரெடிமேட்
அடைகளும் மனாரஸ்,
மைசூர் சில்க், காஞ்சிபுரம்
சாறிகள், சகல
வயதினருக்கும் பஞ்சாபி,
நக்மா சூட்,
ஆண்களுக்கான
குருத்தா, பைஜாமா, சேட்,
அனைத்தும் புதிய
டிசைன்களில்.....
Amman
Silk
1608 Gerrard Street. E, Toronto, ON Tel: 416.461.6217 Fax: 416.461.2697



# Neelam Silk

# நீலம் சில்க்

சுப முகூர்த்த பட்டுப் புடவைக்கு இராசியான இடம்
2002ம் ஆண்டின் புதுப்பட்டு அறிமுகம்

**மாங்கல்யா பட்டுப் புடவைகள்**
**மாங்கல்யா முகூர்த்தப் பட்டு**
**மாங்கல்யா Crystal Work**
**மாங்கல்யா Tissue Full Brocade**

உங்கள் குடும்பத்தினரின் அனைத்து வகை ஆடைத் தெரிவுகளுக்கும் நீங்கள் நம்பிக்கையுடன் நாடவேண்டிய நம்மவர் பட்டு மாளிகை "நீலம் சில்க்"

**ஜெராட் இந்தியன் பசாரில்**
**1453 Gerrard Street E.**
**Toronto, ON**
**416-778-7455**

**ஸ்காபரோவில்**
**2378 Eglinton Ave.E**
**Scarborugh, ON**
**416-759-2002**



**FOR THE ENTIRE FAMILY**

# CLAIREPORT Place

*Banquet & Convention Centre*

A DIVISION OF WESTOWN LIMITED



## தனியொரு உயர்ந்த கூரையின் கீழ்

**50 பேர் தொடக்கம் 1200 பேர் வரை கொள்ளக்கூடிய**


**அழகிய (Luxurious) 4 மண்டபங்கள்**



திருமணம்
பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு விழா
ஒன்று கூடல் மற்றும் சகல
வைபவங்களுக்கும் நாடுங்கள்.

**என்றும் உங்கள் சேவையில்**

**416-675-7700**
**416-460-7700**






Contact: Jey or Sasi

65 Claireport Crescent, Etobicoke, Ont. M9W 6V5
Between Steeles & Finch on Albion Road






# SIDNEY & ASSOCIATES

**Accident Benefits Claims**

Weekly Income Replacement Benefits, Care Giver Benefits, Housekeeping Benefits, Medical Care Benefits, Rehabilitation

**Accounting & Taxation Services**

Preparation of financial statements, Book Keeping and payroll Services, Personal Tax preparation & E-Filing, Corporate Tax, Personal & Business Loan

**Paralegal & Immigration Referral Services**

Small Claims, Divorce, Traffic Tickets Offenses, Slip & Fall, Work Pace Discrimination & Wrongful Dismissal, Wills & Workers Compensation, Family Class Sponsorship

**Sidney K. Sithiravadivel** B.A. (Hons)
(President)

**Derick Ackloo** B.A.
(Vice President)

**2885 Jane Street, Unit 2, North York, ON M3N 2J5**
**(one block south of Finch)**
**Tel: 416.745.2794/0010**
**Fax: 416.745.9228**

செய்யும் சேவைக்காக வெளிநாட்டில் உள்ள சங்கங்கள் ஓரளவு பண உதவியை அவர்களுக்குச் செய்யலாம். விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களைப் பயிற்றுவிப்பதற்கு, யாழ்-பல்கலைக் கழக மாணவர்களில் திறமையானவர்கள், அல்லது யாழ்ப்பாணத்தில் உள்ள இளைப்பாறிய ஆசிரியர்கள் சிலரைப் பயன்படுத்தலாம். அவர்களுக்கு குறிப்பிட்டளவு கொடுப்பனவு செய்ய வேண்டியது அவசியமாகும். இதற்கு வெளிநாட்டில் உள்ள சங்கங்கள் உதவி செய்வதை அவற்றின் கடமைகளில் ஒன்றாகக் கொள்ளல் வேண்டும். இதன் மூலம் எமது ஊர் மாணவர்களின் கணித, விஞ்ஞான, ஆங்கில அறிவை வெகுவாக உயர்த்திக் கொள்ளலாம்.

**தேவை: 8**

**பிறிசிப் புத்தகங்கள், பென்சில், பேனை, கேத்திர கணித உபகரணங்கள், நிறப் பென்சில்கள், புத்தககங்கள் போன்ற மாணவர்களால் அன்றாடம் பயன் படுத்தப்படும் பொருட்கள்**

தற்போது நமது ஊரில் வசிப்பவர்களில் பெரும் பகுதியினர் வறுமைக் கோட்டின் கீழேயே வாழுகின்றனர். இதனால் பாடசாலை செல்லும் தமது பிள்ளைகளுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்து கொடுக்க முடியாத நிலையில் சில பெற்றோர் உள்ளனர். இதனால் சில கெட்டிக்கார மாணவர்கள் கூட இடை நடுவில் பாடசாலைகளை விட்டு விலக வேண்டிய பரிதாபகரமான நிலையில் உள்ளனர். இத்தகைய மாணவர்களை இனங்கண்டு அவர்கள் தொடர்ந்து கல்வி கற்றிட உதவி செய்ய வேண்டியது வெளிநாட்டில் உள்ள சங்கங்களின் கடமையாகும்.

**தேவை: 9**

**மதிய உணவு**

நமது ஊரில் உள்ள பாடசாலைகளில் தற்போது கல்வி பயிலும் மாணவர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கை உடையவர்கள் காலை உணவு உட்கொள்ளாமல் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர் என்ற பரிதாபகரமான செய்திகளைக் கேள்விப்பட்டுள்ளோம். சில சமயங்களில் பசிக்களை காரணமாக மாணவர்கள் மயங்கி விழுந்த சம்பவங்களும் உண்டு. "பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்" எனக் கூறுவர். பசிக்களையுடன் இருக்கும் மாணவனின் மூளைக்கு ஆசிரியர் கூறுவது எதுவும் கேளாது. எனவே பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். இதற்கான பொறுப்பை வெளிநாட்டில் உள்ள பழைய மாணவர் சங்கங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இம்மதிய உணவுத் திட்டத்தினை இலகுவான முறையில் எவ்வாறு செயற்படுத்தலாம் என்ற கருத்தினை இங்கு நான் விளக்க முனைகின்றேன். வருடமொன்றுக்கு, தவணை விடுமுறை நாட்கள், சனி, ஞாயிற்றுக் கிழமைகள் போன்றவற்றை கணக்கில் எடுத்துப் பார்க்கும் போது ஏறக்குறைய 210 நாட்கள் மட்டுமே பாடசாலைகள் இயங்குகின்றன. தற்போது எமதூரில் இயங்கும் ஐந்து பாடசாலைகளிலும் ஏறக்குறைய 800 மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். அவர்களுக்கு மதிய உணவாக பாண், பணிஸ், கஞ்சி போன்றவற்றை வழங்கலாம். ஒரு மாணவனுக்கு மதிய உணவு வழங்குவதற்கான ஒரு நாள் செலவு ஏறக்குறைய 5 ரூபாய்களுக்கும் 7 ரூபாய்களுக்கும் இடைப்பட்டதாக இருக்கும். எல்லா மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்குவதற்தான ஒரு நாள் செலவு ஏறக்குறைய 6000 ரூபாய்களாக இருக்கும். அதாவது கனடிய நாணயப்படி ஒருநாள் செலவு $100 டொலர்களாகவும், இங்கிலாந்து நாணயப்படி 50 பவுண்களாகவும் இருக்கும்.

ஒரு நாளுக்கு மதிய உணவு வழங்கும் பொறுப்பை ஒரு குடும்பம் ஏற்றுக் கொள்ளலாம். எனவே இருநூறு குடும்பங்கள் இத்திட்டத்திற்கு உதவ முன் வந்தால் இதனை சிறப்பாக நடாத்த முடியும். இக்குடும்பங்கள் வருடா வருடம் இப் பொறுப்பினை தொடர்ந்து செய்தல் வேண்டும். இதனை வெளிநாட்டில் உள்ள குடும்பங்கள் தமது பிள்ளைகளின் பிறந்த நாள் பரிசாகவோ, அல்லது காலம் சென்ற பெற்றோர், பேரன், பேத்தி போன்றோரின் ஞாபகார்த்தமாகவோ இதனை செய்யலாம். (ஏனைய தேவைகளைக் கூட சங்கங்களின் ஊடாக மட்டுமன்றி தனிப்பட்ட ரீதியிலும் பூர்த்தி செய்ய முயல்வது சாலச் சிறந்ததாகும்)

கனடாவில் ஏறக்குறைய இரண்டு வருடங்களுக்கு முன்னர் இத்திட்டம் தொடங்கப் பட்ட போதும் 200 பேரை சேர்க்க முடியாமல் உள்ள நிலை பரிதாபத்துக்கு உரிய தொன்றாகும். தனியே ஒரு நாட்டில் வசிப்பவர்கள் மட்டும் செய்யாமல் ஒரு தவணைக்கு ஒரு நாட்டில் உள்ளவர்கள் என்ற அடிப்படையில் கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, போன்ற வற்றில் உள்ளவர்களும் இத்திட்டத்தில் பங்கு பற்றலாம். இவ்வாறு இந்த நான்கு நாடுகளிலும் உள்ள புங்குடுதீவு மக்களில் தலா 50 குடும்பங்கள் இணைந்தால் இத்திட்டத்தினை திறம்பட செயற்படுத்த முடியும். இத்திட்டத்தில் யாவரும் பங்கேற்பார்களாயின் அதாவது ஒவ்வொரு நாட்டில் உள்ளவர்களில் 50 குடும்பங்கள் பொறுப்பேற்க முன் வந்தால் இத்திட்டத்தினைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தலாம்.

**தேவை: 10**

**போக்குவரத்து வசதி**

1991ம் ஆண்டுக்கு பின்னர் பல பாடசாலைகள் பூட்டப்பட்டிருப்பதால் புங்குடுதீவின் சில பகுதிகளில் உள்ள மாணவர்கள் நெடுந்தூரத்தில் உள்ள பாடசாலைகளுக்கே வருகை தர வேண்டி உள்ளது. உதாரணமாக குறிகாட்டுவான் பகுதியில் வசிக்கும் பாலர் வகுப்பு மாணவர்கள் கூட பெருங்காடு அல்லது இறுப்பிட்டியில் உள்ள பாடசாலை களுக்கே வரவேண்டியுள்ளது. யுத்த சூழ்நிலை காரணமாக போக்குவரத்து செலவு பல மடங்கு அதிகரித்துள்ளது. வறிய பெற்றோரால் பிள்ளை களின் பாடசாலைகளுக்கான போக்குவரத்து செலவை சுமக்க முடியாமல் உள்ளது. இதனால் இடைநடுவில் படிப்பைக் கைவிடும் மாணவர்களும் உள்ளனர். இது ஒரு பரிதாபகரமான நிலைமை யாகும். இந்நிலைமையைத் தீர்ப்பதற்கு வெளிநாட்டில் உள்ள பழைய மாணவர் சங்கங்கள் உதவி செய்ய வேண்டும். இவ்வாறான உதவியை பின்வரும் வகையில் செய்யலாம் என நான் கருதுகின்றேன்.

பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றி இறக்கு வதற்காக, எமது ஊரில் வாகனம் வைத்திருக்கும் ஒருவர் அல்லது இருவருடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து, வாராந்த அல்லது மாதாந்த அடிப்படை யில் அதற்கான பணத்தை வழங்கலாம். அப் பொறுப்பினை வெளிநாட்டில் உள்ள சங்கங்கள் பொறுப்பேற்கலாம். ஆறாம் வகுப்புக்கு மேற்பட்ட ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் (வருமானம் குறைந்த குடும்பத்தில் உள்ள) துவிச்சக்கர வண்டி வாங்கிக் கொடுக்கலாம். ஒரு சைக்கிள் வண்டியின் விலை தற்போது கனடிய நாணயப்படி $100 டொலர்களாக இருக்கலாம்.

**தேவை: 11**

**குடி நீர் வசதி**

தற்போது இயங்கும் 5 பாடசாலைகளில் குடிநீர்த் தட்டுப்பாடு காணப்படும் பாடசலைகளில் படிக்கும் மாணவர்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுப்பது மிக அவசியமாகும். தண்ணீர் தொட்டி, குழாய் நீர் வசதி என்பவற்றை சமாதானம் தோன்றும் வரைக்கும் நினைத்துப் பார்க்கத் தேவையில்லை. ஆனால் நமது ஊரில் மாட்டு வண்டில், தண்ணீர் பீப்பா வைத்திருப்போருடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு நீர் வசதியை வழங்கலாம். அதற்குத் தேவையான நிதி உதவியை வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கங்கள் செய்யலாம். இதுவரையும் பாடசாலைகளுக்கான தேவைகள் எவை என்பதை யும் அவற்றுக்காக வெளிநாட்டு சங்கங்கள் உதவி செய்ய வேண்டும் என்பதையும் பார்த்தோம். அடுத்து எவ்வகையில் வெளிநாட்டில் உள்ள பழைய மாணவர் சங்கங்கள் இத்தேவைகளை நிறைவேற்று வதற்கு தொழிற்படலாம் என்பதை நோக்குவோம்.

தற்போது புங்குடுதீவில் ஓர் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளதாக அறிகின்றேன். அச்சங்க மானது ஐந்து பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்து பாடசாலைகளுக்கு எவ்வகையான தேவைகள் உள்ளன என்பதை அறிந்து, வெளிநாட்டில் உள்ள சங்கங்களுக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய தகவல்கள் வந்தவுடன் வெளிநாட்டில் இயங்கும் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எந்த நாட்டில் உள்ள சங்கம் எந்த

தேவைகளை பூர்த்தி செய்யப் போகின்றது என்பது பற்றி முடிவெடுக்கலாம். அவ்வாறு முடிவெடுத்து செயற்படத் தொடங்கினால் சிக்கல்கள் அதிகம் இல்லாமல் செயற்பாடு நடக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம் உண்டு. உதாரணமாக மதிய உணவுத் திட்டத்தினை எடுத்துக் கொள்வோம்.

இத் திட்டத்தினை தனியே ஒரு நாட்டில் உள்ள சங்கம் பொறுப்பு எடுக்கத் தயங்கின் தவணை முறைப்படி ஒவ்வொரு நாட்டில் உள்ள சங்கங்களும் பொறுப்பேற்கலாம். முதலாம் தவணைக்குரிய பொறுப்பை கனடாவில் உள்ள சங்கமும், இரண்டாம் தவணைக்குரிய பொறுப்பை லண்டனில் இயங்கும் சங்கமும், மூன்றாம் தவணைக்குரிய பொறுப்பை சுவிற்சர்லாந்து அல்லது பிரான்ஸ் நாட்டில் உள்ள சங்கமும் பொறுப்பேற்கலாம். இதே போன்று மாணவர் போக்குவரத்துக்கு ஏற்படும் செலவை ஒரு நாட்டில் உள்ள சங்கமும், மாணவர்களுக்குத் தேவையான கொப்பி, பென்சில் போன்றவற்றுக்குத் தேவையான செலவை பிறிதொரு நாட்டில் உள்ள சங்கமும் பொறுப்பேறகலாம.

சங்கீதம், நடனம், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்றவற்றை போதிக்கும் பிரத்தியேக ஆசிரியர்களுக்கு வழங்கும் சம்பளத்தை ஒவ்வொரு நாடும் தனித் தனியே பொறுப்பேற்கலாம். ஒவ்வொரு தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு வருடத்துக்கு எவ்வளவு செலவாகும் என்பதை புங்குடுதீவில் இயங்கும் சங்கம் அறிவித்தல் வேண்டும். வெளி நாட்டில் இயங்கும் சங்கங்கள் மிகுந்த அர்ப்பணிப் புடன் பாடசாலை மாணவர்கள், பாடசாலை ஆகிய வற்றின் முன்னேற்றத்துக்காக பாடுபடின் புங்குடுதீவு மாணவர்களின் கல்வித் தரத்தை வெகுவாக உயர்த்த முடியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. வெளிநாடுகளில் வாழும் புங்குடுதீவு மக்கள் சங்கங்களுக்கு தாராளமான நிதி உதவியை செய்வதன் மூலமே இதனை செய்ய முடியும்.

• • • • • • • • • •

## புங்குடுதீவு மகா வித்தியாலய கீதம்

மலர் கலை உயர்தரு மகா வித்தியாலயம்
வான் புகழ் ஓங்கியே வாழ்க!
விஞ்ஞானக் குன்றின் மிளிர் ஞானச் சுடரே
மெஞ்ஞானம் வளம் பெற வாழ்க!
எத்திசையேகினும் யாதும் ஊரே
யாவரும் கேளீர் எனவே
கதிதமிழ் மாணவவீர கற்பவை கடைப்பிடித்திடுக!
வாழ்க! பெரும் பெயர் வாழ்க
மணிக்கொடி புங்குடுதீவக மெடுத்தே
வான் புகழ் வாகை அழைக்க
வாழ்க! வாழ்க!! மா வித்தியாலயம் வாழ்க!
எங்கள் மகா வித்தியாலயம் வாழ்க!

# புங்குடுதீவின் சமய, பண்பாட்டு மரபுகள்

பேராசிரியர் வி.சிவசாமி
சமஸ்கிருதத்துறை,
யாழ்-பல்கலைக்கழகம்.

இலங்கையின் வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டினை அடுத்துள்ள பல தீவுகளில் வேலணைத்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, காரைதீவு (காரைநகர்) எனும் ஏழு தீவுகளும் குறிப்பிடற்பாலன. இவை சப்த (ஏழு) தீவகள் அல்லது தீவகம் எனவும் அழைக்கப்படும். யாழ்ப்பாணக் குடாநாடு போல தீவகமும் ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால வரலாற்றினைக் கொண்டதாகும்.

ஏனைய தீவுகளைப் போலவே இதுவும் நாலாபக்கமும் கடலாலே சூழப்பட்டு ஏனைய பிரதான தீவுகளுக்கு நடுவண் அமைந்துள்ளது. இத்தீவு "ப" வடிவிலானது. இதிலே சில ஓடைகளும், முனைகளும் உள்ளன. இதுவும் வேலணைத்தீவும் அம்பலவாணர் தாம்போதியாலும், வேலணைத்தீவும், யாழ்ப்பாண நகரும் பண்ணைத் தாம்போதியாலும் இணைக்கப்பட்டுள்ளன. கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குள்ளேயே இத்தாம் போதிகள் அமைக்கப்பட்டவை. இவற்றின் மூலம் மக்களுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாகப் போக்குவரத்து சுலபமாகவும், குறுகிய காலத்திலே செய்யக் கூடியதாகவும் ஏற்பட்டுள்ளது.

இத்தீவு 11.2 சதுரமைல் கொண்டதாகும். யாழ்ப்பாணக் குடாநாடு போன்று ஏனைய தீவுகளும் மயோசீன் காலத்தில் கடலிலிருந்து சுண்ணாம்புக் கற்பாறைத் திடலாக உயர்த்தப்பட்டவை எனக் கூறப்படுகிறது. இங்குள்ள மண் பொதுவாகச் சாம்பல் நிறமுள்ளதாகும். சில இடங்களில் குறிப்பாக வடகிழக்கு, தென்கிழக்குப் பகுதிகளில் மணலும் காணப்படுகின்றது. நிலத்தின் கீழே சுண்ணாம்பு மக்கியும் சில இடங்களில் கற்பாறைகளும் உள்ளன. எனினும் மழை நீரைக் குறிப்பிட்ட காலத்திற்குத் தேக்கி வைக்கக்கூடிய தன்மை குறைவு.

இங்கு தரைத்தோற்றம் பொதுவாகச் சமமாகவே காணப்படுகின்றது. ஆக உயர்நத பகுதிகளான மாவுதிடல், வீராமலைப் பகுதிகள் 10-15 அடி உயர முடையதாகும். இவை தென்கிழக்கில் உள்ளன. இங்கு பருவ மழை பொதுவாக ஒக்டோபர் தொடக்கம் டிசம்பர் வரை பெய்யும். மேலும் மார்ச், ஏப்ரல், மே, ஜுலை, ஆகஸ்டு. செப்டெம்பர் மாதங்களில் சிறிதளவு சில ஆண்டுகளில் பெய்யும். வரட்சியே கூடுதலாக உள்ளது. ஆண்டுதோறும் சராசரி மழைவீழ்ச்சி 40-50 அங்குலமாகும்.

இங்கு தமிழர்களே வாழ்கின்றனர். இங்கு முற்காலத்திலிருந்து வாழ்ந்து வந்த மக்கள் தொகையை அறிய முடியாதுள்ளது. கி.பி. 17 ஆம் நூற்றாண்டைச் சேர்நத போர்த்துக்கீச மதகுருவான குவேறோஸ் சான்றுப்படி புங்குடுதீவிலே 800 மக்கள் வாழ்ந்தனர். ஏறக்குறைய இதேகாலத்தைச் சேர்ந்த ஒல்லாந்த மதகுருவான போல்டேயஸ் என்பவரும் இத்தொகையினைக் குறிப்பிடுகிறார். 1824 ஆம் ஆண்டு இலங்கைக் குடிசனக் கணிப்புப்படி 1802 மக்களும், 1834 இலே வெளியிடப்பட்ட சைமன்காசிச் செட்டியின் நூலின்படி 2415 மக்களும், இலங்கைக் குடிசனக் கணக்கின்படி 1871 இல் இங்கு 3966 மக்களும், 1971 இல் 13,766 மக்களும், 1981 இல் 14,622 மக்களும் வாழ்ந்தனர் என அறியப்படுகின்றது. 1991ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின் இங்கு 837 மக்கள் வாழ்ந்தனர். இப்பொழுது (2001 இல்) சுமார் 2000 மக்கள் வாழ்கின்றனர்.

இத்தீவிலே நிலவி வந்துள்ள சமய, பண்பாட்டு மரபுகள் பற்றிச் சுருக்கமாக இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. இவ்விடயங்கள் பற்றிய தகவல்கள் செவ்வையாக, ஒழுங்காக பதிவு செய்யப்பட்டும் பேணப்பாடத காரணத்தால் இவை பற்றி விபரமாவோ, உறுதியாகவோ கூறமுடியாது

உள்ளது. இதைவிட 1991 இல் ஏற்பட்ட பெரிய அளவிலான மக்கட் புலப்பெயர்ச்சியினாலும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகளாலும் எஞ்சி இருந்த தகவல்களையும், சில அறிஞர் சேகரித்து வைத்திருந்த அரிய நூல்களையும், பிறவற்றையும் பெருமளவு இழக்க நேரிட்டது. எனினும் எஞ்சி இன்று கிடைக்கக் கூடிய சில தரவுகளின் அடிப்படையிலே சில கருத்துக்களைக் குறிப்பி டலாம்.

இங்கு கிறிஸ்துவுக்கு முற்படட காலம் தொடக்கம் திராவிடர் குறிப்பாகத் தமிழர் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் மத்தியிலே இந்துசமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் நிலவின எனலாம். கி.மு. 3ஆம் நூற்றாண்டில் இலங்கை யிலே பௌத்தம் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இங்கும் பௌத்தம் பரவிற்று. தனிப்பட்ட நாடுகள் போலத் தனிமையான தீவுகளும் சமய ஞானிகளின் தியானத்திற்கு உகந்தவையாக விளங்கி வந்துள்ளன. இவ்வகையில் இந்து, பௌத்த துறவிகளுக்கு ஏற்ற இடமாகவும் தீவுகள் விளங்கின. மகாவம்சம் போன்ற நூல்களின் படியும், கல்வெட்டின் படியும் புங்குடுதீவு முற்காலத்திலே புகழ்பெற்ற ஒரு பௌத்த கேந்திர நியைமாக விளங்கியதாகக் கூறப்படுகிறது. இங்கு 1200 பௌத்த குருமார் இருந்தனர் எனவும், இவர்களில் சிலர் மிக உயர்ந்த பௌத்த ஞான நிலையிலுள்ள "அர்ஹந்த்தஸ்களாக" விளங்கினர் எனவும் மகாவம்சம் கூறும். அவர்களில் எண்மர் எல்லாளனுக்கு எதிராகத் துட்டகாமினி (கைமுனு) நடத்தி வெற்றி பெற்ற போரிலே பெருந் தொகையினர் கொல்லப்பட்டமை குறித்துத் துட்டகாமினி (கி.மு. 2ம் நூற்றாண்டு) மிகவும் மனம் நொந்தபோது அவனுக்கு ஆறுதல் கூறி அவனைத் தேற்றினர் எனவும் இந்நூல் கூறுகின்றது. மேலும் வடமராட்சியிலுள்ள வல்லிபுரத்திலே சென்ற நூற்றாண்டிலே கிடைத்த கி.மு 2ம் நூற்றாண்டைச் சேர்ந்த வசபனின் சாசனத்திலே நாகதீபத்தினை (யாழ்ப்பாணக் குடா நாட்டினை/வட இலங்கையை) அவனுடைய மந்திரியான இசிகிரிய என்பவன் ஆட்சி நடத்தியபோது பியகுகதிஸ என்பவன் ஒரு விகாரையைக் கட்டினான் எனக் கூறப்பட்டுள்ளது. இதிலே வரும் பியகுகதிஸ என்பதைப் பியங்கு தீபத்தை (புங்குடுதீவைச்) சேர்ந்த திஸ எனவும் ஒரு சாரார் பொருள் கொள்ளுவர். எனவே கிறிஸ்து வுக்கு முற்பட்ட, பிற்பட்ட இரு நூற்றாண்டுகளில் இத்தீவிலே பௌத்தம் நன்கு நிலவியிருக்கலாம். கி.பி. 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததும், இலங்கையிலுள்ள பௌத்த புனித இடங்களைக் குறிப்பிடுகின்றதுமான நம்பொத்த எனும் நூலிலே யாழ்ப்பாணத்திலுள்ள பௌத்த தலங்களில ஒன்றாகப் புங்குடுதீவும் கூறப்படுகின்றது. எனவே இங்கு ஒரு நீண்டகாலப் பௌத்த பாரம்பரியம் நிலவியிருக்கலாம்.

இலங்கையின் வேறு பல இடங்களைப் போலவே இந்துசமயமும், பௌத்தமும் அக்கம் பக்கமாகத் தொன்று தொட்டு நிலவி வந்தன எனலாம். மேலும் இங்கு வாழ்ந்த பௌத்தர்களில தமிழ்ப் பௌத்தரும் இருந்திருப்பர். ஒரு கால கட்டதிலே தமிழ்நாட்டிலே பௌத்தம் நன்கு நிலவியிருந்தமை குறிப்பிடற்பாலது. அங்கும் இந்துசமயத்துடன் பௌத்தமும், சமணமும் நிலவி வந்துள்ளன. மேலும் புங்குடுதீவு திகழியிற் பெறப்பட்ட புத்தர் சிலை ஆந்திரதேச பௌத்தக் கலை மரபையொத்துள்ளது. மேலும் சில பௌத்த சிலைகள் இங்கு காணப்பட்டதாக அறியப்படுகிறது. ஆனால் அவற்றிற்கு என்ன நடந்ததென்பது தெரியாது. தமிழ்நாட்டிலே கி.பி. 6 ஆம் நூற்றாண்டுப் பிற்பகுதியிலேற்பட்ட சைவ, வைணவ சமய மறுமலர்ச்சி, குறிப்பாகப் பக்தி இயக்கத்தின் விளைவாகத் தமிழ் நாட்டை போன்று இங்கும் சில இடங்களில் புத்த சமயத்திற்குப் பின்னடைவு ஏற்பட்டு வைதிக சமய மறுமலர்ச்சி ஏற்பட்டி ருக்கலாம்.

தமிழகத்திலே பல்லவர்-பாண்டியர் காலத் திலும், (கி.பி.6-9 ஆம் நூற்றாண்டு வரை) சோழப் பெருமன்னர் காலத்திலும், (கி.பி.9-12ம் நூற்றாண்டு வரை) தொடர்ந்து ஏற்பட்ட பாண்டியப் பேரரசு (கி.பி.13ம் நூற்றாண்டு) காலத்திலும் இலங்கையிலே இந்து சமயச் செல்வாக்கு முன்னிலையிலும் அதிகரித்தது. கி.பி. 13ஆம் நூற்றாண்டு நடுப் பகுதியிலே பாண்டியப் பேரரசு அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு தமிழரசு ஒன்று நிறுவப்பட்டது. அது கி.பி 1619லே போர்த்துக்கீசர் அதனைக் கைப்பற்றும் வரை நிலவிற்று. மேற்குறிப்பிட்ட தமிழரசு காலத்திலே இந்துசமயச் செல்வாக்கு மேலும் அதிகரித்தது. தொடர்ந்து ஏற்பட்ட போர்த்துக்கீசர் காலத்திலே

(கி.பி 1656-1796 வரை) புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ சமயமும் மேலோங்கின. எனினும் பிரித்தானியர் காலத்திலே (1796-1948 வரை) பொதுவாக சமய சுதந்திரம் நிலவி வந்தது. 19 ஆம் நூற்றாண்டிலே இந்துசமயம் ஆறுமுகநாவலர் தலைமையிலே மறுமலர்ச்சி அடைந்தது. புங்குடுதீவிலே பொதுவாக இந்துசமயப் பாரம்பரியம் நிலவி வந்துள்ளது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்தைய கிறிஸ்தவ சமய நினைவுச் சின்னங்கள் எவையேனும் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. இன்று இங்குள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள் 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களிலே மக்கள் கிறிஸ்தவ தேவாலயங்களுக்குச் செல்வதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டனர். அதேவேளையில் இந்து சமயக் கோவில்கள் மிகவும் பாதிப்புற்றன.

ஆனால் ஒல்லாந்தர் ஆட்சி முடிவிலும், பிரித்தானியர் ஆட்சி தொடங்கிய பின்னரும், ஐரோப்பாவிலேற்பட்ட தாராள சிந்தனைகளைத் தொடர்ந்தும் மத சுதந்திரம் ஏற்படலாயிற்று. எனவே யாழ்ப்பாணத்தின் ஏனைய இடங்களிற் போலவே இங்கு இந்துக் கோயில்கள் பல அமைக்கப்பட்டன. இவ்வாறு இமைக்கப்பட்டுள்ளவற்றுள் 19 ஆம் நாற்றாண்டு முற்பகுதியிலே மாரியம்மன் கோயில் (1800), கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோவில் (1805), முருகமூர்த்தி கோயில்(1805), இறுப்பிட்டி அம்மன் கோயில் (1815), மூத்த நயினாபுலம் வீரகத்தி விநாயகர் கோயில் (1820), குறிகட்டுவான் பேய்ச்சி அம்மன் (மனோன்மணி) கோயில் (1800), நாச்சிமார் கோயில் (1810), ஐயனார் கோயில் (1850) முதலியன குறிப்பிடற்பாலன. இங்குள்ள பிள்ளையார் ஆலயங்கள் பலவற்றையும், யாழ்ப்பாணத்திலும் பல பிள்ளையார் ஆலயங் களையும் இனங்காத்த முதலியென்பவர் நிறுவினார் என்று கூறப்படுகிறது. ஆனால் இவரைப் பற்றிய தகவல்கள் பிரம்பமாகக் கிடைத்த பின்பே இதுபற்றிக் கூடுதலாகக் கூறமுடியும். மூன்று முருகன் ஆலயங்கள் உள்ளன. முத்துமாரியம்மன், கண்ணகி அம்மன் (ராஜ ராஜேஸ்வரி), பேய்ச்சி அம்மன், காளி அம்மன், பட்டையார் அம்மன் எனப்பல அம்மன் ஆலயங்கள் உள்ளன. இரு நாச்சிமார் கோயில்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று சென்ற நூற்றாண்டிலே முருகன் ஆலயமாக மாற்றப்பட்டுள்ளது. இதுபோலவே கண்ணகியம்மன், பேய்ச்சி அம்மன் ஆலயங்கள் முறையே ராஜராஜேஸ்வரி, மனோன்மணி ஆலயங்களாகி விட்டன. 19 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட ஊரதீவு பாணாவிடை ஐயனார் ஆலயம் சிவாலயமாக்கப் பட்டுள்ளது. இவ்வாறு முன்னர் ஆகம மரபைச் சாராத கோவில்களில் சில ஆகம மரபிற் கேற்றவாறு மாற்றம் அடைந்துள்ளன. எனினும் பொதுமக்கள் பலர் இவ்வாலயங்களைப் பழைய பெயர்களாலேயே அழைத்து வருவதும் குறிப்பிடற்பாலது. வைரவர், ஐயனார் கோயில்களை இத்தீவின் பல இடங்களில் காணலாம். மேலும் பத்திர காளி, நாகதம்பிரான், அநுமான், பெத்தப்பு கோயில்களும் உள்ளன.

இங்குள்ள இரு சிவன் கோவில்களும் 20 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டவை இவற்றுள் ஒன்று ஏற்கனவே குறிப்பட்டவாறு ஐயனார் ஆலயமாக விளங்கிப் பின்னர் மாற்றம் அடைந்துள்ளது. கிராஞ்சியம்பதியிலுள்ள மற்றைய சிவாலயம் - மீனாசஷி சுந்தரேஸ்வரர் ஆலயம் - நித்திய பூசைகள் நைமித்திய கிரியைகள், விழாக்கள் ஒழுங்காக நடைபெறும் கோவில்களில் ஒன்றாகும். இங்குள்ள ஆலயங்களை அமைப்ப திலும் சிறப்பாக நிர்வகிப்பதிலும் பொதுமக்கள் மட்டுமன்றிக் குறிப்பாக அரச ஊழியர்கள் வர்த்தகப் பெருமக்களின் பங்களிப்புக்கள் நன்கு குறிப்பிடத் தக்கவை. இங்குள்ள சுமார் 15 ஆலயங்கள் மகோற்சவம் நடைபெறும் ஆலயங்களாகும். இவற்றுட் சிலவற்றிற்கு ராஜகோபுரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் 1991 இல் ஏற்பட்ட மக்கள் புலப்பெயர்ச்சியால் பல ஆலயங்கள் நன்கு பாதிக்கப்பட்டுள்ளன. சிலவற்றிற்கு ராஜகோபுர அத்திவாரம் இடப்பட்டு முற்றுப் பெறாமல் உள்ளது. எனினும் பல ஆலயங்களில் மீண்டும் நித்திய பூசைகளும், சில விழாக்களும் தொடக்கப் பட்டுள்ளன.

நாவலர் பெருமான் முன்னெடுத்த கந்தபுராண கலாசாரம் நன்கு நிலவி வந்துள்ளது. நாவலரின் சிஷ்ய பரம்பரையினர் சிலர் வேலணையிலும், இங்குமிருந்தனர். அவர்களில் ஒருவர் கந்தப்பிள்ளை. அவர் வேலணையிலே வாழ்ந்தாலும் அவரின் முன்னோர் புங்குடுதீவைச் சேர்நதவர்கள். வேலணையை சேர்ந்த சைவ நாகலிங்கம் என்பவரின் பல மாணவர்கள் இங்கு இருந்தனர்.

இங்குள்ள சில கோயில்களில் குறிப்பாக இறுபிட்டி மூத்த நயினார்புலம் வீரகத்தி விநாயகர் ஆலயம், கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோயில், கலட்டி விநாயகர் ஆலயம், மடத்துக்கள பிள்ளையார் ஆலயம் முதலியனவற்றிலே பல ஆண்டுகளாக கந்தபுராணப் படலம் பக்தி பூர்வமாக நடைபெற்று வந்துள்ளது. கந்தபுராணத்திற்கு உரை சொல்லு வோர்களில் ச.வினாசித்தம்பி ஆசிரியர், நா.தில்லையம்பலம் ஆசிரியர், வைத்தியர் க.கணபதிப்பிள்ளை, க.சதாசிவம்பிள்ளை ஆசிரியர், கை.நாகமணி, க.சேதுபதி ஆசிரியர், வித்துவான் பொன்.கனகசபை முதலியோர் குறிப்பிடற்பாலர். புராணம் வாசிப்பதிலும் பல ஆசிரியர்களும், பிறரும் மிக்க தேர்ச்சி பெற்றிருந்தனர். இவர்களில் ஆ.கந்தையா, நா.அப்பாப்பிள்ளை, க.சுப்பிரமணியம், கு.விநாயகமூர்த்தி, மா.பரராஜசிங்கம் ஆசிரியர், க.கணபதிப்பிள்ளை, நாகலிங்கம், தி.சதாசிவம் ஆசிரியர் முதலியோரைக் குறிப்பிடலாம்.

புராண படலம் சமய அறிவை மட்டுமன்றித் தமிழ் அறிவையும் மக்களிடத்தே வளர்க்க நன்கு உதவிற்று. கந்தபுராணத்தைச் செவிவழியாகக் கேட்டு மனனம் செய்த ஆண்கள் மட்டுமன்றிப் பெண்களும் இருந்தனர். கந்தபுராணத்தை விட சைவத் திருமுறைகளிலும், வேதங்கள், ஆகமங்கள் முதலியனவற்றிலும் தேர்ச்சி பெற்ற அந்தணப் பெருமக்கள் இங்கு வாழ்ந்து வந்தனர். இவ்வகையில் சாமிநாதக்குருக்கள், ஐ.கைலாச நாதக்குருக்கள், தி.சதாசிவக்குருக்கள், பொ. சொர்ணலிங்கக்குருக்கள், ஸ்ரீ நிவாசக்குருக்கள் போன்றோரைக் குறிப்பிடலாம். தமிழிலும், சைவசமயம், சைவசித்தாந்தம் ஆகியனவற்றிலும் மிகத் தேர்ச்சியுள்ளோரிலே வைத்தியர் க.கணபதிப்பிள்ளை, வித்துவான் பொன்.கனகசபை, வித்துவான் சி.ஆறுமுகம், க.சதாசிவம்பிள்ளை, பண்டிதர் வி.வ.நல்லதம்பி, பண்டிதர் மு.ஆறுமுகம், க.சிவராமலிங்கம் போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்களிலே க.கணபதிப்பிள்ளை சித்த வைத்தியராக விளங்கியதோடு சைவசித்தாந் தத்திலே மிக்க புலமையுள்ளவராக விளங்கினார். சிவாச்சாரியார்கள் உட்படப் பலர் அவரிடம் சைவசித்தாந்தம் பற்றி அறிந்து தெளிவு பெற்றனர். இவருடைய சகோதரர் க.சதாசிவம்பிள்ளை ஆசிரியரும் தமிழிலும், சைவத்திலும் மிக்க புலமை பெற்றிருந்தார். இவர் கவிஞரும் ஆவார். இவர் பல கட்டுரைகளையும், சில நூல்களையும் எழுதியுள்ளளார். அவற்றுள் ஒன்று திருக்கேதீச் சரத்திலுள்ள அம்பாள் பற்றிய "கௌரியம்மை பிள்ளைத் தமிழ்", எனும் நூலாகும். வித்துவான் பொன்.கனகசபையும் பல கட்டுரைகளும், நூல்களும் எழுதியுள்ளார். இருவரும் ஒரு கவிஞர். சைவசித்தாந்த நூல்கள் சிலவற்றிற்கு உரை எழுதியுள்ளார். இங்குள்ள சில ஆலயங்கள் மீது பாடல்கள் இயற்றியுள்ளார்.

பிரபல வைத்திய, சோதிடர் சி.குருமூர்த்தி சாஸ்திரியார் சைவசமயத்திலும், சைவ சித்தாந் தத்திலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர். கவிபாடும் திறனுடையவர். இவரின் செயற்பாடுகள் மலேசியா விலும் பல ஆண்டுகள் இடம் பெற்றன. அங்கு 1940 ஆம் ஆண்டு "அறிவானந்த ஞான குருதீபம்" எனும் சைவசமய நூலை வெளியிட்டு உள்ளார். இவர் புங்குடுதீவிலுள்ள சில ஆலயங்கள் பற்றிய பாடல்களும், செல்வச்சந்நிதி முருகன் பற்றி "செல்வச்சந்நிதி முருகன் நான்மணிமாலை"யும் இயற்றியுள்ளார். மேலும் மலேஷியாவில் "நிப்பன் (யப்பான்) ஆட்சியின் நிஷ்டூரங்கள்", எனும் கும்மிப் பாடலையும் இவர் இயற்றியவர். 19ஆம் நூற்றாண்டில் இங்கு வாழ்ந்த இராமலிங்கச் சட்டம்பியார் கேரநகர் (கேரதீவு), அரிகரபுத்திரப் (ஐயனார்) பதிகம் பாடியுள்ளார். இதைவிட கப்பற் பாட்டு, புயற் பாட்டு முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவர்களை விட இங்குள்ள பல ஆலயங்கள் பற்றிப் பலர் பாடல்கள் இயற்றி யுள்ளனர்.

இங்கு வாழ்ந்த சைவப் பொரியார்களில் வை. பசுபதிப்பிள்ளை நன்கு குறிப்பிடற்பாலர். இவர் தமிழ், ஆங்கிலம், சைவசமயம், சைவ சித்தாந்தம் முதலியனவற்றிலே சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார். விதானையாராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்தவர். சுமார் 25 ஆணடுகளாகப் புங்குடுதீவு கிராமசபைத் தலைவராக விளங்கிப் பல சமய, சமூகத் தொண்டுகள் புரிந்தவர். இங்கு கனேச வித்தியா சாலை போன்ற சில சைவப் பாடசாலைகளை நிறுவியவர். சைவ வித்தியா விருத்திச் சங்கச் செயலர் இராஜரத்தினத்துடன் சேர்ந்து வேறு பாடசாலைகள் அமைப்பதற்கும் உதவியவர். அந்தணச் சிறுவர்களுக்கு வேதாகமக்கல்வி யையும், கிரியைகளையும் நன்கு புகட்டுவதற்காகச்

சென்ற நூற்றாண்டின் நாற்பதுகளில் இவர் ஒரு வேதாகம பாடசாலையினை கிராஞ்சியம்பதியிலே நிறுவிப் பாடசாலை ஆசிரியர்கள் முதலியோரின் உதவியுடன் சுமார் இரு தசாப்தங்களுக்கு நடாத்தி வந்தார். அப் பாடசாலை ஆசிரியராக இந்தியாவைச் சேர்ந்த கி.நாராயணசாஸ்திரிகள் விளங்கினார். திரு. வை.பசுபதிப்பிள்ளை யாழ்ப்பாணத்திலும் ஒரு வேதாகம பாடசாலை நிறுவமுயன்றார். ஆனால் அம்முயற்சி வெற்றி பெறாது சிலர் தடுத்தனர். இங்கு கல்வி கற்றவர்கள் பலர் இன்று பிரபல சிவாச்சாரியர் களாக விளங்குகின்றனர். இவ்விடத்தைச் சேர்ந்தவரும், சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத் தலைவருமான சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்களும் இப்பாடசாலையிலே கல்வி பெற்றவர் என்பது குறிப்பிடற்பாலது.

இவ்விடத்தைச் சேர்ந்த சைவப்பெரியார்கள் ஞானிகளில் ஏற்கனவே குறிப்பிட்டோரை விட, விதானை சந்திரசேகரத்தின் சகோதரர்(19ம் நூற்றாண்டு) சரவணமுத்து சுவாமிகள், சுப்பிரமணிய சுவாமியார், ம.நமச்சிவாய தேசிகர் முதலியோரைக் குறிப்பிடலாம். சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கு 15 பாடசாலைகள் நன்கு செய்யப்பட்டு கல்விப்பணி செய்து வந்தன. ஆனால் இன்று ஐந்து பாடசாலைகளே இயங்கி வருகின்றன. 19 ஆம் நூற்றாண்டிலே மூன்று அமெரிக்கன் மிஷன் பாடசாலைகளும் பின்னர் பல சைவப் பாடசாலைகளும், ஒரு உரோமன் கத்தோலிக்க பாடசாலையும் அமைக்கப்பட்டன. 1946 ஆம் ஆண்டு அரசினர் கனிஷ்ட ஆங்கில பாடசாலை தொடக்கப்பட்டது. இது இன்று புங்குடுதீவு மகா வித்தியாலயமாக விளங்குகின்றது. தமிழுடன் ஆங்கிலக் கல்வியை முன்னெடுப்பதில் இந் நிறுவனம் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளது. இங்கு கற்ற மாணவர்களில் பலர் அரசாங்க சேவையிலும், வேறு நிறுவனங்களிலும் சிறப்பாகப் பணிபுரிந்து வந்துள்ளனர்.

இவ்விடத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு சாரார் அரசாங்க சேவை, பல்கலைக்கழகங்கள், தனியார் சேவை நிலையங்கள், வர்த்தக நிறுவனங்கள் முதலியனவற்றிலே சிறப்பாகப் பணியாற்றி வந்துள்ளனர். திரு.என்.ஏ.வைத்திலிங்கம் இவ் விடத்தைச் சேர்நத காலத்தால் முற்பட்ட விஞ்ஞானப் பட்டதாரியாவார். இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிலே பயின்று லண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானக் கலைமாணி (B.Sc) பட்டம் பெற்றுப் பின்னர் இங்கிலாந்து சென்று பொறியியலில் மேற்படிப்பினை வெற்றிகரமாக முடித்தவர். இலங்கையின் பல இடங்களிலும் அரும் பணியாற்றி, புகையிரதச் சேவைப் பிரதம பொறியியலாளராக விளங்கியவர். அநுராதபுரம், யாழ்ப்பாணம் புகையிரத நிலையைங்கள் அவரின் தொழில் நுட்பத்திறனையும், கை வண்ணத்தையும் இன்றும் சுட்டிக்காட்டுவன. இவர் புங்குடுதீவுக்குப் பல சமூக சேவைகள் செய்துள்ளார். இவர் முன்னர் குறிப்பிட்ட பசுபதிப்பிள்ளையின் மருகர். ஓய்வுபெற்ற பின் வெளி நாடுகளிலும் பணிசெய்தவர். திரு.க.மகாலிங்கம் ஆரம்பகால கலைப் பட்டதாரி யாவர். இவர் பல இடங்களில் சிறப்பாக ஆசிரிய சேவை செய்துள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதலாவது புவியியற் போராசிரியரான அமரர் சோ.செல்வநாயகம் ஒரு பிரபல புவியியலாளரும் தமிழறிஞருமாவார். இவர் இவ்வூரைச் சேர்ந்தவரே. மேலும் பேராசிரியர் தயாளன் அம்பலவாணர் (அறுவைச்சிகிச்சை), பேராசிரியர் கா.குகபாலன் (புவியியல்), பேராசிரியர் வி.சிவசாமி (சமஸ்கிருதம்), த.தமிழ்மாறன் (சட்ட முதுநிலை விரிவுரையாளர்), ந.பேரின்பநாதன் (முன்னாள் பொருளியல் விரிவுரையாளர்) முதலி யோரும் இவ்விடத்தைச் சேர்ந்தவர்களே. இவர்களை விட விஞ்ஞானம், பொறியியல், நூலகவியல் முதலிய பிற அறிவியல் விரிவுரை யாளர் சிலர் உள்ளனர். பல்கலைக்கழகத்துக்கு வெளியிலும் இவ்விடத்தைச் சேர்ந்த கணிசமான தொகை பொறியியலாளர்கள், (மேலைத்தேய, சுதேச) வைத்தியர்கள், கலை, விஞ்ஞான, விவசாய பட்டதாரிகளும், கணக்காளரும் உள்ளனர்.

முன்னாள் வடமாநிலக் கல்விப்பணிப்பாளரும், சமய வித்தகியுமாகிய திருமதி ரத்தினா நவரத்தினம், அவருடைய கணவர் நவரத்தினம் ஆகியோர் இவ்வூரைச் சேர்ந்தவர்களே. திருமதி நவரத்தினம் ஆங்கிலம், தமிழ், கல்வியியல், சைவசமயம், சைவசித்தாந்தம் ஆகியவற்றிலே சிறந்த தேர்ச்சி பெற்றவர். யோகர் சுவாமிகளின் பிரபல சிஷ்யை, பல நூல்கள் எழுதியவர். பிரபல நூலகர் கலாநிதி பாக்கியநாதனும், அவருடைய பாரியாரும் இவ்வூரைச் சேர்ந்தவர்கள்.

கல்விச் சேவையிலும், நிர்வாக சேவையிலும் சிலர் குறிப்பாகப் பணி செய்துள்ளனர். செய்து வருகின்றனர். நிர்வாக சேவையிலே பிரபல நிர்வாகி நாராயணசுவாமி, திட்டமிடல் நிபுணர் தி.திரிலிங்கநாதன், தற்போதைய யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க.சண்முகநாதன், வடகிழக்கு மாகாண அமைச்சிலே பணியாற்றும் இளங்கோ முதலியோரை குறிப்பிடலாம். கல்விச் சேவையில் ஏற்கனவே குறிப்பிட்ட திருமதி இ.நவரத்தினத்தை விட யாழ்ப்பாண முன்னாள் கல்விப் பணிப்பாளர் த.துரைசிங்கம், வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சிலே உதவிச் செயலாளராகப் பணியாற்றிய எஸ்.சடாட்சரசண் முகதாஸ் தற்போதைய அதிகாரிகளான க.புலேந்திரன். எஸ்.மகாலிங்கம், யாழ்-கல்வி வலயத்தைச் சேர்ந்த மு.சிவபாதம் முதலியோரைக் குறிப்பிடலாம். முன்னாள் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளரும் தற்போது வடகிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருமான பொ.பாலசிங்கம் இவ்விடத்தைச் சேர்ந்தவரே. கூட்டுறவு முன்னாள் உதவி ஆணையாளர் யோ. சின்னராஜாவும் இவ்விடத்தைச் சேர்ந்தவரே.

குறிப்பிடத்தக்க சில தமிழ் அறிஞர்கள் இவ்விடத்தைச் சேர்ந்தவர்கள். தனித் தமிழ் இயக்கத் தலைவரும் சிறந்த தமிழ், சைவ, ஆங்கில அறிஞரும், ஆய்வாளருமான மறைமலை அடிகளின் தாயார் இவ்வூரைச் சேர்ந்தவர் என்ற ஐதீகமுண்டு. இது நன்கு ஆராயப்பட வேண்டியதாகும். இலங்கைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் வி.செல்வநாயகம் இவ்வூரைச் சேர்ந்தவர். இவருடைய மூத்த சகோதரரின் மகனாகிய எஸ்.சிவஞானசுந்தரம் (நந்தி) சமூக மருத்துவப் பேராசிரியரும் பிரபல எழுத்தாளருமாவார்.

தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்கள், பேச்சாளர்களில் சிலர் பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. க.சிவராமலிங்கம் அவரது சகோதரர் ஈழத்துச் சிவானந்தன், த.திருநாவுக்கரசு (நாவேந்தன்) ஆகியோர் சிறந்த தமிழ்ப் பேச்சாளர்களும் எழுத்தாளர்களுமாவர். முன்னையவர் ஆங்கிலத்திலும், சைவத்திலும், தமிழிலும் சிறந்த புலமை உடையவர். சிவானந்தன் சில நூல்களை எழுதியதோடு "ஆலயமணி" சஞ்சிகையையும் சிறிது காலம் பிரசுரித்தவர். நாவேந்தன் பல நூல்களை எழுதியுள்ளார். இவருடைய சகோதரர் த.துரைசிங்கம் சிறந்த எழுத்தாளர், பேச்சாளர் மட்டுமன்றி கவிஞரும். குறிப்பாகக் குழந்தைக் கவிஞராவார். மு.தளையசிங்கம், மு.பொன்னம்பலம் சகோதரர்கள் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களும், பேச்சாளர்களுமாவர். இருவரும் இலங்கைப் பல்கலைக்கழகத்திலே கலைமாணிப் பட்டப்பயிற்சி பெற்றவர்கள். இவர்கள் இருவரும் பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளனர். கவிதைகளும் இயற்றியுள்ளனர். இலக்கியத்திலே முற்போக்கு வாதத்தைத் தீவிரமாக எதிர்த்தவர்கள். ஆக்க இலக்கியத்துடன் திறனாய்வு, சமய சமரசம் முதலியனவற்றையும் ஆதரித்துள்ளனர். இவர்களுடைய மாணவரான சு.வில்வரத்தினம் ஒரு சிறந்த கவிஞராவர்.

1954ம் ஆண்டு இங்குள்ள கண்ணகி அம்மன் ஆலய முன்றலிலே சிலப்பதிகார விழா சுமார் ஒரு கிழமைக்கு கோலாகலமாக நன்கு நடைபெற்றது. அதற்கு இலங்கையிலுள்ள தமிழ் அறிஞர் பலர் மட்டுமன்றித் தமிழகத்திலிருந்து சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம், பேராசிரியர் ஆ. முத்துசிவன், பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் முதலியோரும் பங்கு பற்றிச் சிறப்பித்தனர். சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கு தேம்பாவணி விழா நடைபெற்றது. புகழ் பெற்ற இசைக் கலைஞர் சீர்காழி கோவிந்தராஜனின் இசைக்கச்சேரி கிராஞ்சியம்பதி சிவன் கோவிலில் நடைபெற்றது.

வட இலங்கைச் சர்வோதயத்தை உருவாக்கி அதனை இங்கு சிறப்பாக நடத்தி வரும் க.திருநாவுக்கரசு இவ்விடத்திற்குப் பல ஆண்டுகளாகப் பல திறப்பட்ட சமூக சேவைகளை ஆற்றி வந்துள்ளார். அவர் சிறந்த பேச்சாளருமாவார். "தீவகம்" எனும் சஞ்சிகையைச் சில காலம் நடத்தியவர். அதிபர் கு.வி.செல்லத்துரை தமிழ்ப் பேச்சாளரும் எழுத்தாளருமாவார். இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் தலைவராகவும் விளங்கியவர். இவரது சகோதரர் கு.வி.தம்பித்துரை யாழ்ப்பாணத்திலே "கலைவாணி" அச்சகத்தையும் புத்தகசாலையையும் நிறுவி நடத்தி வந்தவர். உள்ளூரிலே விவசாயம், கடற்றொழில் முதலியன செய்வோரை விட ஏனையோரிற் பலர் வர்த்தகர்,

களாகவும் ஆசிரியர்களாக குறிப்பாகத் தமிழ் ஆசிரியர்களாகவும் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும், பிற இடங்களிலும் விளங்கி வந்துள்ளனர். குறிப்பிட்ட இடங்களிலே வர்த்தகம் செய்து பிரபல்யமுற்றோர் அவ்வவ்விடப் பெயர்களோடு சேர்த்தும் அழைக்கப்பட்டனர். எடுத்துக்காட்டாக பொறளை நாகலிங்கம், பதுளை வைத்திலிங்கம், டிக்கோயா நாகலிங்கம், தரணியக்கல தம்பு, நுவரெலியா கார்த்திகேசு, யக்குவெல கந்தையா முதலியோரைக் குறிப்பிடலாம். புங்குடுதீவின் பொருளாதார வளத்திற்கும், தமிழ், சமயப் பணிகளுக்கும் வர்த்தகப் பெருமக்களின் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கவை. அம்பலவாணர் சகோதரர்கள்(பெரியவாணர் க.அம்பலவாணர், சின்னவாணர் சி. அம்பலவாணர்) இவ்விடத்திற்குக் குறிப்பிடத்தக்க சமூக சேவை செய்துள்ளார்கள். அவர்களின் பெயரால் அழைக்கப்படும் வாணர் தாம்போதியை (வேலணையையும் புங்குடுதீவையும் இணைப்பது) அமைப்பதில் முன்னின்று இவர்கள் செயற்பட்டவர்கள். இவர்களின் முயற்சிகளுக்கு கொழும்பிலுள்ள புங்குடுதீவு நலன்புரிச் சங்கமும் பக்கபலமாக நின்றுள்ளது. இதிலே என்.ஏ. வைத்திலிங்கம், சில வர்த்தகப் பெருமக்களும், பிறரும் நன்கு செயற்பட்டனர். அக்காலத்திய ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.தம்பிஐயாவும் இம்முயற்சிக்கு தக்க ஆதரவு அளித்தார். வைத்திலிங்க உடையார், சரவண முத்து உடையார், வழக்கறிஞர் ப.கதிரவேலு, மா.முருகேசு உடையார், ச.இராசேந்திரம் விதானையார், சின்னத்துரை விதானையார் முதலியோரைக் குறிப்பிடலாம்.

இங்கு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றுள்ளது. இது தென்னிந்திய திருச்சபைக் குரியது. 19ம் நூற்றாண்டிலே அமைக்கப்பட்டது. இச்சமயத்தவர் தொகை மிகக் குறைவாக இருந்தாலும், இவ்வூர்க் கல்வி வளர்ச்சிக்கும், சமூக நலனுக்கும் இவர்கள் கணிசமான பங்களிப்புக்கள் செய்துள்ளனர். இவ்விடத்தைச் சேர்ந்த சில கிறிஸ்தவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் சிறப்பாக உள்ளனர். எடுத்துக்காட்டுகளாக அமரசிங்கம் ஆசிரியரின் குடும்பத்தைச் சேர்நதவர்கள் ஆசிரியத் தொழில், மருத்துவம், அரசியல் முதலியனவற்றிலும் சிறப்புற்றனர். அவரின் ஒரு மகன் செல்லையா அமரசிங்கம் நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபராக மட்டுமன்றி இலங்கை சட்டசபை உறுப்பினராகவும் விளங்கியவர். அவருடைய மகள் ஒருவர் உடுவில் மகளிர் கல்லூரி அதிபராகவும் விளங்கியவர். இவரின் மகன் உளநோய்ப் பேராசிரியராக விளங்குகிறார். செல்லையாவின் சகோதரர் சிலர் மருத்துவ சேவையிலே பிரபல்யமுற்றனர். அருட்திரு அம்பலவாணரின் மூத்தமகன் அருட்திரு டி.ஆர். அம்பலவாணர் சிறந்த தமிழறிஞரும், பேச்சாளருமாவார். அவரின் சகோதரான டி.ஜே. அம்பலவாணர் தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயராக விளங்கினார். இவரின் பாரியார் மகப்பேற்றியல் வைத்திய நிபுணர். மகன் தயாளன் அறுவைச் சிகிச்சைப் பேராசிரியர். இவரின் ஏனைய இரு சகோதரர்களும் சகோதரியும் கல்விச் சேவையிலே பணிபுரிகின்றனர். மா.இராமநாதன். பொன்னையா குடும்பத்தினர் குறிப்பாகக் கல்விச் சேவையிலே பணியாற்றி வந்துள்ளனர். யோகுப்பிள்ளை குடும்பத்தினர் குறிப்பாகக் கல்விச் சேவையிலும் கூட்டுறவுச் சேவையிலும் நற்பணியாற்றி வந்துள்ளனர். புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய முகாமையாளர் இக்குடும்பத்தைச் சேர்ந்தவரே. மேலும் அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்நத சில பிரமுகர்கள் இவ்வூரைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது.

கத்தோலிக்க சமயத்தவர் தொகை குறைவாக இருந்தாலும் அவர்களும் சில பணிகள் செய்துள்ளனர். அவர்களுடைய இரு ஆலயங்கள் (அர்ச் சவேரியார், அர்ச் அந்தோனியார்) உள்ளன. "நான்" எனும் சஞ்சிகை ஆசிரியர் இவ்விடத்தைச் சேர்ந்தவரே. திரு.நடராசா, திரு.சு.யோ.பூராசா ஆசிரியர்களும் அவர்களுடைய சகோதரியான அருட்சகோதரி விக்ரறின் ஆசிரியையும் கல்விச் சேவையிலே நற்பணி ஆற்றி வந்துள்ளனர். போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் கால தேவாலயங்கள் எவையேனும் இப்பொழுது இல்லை. ஆனால் கி.பி 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்திலே பணியாற்றிய ஒல்லாந்த மத குருவான போல்டேயசின் கூற்றுப்படி இங்கு ஒரு தேவாலயம் இருந்தது. அதில் 800 மக்கள் வழிபட்டனர். ஆனால் இது எங்கிருந்த தென்பது தெரியாது. இங்குள்ள வெள்ளைப்பாலன் கோயில் என்னும் இடத்திலே போத்துக்கீச அல்லது ஒல்லாந்த தேவாலயம் இருந்திருக்கலாம்.

இங்கிருந்த பழைய கட்டிடங்கள், கோயில்களோ, பிற கட்டிடங்களோ எஞ்சியிராமையாலே இங்கு நிலவி வந்த கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம் பற்றிக் கூற முடியாதுள்ளது. எனினும் சமகாலத்திலே ஓவியக் கலைஞர் சிலர் இங்கு வாழ்ந்து வந்துள்ளனர். இங்கு ஓர் இசைப் பாரம்பரியம் நிலவி வந்துள்ளது. சைவத் திருமுறைகள் குறிப்பாக தேவாரம் போன்றவற்றைப் பண்ணுடன் பாடக் கூடிய அறிஞர் 19ஆம் நூற்றாண்டு தொடக்கமாவது வாழ்ந்து வந்துள்ளனர். ஆறுமுக நாவலர் ஏற்படுத்திய சைவ சமய மறுமலர்ச்சியைத் தொடர்ந்து கந்தபுராணப் படனம், பண்ணிசை முதலியன புதிய உத்வேகம் பெற்றன. நாவலரின் சமய மரபிலே தோய்ந்த க.வினாசித்தம்பி, நா.தில்லையம்பலம் போன்ற ஆசிரியர்கள் இசையிலே மிகத்திறமை காட்டினர். நா.தில்லையம்பலம் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர். இவர் கர்நாடக இசையையும் அறிந்திருந்தார். 20ம் நூற்றாண்டு முற்பகுதியிலும் பின்னரும் தமிழகத்திலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்களிலே கர்நாடக இசை, பண்ணிசை ஆகியனவற்றைச் சிலர் வரன் முறைப்படி கற்றுத் திரும்பினர். இவ்வகையில் சங்கீதபூஷணம் தாமோதரம்பிள்ளை, பொன்.சுந்தரலிங்கம், பொன். சுபாஸ்சந்திரன், கா.பரமேஸ்வரன் முதலிய வாய்ப் பாட்டிசைக் கலைஞரும் நடராஜா போன்ற வயலின் கலைஞரும், கனகசுந்தரம் போன்ற வீணைக் கலைஞரும் திருப்பூங்கொடி ஆறுமுகம் போன்ற வில்லுப்பாட்டிசைக் கலைஞரும் குறிப்பிடற்பாலர். பொன்.சுந்தரலிங்கமும் அவரின் நண்பர்கள், வர்த்தகர்கள் சிலரும் ஒன்று சேர்ந்து "வாணர் அரங்கு" எனும் அரங்கினை இங்கு அமைத்துள்ளனர். பொன்.சுந்தரலிங்கம் யாழ்ப்பாணத்திலுள்ள இளங்கலைஞர் மன்றத்தினை உருவாக்கியவர். சி.இரத்தினசபாபதி பிரபல பண்ணிசைக் கலைஞர். பிரபல மெல்லிசைக் கலைஞர் சாந்தனும் இவ்வூரைச் சேர்ந்தவரே. கர்நாடக இசையினை யாழ்ப்பாணத்திலே பிரபல்யமாக்கியவர்களிலே ஒருவரான புத்துவாட்டி சின்னத்தம்பியின் மனைவி பொன்னுவும் (இவர்களுடைய மகன் நாகலிங்கத்தின் மகனே பிரபல இசைக் கலைஞர் புத்துவாட்டி சோமசுந்தரம்) புகழ்பெற்ற நாதஸ்வர, தவில் கலைஞர்கள் என்.ஆர்.கோவிந்தசாமி, என்.ஆர்.சின்னராசா முதலியோரின் தாயாரும் இவ்வூரைச் சேர்நதவர்களே.

இதுவரை கூறியவற்றைத் தொகுத்து நோக்கும்போது நீண்டகாலமாகச் சமய ஞானமும், தமிழ்ப் பண்பாடும் நன்கு நிலவி வந்துள்ள ஓர் இடமாக இது மிளிர்ந்து வந்துள்ளமை தெளிவாகும்.

**நன்றி: கூட்டுறவுத் தீபம்,**
புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்.

◆◆◆◆◆◆◆◆◆◆

## உலகின் உயர்ந்த கோபுரங்கள்

| கோபுரங்கள் | நகரங்கள் | உயரம் |
|---|---|---|
| 01. சி.என் கோபுரம் (C.N Tower) | ரொறன்ரோ | 1815' |
| 02. ஒஸ்ராங்கினோ கோபுரம் (Ostangino) | மொஸ்கோ | 1771' |
| 03. சியர்ஸ் கோபுரம் (Sears Tower) | சிக்காக்கோ | 1707' |
| 04. எம்பயர் எஸ்டேட் (Empire State) | நியூயோர் | 1454' |
| 05. உலக வர்த்தக மையம் (Twin Tower) | நியூயோர் | 1350' |
| 06. ராஸ்கென்ற் கோபுரம் (Tashkent) | உஸ்பெஸ்கிஸ்ரான் | 1230' |
| 07. டோக்கியோ கோபுரம் | டோக்கியோ | 1092' |
| 08. ஈபிள் கோபுரம் (Eiffel) | பாரிஸ் | 1049' |
| 09. சிட்னி கோபுரம் | சிட்னி | 1000' |
| 10. ஒலிம்பிக் கோபுரம் (Munich) | மூனிச் | 951' |
| 11. கொல்செறோலாகோபுரம் (Collserola) | பார்சலோனா | 945' |

# போல் டேயசும் புங்குடுதீவும்

1632 இல் ஒல்லாந்தில் பிறந்த போல்டேயஸ் (Bal Daes) கிறிஸ்தவ சபை ஊழியராக நியமிக்கப்பட்டு 1656 இல் இலங்கைக்கு வந்தார். அவர் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அயலில் உள்ள தீவுகளிலும் கிறிஸ்தவ சமய சேவைக்குப் பொறுப்பான குருவாக நியமனம் பெற்றார். இவர் எட்டு ஆண்டுகள் யாழ்ப்பாணப் பகுதிகளில் தங்கியிருந்து அங்குள்ள நிலமைகளை நேரடியாகப் பார்த்து "A True and Exact Description of the Great Island of Ceylon" என்ற நூலை எழுதியுள்ளார்.

புங்குடுதீவு பற்றி போல்டேயஸ் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"பொங்கர்திவ" ஒரு பெரிய தீவாகும். மக்களை மிகவும் கவரக் கூடிய அளவுக்கு சிறப்பான அம்சங்கள் அங்கில்லை. கற்பூமியுள்ளது. அங்கு மான், முயல், மயில், மீன், பெரிய மட்டிகள் முதலியன பெருவாரியாகக் கிடைப்பன. பின்னைய வற்றை அவித்துச் சாப்பிடுவதுதான் நன்று. இங்கு ஆட்டுப் பண்ணைகள் அதிகமாகக் காணப்பட்டன. இந்தியாவின் பிறபகுதிகளிலும் பார்க்க இங்குள்ள ஆண்கள் மிகவும் உயரமானவர்கள். இங்குள்ள தேவாலயத்திற்கு சுமார் 800 மக்கள் செல்வர் இங்குள்ள பாடசாலையில் 200 பிள்ளைகள் கல்வி பயிலுகின்றனர்.

ஆதாராம்: போல்டேயஸ் கண்ட யாழ்ப்பாணம்
பேராசிரியர். வி.சிவசாமி.

போல்டேயஸ் ஓர் வரலாற்றாசிரியர் அல்லர். கிறிஸ்தவ பாதிரியாராகவே அவர் செயல் பட்டார். அவருடைய நூலில் உள்ளவை அவர் நேரடியாகக் கண்ட உண்மைகளே.

இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது யாதெனில் புங்குடுதீவில் 1660ம் ஆண்டளவில் 800 மக்கள் இருந்துள்ளனர். இவர்களில் 25 சதவீத மானோர் (200 பிள்ளைகள்) பாடசாலைக்குச் சென்று வந்தார்கள் என்பதேயாகும். அதாவது 17ம் நூற்றாண்டிலேயே புங்குடுதீவு மக்கள் கல்விக்குப் பெரும் முக்கியத்துவம் வழங்கியிருந்தார்கள் என்ற உண்மையை நாம் அறிய முடிகின்றது.

1660 களில் ஒரு பாடசாலை புங்குடுதீவில் சிறப்பாக இயங்கி வந்திருக்கின்றது. ஆனால் 1834 இல் சைமன் காசிச்செட்டி என்பவர் புங்குடுதீவு பற்றிக் குறிப்பிடுகையில் இங்கே முன்னர் ஒரு புரட்டாஸ்தாந்து தேவாலயமும், பள்ளிக்கூடமும் இருந்ததென்றும், இவையிரண்டும் பல காலத்தின் முன்னரே மறைந்து விட்டன எனக் குறிப்பிடுகின்றார். இப்பாடசாலைக் கல்விமுறைமை 1660 க்கும் 1830 க்கும் இடைப்பட்ட காலத்திற்குள் புங்குடுதீவில் ஏன் மறைந்தது என்பது ஆய்வுக்குரிய விடயமாகும்.

தற்போது ஒல்லாந்து தேசத்தில் ஈழத் தமிழர்கள் பலர் வாழ்கின்றனர். அவர்களின் பிள்ளைகள் ஒல்லாந்து மொழி மூலம் கல்வி கற்கின்றனர். இதனால் ஒல்லாந்து மொழியில் இலங்கை பற்றிய குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதிகள் பற்றி எழுதப்பட்டுள்ள வரலாற்றுக் குறிப்புக்களை தமிழில் தரக்கூடிய சந்தர்ப்பம் தற்போது இலகுவாக்கப் பட்டுள்ளது. இவை தமிழில் வெளி வரும்போது புங்குடுதீவு பற்றி மேலும் பல வரலாற்று உண்மைகளை அறியக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.

-மலர்க்குழு

**********

# அந்த நாள் பள்ளி ஞாபகங்களைப் பகிர்ந்து கொள்ளும் போது....

-சத்தியன்
புங்குடுதீவு

புங்குடுதீவிற் பிறந்து வளர்ந்து தம் இளமைக் காலக் கல்வியை அங்கேயே ஆரம்பித்த சில முதியோருடன் உரையாடியபோது தமது அந்த நாள் ஞாபகங்களைப் பெருமகிழ்ச்சியுடன் மீட்டுக் கொண்டனர்.

**திரு.சு.கந்தையா ஆசிரியர் அவர்களின் நினைவுகளில் இருந்து..........**

இவர் இறுப்பிட்டியில் 1917 இல் பிறந்து தமது ஆரம்பக் கல்வியை சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் தொடங்கினார். தமது ஆரம்பக் கல்வி ஆசிரியர்களாக பிராமணர் போன்ற தோற்றமுடைய நாகலிங்கம் ஆசிரியர் அவர்களும், அப்பையா ஆசிரியர் அவர்களும் இருந்ததாகக் குறிப்பிட்டார்.

திண்ணைப் பள்ளிக்கூடங்களை ஊரைதீவுப் புலவரும், இறுப்பிட்டிச் சட்டம்பியார் என அழைக்கப்படுபவர்களும் நடாத்தி வந்ததாகத் தெரிவித்தார். பிள்ளைகள் பாடசாலை செல்லும் போது ஆண்கள் சிறிய கரை போட்ட சின்ன வேட்டி அணிந்தும், பெண்கள் சித்தாடை உடுப்பு அணிந்தும் சென்றதாக ஞாபகமூட்டினார். தாங்கள் நிலத்தில் இருந்து கொண்டு கொட்டில்களில் கரையோரங்களில் மண்ணினால் அமைக்கப்பட்ட திண்ணைகளையே வாங்கில்களாகப் பயன் படுத்தியதாகவும், அவற்றின் மீது மணலைப் பரப்பி சுட்டு விரலினால் எழுதப் பழகியதாகவும் குறிப்பிட்டார். 1924 வரை பாடசாலையில் மாணவர் உபயோகத்துக்காக மேசை, கதிரைகளோ, வாங்கிலோ எதுவுமே இல்லை எனவும் குறிப்பிட்டார்.

தமக்குக் கல்வி புகட்டிய உபாத்தியார்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், சங்க இலக்கியங்கள், புராணங்களில் ஆழ்ந்த அறிவுடையவர்களாக விளங்கினார்கள் என்றும் நல்ல குரல் வளமுடைய வர்களாக இருந்தார்களென்றும் மிகவும் ஆசார சீலர்களாக, குணக் குன்றங்களாக விளங்கினார்கள் என்றும் உறுதி படக்கூறினார்.

1939 இல் தமக்கு ஆசிரிய நியமனம் கிடைத்து புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியால யத்தில் கல்வி கற்பிக்கத் தொடங்கிய பொழுது வேட்டி சால்வை அணிந்து இறுப்பிட்டியில் இருந்து நடந்து சென்றதைக் குறிப்பிட்டார். பின்னர் 1942-1943 காலப்பகுதியில் எட்டு முழ வேட்டி, காந்தி தொப்பி போன்றவற்றை அணிந்து சென்றதையும் எடுத்துக் கூறினார்.

அக்காலத்தில் பாடசாலைகளில் ஆரம்ப விஞ்ஞானம், நாட்டு ஜீவன சாத்திரம் (Rural Science) தமிழ், சமயம், பூமிசாத்திரம், கணிதம் போன்ற பாடங்கள் போதிக்கப்பட்டன. 1920 ஆம் ஆண்டளவில் ஆண்களின் எண்ணிக்கை அதிகமாகவும், பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததாகவும் இந்நிலை 1930 இன் பின்னர் படிப்படியாக அதிகரித்து ஆண்களும், பெண்களும் சரிசமமாக இருந்ததாகவும் குறிப்பிடுகின்றார். இது படிப்படியாக பெண்கள் கல்விகற்கும் விகிதம் கூடி வந்ததைக் காட்டுகின்றது என மிகவும் மகிழ்ச்சியுடன் தமது அந்த நாள் ஞாபகத்தை எம்மோடு பகிர்ந்து கொண்டார்.

**சங்கீத வித்துவான் திரு.இராசலிங்கம் அவர்களுடன் உரையாடிய பொழுது........**

(இவர் ஒரு பிரபல சங்கீத வித்துவான். சங்கீதக் கலை பற்றிய நூலும் எழுதி வெளியிட்டுள்ளார்.) இவர் தமது வித்தியாரம்பம் பற்றிக் குறிப்பிடுகையில் தமது தாயாரின் விருப்பப்படி கோவிலில் வைத்துக் கடுக்கன் பூட்டி

ஏடு தொடக்கப்பட்டதாகவும், பின்னர் கோவிலில் இருந்து பாடசாலை வரை மிதிபாவாடை விரிக்கப்பட்டு பட்டுக் குடையின் கீழ் தான் மக்கள் புடை சூழ நடந்து கணேச வித்தியாசாலை சென்றதாக தமது முதல் நாள் ஞாபகத்தை சந்தோஷமாகக் கூறுகின்றார்.

ஆரம்பத்தில் வேட்டி மட்டும் உடுத்து பாடசாலை சென்றதைக் குறிப்பிட்டார். தமது ஆசிரியரான திரு.சி.இ.சதாசிவம்பிள்ளை அவர்கள் (இளையப்பா வாத்தியார்) தம்மைத் தூக்கி மேசையொன்றில் இருத்தி ஆசிரியரது சால்வையால் தலைப்பாகை கட்டி தம்மைத் தேவாரம் பாடும்படி பணித்ததைப் பெருமையுடன் கூறினார். தமது குரல் யாவரையும் கவர்ந்திருந்த தாகவும் குறிப்பிட்டார்.

பாடசாலைகள் ஒரு நேரப் பாடசாலையாகவே நடந்ததாகவும், பாடசாலை தொடக்க மணி அடிக்கப்பட்ட பின்னர் வரும் மாணவர்களும், பாடசாலைக்கு வராத மாணவர்களும் தண்டனை பெறும் நிலை இருந்ததாகவும் கூறிகின்றார். ஐந்தாம் வகுப்பு வரை கல்வி கற்ற பின்னர் கொழும்பு சென்று படித்ததாகக் கூறினார். கல்வி கற்று முடிந்து திரும்ப இந்து மகா சபையின் மூலம் ஆசிரியராக நியமனம் பெற்று புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம், திருநாவுக்கரசு வித்தியாலயம், சுப்பிரமணிய வித்தியாசாலை, சித்திவிநாயகர் விததியாசாலை, வல்லன் சண்முகநாதன் வித்தியாலயம் போன்றவற்றில் கல்வி கற்பித்ததாகக் கூறுகின்றார். ஒரு வாரத்திலேயே வெவ்வேறு பாடசாலைகளில் வெவ்வேறு நாட்களில் கல்வி கற்பித்ததையும் குறிப்பிட்ட அவர் தமது இளமைக் காலத்தை மீட்டுப் பார்த்த பெருமிதத்தில் காணப்பட்டார்.

**திரு.சி.நல்லையா அவர்களின் ஞாபகத்தில் இருந்து..........**

இவர் சிறந்த கவிஞர். நகைச்சுவையுடன் உரையாடுவதில் வல்லவர். சில நொடிகளில் சிறந்த கவிதை எழுதும் திறமை வாய்க்கப் பெற்றவர். 1935 ஆம் ஆண்டளவில் தமது ஆரம்பக்கல்வியை இறுப்பிட்டி அமெரிக்க மிஷனில் தொடங்கிய தாகவும் தான் படித்த பாடசாலை இரு நேரப் பாடசாலையாக இருந்ததாகவும் கூறுகின்றார். தமது மதிய உணவை பனை ஓலையில் பிடித்த தட்டுவங்களிலோ அல்லது கோப்பையிலோ வைத்துச் சாப்பிட்டதையும் தமக்கு மதிய உணவாக சோறு, பாண், பருப்பு, சாம்பார் என்பன வழங்கப்பட்டதையும் உணவுச் சுவை சொட்டச் சொட்ட ஞாபகத்திற்குக் கொண்டு வந்தார்.

பாடசாலைக்கு வராத மாணவர்களை ஏனைய மாணவர்கள் காலையில் அவர்களது வீட்டுக்குச் சென்று கூட்டி வந்ததாகவும், சில மாணவர்கள் தங்களைக் கண்டு ஓடினால் அவர்களைக் கலைத்துப் பிடித்துப் பாடசாலைக்குக் கொண்டு வந்ததாகவும் கூறுகின்றார். துவரம்கம்பு, அலரிக்கம்பு என்பனவற்றை வாத்திமார் தம்முடன் வைத்திருந்தார்கள் என்றும், ஒழுங்காகப் பாடம் படியாதவர்கட்கு அவர்கள் அடிக்கடி அலரிக் கம்பினால் அருள் கொடுப்பார்கள் என்றும் நகைச் சுவையுடன் கூறுகின்றார். வாத்திமாரினால் வழங்கப்படும் தண்டனை பற்றிக் குறிப்பிடும் பொழுது தோப்புக்கரணம் போடுதல், அடி மட்டத்தினால் மாணவர்களின் கை மொழியில் அடித்தல், வளையில் தொங்க விடுதல் போன்ற தண்டனைகள் வழங்கப்பட்டதாகவும் பயபக்தியுடன் குறிப்பிட்டார். இருந்த பொழுதும் தம்மை வாத்திமார் நீதியின் வழி நெறியினின்றும், தம் ஒழுக்க நெறியினின்றும் வழுவாத ஆசார சீலர்களாய் தமக்கு வழிகாட்டிகளாய் திகழ்ந்த மையையும் ஞாபகத்திற்குக் கொண்டு வந்தார். விளையாட்டுப் போட்டிகளில் ஓட்டப்போட்டி, உயரம்பாய்தல், நீளம்பாய்தல், தாச்சி முதலிய விளையாட்டுக்கள் இடம் பெற்றதாகவும் குறிப்பிடு கின்றார். தமது காலத்தில் கூட தெய்வீகக் காதல் கடிதங்கள் சக மாணவ மாணவிகட்கிடையே பரிமாறப்பட்டதாகவும் சிரிப்புக்கிடையே கூறி விடைபெற்றார்.

**திரு.சிவசாமி அவர்களிடமிருந்து..........**

இவர் ஊரைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மிகுந்த சமய ஞானமும், சமயப்பற்றும், சோதிட ஞானமும் கொண்டவர். 1935 ஆம் ஆண்டு மடத்துவெளியில் உள்ள கமலாம்பிகை வித்தியாலயத்தில் தமக்கு ஏடு தொடங்கப்பட்டதாகக் கூறுகிறார். ஒரு மைல் தூரம்

வரை நடந்தே பிள்ளைகள் பாடசாலை சென்றதாகவும் மாரி காலத்தில் நீர் நிறைந்துள்ள பகுதிகளில் இடுப்பளவு தண்ணீரில் கொப்பி புத்தகங்களை தலையில் வைத்துக் கொண்டு நடந்து சென்றதையும் நினைவு கூர்ந்தார். 1936 இல் திரு. நாகனாதி சோமசுந்தரம் ஆசிரியரின் பெரு முயற்சியினால் ஊரதீவு சிவன் கோவிலுக்கு அருகாமையில் திருநாவுக்கரசு வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலையொன்று உருவாக்கப் பட்டதெனவும் அப்பாடசாலை இயங்கத் தொடங்கியதும் தாம் உட்பட 19 ஆண்களும் ஒரு பெண் பிள்ளையுமாக 20 பேர் ஆரம்பப் பிரிவு மாணவர்களாக கல்வி பயின்றனர் எனவும் குறிப்பிட்டார். இப்பாடசாலையின் முதலாவது தலைமையாசிரியராக திரு.நா.சோமசுந்தரம் அவர்களே நியமிக்கப்பட்டாரெனவும், தினமும் அருகாமையில் உள்ள ஆலயத்திற்கு சென்று வழி பட்டு வந்த பின்னரே பாடசாலை ஆரம்பிக்கப்படுவது வழக்கம் எனவும் கூறினார்.

ஆரம்ப காலத்தில் ஆசிரியர் வேட்டி, சால்வை அணிந்து வந்ததாகவும் பின்னர் சேட், நெஷனல் போன்றவற்றை அணியத் தொடங்கியதாகவும், மாணவர்கள் வேட்டி, சால்வை அணிந்து வந்த தாகவும், பின்னர் அரைக் களிசான், சேட் அணியும் வழக்கம் வந்ததாகவும் கூறுகின்றார். பாடசாலை 8.00 மணியில் இருந்து 2.00 மணி வரை இயங்கியதாகவும் மதிய உணவாக சோறு, சாம்பார் வழங்கப்பட்டதாகவும் அவற்றைச் சமைத்து வழங்குவதற்கு பெண்மணி ஒருவர் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தார் எனவும் நினைவு கூர்ந்தார்.

பாடசாலையில் தமிழ், சமயம், சுகாதாரம், சங்கீதம், கணிதம், ஆங்கிலம், பூமிசாத்திரம் போன்ற பாடங்கள் போதிக்கப்பட்டன என்றும் சங்கீத பாடத்தை திரு.இராசலிங்கம் அவர்களும், ஆங்கில பாடத்தை அளவெட்டியைச் சேர்ந்த திரு.நாகநாதி அவர்களும் கற்பித்ததாகவும் குறிப்பிட்டார். கல்வி அதிகாரிகள் வருடத்திற்கு ஒரு முறை அல்லது இரு முறை பாடசாலைக்கு வருகை தருவார்கள். அவர்கள் வரும் நாட்களில் பிள்ளைகள் அனைவரையும் குளித்து சுத்தமான உடையணிந்து வருமாறு ஆசிரியர் கூறுவார் என்றும், அத்துடன் பாடசாலைக்கு மாணவர்கள் வரும் பொழுது நகம், தலைமயிர் போன்றவற்றை ஒழுங்காக வெட்டிச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும் எனப் பணிக்கப்பட்டனர் என்றும் கூறுகின்றார். நவராத்திரி பூசையும் பாடசாலைகளில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இறுதி நாளான விஜயதசமி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடு வதற்காகப் பணம், அரிசி, மற்றும் தானியங்களைச் சேகரிக்கும் முகமாக பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளைகளின் வீடுகட்குச் (வீடு சுற்றுதல்) செல்வது வழக்கம். ஆசிரியர்கள் உடன் வர பிள்ளைகள் தேவாரங்கள், கலைமகள் பாடல் களைப் பாடிக்கொண்டு வீடுகட்குப் போய் பொருளைச் சேகரிக்கும் அதே நேரம் வீட்டுக் காரர்கள் தங்கட்கு கடலை, வடை, மோதகம், காப்பரிசி, குளிர்பானம், தேனீர் போன்ற பல்வேறு பண்டங்களை தங்கட்கு அளித்து மகிழ்ச்சியடைவர் என்பதையும் நினைவு படுத்தினார். ஊரதீவிற்கு பக்கத்தே அமைந்துள்ள கேரதீவில் அமைந்துள்ள ஆலயத்திற்கு மாதம் ஒரு முறை தலைமை யாசிரியர் அவர்கள் மாணவர்களை அழைத்துச் சென்று வழிபாடு முடித்த பின்னர் அருகேயுள்ள ஆலமர நிழலின் கீழ் சமைத்து உணவருந்தி ஆறுதலாக இருந்து வருவது வழக்கம் என்றும் குறிப்பிட்டார்.

அது மட்டுமன்றி தலைமை யாசிரியராக இருந்த சோமசுந்தரம் ஆசிரியர் அவர்கள் சில சமயங்களில் தமது வீட்டுக்கு மாணவர்களை அழைத்து விருந்துபசாரம் வழங்கி வருவதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். இரண்டாம் வகுப்பு வரையும் கற்பலகையில் எழுதியே மாணவர்கள் படித்தனர் எனவும், அதன் பின்னரே பயிற்சிப் புத்தகத்தில் மை தொட்டு எழுதும் பேனாவால் எழுதத் தொடங்கியதாகவும் குறிப்பிட்டதுடன், ஆசிரியர் வகுப்புக்குள் நுழையும் பொழுது மாணவர்கள் எழுந்து நின்று வணக்கம் செலுத்துவதையும், வகுப்பு முடிந்து போகும் பொழுது எழுந்து நின்று நன்றி செலுத்துவதையும் பணிவுடன் கூறினார். 1939 தொடக்கம் 1945 வரையான இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் பாடசாலையில் பங்கர் வெட்டி அதற்குள் எவ்வாறு இருக்க வேண்டும் எனப் பயிற்சியும் கொடுக்கப்பட்டதாகவும் இரு காதுகளினுள்ளும் பஞ்சினை வைத்து அடைத்துக் கொள்ளல் வேண்டும் என அறிவுறுத்தப் பட்டதாகவும் கூறினார்.

◆◆◆◆◆◆◆◆◆◆



# அமரர் வ.பசுபதிப்பிள்ளை அவர்களின் கல்விப்பணி

புங்குடுதீவின் நவீன கல்வி வரலாற்றை எழுத முயற்சிக்கும் எவரும் அமரர் வ.பசுபதிப்பிள்ளை அவர்களைப் பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியாது. கதருடை, விபூதி முக்குறிப்பூச்சு மெல்லிய உடல், சுமாரான உயரம் இதுவே அவரது தோற்றம். திரு.வ.பசுபதிப்பிள்ளையவர்கள் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தாருடன் சேர்ந்து நாட்டின் பல கோணங்களிலும் பல கல்வி நிலையங்கள் தோன்றக் காரணமாக இருந்தார். அத்துடன் ஸ்ரீ கணேச வித்தியாசாலை, பராசக்தி வித்தியாசாலை இவற்றை தமது முயற்சியால் அமைத்துத் திறம்பட நடாத்தினார். ஸ்ரீ சித்தி விநாயக வித்தியா சாலையின் தோற்றத்திற்கும் பெரும் பங்காற்றி யுள்ளார். புங்குடுதீவு அரசினர் ஆங்கிலக் கல்லூரியும் (மகா வித்தியாலயம்) இவரது பெரு முயற்சியினாலேயே ஆரம்பிக்கப்பட்டது.

சைவப் பிள்ளைகள் சைவச் சூழலில் சைவ நெறிக்கமைய கல்வி பயில வேண்டு மென்னும் உன்னத இலட்சியத்தைக் குறிக்கோளாகக் கொண்டு 3-3-1910 இல் ஸ்ரீ கணேச வித்தியா சாலையை அமரர் வ.பசுபதிப்பிள்ளை அவர்கள் உருவாக்கினார். ஸ்ரீ கணேச வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் 1954 ஆம் ஆண்டு வரை அப்பாடசாலையின் முகாமையாளராக கடமையாற்றி புங்குடுதீவின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றியிருந்தார். இருபது ஆண்டுகளுக்கு மேலாக கிராமச் சங்க அக்கிராசனராயும், ஆரம்பகாலத்தில் கிராமக் கோட்டு நீதிபதியாகவும் இருந்து தொண்டாற்றினார்.

அந்நிய ஆட்சியில் பிற மதத் தாக்குதலுக்கு மத்தியில் தனிப்பட்ட பாடசாலை ஒன்றை சைவப் பிள்ளைகளுக்காக ஆரம்பித்து நடத்துவ தென்பது இலகுவான காரியமாக இருக்கவில்லை. 1910 ஆம் ஆண்டளவில் ஒரு சைவப் பாடசாலையை நிறுவ முற்படுபவர்கள் அனுபவிக்க வேண்டி இருந்த இன்னல்கள் பலப்பல. சைவ வித்தியாபிவிருத்திச் சங்கத்தின் செயலாளரும், சைவப் பெரியாருமான அமரர் சு.இராசரெத்தினம் அவர்கள் குறிப்பிட்டுள்ள பின்வரும் வார்த்தைகள் அக்கால நிலைமையை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றன.

"1910 ஆம் ஆண்டளவில் ஒரு சைவப் பாடசாலையைத் தாபிப்பதாயின் ஸ்தாபிக்க வந்தவர்கள் படும் பாட்டைப் பற்றிக் காலம் சென்ற ஸ்ரீ அருணாசலம் அவர்களோடு சம்பாவித்தவர் களுக்கு நன்கு தெரியும். இலங்கையில் போர்த்துக்கீசர் ஆளத் தொடங்க முன்பு 500 பாடசாலைகளிலும், மடங்களிலும் சைவக்கல்வி கற்பித்தல் நடாத்தப் பட்டு வந்தது. போர்த்துக்கீசர் இவற்றை யெல்லாம் அழித்து விட சைவ மக்கள் ஒன்றும் செய்ய முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டனர். போர்த்துக்கீசருக்குப் பின் இலங்கையை ஆண்ட டச்சுக்காரர்கள் (ஒல்லாந்தர்) சைவப் பாடசாலைகளைத் தாபிக்க விடாமல் தடுத்து கிறிஸ்தவ மதப் பாடசாலைகளையே தங்களது கோவில்களுக்கு அருகாமையில் அமைத்து நடாத்தி வந்தனர். டச்சுக்காரர்களுக்குப் பின் வந்த பிரிட்டிஷார், பேச்சளவில் ஒவ்வொரு மதத்தவரும் ஏதும் செய்யலாமென்று சொன்னாலும் "புரட்டஸ்தாந்து" மதப் பாடசாலைகளுக்கே பணமும் மற்றும் உதவிகளும் செய்து வந்தார்கள். அப்படிச் செய்து வந்ததால் சைவ மக்கள் நூற்றுக்கணக்கான பாடசாலைகளைத் தாபித்தும், பொருளுதவி, ஆளுதவி இல்லாமல் சில சைவப் பாடசாலைகள் மூடப்பட்டன".

அக்காலத்தில் சைவர்கள் எல்லோரும் திரண்டு ஒரு சபையை உண்டாக்கி அரசாங்கத்தின் பாரபட்சத்தை நீக்க இயலாத படியால் சைவ மக்கள் பட்ட கஷ்டம் சொல்லும் தரமல்ல.

அத்தகைய ஒரு கால கட்டத்தில் புங்குடுதீவில் "புரட்டஸ்தாந்து" மதப் பாடசாலைகள் எழுச்சி பெற்றிருந்த வேளையில் மன உறுதியும், குலையாத இலட்சிய வேட்கையும் கொண்ட அமரர் பசுபதிப்பிள்ளை அவர்கள் சைவப் பெருமக்கள் பலரது ஒத்துழைப்புடன் பெரியார் நீ.அம்பலவாணர் (மூத்ததம்பி) அவர்களது வளவில் முதன் முதலாக 1910 இல் ஸ்ரீகணேச வித்தியாலயத்தை நிறுவினார். 1914 ஆம் ஆண்டு ஆவணி மாதம் வரை அரசினரின் நன்கொடைப் பணம் எதுவுமின்றி, அமரர் பசுபதிப்பிள்ளை அவர்களின் சுய முயற்சியினாலும் உள்ளூர்ப் பெரியார்கள் பலரது ஒத்துழைப்புடனும் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் இப்பாடசாலை இயங்கி வந்தது. 1925 இல் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீகணேச வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்கத்தின் போஷகராக இருந்து பல ஆண்டுகள் நாடு முழுவதிலும் உள்ள மாணவர்கள் தேவாரம், சமய பாடம், உடல் நலப் பயிற்சி இவற்றில் உயர்வு பெறப் பரீட்சைகள் நடாத்தி, உயரப்புலம் முற்றவெளி மைதானத்தில் போட்டிகள் நடத்தி நாடு நலமுறப் பரிசில்கள் வழங்கி ஊக்குவித்தார்.

முதலியார் குல.சபாநாதன் அவர்கள் 1951 ஆம் ஆண்டு வெளியான வித்தியாலயப் பழைய மாணவர் சங்க மலரில் இவரைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "புங்குடுதீவினை வெளியூரவர்கள் பெரும்பாலும் அறிய வந்தது ஸ்ரீமான் பசுபதிப்பிள்ளை அவர்கள் மூலமே என்று கூடச் சொல்லலாம். வெளியூர்களிலிருந்து புங்குடுதீவுக்குச் செல்பவர்களை உபசரிப்பதில் இப்பெரியார் கைதேர்ந்தவர். ஆங்கிலமும், தமிழும் அழகாகப் பேசுவார்.

இவர் முதலில் கிராம விதானையாகக் கடமையாற்றிப் பின் கிராமச்சங்கத் தலைவராகத் தொண்டாற்றினார். புங்குடுதீவு மக்களின் முன்னேற்றத்தைப் பற்றியே கனவு காண்பவர். பாடசாலைகளை நிறுவுவதில் சலியாது உழைத்து வருபவர். வயது சென்றாலும் சுறுசுறுப்புக் குறைய வில்லை. இவரது உதவியால் புங்குடுதீவை முதன் முறை சுற்றிப் பார்க்கும் சந்தர்ப்பம் எங்களுக்குக் கிடைத்தது."

சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் பணியின் ஒரு பாகமாக விளங்கியதே புங்குடுதீவு வேதாகம சாஸ்திர பாடசாலை. இது புங்குடுதீவு பெருங்காடு சிவன் கோவிலுக்கு அருகாமையில் அமைந்திருந்தது. இதனை சென்ற நூற்றறாண்டின் நாற்பதுகளில் நிறுவியவரும் அமரர் பசுபதிப்பிள்ளை அவர்களே. இலங்கையில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட இந்த வேதாகம பாடசாலையில் தீவகத்தின் பல்வேறு பகுதியிலும் இருந்து பிராமணர்கள் வந்து படித்தார்கள். யாழ்பாணத்திலும் ஒரு வேதாகம பாடசாலையை நிறுவுவதற்கு இவர் முயன்றார். ஆனால் அம்முயற்சி சிலரின் இடையூறினால் கை கூட வில்லை. சைவச்சிறார்கள் சைவச் சூழலில் சைவ நெறிக்கமைய கல்வி பயில முடியாதிருந்த குறைபாட்டை இங்கு நீக்கிய பெருமை அமரர் பசுபதிப்பிள்ளை அவர்களையே சாரும். இதனை நன்கு உணர்த்தும் வகையில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் அமரர் பசுபதிப்பிள்ளையைப் பற்றி பின்வரும் வெண்பா மூலம் எமக்கு உணர்த்துகின்றார்.

புங்குடுதீவென்றாற் புகல் **பசுபதிப்பிள்ளை**
எங்கும் புகழ் நிறுவி ஏகினார் - இங்கிவர்போல்
தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று.

வேறு பல கவிஞர்களும் அமரர் பசுபதிப்பிள்ளை அவர்களை பற்றி கவிதைகள் புனைந்துள்ளனர்.

"கல்வி அழகே அழகென்று" கண்டவர்
கண்ணிய மிக்க **பசுபதியார்**
பல்கிப் பலவளம் பெருகிடவே யவர்
பாதையடியொற்றிச் சென்றிடுவோம்.

என்று கவிஞர் நா.க.சண்முகநாதபிள்ளை கவிதை பாடியுள்ளார்.

கவிஞர் தில்லைச்சிவன் அவர்கள் அமரர் பசுபதிப்பிள்ளை அவர்கள் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

சைவமும் தமிழும் தழைத்திடத் தோன்றித்
தருக்ககோ ளரியெனத் தக்கோர்
வையகம் போற்ற வாழ்ந்த நாவலரின்

வழியினிற் **பசுபதிப்பிள்ளை**
தெய்வ நன்நோக்கம் சிறந்தருள் கூட்டச்
செய்தமா வித்தியாசாலை
உய்வாத் துலசிற் புங்குடுதீவு
ஒளிபெற வைத்தனன் உவந்தே!

எழுத்தறிவித்து இறைவனே ஆனோர்
எம்முனோர் அவர்கள்செய் நன்றி
வழுத்துதல் உய்தழ் குறுவழி தெரிந்தே
வாழ்த்தலும் போற்றலும் மரவே!
பழுத்த மெஞ்ஞானப் **பசுபதிப்பிள்ளை**
பரமனோ உருவமெய்யாளன்
அளித்த நற்கணேச மாகலைத் தெய்வ
அளிமலர்த் தாள்தலை அணிவாம்

இன்னுமொரு கவிஞனின் வார்த்தைகளில்,

சைவமும் தமிழும் காத்ததனிப்பெருந்தொண்டன் என்றும்
"மைவருங் கண்டன்" நாமம் வழுத்திய **பசுபதிப்** பேர்ச்
சைவனைப் புங்கைநல்லூர்மறக்குமோ? கணேசப்பேர்சார்
தெய்வநற்கழகம்வாழும் நாளெலாம் தூயோன்வாழ்வான்.

கணேச வித்தியாலய கீதத்தில் பசுபதிப்பிள்ளை அவர்கள் பற்றி வித்துவான் சி.ஆறுமுகம் அவர்களின் வார்த்தைகளில்,

ஏழ்பெரும் தீவகம் ஏத்திட நற்பணி
இயற்றிய **பசுபதிப்பிள்ளை** - சைவச்
சூழலில் மாணவர்கல்வி தொடர்ந்திடத்
தொடங்கிய கணேச கல்லூரி

இதுவரையும் நாம் கூறியவற்றிலிருந்து அறிவது யாதெனில் திரு.வ.பசுபதிப்பிள்ளை அவர்கள் புங்குடுதீவின் கல்வி வளர்ச்சிக்கு பங்காற்றியவர்களில் முதலிடத்தைப் பெறுகின்றார் என்பதேயாகும். புங்குடுதீவு வாழ் மக்கள் என்றென்றும் அமரர் வ.பசுபதிப்பிள்ளை அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்போமாக!

**ஆதாரம்:**



1. இராசரத்தினம்.சு, புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாலயம் பழைய மாணவர் சங்க வெள்ளி விழா மலர் 1951.
2. கணபதிப்பிள்ளை.சி, அமரர் பசுபதிப்பிள்ளை நினைவு மலர் 1954.
3. பண்டிதர் மு.ஆறுமுகம் "சைவப் பெருந் தொண்டர் பசுபதிப்பிள்ளை" கணேசன் ஸ்தாபகர் விழா சிறப்பு மலர் 1983.
4. புலவர் ஈழத்துச் சிவானந்தன் "கணேசன் ஸ்தாபகர் விழா" சிறப்பு மலர் 1983.


◆◆◆◆◆◆◆◆◆◆

## நேனோ ரோபோ (Nano Robot)

பனிப்போர் காலத்தில், சிறிய மின்னணுக் கருவி, இரகசியங்களை ஒட்டுக் கேட்கப் பயன்படுத்தப்பட்டது. அண்மைக்காலத்தில் சிறிதாக்கப்பட்ட இக்கருவிகள் நமது காதுகள், கண்கள், கால்களை அப்படியே கொண்டிராவிட்டாலும் கேட்கும் திறன், நகரும் திறன், பார்க்கும் திறன் ஆகியவற்றுடன் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அமெரிக்காவிலுள்ள சாண்டியா தேசிய ஆய்வகத்தின் அறிவியலாளர்கள், உலகின் மிகச் சிறிய நேனோ ரோபோக்களை (nano robots) தயாரிக்கின்றனர்.

இந்த நேனோ ரோபோக்கள் பாதைகளில் இயங்குவதற்கு சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவை 8 கிலோ பைட் ராம் ப்ராசருடன் வருகின்றன. காணாமல் போன மனிதர்களைத் தேடுதல், தங்க, வெள்ளிச் சுரங்கங்கள் அமைந்துள்ள இடங்களைக் கண்டுபிடித்தல், உயிரியல் ஆயுதங்களை துப்பறிந்து கண்டுபிடித்தல் போன்றவற்றிற்கு நேனோ ரோபோக்கள் பயன்படுகின்றன. இந்த ரோபோக்களின் எடை சுமார் 25 கிராம் மட்டுமே. அதாவது இதனை நமது விரல் நுனியில் நிற்க வைத்து விடலாம்.



# பேராசிரியர் சி. இ. சதாசிவம்பிள்ளை அவர்கள்

தொண்ணூறு வயதிலும் பேராசிரியர் சதாசிவம்பிள்ளை (இளையப்பா உபாத்தியாயர்) அவர்கள் படித்துக் கொண்டிருந்தவர், கடவுளை வழிபட்டவர், இயன்ற வரை செயல்பட்டவர், ஆச்சரியமாகவே இருக்கின்றது. இளையப்பா உபாத்தியாயர் என்ற பெயரைக் கேட்டதும் எல்லாருடைய நெஞ்சிலும் பெரும் பத்தியும், மகிழ்ச்சியும் ஏற்படும். அவருடைய உருவத்தைப் பார்ப்பதில் எவருக்கும் ஆசை அதிகம். இடைக்கிடை சென்று அவரைப் பார்த்து மகிழ்ந்து வணங்கி வருகின்றவர்களுள் யானும் ஒருவன். அவர் அவதரித்த ஆண்டு ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்று மூன்றாம் ஆண்டு, ஏப்பிரல் மாதம் இருபத்திரண்டாம் திகதி (22-4-1893). சித்திரை மாதத்துத் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தமையால் "திருஆதிரையான்" என்ற புனைபெயரில் கவிதைகள், கட்டுரைகள் எழுதி வந்தவர். அவர் ஆசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும் பணிபுரிந்தவர். வாழ்நாளில் அவர் பெற்ற பட்டங்கள் பல. அவற்றுள் முதன்மை யானவை இரண்டு.

புங்குடுதீவு கண்ணகியம்மன் ஆலய முன்றலில் 1953 அம் ஆண்டு சிலப்பதிகார விழா நடைபெற்றது. அவ்விழாவில் தமிழக அறிஞர் சிலரும், ஈழத்து அறிஞர் பலரும் வருகை தந்தனர். தமிழக அறிஞர் களான கி.வா.ஜகநாதன் (கலைமகள் ஆசிரியர்) "சிலம்புச் செல்வர்" ம.பொ.சிவஞானகிராமணியார், பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன், பேராசிரியர் ஆ. முத்துசிவன் முதலானோர் மத்தியில் சதாசிவம் பிள்ளை அவர்களுக்கு "பேராசிரியர்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. ஆசிரியர் பலரையும் உருவாக்கிய பெருமைக்கு உரியவர் "பேராசிரியர்" சதாசிவம்பிள்ளை அவர்கள். புங்குடுதீவு கலைப் பெருமன்றம், அண்ணையில் அம்பலவாணர் அரங்கில் நிகழ்ந்த கலை விழாவில் பேராசிரியர் அவர்களுக்குச் "செந்தமிழ்க்கவிமணி" என்ற பட்டத்தையும் வழங்கியுள்ளது.

பட்டங்கள் பல பெற்ற பேராசிரியர் தனிப்பெருஞ் செந்தமிழ்ச் செல்வர், சீரிய சைவ சீலர், ஆங்கில மொழியும் கற்றவர், சைவ சித்தாந்த வித்தகர், பத்தி நெறி கைவந்த உத்தமர், சிறந்த கவிஞர், தலை சிறந்த பேச்சாளர், ஆறடி உயரம் உள்ள ஆஜானுபாகுவான தோற்றம் உடையவர், பேராசிரியர் நெற்றியில் திருநீற்று முக்குறியும், செழுஞ்சந்தனத் திலகமும், செம்பொடியும் திகழ பின் தாழ்ந்த சடையுடன் பெருங்காட்டிலிருந்து ஆண் சிங்கம் போலக் கிழக்கூர் நோக்கி எழுந்தருளி வந்தவர் இவர். கிழக்கையும், மேற்கையும் இணைத்தவர் இவர். நெஞ்சம் இனிய உயர்ந்த நெஞ்சம், எவருடனும் நன்கு பழகி மதிப்புப் பெற்றவர் எம் பேராசிரியர் சதாசிவம்பிள்ளை அவர்கள்.

தொண்ணூறு வயதிற்கு மேலும் உலாவித் திரிந்தவர். போராசிரியர் திருக்கேதீச்சர நாதரையும் கவுரியம்பாளையும் கண்டு தொழுது பாலாவி நீராடியவர். இவர் பிறந்தமையால் புங்குடுதீவு பெருமை பெற்றுள்ளது. காலத்துக்கு ஏற்ற கருத்தும், கருத்துக்கு ஏற்ற நடையும் அமைந்த பேராசிரியர், நல்லாசிரியர் பலரை உருவாக்கிய பெருந்தகை. நாட்டுக்கு நற்பணி புரிந்த தொண்டர் உயர்திரு வ.பசுபதிப்பிள்ளை அவர்களின் நிழல் போல் விளங்கிப் பணி புரிந்தவர்.

இளமை தொட்டே கவிதை இயற்றும் ஆற்றல் பெற்ற பேராசிரியர், பாடியுள்ள தனிப்பாடல்கள்

பல. இவர் திருவூஞ்சற் பிரபந்தங்கள் இயற்றிப் புகழ் பெற்றவர். தூது, பிள்ளைத் தமிழ் முதலாம் பிரபந்தங்களும் பாடியுள்ளார். இவர் இயற்றிய திருக்கேதீச்சர நாதர் கிள்ளை விடு தூது, ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினால் வெளியிடப் பெற்றது. திருக்கேதீச்சரத்துக் கௌரிநாயகி மீது ஆராத பத்தி கொண்டு இவர் பாடியுள்ள கௌரி நாயகி பிள்ளைத் தமிழ், இது வரை ஈழத்தில் வெளிவந்த பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்களுள் தலை சிறந்தது என்றும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழோடு ஒப்பிட்டு நோக்கத் தக்கது என்றும் அறிஞர்கள் அதனைப் பாராட்டியுள்ளனர். திருக்கேதீச்சரத்துத் திருவாசக மடத்தில் கௌரிநாயகி பிள்ளைத் தமிழ் 1976 ஆம் ஆண்டு தமிழகத்து மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர், பேராசிரியர், பன்மொழிப்புலவர், டாக்டர் தே.பொ.மீனாட்சிசுந்தரனார் தலைமையில் அரங்கேற்றப் பெற்றது. இந்தப் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் ஒன்றே போராசிரியரின் கவித்திறனைக் காட்டப் போதுமானது.

நீங்கள் தமிழில் விரும்பிப் படிக்கும் உயர்ந்த நூல்கள் எவை என்ற வினாவுக்கு அவர் தம் அருமைத் திருவாயினால் கூறிய பதில் வார்த்தைகள் இவை. "பக்தி நூல்களில் உயர்ந்தது திருவாசகம். நீதி நூல்களில் தலை சிறந்தது திருக்குறள், புராணங்களில் மேலானது கந்தபுராணம், சாத்திரங்களில் உத்தமமானது சிவஞானசித்தியார். இவைகளையே நான் முதல்தரமானவை எனப் போற்றிப் படிக்கின்றேன்" என்பது பேராசிரியர் திருவாக்கு.

பேராசிரியர் அரசியலில் காந்தியடிகளைப் பின்பற்றியவர். ஆன்மிகத் துறையில் நாவலர் வழியே நலமெனக் கண்டவர். புங்குடுதீவின் கல்விக்காகத் தம்மை அர்ப்பணித்த சைவப் பெருந்தொண்டர். உயர்திரு வ.பசுபதிப்பிள்ளை அவர்களையே வாழ்வுக்கு வழிகாட்டியாகக் கொண்டவர். புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியா சாலை அவருடைய உள்ளங் கவர்ந்த ஒரு பெரும் பாடசாலை. யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஆங்கிலக் கல்லூரிகளிற் கூடப் பழைய மாணவர் சங்கம் (O.B.A) அமைக்கப் பெறுமுன் புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்கத்தினை அமைத்து இருபத்தெட்டு ஆண்டுகள் அதன் சீர்கண்டு மகிழ்ந்தவர் பேராசிரியர் சதாசிவம்பிள்ளை என்பதனை நமது சமுதாயம் மறக்கவே மாட்டாது. இப்பாடசாலை இன்று மகா வித்தியாலயமாகத் தரம் உயர்ந்துள்ளது. மத்திய மகா வித்தியாலயமாகத் தரம் உயர வேண்டுமென்று நினைத்து வாழ்த்தி நிற்கும் பேராசிரியர் சதாசிவம்பிள்ளை அவர்கள் உள்ளத்தால் உயர்ந்த உத்தமர். அவர் பழமையும், புதுமையுங் கலந்த தனித்துவம் வாய்ந்த ஒரு தனி மாமனிதர். நாம் வாழ வேண்டுமென்று வாழ்த்தி நிற்கும் முதுபெருங் கிழவர் பேராசிரியர். அவரை என்றும் நினைவில் கொள்வோமாக!

**ஆதாரம்:** வித்துவான் சி.ஆறுமுகம்,
கணேசன் ஸ்தாபகர் விழாமலர்-1983

* * * * * * * * * * *

**கல்வி**

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."**

கற்க வேண்டிய நூல்களைப் பிழையறக் கற்க வேண்டும். அப்படிக் கற்ற பின்பு, அந்த நூல்கள் சொல்லும் கருத்துக்களின் படி நின்று வாழ வேண்டும்.

சிறுகதை

# தொண்டு கிழவர்

-புலவர் ஈழத்துச் சிவானந்தன்

அதிகாலை ஐந்தரைமணி சிவன்கோவில் கோபுரத்திலிருந்து ஒலித்த சுப்பிரபாதம் நிறைந்து: திருப்பள்ளியெழுச்சி தொடங்கி இழைகிறது.

".....கண்ணகத்தே நின்று! களிதருதேனே .....கடலமுதே.....கரும்பே.....விரும்படியார் எண்ணகத்தாய்ய்ய்..... உலகுக்கு உயிரானாய்ய்ய்..... எம்ம்ம்ம்............ பெருமான் பள்ளி எழுந்தருளாயே....." தருமபுரம் சுவாமிநாதன் தமிழைக் குழைத்து தேனில் கலந்து இனிமை செறிய கரும்புதருசுவையாய் எம்பிரானின் காதில் விட்டு நித்திரையை நீக்குகிறார்.

"சிவசிவா.....சிவசிவா..... சிவசிவா....." கட்டிலில் கிடந்த கிழவர் எழுந்து தலை மாட்டில் இருந்த விபூதிப்பையுள் கையை விட்டு தொட்டு நெற்றியில் இட்டு வடக்கு நோக்கி கரங்களைக் குவிக்கிறார் .....சிவ சிந்தனையில் நிட்டை கூடுகிறது.

"என்ன தாத்தா.....வெளியில் போகவேண்டுமா?" பக்கத்தில் படுத்திருந்த பேரன் சிவா.....தாத்தா தன்னைக் கூப்பிடுவதாகக் கருதிக்கேட்கிறான். "இல்லை....நீ... படு..." அவர் உதடு, உரைத்து உறைகிறது. வடக்கே கேட்கும் சிவநாதத்தில் சிவநாமமும் சிவரூபமும்கிழவருக்குச், சித்திக்கிறது. அவர் இருந்தபடி இறைவனுடன் இணைகிறார்.... சாமீபம், சாயுச்சியம் எல்லாம் இகலோகத்திலும் இயலுமா... சாயுச்சியத்திற்குப்பின்பு கீழிறக்கம் சாத்தியமா?... கிடந்த நிலையிலும் கடந்தநிலையும், மறந்தநிலையும் கைகூடிக்கழருமா? ஆட்கொண்ட அண்ணல் மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாரவிடுவானா? வீடுபேற்றிற்கு முன்னர் வீட்டிற்கு விட்டு எடுப்பானா? அனுக்கிரக விளையாட்டில் ஆடுகின்ற ஆட்டத்தை ஆரறிவார். மோனத்தில் இருந்த கிழவர் ஞானவிசாரத்தில் தரிக்கிறார். பூலோகத்தில் பொழுது புலர்கிறது.

"அப்பு..." மகள் சிவகாமி அழைக்கிறாள்.
"குழப்பாதே..." அவர் சீறுகிறார்.

அவர் சீற்றம் சிந்தனைக்குரியது. உயிரினும் ஓம்பிய ஒழுக்கத்தின் விழுப்பம் பழுத்த பயன் கிழவர் கோபம், குணமென்னும் குன்று ஏறி நின்ற வெகுளி. திரிபுரம் எரித்த உருத்திரமூர்த்தியோடு சார்ந்ததன் வண்ணமாகிய பேறு. வேறு வடிகால் இல்லாமையால் திரண்டகொதிகலன். முறுகிய சிவநெறிக் கற்பின்கனல். திட்டமிட்ட கோபம் நஞ்சு. திடீர் கோபம் அமுது. கிழவர் கோபம் அமுதாகியதால் அனைவரும் அதற்கு அடக்கம்-மரியாதை. சபைகளில் அக்கோபம் 'இளையப்பர் சீற்றம்......' என பிரபலம் பெற்றது.

விடியல் விரிந்து நிலம் தெளிந்தது. கிழவர் தெற்குப் பக்கமாய் திரும்பிப் பார்க்கிறார். எழும்பி வெளியில் போகவிருப்பமில்லை. இருக்கிறார். பொன்னான கனகசபை வருகிறார். முகம் மலர்ந்து பாக்கிறார். அவரோடு அளவளாவுதலில் ஓர் ஆனந்தம். சைவசித்தாந்தக் கடல் அலைகளில் இருவரும் குளிக்கிறார்கள். காலைக்கடன் மறதியாகிறது. பசு, பதி, பாச விளக்கம் நீள்கிறது. நேரம் போவது தெரியவில்லை. முன்பள்ளை சத்தப்படுகிறது. இருவரும் எட்டிப் பார்க்கிறார்கள். மகன் பாலா வருகிறார். பாலாவுடன் மருகி சாவித்திரியும் ஆறுமுகனாரும் வருகிறார்கள். இரண்டு வித்துவான்களையும் காண்பது இளையப்பருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. ஒருவரில் கனகசபை நடனசபாபதியையும், மற்றவரில் ஆறுமுகமான பொருளையும், காண்பவர் அவர். திருவாசகமும் கந்த புராணமும் கிழவருக்கு இருகண்கள். இதனால் மகள் சிவகாம சுந்தரியானார். மகன் பாலசுப்பிரமணியம் ஆனார். உலக விவகாரங்கள் ஊர்ப்புதினங்கள் சித்தாந்த வியாக்கியானங்கள் பொழுதைக் கரைத்தன. பொழுதைக் கவனிக்காத கரிசனைத்தவம் அது. மகன் கொண்டு வந்த மருந்து மகள் கையுக்குப் போய் கண்ணாடி மேசைக்குத் தாவுகிறது. கடைக்கண்ணால் அந்நிகழ்வுகளை நோட்டம் விட்டு

கிழவர் திருப்திப்படுகிறார்.

திழவருடைய வாழ்க்கை மேடு பள்ளங்களைக் கண்டது. தொண்ணூறு வயது. அடியும் முடியும் அறிந்த அனுபவம். உறைத்த பக்தியால் பழுத்தமனம் அவர் ஆடும் அப்பனின் அடிக்கீழ் இருக்க பூரண விருப்பம் கொண்டிருந்தார். பூவுலகத்தில் பாசம் இருப்பினும் பற்று இருக்க வில்லை. பற்றற்றான் பற்றினைப் பற்றி பாசமாம் பற்றறுக்க பயணத்திற்குத் தயாராய் இருந்தார். பூவுலகப் புதுமைகளை அவர் விரும்பி வரவேற்றார். நாவலர் மரபினராயினும் கட்டுப்பெட்டித் தனம் கடுகளவும் இல்லை. புதுமைப் போக்குடையோர் கூட்டங்களுக்குத் தலைமை தாங்க விளைவு கொண்டு பொல்லுடன் புறப்படுவார். புதுமை யென்றும் தேவையென்றும் நெறிமுறை தவற அவர் அனுமதியார். ஒழுங்கும் ஒழுக்கமும் வழுவினால் வாழ்க்கையில் வழுக்கல் விழுந்து விடுமென்று விளக்கங்கள் கூறுவார். சைவத்தமிழ்ப் பண்பு குலையாமல் குழம்பாமல் விரிந்து பரந்து ஒளிர்ந்து பிரகாசிக்க பிரயத்தனங்கள் செய்தார். அவருடைய பிரபந்தங்கள் அவர் அகத்தைப் புறத்தில் புரிய வைத்தன. தூதும், பிள்ளைத் தமிழும், ஊஞ்சலும் புலமை வெளிப்பாடு மட்டுமல்ல சமுதாய அக்கறையின் தரிசனங்கள்.

திருக்கோவில்களில் சதுராட்டத்தை வெறுத்த அவர் உற்சவமூர்த்திகளுக்கு கைகால்களை பிரத்தியேகமாக இணைப்பதை மறுத்த அவர், கோவில்களில் தொலைக்காட்சி நடை பெறுவதை யறிந்து நெஞ்சம் புண்ணானார். எது எங்கு நடக்க வேண்டுமோ அது அங்கு நடக்கலாமே என்றார். அவர் எண்ணங்களின் வண்ணவடிவம் வாலிபர் கையில் இருக்கிறது. கிழவருடைய பக்திப் பணிகளும் தமிழ்த் தொண்டும் முடிவடையவில்லை. அவர் பெருமூச்சில் கனன்ற கருத்துக்கள் இனி வருங் காலத்தின் உயிர் மூச்சாய் இசையவேண்டும்.

நியமம் தவறாத கிழவர் நேரம் தவறியதற்குரிய காரணத்தை நினைத்துப் பார்க்கிறார். ஏதோ தவறப்போகும் அறிகுறி அவருள் அரும்புகிறது. வெற்றிலை வாய்க்குள் ஒரு வெடிச்சிரிப்பு. "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" சரணாகதிப்பிரகடனம் சத்தம் போட்டு நடக்கிறது. தாத்தாவின் நாளாந்த நடவடிக்கையில் ஒன்றான சரணாகதிக்குரலை ரஞ்சியும், ஜானியும், கவிதாவும், யசோவும், தவமும், பபாவும் அவ்வளவாகப் பொருட்படுத்த வில்லை. அவர்கள் பொருட்படுத்தாததை தாத்தா பெரிதும் விரும்பினார். பொருட்படுத்தல் என்பது பொறுப்பெடுத்தலின் மறுதலை, இங்கேவா என்று அங்கே கூவும் அசரீரி தாத்தாவுக்கு மட்டுமே கேட்டது. முகத்தில் குறுமுறுவல் பூத்தது.

••••••••••

## கல்வி

"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை."

ஒருவனுக்கு அழிவில்லாத நிலைத்த செல்வம் கல்வியே. கல்வியைத் தவிர பொன்னும், பொருளும் போன்ற செல்வங்கள் நிலைத்த செல்வங்கள் அல்ல.

# சந்தமது கேட்டு உங்கள் சந்திக்கு எழுதுவது...

சப்த தீவுகளே சமுத்திரத்துச் சந்திகளே
சத்தமிடும் உங்களது சித்தமது கேட்கிறது
சொந்தம் சுகமென்று சுதி கொண்ட வாழ்வற்று
சந்தமது கேட்டு உங்கள் சந்திக்கு எழுதுகிறேன்.

வாடைக்காற்றுக்காய் வளைந்து கொண்ட பனைமரமே!
மாதுளை மரம் எப்படியோ?
என்மாந்தோப்பு எப்படியோ?
பூவரசு நிழல் எங்கே?
என்னூரின் பூங்கா வனம் எங்கே?

எல்லாமே போச்சிதுவா..?
எனியில்லை என்றாச்சிதுவா..?

சந்திக்கு கரை சேர்க்கும்
சாரதிகள் எப்படியாம்..?
குமுதினி என்ன வாச்சாம்..?
வடதாரை என்ன வாச்சாம்..?
வந்ததாம் புதிது ஒன்று வலம்புரி என்னவாச்சாம்..?

வெட்டினார் எம்மை வாளால் குமுதினிப்படகில் அன்று
வேதனை இன்றுமுண்டு
வெந்தவர் கதைகள் மென்று

வாணிபம் செய்யும் நல்ல
வணிகர் கள் வாழும் பூமி
ஏனிது ஆச்சுதய்யா இப்படி ஆகிப் பொய்யா..?

தானமே சிறந்த பூமி
தாய்மகள் வாழும் எங்கள்
கோவிலாய் கொண்டாள் ஏன்தான்
கொடியரை அழித்தாள் காணேன்.

ஐயனார் கூட எங்கள்
அனலை தீவினில் கோவில்கொண்டார்
துய்யமாய்ப் பகைவர் சேனை
துய்த்திடல் அதுவும் காணேன்

பொய்யதா நீங்கள் வாழ்தல்
புரமெலாம் இழுத்தல் ஐயா
கண்ணகை யம்மன் மாரி
காளிதான் கோவில் கொண்டாள்
என்னையும் பெற்றாள் பேச்சி
அம்மனும் கோவில் கொண்ட
புங்கைமா நகரும் கூட
புலர்வினை இழந்து போச்சோ..!

சிவனார் முருகன் அண்ணர்
சீவயம் பூராய் வேண்டி

ஊர்சுகம் விட்டே வந்தோம்
உறவுகள் இழந்து போனோம்
சீவியம் பூராய் யேசு
சீவியம் செய்வார் என்றார்
பார்தனை விட்டே வந்தோம்
பல சுகம் இழந்து போனோம்.

சிவனார் முருகன் அண்ணர்
சீவியம் பூராய் வேண்டி
ஊர் சுகம் இழந்தே போனோம்
உறவு நாம் இழந்தே ஆனோம்.

சத்தமது கேட்டு உஙகள் சந்திக்கு எழுதியது,

**பசுபதி ஏகலைவன்**

◆◆◆◆◆◆◆◆◆◆

## கல்வி

**"யாதானும் நாடுஆமால் ஊர்ஆமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு"**

கற்றவனுக்குத் தன் நாடும், தன் ஊரும் அன்றி எல்லா நாடுகளும், எல்லா ஊர்களும் தன் சொந்த நாடும், ஊரும் போல் ஆகும். கல்வியின் பெருமை இப்படியிருக்க ஒருவன் சாகும் வரையில் கல்வி கற்காமல் காலம் கழிப்பது ஏன்?

# எங்கள் ஊர் பூவரசே!

வாடைக்காற்று வந்து வீசும்
வண்ணத்தளிர் முளைத்து எழும்
சாடையாய் மலர்ந்த பூ சிரிக்கும்
சாகசம் காட்டிச் சில துள்ளும்,

ஓடை நிலத்திலும் பச்சை
ஓங்கி நிற்பது தெரியும்
மேடைப் புட்டியிலும் புற்கள்
மென்பட்டாய் பள பளக்கும்,

கூடைக் கணக்கில் காய்கறி
கொட்டுண்டு கிடக்கும் பனம்பழம்
ஆடை போர்த்த கருமேகம்
அம்புலியும் மறைந் தொதுங்கும்,

கொட்டும் பெருமழைக் குளிர்
கூதலடிக்கும் ஈரக் காற்று
பட்டமரம் சிலபெயர்ந்து சாயும்
பாத்தியுடைத்து வெள்ளம் பாயும்,

தெட்டத் தெளிந்ததும் வானம்
தேன் சிட்டுகளும் மலர்நாடும்
கட்டுப்படாத காதற் கண்கள்
காணவழி தேடி நகரும்,

வெட்டித்தறித்து நட்டு வைப்பார்
வேலிக்குநல்ல உரமாய்ச் சேர்பார்
கட்டிப் பந்தலுக்கும் போடுவார்
கட்டை விறகாயும் எரிப்பார்,

வற்றி வரண்ட வேளையிலும்
வண்ணப் பச்சை இதழ்விரிப்பாய்
நெற்றி வியர்த்துக் களைத்திட்டாலும்
நிழலைக் கொடுத்துக் காத்திருப்பாய்,

இரைதேடும் பறவை யினம்
எத்தனை தான் பார்த்திருப்பாய்
தரைமீது படுத்துன் நிழலில்
தனைமறந்த உறக்கம் சுகமே,

பச்சையிலை சுருட்டி பக்குவமாய்
பாசுரம் வாசிக்கும் குழல்செய்து
இச்சையுடன் ஊதியே இறுமாந்து
இயலும் மட்டும் களித்ததுண்டு,

தக்கதெது தகாத தெது
தானறியாப் பருவத் துன்
செக்கச் சிவக்கா மலரும்
செம்மஞ்சள் பூவும் கொண்டு

தக்கதாய் மாலை கட்டி
தம்பியின் தேர்ச் சாமிக்கு
பக்குவ மாய்ச் சாத்தி
பார்த்தனள் தங்கை யன்று,

நாடுவிட்டு வீடுவிட்டு வந்தாலும்
நாளும் மறப்பதற்கில்லை பூவரசே,
கேடுகெட்ட பாவிகள் போயொழிய
கெட்டபோ ரொழிந்து நாடுசிறக்க

கூடுசேர் பறவைகளா யங்கு
குதித்தோடி வந்திடுவார்தாமே-அதுவரை
பாடுபடும் வீரர்க்கு நீயுதவி
பார்த்திருப்பாய் பூமியதை நன்று,

வன்னிவனம்முதல் கன்பரா கனடாவரை
வெளிக்கிட்டுப்பறந்துவிரைந்துழைத்தாலும்
கன்னிமனம் குளிர்வதுபோல் கனவினிலும்
காணவிழைவது உனைத்தான் இன்றும்,

வேளைவரும் வீதி எமக்காகும்
விண்சிவக்கும் வீரரணி நடக்கும்
நாளைவரை நான் பாடுங்கவி
நன்றாய்க் கேட்டிருப்பாய் பூவரசே!

--வி.ரி.இளங்கோவன்

# நாடாண்ட எம் மண்ணோ காடாகப் போனதென்ன!

எட்டியடி வைக்கின்றோம் இரண்டாயிரத்திரெண்டில்
இட்ட அடி அத்தனையும் இருள் சூழ்ந்ததெம்மண்ணில்
பட்ட இடி கொஞ்சமல்லப் பாவியர்கள் எம்தமிழர்
தொட்டதெல்லாம் துன்பமதாய் தொடர்ந்ததுவே எம்மண்ணில்
நாடாண்ட எம்மண்ணோ காடாகப் போனதுண்டு
பாடு பட்டுத்தேடியதை பகையாளி பறித்ததுண்டு
அடுத்த கண்டம்தாண்டி அகதிநிலை கண்டதுண்டு
ஆங்காங்கே மாண்டவர்கள் ஆயிரம்பேர் வரலாறும்
தாங்காமல் தூங்கிவிட்ட சுதந்திரப் பூக்கன்றுகளும்
தாயார் துடித்திருக்கத் தங்கமகன் போனதுண்டு
மணக்கோலம்மறையு முன்னே மாண்டசெய்தி வந்ததுண்டு
மழலை மொழி மாறு முன்னே மலர்கள் பல மடிந்ததுண்டு
கற்றகல்வி பாதியிலே கறைபடிந்து போனதுண்டு
கற்புக்கரசியரை சிப்பாய்கள் சிதைத்ததுண்டு
மாலையிட்டான் தானிருக்க மனையாளும் மாண்டதுண்டு
மனையாள் தவித்திருக்க மாலைகளும் போனதுண்டு
எத்தனையோ இன்னல்களை ஏற்றுநின்ற காரணத்தால்
சத்தியத்தின் கதவுகளாம் தாய்குலமும் தாழ்திறந்து
கட்டித்தழுவிக் கனகமுலை தந்தவளே
பொட்டிட்டுப் பூவிட்டுப் போர்க்களத்தில் புகவைத்து
விட்டு விட்டு வீதிவழி விடுதலையைப் பார்த்ததுண்டு
இறப்பினிலே வாழும் என்னரிய தமிழினமே
இனியும் எங்களுக்கு இன்னல் வரவேண்டாமே
இரண்டாயிரத்து ரெண்டில் இனித்தமிழ்மக்களுக்கு
ஆண்டாண்டு மாண்டவர்கள் ஆயிரம்பேர் வரலாற்றின்
அவதி நிலை அழியவேண்டும்
பொற்காப்புக் கரம்பிடித்து கற்புதனைப் பறித்தெடுத்த
களங்கநிலை கருகவேண்டும்
கற்றகல்வி பாதியிலே கறைபடிந்து போன
கவலை நிலை போகவேண்டும்
கூறு கூறாகிப் போன எம்தமிழினம்
கூடியே வாழவேண்டும்
வேறு வேறான வெந்துயர் துறந்து
வேதனை போகவேண்டும்
நாடு நாடாக நாய் போல் அலைந்தவர்
வீறு நடை போடவேண்டும்
நோய் நொடி வறுமை நொந்த நிலைமாறி
தாய் தந்தை வாழ வேண்டும்
தாய் தந்தையொடு சேய்கள் பாசப்பிணைப்பிலே
தரணி ஆழவேண்டும்
தாய் மொழி தமிழையே தனித்தமிழாக்கித்
தாயகம் முடிபெற வேண்டும்
வாழிய தமிழ்மொழி வாழிய தமிழரென
வையகம் வாழ்த்திட வேண்டும்.

**நா.தேவதாசன் (ஜேர்மனி)**

# ஈழம் பிறந்ததின்றே எம்மவர்கள் செய்வதென்ன!

ஈழம் பிறந்ததின்றே எம்மவர்கள் செய்வதென்ன
சாலச் சிறந்ததொரு சரணாலயமாக்கிடுவோம்
வேளம் வேங்கைகள் எம்மருகே சூழவுள்ளார்
வென்றெடுத்த சுதந்தரத்தை வீரமுடன் காத்திடுவோம்
ஆளம் பதிந்ததோர் அணைக்குளிகள் அமைத்திட்டு
காளை இரண்டுபூட்டிக் களணிகளில் பயிர்செய்வோம்
வேளை வரும்போது வெளிநாட்டில் வணிகம்செய்வோம்
நாளை நமதென்றே நம்நாட்டைக் காத்திடுவோம்

அரசு எமதுடமை அந்தரங்கம் நமதுரிமை
அயல்நாட்டு உறவையும் அண்ணனாக அணைத்திடுவோம்
முரசு கொட்டும் என்றென்றும் எம்முற்றத்து அரசசபையில்
மூத்தோர் வாழ்த்துக்கூற முதல்வர் பிரபாகரன் நாட்டைஆழ்வார்
பரிசுகள் தரவேண்டும் பள்ளிக்கூட மாணவர்க்கு
பாரில்வீரரென அவர்கள் பட்டறை கூறவேண்டும்
விரிசல் எம்மவருள் விட்டகல வேண்டுமன்றோ
வீணான சாதிக்கொடுமை விறகாய்ப் பொசுக்கவேண்டும்

சீதனம் என்றசொல்லு ஓர்சீரழிவர் தமிழன்றோ
ஊரில் அதைஒழிக்க உழையுங்கள் இழைஞர்களே
வேதனம் வேண்டாம் விதவைகட்கு வாழ்வுகொடு
சாதனைகள் படைக்கும் தமிழனாக வாழ்ந்திடுவோம்
போதனா வைத்தியசாலை புனர்வாழ்வு செய்யவேண்டும்
புகலிடம் இல்லாதோர்க்குப் புதுவீடு கட்டவேண்டும்
சோதனை மிகுந்தகாலம் தொழில்தெரிந்தோர் போகவேண்டும்
பாதைகளைப் பிரித்தாங்கே பட்டினங்களாக்கவேண்டும்

கோவில்கள் பள்ளிகள் பிறகொடுப்பனவு நிலையங்கள்
தானியங்கும் சக்திபெறத்தனி நிர்வாகம் அமைக்கவேண்டும்
நாவில் மரமுண்டு நம்மூரில் காடுகளோகனக்கவுண்டு
நேரில்ப்பார்த்தால் மேலத்தோர் நிறையவே பணம்தருவார்
சாவில்ப் பயமில்லை சண்டைக்கு மஞ்சமாட்டார்
எம்காவல்த் தமிழர்களைக் காப்பரணாய் வைப்போமே
சேர சோழ பாண்டியனைச் சேர்ந்ததமிழர்கள் நாம்
செல்வம் கொழிக்கவல்ல சீர்காழி ஆக்குவோமே

ஈழம் ஒருதேசம் என்றிருந்தோ தமிழர்ஆண்டபூமி
இன்றுவாழும் நிலையில்லாது வாடுவதோ நம்மக்கள்
தோழர்களாக நாம் கூடிதொண்டுகள் பலசெய்வோம்
ஆளும் அரசுக்கு அல்லலற்றும் நாம்வாழ்வோம்
மீளஒரு தமிழர்நிர்வாகம் மீண்டும் அமைத்திடுவோம்
சாலச்சிறந்த தொருநகர்வாலர்கள் நமக்குமுண்டு
கோழைகள் அல்லாதமிழர் நம்புலிக்கொடிஏற்றியே
நாளை நம்ஈழத்தை நாமேஆள்வோமே.

- புங்கையூர் நல்லையூரன்

# தாயகத்தில் நான் படித்த காலம்

தீவகன் - சதாசிவம் சேவியர்

1922ல் பிறந்த நான் 1928ல் பாடசாலையில் சேர்க்கப்பட்டிருப்பேன் என எண்ணுகின்றேன். முதல் நான் சேர்க்கப்பட்டது ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில். அது இன்று மகளிர் வித்தியாலயம்.

நாற்புறமும் சிறு மண் சுவர் கட்டி தென்னம் கீற்றால் வேயப்பட்டிருந்தது. மாணவர்கள் சிறு துண்டு தான் கட்டியிருந்தார்கள். நானும் அவ்விதமே. மாணவிகள் சிறுதுண்டு பாவாடை யோடும், வயது சற்றுக் கூடியவர்கள் சட்டை துண்டும், சட்டை பாவாடையும் கட்டி வருவார்கள். ஆசிரியர்களும் அனேகமாக வேஷ்டி, சால்வை யுடனேயே வருவார்கள். மேல்வகுப்பு மாணவர் களும் வெறும் மேலுடன் தான் வருவார்கள்.

புத்தகங்கள் குறைவு. சிறுவராகப் படிக்கத் தொடங்கும் போது ஏடு தொடக்கி, முற்றிய பனை ஓலைக் குருத்தில் எழுத்தாணியால் எழுதப்பட்ட எழுத்துக்களையே (அரிச்சுவடி) படிக்க வேண்டும். நிலத்திலே உட்கார வைத்து மண்ணிலே விரலால் எழுதப்பழக்குவார்கள். சில சமயம் விரல் கடுமையாக நோவுண்டாகி வலிக்கவும் கூடும். ஆசிரியர்களின் கையில் எந்த நேரமும் கம்பு அதாவது கேரதீவுக் காட்டில் வெட்டப்பட்ட ஒரு வித கறுத்த வைரமான தடி அல்லது பூவரசு அல்லது புளியம் தடி கூட இருக்கும். இடையிலே ஒடிந்து விட்டால் புற்றூள் தடியாலும் அடி கிடைக்கும்.

ஒரு சில ஆசிரியர் செவியில் நோண்டியும், வயிற்றில் நோண்டியும் தண்டிப்பார்கள். ஆனால் அத்தண்டனைகள் எல்லாம் அன்புமயமாக இருக்கும். பராக்குப் பார்த்தலோ, கதைத்து சிரித்துக் கூப்பாடு வைப்பதோ கிடையாது. ஆசிரியர்களுடைய பிள்ளைகளானாலும் வேற்றுமை கிடையாது. சில சமயம் ஆசிரியர் களுடைய குழந்தைகள் தான் தண்டனை கூடப் பெறுவார்கள். இடைவேளை விட்டதும் ஒடி விளையாடலாம். கிணற்றில் தான் தண்ணீர் குடிக்க வேண்டும். மல சல கூடம் கிடையாது. வேலி ஓரம், மர நிழல்கள், தூரத்தில் உள்ள இடங்களைப் பயன்படுத்தலாம்.

கோயில்களில் பூசை, பிரார்த்தனை, திருவிழாக்கள் நடைபெறும். அவற்றிலும் கலந்து கொள்ளலாம். வெள்ளி, செவ்வாய் தினங்களில் காலை கோயில்களைச் சுற்றி வந்து தேவாரம் படிப்பது வழக்கம். நவராத்திரி நாட்களில் பாடசாலை ஆசிரியர்கள், பிள்ளைகள் ஒன்று கூடி பாடசாலையில் இருந்து கோவில் தொடக்கம் ஒவ்வொரு பகுதியாக வீடுகள் தோறும் செல்வார்கள். பாட்டு, பஜனை, சல்லாரி, தாளம் போட்டு உரத்துப் படித்துக் கொண்டே செல்வோம். ஒவ்வொரு வீட்டிலும் நன்றே உபசரித்து கற்கண்டு, அவல், சுண்டல் கடலை, பயறு கொடுத்து அனுப்புவார்கள்.

இடையிலே நான் பாடசாலை மாறி அமெரிக்கன் மிசன் பாடசாலையில் சேர்க்கப் பட்டேன். நாகலிங்கம் சட்டம்பியார், இராமநாதன் சட்டம்பியார், அமரசிங்கம் சட்டம்பியார் இவர்கள் அக்காலம் அம்மதத்தை ஆதரித்து இருக்க வேண்டும். இவர்கள் மூவரையும் நான் நன்கறிவேன். கல்விக்காக மதம் மாறிய காலம். பெருங்காட்டில் இம் மூவரையும் சட்டம்பியார் என்றே அழைத்தார்கள். அதன் பின்னரே வாத்தியார் என்றும், ஆசிரியர் என்றும் நாளடைவில் மாஸ்ரர் என்றும் அழைக்கத் தொடங்கினார்கள். அமரசிங்கம் சட்டம்பியாருடைய வீடு வித்துவான் கனகசபை என்பவருடைய வீட்டுக்கு அருகால் போகும் ஒழுங்கையில் தான் உள்ளது. அவ்வீட்டில் தான் அண்மைக்காலம் வரையும் றிஜிஸ்ரார் பொன்னையா அவர்கள் குடும்பத்துடன் வசித்தார்கள். நாகலிங்கம் சட்டம்பியாருடைய வீட்டுக்கும் இராமநாதன் சட்டம்பியாருடைய மகள் சற்குணம் ஆசிரியையுடைய வீட்டுக்கும் இடையிலேயே மிஷன் பாடசாலை உள்ளது. இப்பாடசாலையில் பொன்னையா ஆசிரியர் தலைமை ஆசிரியராகவும், ஆலடி சுப்பிரமணிய

வாத்தியார் உதவி ஆசிரியராகவும், இராமநாதன் சட்டம்பியாருடைய மகள் இரத்தினம் அக்கா ஆசிரியையாகவும் பணியாற்றினார்கள். மூவரும் மிகவும் கண்டிப்பானவர்கள். இரத்தினம் அக்கா அன்பானவர். இரக்கமானவர்.

பொன்னையா வாத்தியார் கண்டிப்பானவர். ஆனால் சுப்பிரமணிய வாத்தியார் மிக மிக கண்டிப்பானவர். அடித்த தடி ஒடிந்து விட்டால் இரண்டு றூள் தடியை ஒன்றாக இணைத்து அடிப்பார். ஆனால் இவர்களுடைய படிப்பித்தல் திறமையும், அரவணைக்கும் அன்பும் என்னை மட்டுமல்ல அப்போதிக்கரி பொ.நடராசா, சாறிளம் போறியம் போஸ்றமாஸ்டர் குணரத்தினம், கொட்டக்கலை வர்த்தகர் க.நடராசா, ஆசிரியர் இராசையா, ஆசிரியர் தணிநாயகம் போன்றோரை உருவாக்கியதை மறக்கவே முடியாது.

அநேகமாக அக்காலம் குறிக்கப்பட்ட வயது வரை சிலேற்றும், பென்சிலும் தான் பாவனையில் இருந்தது. துண்டு, வேட்டிதான் உடை, புத்தகங்கள் குறைவு. அக்காலம் ஆசிரியர்கள் எப்படித் தண்டித்தாலும் பிதா, மாதா தலையிடவோ, முறையிடவோ மாட்டார்கள். தொடக்க காலம் பாடசாலைகள் எல்லாம் அனேகமாக மண்ணாலும், கல்லாலும் கட்டப்பட்டு தென்னம் கீற்றால் அல்லது பனை ஓலையால் வேயப்பட்டே இருந்தது. சீமெந்து கட்டிடம், ஓட்டுக் கூரைகள் குறைவு. இன்றுள்ள வசதிகள் குறைவு. பாண், பணிஸ், பால் உணவுகள் கிடையாது. எங்கிருந்தும் மாணவர்கள் நடந்தே வருவார்கள். பிரயாண வசதி குறைவு. வசதியான ஆசிரியர்கள் கோவில் பூசகர்கள் வைத்தியர்கள் போன்றோர் ஒற்றை மாட்டுக் கூடார வண்டியில் பயணம் செய்வார்கள். வேலணை-புங்குடுதீவுக்கான வாணர் பாலம் போடப்பட்டதன் பின்னரே சகல முன்னேற்றமும் பெறலானோம்.

அனேகமாக எல்லோருடைய வீடுகளிலும் மாடு, ஆடு, கோழி வளர்ப்பார்கள். அவற்றால்தான் சிறு வரும்படி வரும். தோட்டம் செய்வோர் குறைவு. புகையிலை, மரவள்ளி, கத்தரி, வெண்டி, மிளகாய், வெள்ளரி, வத்தகை, வத்தாளம் கிழங்கு இவை தான் தோட்டப் பயிர். புகையிலை ஒன்று தான் வியாபாரப் பயிர். மற்றவை எல்லாம் வீட்டு உணவுக்காகவே. பனை, தென்னைப் பிரயோசனமும் உண்டு. பனம் பழம் ஒன்று தான் பழவகை. கோயில் கொண்டாட்டம், திருவிழாக் காலங்களில் தான் மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் கிடைக்கும். அதுவும் அருமை. யாழ்ப்பாணம் போய் வர 3, 4 நாளுமாகும்.

பசுப்பால், மோர், தயிர் ஓரளவு கிடைக்கும். ஆடு, செம்மறி ஆடு வியாபாரம். குழை வெட்டும் காலத்தில் பூவரசு, ஆவரசு, எருக்கிலை, காவிளாய், இலுப்பை, ஓதி போன்றவையும் விற்பனைப் பொருட்கள். வெளிநாட்டார் வந்து கொள்முதல் செய்வார்கள். அத்துடன் ஆட்டெருவும், மாட்டெருவும் வியாபாரம் செய்யலாம். பொதுவாக கடலுணவும், பனை உணவும், தோட்டப் பயிர் உணவும், வரகு, சாமை, குரக்கன், பயறு, உழுந்து, எள்ளு, சிறதளவு நெல் உணவுகளும் கிடைக்கும். குறைவானாலும் மனமகிழ்ச்சியும், குதூகலமும் குறையாது. இன்று அன்றைய மகிழ்ச்சியை காணமுடியாது.

புளி, இலுப்பை காய்க்கும் காலத்தில் சேகரித்து வைப்பார்கள். இலுப்பைக் கொட்டை சேர்த்துக் கொடுப்போம். பனை காய்க்கும் காலம் பனங்குரும்பை சேர்த்துக் கொடுத்தால் மோர் குடிக்கலாம். ஊமல் கொட்டை, பன்னாடை, கொக்கறை, விறகு தேடிக் கொடுத்தால் அப்பம் சுட்டுத் தருவார்கள். அடுப்பில் நெருப்பு சட்டியில் அப்பம், மேல் சட்டியில் நெருப்பு. இன்று அம்முறை போய்விட்டது. வீடு கட்டிக் குடிபூரல், வீடு வேய்தல், கலியாண வீடு மற்றும் கொண்டாட்டங்களானால் மகிழ்ச்சி சொல்லவே முடியாது. பல வீட்டுக் காரர்களும் ஒன்று கூடி ஒரு வீடு, ஒரு குடும்பம் போலவே செயற்படுவார்கள். வேற்றுமை அறவே கிடையாது. ஆடிக்கூழ், கொழுக்கட்டை, மோதகம், வடை, முறுக்கு போன்ற பல வகைப் பலகாரம். இவை எல்லாம் இன்றில்லை. பல விதமான கஷ்டங்களின் மத்தியிலும் இவற்றை எல்லாம் தந்து எம்மை ஊட்டி வளர்த்தது என் தாயகம். இவற்றை வட துருவம் வந்தும் மறக்கவோ, மறுக்கவோ, மறைக்கவோ முடியவே முடியாது.

வாணர் சகோதரர்களின் விடாமுயற்சியாலும், ஊக்கத்தாலும் கொடைவள்ளல் A.L.தம்பிஐயாவின் தன்னல மற்ற சேவையாலும் தீவகம் முன்னேற வாணர் பாலம் வழி காட்டியது.

◆◆◆◆◆◆

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினர் ரொறன்ரோ வரசித்தி வினாயகர் தேர்த்திருவிழாவில் நடாத்திய தாகசாந்தி நிலையத்தில்




புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் ஒன்றுகூடல் விளையாட்டுவிழா :.2002.



பூவரசம் பொழுது '2002 சிறப்புற எமது வாழ்த்துக்கள்!

**உங்கள் பல், முரசு, வாய் சம்பந்தமான பிரச்சனைகளுக்கு அணுகுங்கள்**



**டாக்டர் சபாபதி இரவீந்திரன்**

Dental Surgeon BDS,MS,FDS,RCS



பல் வைத்தியத்துறையில் பலவருட கால அனுபவமும்
இங்கிலாந்தில் சேவையாற்றிய அனுபவமும்
இலங்கையில் விசேட பல் வைத்திய நிபுணராகக்
கடமையாற்றிய அனுபவத்துடன் சேவையில்.....

**வாரத்தில் 7 நாட்களும் சேவை**

3025 HURONTARIO ST. SUITE #102
MISSISSAUGA, ON
TEL.: (905) 270-7844

3852 FINCH AVE. EAST SUITE #303
SCARBOROUGH, ON
TEL.: (416) 292-7004

பூவரசம் பொழுது '2002 சிறப்புற எமது வாழ்த்துக்கள்!

# A - 1 KEERTHI

## DRIVING SCHOOL

விரும்பிய நேரங்களில் பயிற்சி வகுப்புக்கள்

வீதிப்பரீட்சை நாளன்று பயிற்சி வகுப்பும் வாகன உதவியும்

வாகனக் காப்புறுதியில் விசேட கழிவு

பொறுமையும் அனுபவமும் உள்ள பயிற்சியாளர்




**பவா நாகனாதி**
**(416) 264-2997**



# KESTREL BAKERY
## TAKE OUT & CATERING

என்றும் சுவை தரும்
வெதுப்பகம்............





மொத்த ஓடர்களுக்கு விசேட கழிவு
வழங்கப்படும்

**BREAD, BUN, BAGEL & CAKES**

**BAKED...FRESH..
DAILY ON THE
PREMISES**





**பாண், பனிஸ், றோல்ஸ் அனைத்தும்
சுடச்சுட எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.**


**OPEN 7 DAYS A WEEK!**

வாரத்தில் 7 நாட்களும்

**5010 STEELS AVE. WEST, UNIT #4**

**(Kipling & Steels) Etobicoke, Ontario**

**TEL: (416) 744-7279**








வீடு வாங்கவும் விற்கவும்...
14 வருட அனுபவம்,
திறமை, பொறுமையும் கூடிய
கரு கந்தையா
அவர்களை அழையுங்கள்
Karu Kandiah
Associate Broker
Direct: 416-284-5555
Bus: 416-284-4751 (24Hrs)
880 Ellesmere Rd. Suite 203
(Kennedy & Ellesmere)
Scarborough. Ont. M1P 3W6
ROYAL LEPAGE
Residential Real Estate Services

PHALAPPASS
PART Y SERVICE

# பாலப்பாஸ்

## Catering and Take out





**1635 Lawrence Ave West, Unit 5**
**North York, Ont M9L 3C9**


உங்களது திருமணம், பூப்புனித நீராட்டு
விழா, மற்றும் அனைத்து மங்கள
வைபவங்களையும் ஒரே கூரையின் கீழ்
ஒருங்கமைத்திட எங்களை அழையுங்கள்

Hyw 27 and Albion பகுதியில் 100 பேர் முதல்
900 பேர் வரை அமரக்கூடிய இரண்டு அழகிய
மண்டபங்களுடன் ஸ்காபுரோ பகுதியில்
450 ~ 550 பேர் அமரக்கூடிய மண்டபமும்
எம்மிடம் கைவசம் உண்டு.

அழையுங்கள்

**Phalappass Party Service's and Catering**

**Tel: (416) 614-9669**
**Cell: (416) 568-6591**
**Fax: (416) 248-5999**




*Pure Gold Mean*

# *Surya Jewellers*

*Finest Quality 22k, 24k Gold & Diamonds*




Sooriya Paramanatham
Proprietor



1495 Gerrard St. E. Toronto, ON
Tel.: (416) 406-3373
Fax: (416) 406-6628
Toll Free 1-877-446-9997

Knowledge is power. Be a powerful buyer with.....

மனம் நிறைவு பெற்ற வாடிக்கையாளர்களே நான் மதிக்கும் பெரு விருது



Gold Award Winner
# 1 Top Producer
1994, 1995, 1997
Home life Champions


வீடு வாங்க, வீடு விற்க மற்றும்
அதுபற்றிய ஆலோசனைகளுக்கும்
நாடுங்கள்
**சாம் குமார்**
Sam Kumar B.V.SC, D.V.P (pm) NZ

12th Successful Year

**8030 SHEPPARD AVE. EAST**
**SUITE # 205**
**SCARBOROUGH, ONT.**
**TEL.: (416) 281-8090**
**RES: (416) 299-7325**

# உங்கள் புதிய முகவரியைத் தேடுகிறேன்

## ... உங்களுக்காக




ROYAL LEPAGE

**Residential Real Estate Services**
**Office: 416.284.4751**
**Cell: 416.294.9322**
www.maalikai.com
E-mail: veedu@rogers.com,
ROYAL LEPAGE REAL ESTATE SERVICES LTD., BROKER

கென் கிருபா AICB

சொகுசான பயணங்களை சுகமாக அமைத்துக் கொள்ள

# A1 TRAVEL & TOURS




**885 PROGRESS AVENUE, 106, SCARBOROUGH, ON, MIH 3G3** (Markham / Progress Avenue)

# BEAUTY INTERNATIONAL

உங்கள் எண்ணங்களை பல
வண்ண வடிவங்களில்
வடிவமைத்துத் தருவதில்
கனடாவில் முன்னணியில்
நிற்பவர்கள். ஓடர்கள்
உடனுக்குடன் வடிவமைத்துக்
கொடுக்கப்படும்.
அனைத்துப் பொருட்களையும்
மொத்த விலையிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

* உங்கள் வதிவிடங்கள், வியாபார அலுவலகங்களை அழகுபடுத்த வண்ண வண்ணச் சாடிகளில், வண்ண வண்ணப் பூக்கள், அழகு சிற்பத்தூண்கள், அழகு சிலைகள், வண்ண வண்ணப் பூமரங்கள், வாழை மரங்கள், தென்னை மரங்கள், பாம் மரங்கள், அழகு குறோட்டன்கள், அழகுக் கண்ணாடியில் பூக்கள்.........
* உங்கள் கொண்டாட்டங்களுக்கு அன்புக்குரியவர்களுக்குப் பெறுமதிமிக்க பலவகையான அன்பளிப்புப் பொருட்கள்
* பெறுமதிமிக்க மரத்தினாலான சுவர்க்கடிகாரங்கள்
* திருமண வைபவங்களுக்கேற்ற அழகுப் பொருட்கள்





**3160 Eglinton Ave. E. # 9,**
**Scarborough, Ont.**

**Tel.: (416) 265-5230**

**HomeLife**
**Metro**
Reality Inc.
Real Estate Broker

*** BUYING**
*** SELLING**
*** LEASING**



NADA G.NADARAJAH
B.V.SC
SALES REPRESENTATIVE






* வீடுகள் வாங்க, விற்க அல்லது வாடகைக்கு பெற்றிடவும்
* வீடுகள் வாங்குபவர்களுக்கான இலவச ஆலோசனைகள் சேவைகளைப் பெற்றிடவும்
* வீடு விற்பவர்களுக்கான இலவச பெறுமதி மதிப்பீடும் விசேட சலுகைகளும் குறைவான வட்டி விகிதத்தில் அடமான (Mortgage) ஒழுங்குகளைப் பெற்றிடவும் இன்றே அழைக்க வேண்டியவர்

**நடா G. நடராசா**


## நடா G. நடராசா

Res: (905) 472-8703
Bus: (416) 293-5093 (24 Hrs)
Fax: (416) 293-5237

5200 Finch Ave. E. Suite# 206
Scarborough, Ontario

ஓம்

# ஸ்ரீநிவாஸ் நிலையம்



இந்துமத குரு
சிவஸ்ரீ ஸ்ரீநிவாச சர்வானந்தக் குருக்கள் (சர்வன் ஐயா)

இந்துமத குரு, கனேடிய திருமணப் பதிவு அதிகாரி
பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாக குகனேஸ்வரக் குருக்கள் (குகன் ஐயா)
புங்குடுதீவு - 5, இலங்கை

இந்து மதக் கிரிகைகள் யாவும் ஆகம விதிப்படி செய்து தரப்படும்.
பதிவுத் திருமணம், திருமணத்துக்குத் தேவையான மணவறை, சடைநாகம்
போன்றவற்றிற்கும் மற்றும் மண்டப ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

சர்வன் குருக்கள்
(416) 891-6360

குகன் குருக்கள்
(416) 292-6089

# காப்புறுதியின் மறு வடிவம் சக்தி

# ஒற்றுமையின் மறு வடிவம் புங்குடுதீவுவாழ் மக்கள்

கனடாவில் காப்புறுதித் துறையில் குதித்த அன்றும் இன்றும் என்றும்
எனது தொழில் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் மூல வித்தாக
பிரகாசிக்கும் புங்குடுதீவு வாழ் மக்களுக்கு
எனது மனமார்ந்த நன்றிகளும் நல்லாசிகளும் உரித்தாகுக!

உங்களது சகலவிதமான காப்புறுதி தேவைகளுக்கும் வாகன காப்புறுதி, தீக்காப்புறுதி தவிர (முதியோர், இளைஞர் உட்பட) தெளிவாக மனத்திருப்திக்கேற்ப மாதாந்த கட்டுப்பாட்டுக்கிணங்க நாடவேண்டியவர் **சக்தி**

1983இலிருந்து சகல இனத்தவருக்கும் தகுந்த காப்புறுதியை அவரவர் திருப்திக்கேற்ப அளித்து 4,600இற்கு மேலான வாடிக்கையாளருக்கு சேவை செய்கிறார். விபரங்கட்கு பத்திரிகைகளையும் தகவல் கையேடுகளையும் பார்வையிடவும்.

**காப்புறுதித் துறையில் "சக்தியை" நம்பினோர் கைவிடப்படார்**

## சக்திவேல்

Res.: (905) 428-9299
Bus.: (416) 283-5795
Cell: (416) 706-3530
Pag: (416) 442-1042
Fax: (905) 428-9307

E-mail:sakthi@pathcom.com

# ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா

**திருமணம், பதிவுத் திருமணம் மற்றும் இந்துமத கிரியைகள் சேவை**

சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்
(கனேடிய திருமணப் பதிவு அதிகாரி, மிஸிஸாகா தேவஸ்தான பிரதம குருக்கள்)



**அனைத்து இந்துமத கிரியைகளையும் வேதாகம விதிப்படி செய்து கொள்வதற்கும் மற்றும் திருமணத்திற்குத் தேவையான முத்து மணவறை, பூமாலை, சடைநாகம், தலைநகை செற், தலைப்பாகை, மண்டப அலங்காரம், கல்யாண பூஜைக்குரிய பொருட்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கும், சைவ உணவுச் சேவைக்கும் மற்றும் மரீனா, றொபீனா மண்டப ஒழுங்குகளுக்கும் நாடுங்கள்.**

5576 Cortina Crescent, Mississauga, Ont.

**Tel.: (905) 501-0011**

# THE CHILDREN'S EDUCATION TRUST OF CANADA

## கனடா குழந்தைகள் கல்வி நம்பிக்கை நிதியம்

(இலாப நோக்கமற்றது)

* கனேடிய அரசின் அங்கீகாரம்
* 20% அரச நன்கொடை
* கனேடிய அரசின் உத்தரவாதமுள்ள பத்திரங்களில் நிதி வைப்பு
* உங்கள் பிள்ளை உலகின் எப்பாகத்திலும் கல்வி கற்கக்கூடிய வசதி
* 21 வயதிற்குள் விரும்பிய வேறொருவருக்கு மாற்றக்கூடிய வசதி
* குழந்தைகள் உயர்கல்வி தொடரமுடியாத சந்தர்ப்பங்களில் நீங்கள் வைப்பிலிட்ட முழுப்பணத்தையும் அதற்கான வட்டியையும் மீளப்பெற முடியும்.



**SUGANTHI RAMESH**

**Tel.: (416)538-0486**

* **DEPOSITORY:** ROYAL BANK
* **TRUSTEE:** ROYAL TRUST
* **INVESTMENT ADVISORS:**
  SCOTIA Mc LEOD,
  WOOD GUNDY &
  MERRIL LYNCH

மேலதிக விபரங்களை தொலைபேசியிலோ அல்லது நேரடியாகவோ பெற்றுக்கொள்ள அழையுங்கள்.

"குழந்தைச் செல்வங்களின் எதிர்காலத்திற்கு இன்றே வழி கோலிடுவோம்"

# FAMILY DENTIST


## குடும்ப பல் வைத்தியர்

**Dr. Vijayakala Sivathevan**
**டாக்டர். விஜயகலா சிவதேவன்**

## A Gentle & Caring Environment

**சேவைகள் - Services**
Cosmetic Dentistry - White Fillings,
Orthodontics - Braces, Teeth Whitening,
Gum Treatment, Root Canal Treatment
Oral Surgery and Extractions,
Crown and Bridge, Dentures





1200 Markham Road
Suite #119, Scarborough
(Markham & Ellesmere)

1041 Victoria Park Ave.
Scarborough

**Tel.: (416) 491-7987**
**(416) 289-7187**
**Cell: (416) 892-0987**

சகலவிதமான பல்
வைத்திய சேவைகளும்
கிடைக்கும்.


அனைத்து விதமான
காப்புறுதிகளும் ஏற்றுக்
கொள்ளப்படும்.


# ERAA SUPER MARKET

## இரா சுப்பர் மார்க்கட்டுடன்

இணைந்த

## இரா மக்கள் சந்தை






**இலங்கை, இந்திய, கனேடிய**
**உணவுப் பொருட்கள்,**
**உடன் கடலுணவு வகைகள்,**
**இறைச்சி வகைகள் என்பனவற்றை**
**மலிவான விலையில் பெற்றுக்கொள்ள**
**நாடுங்கள்.**

**Tel.: (416) 269-2622**







## ERAA MAKKAL CHANTHAI

**2607 EGLINTON AVE. EAST**
**SCARBOROUGH, ONT.**
**TEL: (416) 269-2622**


“பிள்ளையின் சிறந்த கை வண்ணத்தில்
நகரின் மத்தியில் நல்லதொரு பூக்கடை”

# A 1 Top Quality Florist

* *Wedding Supplies*
* *Garlands*
* *Floral Arrangements*
* *Bridal Bouquet*
* *Boutonniere*
* *Arch Decorations*

* திருமண அலங்காரப் பொருட்கள்
* பூமாலைகள்
* பூச்சோடனைகள்
* பூச்செண்டுகள்
* பூக்கூடைகள்
* அலங்கார வளைவுகள்
* பலவடிவங்களில் மணவறைகள்
* பூத்துக் குலுங்கும் பூக்களின் எழில்வண்ணம் பேசும் பலவித வேலைப்பாடுகளுக்கு......





**“பிள்ளையின்” 25 வருட அனுபவத்தில் சிறந்த சேவை**

குறைந்த விலையில் துரிதமாகவும் குறிப்பிட்ட நேரத்துக்கும் பெற்றிட

**ஏ வண் ரொப் குவாலிற்றி பூக்கடை**

அழையுங்கள்
தங்களுக்குப் பணிவன்புடன் சேவை செய்யக் காத்திருப்பவர்கள்:
பிள்ளை அல்லது சிவா

2871 Lawrence Ave. East, Scarborough, Ontario
(Brimley & Lawrence)

**Tel: (416) 269-5522 Cell: (416) 989-0207**

கனடா - புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினரால்
கலை விழாக் காணும் “பூவரசம்பொழுது ’2002” சிறப்புற நடைபெறுவதுடன்
மென்மேலும் அவர்களது தமிழ்ப் பணி தொடர எமது நல் வாழ்த்துக்கள்!

*மசிசாகா மாநகரில் 10 வருட புடவை விநியோகத்துறையில் பாதம் பதித்திடும் விஜயாஸ் சில்க் ஸ்தாபனத்தாரின் மற்றுமொரு மளிகைக் களஞ்சியம்*

# AMMA IMPORTERS INC.

# அம்மா இம்போற்ரேஸ் இங்.

அரசி, பருப்பு வகைகள், நல்லெண்ணை, Spices, Textiles, Kitchenware, Stainless Steel, Aluminum, சுவாமி சிலைகள், Brass Items, Sumit Mixie,
அம்மா மிளகாய்த்தூள், அம்மா அரிசிமா
அனைத்தும் எம்மிடம் கிடைக்கும்







2410 TEDLO STREET, UNIT #3
MISSISSAUGA, ON.


**Tel: (905) 270-7764 Fax: (905) 270-0064**

பலவருட அனுபவம் மிக்கவர்களின்
நிர்வாகத்தில்
ஒரு வாகன பராமரிப்பு நிலையம்

# NEW STAR AUTO SERVICE

Complete
Automotive Service
and Repairs by Fully Licensed Mechanics

**ALL KINDS OF**
**MECHANICAL WORKS**
**TRANSMISSION & ENGINES REBUILDING**
**WHEEL ALIGNMENT**
**BRAKES இன்னும் பல...**



சகலவிதமான
வாகன திருத்த
வேலைகளையும்
தரமாகச்
செய்து கொள்ள
நாடுங்கள்
NEW STAR

**CALL: WICKEY**

**Tel./ FAX: (416) 747-1743**

**100 TURBINE DRIVE, UNIT 6, NORTH YORK**
**(West of Weston on Steeles)**

பல்லின மக்களின் பல்பொருள் அங்காடி

With best compliments from

# உதயாஸ் சுப்பர் மார்க்கட்


உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள், மற்றும் இலங்கையில் தயாராகும் பழ ஜாம், பழரசங்கள், பனம் பொருட்கள் அத்துடன் தென்னிந்திய, மேற்கிந்திய, கனேடியப் பாவனைப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.


உடன் மரக்கறி வகைகள், பால் பழ வகைகள், ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி என்பனவும் கிடைக்கும்

நீங்கள் விரும்பும் அனைத்து பாடல் ஒலிப்பதிவு நாடாக்கள் பழைய புதிய வீடியோப் படங்கள் மற்றும் இலங்கை, இந்திய பத்திரிகைகள் சஞ்சிகைகள் உடனுக்குடன் கிடைக்கும்

Video, CD வாடகைக்கும் எல்லாவிதமான Video பிரதிமாற்றத்திற்கும் நாடுங்கள்





5010 Steeles Ave. West # 14

Etobicoke, Ont. (Steeles / Kipling)

**Tel.: (416) 740-7971 Fax: (416) 740-8568**

பூவரசம் பொழுது '2002 விழாவுக்கு எமது நல்வாழ்த்துக்கள்!

# அபிராமி கேற்றறிங்

# Abbirami Catering

**Take out & Catering**

* சகல உணவு வகைகளையும் வாரத்தில் 7 நாட்களும் எந்தவித கொண்டாட்டங்களுக்கும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
* உணவு, மண்டப ஒழுங்கு - ஒவ்வொரு சேவையையும் அந்தத் துறையில் கைதேர்ந்த நிபுணத்துவம் பெற்றவர்களால் தரப்படுகின்றது.
* மணம், சுவை கொண்ட அறுசுவை உணவுகளை நிபுணத்துவத்துடன் தயார் செய்து விநியோகிப்பவர்கள்



* WEDDINGS
* BIRTHDAYS
* PARTIES
* SPECIAL EVENTS

COMPLETE SERVICE

& DELIVERY

## 2619 EGLINTON AVE. EAST

## SCARBOROUGH, ONT.

(BETWEEN BRIMLEY & MIDLAND)

TEL.: (416) 266-5372

புங்குடுதீவு மக்களுக்கு எப்பொழுதுமே ஆதரவு கொடுத்துவரும் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் நடாத்தும் 7வது "பூவரசம் பொழுது" இனிதே நடைபெற நல்லாசிகள் கூறி நிற்பவர்கள் "ஸ்டார் டிறைவிங் ஸ்கூல்" நிறுவனத்தினர்.


# STAR

## DRIVER'S TRAINING SCHOOL

REGISTERED AND APPROVED BY MINISTRY OF TRANSPORTATION AND METRO LICENSING COMMISSION

நீங்கள் ஒரு சிறந்த
தன்னம்பிக்கையுள்ள
வாகன சாரதியாக
வரவிரும்புகிறீர்களா?
G1 G2 வீதிப்பரீட்சைக்கு
உடனடியாகவே முன்
அனுமதி (Appointment)
பெற விரும்புகிறீர்களா?

கிழமையில் 7
நாட்களும் உங்கள்
வசதிக்கேற்ப பயிற்சிகள்




* GOVERNMENT LICENSED INSTRUCTORS
* DAY, EVENING, WEEKEND CLASSES
* PRIVATE IN CAR TRAINING
* FREE PICK UP AT HOME, WORK OR SCHOOL
* CAR AVAILABLE FOR ROAD TEST
* EARLY ROAD TEST ARRANGEMENTS
* COMPARE OUR LOWEST RATES
* DISCOUNT ON INSURANCE UP TO 41%
* SPECIALIZED IN HIGHWAY TRAINING (G2 EXIT)

அழையுங்கள்: சபாநாதன் (சபா)
Professional Driving Instructor

**Tel: (416) 424-3133 Cell: (416) 402-5360**

# டாக்டர் கோபால் கோபாலகிருஷ்ணன்

B.D.S. (Cey) N.D.E.B (Canada) I.A. Ortho. (USA)

## Friendly Gentle Caring Environment

**Family Dentist with Orthodontic Practice**

வாரத்தில் ஏழு நாட்களும் சேவை உண்டு



குடும்ப பல் வைத்தியர்
**Dr. Gopal Gopalakrishnan**

**சேவைகள் - Services**

Cosmetic Dentistry - White Fillings,
Orthodontics - Braces, Teeth Whitening,
Gum Treatment, Root Canal Treatment
Oral Surgery and Extractions,
Crown and Bridge, Dentures



* 24 வருடங்கள் தொடர்ந்து பல் வைத்திய அனுபவம். இலங்கை, ஓமான், கனடா (நியூபவுண்லாந்து) நாடுகளில் அரசாங்க பல் வைத்திய சேவையாற்றிய அனுபவம்.

* இலங்கை பேராதனை மருத்துவபீடம் பல்வைத்திய விரிவுரையாளராகக் கடமையாற்றிய அனுபவம்.

* பற்களை ஒழுங்குபடுத்துதல் Orthodontics பல வருட அனுபவம். International Association of Orthodontics (USA) பயிற்சி பெற்றவர்.

* மருத்துவப் பிரச்சனை உள்ளவர்களின் பல் வைத்தியத்தில் பல வருட அனுபவம்.

* பற்களைப் பிடுங்காமல் காப்பாற்ற வேர் அடைக்க முடியும்.

1910 Kennedy Road, Scarborough
(Kennedy / Ellesmere)
Tel.: (416) 299-7080 (416) 299-0377

# மூலிகை வைத்தியம்

# HERBAL TREATMENT

* நீண்ட நாள் வியாதிகள்
* பிடிவாதமான நோய்கள்
* ஆய்வுகளில் புலப்படாத நோய்கள்



## DR. N.M KUMAR

**MBBS, CNHP, Canada**
**HERBALIST**

* இங்குள்ள வைத்திய முறைகளால் உங்கள் வியாதிகள் குணமடையவில்லையா?

* இன்னதென்று கண்டுபிடிக்காமல் கைவிடப்பட்ட நோய்களா?

* இனி என்ன செய்வது! இலங்கைக்குப் போவோமா? இந்தியாவுக்குப் போவோமா? என்ற மனக்குழப்பமா?

என்றும் எங்கும் நோயாளிகளுக்கு மூலிகை வைத்தியம் ஓர் வரப்பிரசாதமாகும். ஒரு தடவை தொலைபேசியில் அழையுங்கள். பல கவலைகளும் மன உளைச்சல்களும் தீரும். மூலிகை வைத்தியம் செய்யலாமா? செய்யக் கூடாதா? என்பதை நீங்களே பின்பு தீர்மானிப்பீர்கள்.


**BY APPOINTMENT ONLY**
முன் பதிவு மட்டும்
**TEL: (416) 284-1341**

புங்குடுதீவுவாழ் மக்களுக்கு என்றும் உறுதுணையாக இயங்கிவரும்
கனடா - புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் நடாத்தும்
7வது ஆண்டு "பூவரசம் பொழுது 2002" இனிதே நடைபெற
எல்லாம் வல்ல ரொறன்ரோ - ஸ்ரீ வரசித்தி விநாயகரை வேண்டுகின்றேன்.

# E.Z DRIVING SCHOOL

Qualified and skilled instructor and teacher

Highly knowledgeable in teaching
G1 local and G2 Hwy.




Driving knowledge is necessary

41% OFF FOR INSURANCE

*** Friendly Service**
*** Several Award Winner**

3630 Lawrence Avenue East
Suite 23
Scarborough, ON
M1G 1P6

**CALL: S. SABARATNAM (Saba)**
**(Professional Driving Instructor and Teacher Licenced by the Ministry of Transportation)**

**Cell: (416) 931-3444**
**Tel.: (416) 412-7904**

# Sri Kanagambika Jewellery

## ஸ்ரீ கனகாம்பிகா நகைமாளிகை

சகல ஓடர்களும் திருத்த
வேலைகளும் விசேட விலைச்
சலுகையில் செய்து
கொடுக்கப்படும்.

பழைய நகைகள் புதிய
நகைகளாக மாற்றித் தரப்படும்.

சகலவிதமான
கைவண்ணம்
கூடிய நகைத்
தேவைகட்கு
தரமான
தங்கநகை
மாளிகை



208 Markham Road, Scarborough, Ont.
(Markham & Eglinton)
**Tel.: (416) 265-9166**

# VS Productions

WEDDINGS
ENTERTAINMENT
3-D ANIMATION
T.V PRODUCTION
MULTI-CAMERA
JIB ARM (32 Feet Crane)




பிரமாண்டமான நவீன கருவிகளுடன்
பிரபல்யமான கலைஞர்கள் புதிய
நிகழ்வுகளை புதுமை பொங்கிட
வீடியோவில் பதிக்கிறார்கள்.

**2250 MIDLAND AVE**
**UNIT 25**
**SCARBOROUGH,**
**ONT.**
**TEL: (416) 299-9030**
**CELL: (416) 200-9080**
**PAGER: (416) 498-9030**

ஓம்

பூவரசம் பொழுது '2002 சிறப்புற

எமது நல்வாழ்த்துக்களும் நல்லாசிகளும் உரித்தாகுக!


# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

## அனைத்து இந்துமத கிரியைகள் சேவை

**பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்** (ஐயாமணி, புங்குடுதீவு -10)

கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்துமத குரு

**(416) 2 6 6 - 3 3 3 3**



திருமணம், திருமணப் பதிவு, புதுமனை புகுதல், கடை திறப்பு வைபவம், புண்யாக வாசனம், பூப்புனித நீராட்டு விழா, பூமாலை, ஆண்டாள் மாலை, சடை நாகம், தலை நகை முழுவதும், முத்து மணவறை, தலைப்பாகை, பந்தல் அலங்காரம், கல்யாண பூசைப் பொருட்கள், முத்துச் சப்பரம், ஆலயத் திருவிழா, ஆலய வைபவங்கள் ஆகிய அனைத்துக்கும் எப்போதும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**(416) 2 6 6 - 3 3 3 3**

628E Birchmount Road, Scarborough, Ontario

**Tel.: (416) 266-3333**

ஸ்காபரோ, ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் (416) 291-8500

# VIVEKA
## PRINTERS

PRINT
PRINT

உங்கள் சகல விதமான அச்சுத் தேவைகளுக்கும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

பல வர்ண வேலைகளுக்கு
(4 Colour Printing) பல்லினத்தவர்களிடமும் பெயர்
பெற்ற ஸ்தாபனம்

# விவேகா அச்சகம்

80 Barbados Blvd.

Scarborough, Ont.
(Eglinton & Danforth)
**Tel.: (416) 410-6401**



# Leading Auto Repair Inc.

(Complete Automotive Service
& Repairs by Fully Licensed Mechanics)

**LEADING**

**RATE
WORK
TIME**

**BRAKE, CLUTCH, TUNE-UP, EXHAUST, FRONT END, SHOCKS, ENGINE & TRANSMISSION, UNDER COATING / RUST PROOFING, TIRE CHANGING & WHEEL BALANCING, BODY WORK & PAINTING (SPECIALIZING IN INSURANCE CLAIM)**



நல்லவர்களின் வழிகாட்டலில்...
வல்லவர்களின் தொழில் நுட்பத்தில்...
நகரில் ஒரு நல்ல ஸ்தாபனம்
கடின உழைப்பின் சேமிப்பு மையம்
தொடர்புகளுக்கு: குகன்

59 Crockford Blvd, Unit 3B
Scarborough, ON
(Warden & Lawrence)

Tel.: (416) 615-2886 (AUTO)
Fax: (416) 615-0887

எமது நல் வாழ்த்துக்கள்!

# LOURDES * லூர்ட்ஸ்

**Importers, Distributors & Retailers of....**

- East - West Indian Groceries
- Fresh Fish & Meat
- Fresh Vegetables & Fruits
- Frozen Food

195 -199 Markham Rd.
Scarborough, Ont.
Tel.: (416) 266-5025
Fax: (416) 266-2674

**EAST & WEST INDIAN STORE AND CONVENIENCE & GROCERY**






அன்றாட தேவைகளுக்கான பலசரக்குப் பொருட்களுக்கும்
மீன், இறைச்சி, மரக்கறி, பழவகைகள், உணவுப் பொருட்கள்
என்பனவற்றையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் சிறப்புறப் படைத்திடும்
பூவரசம் பொழுது '2002 சிறப்புற வாழ்த்துகிறோம்.

* குற்றவியல் வழக்குகள்
* குடிவரவு அகதி நிலை விண்ணப்ப விசாரணைகள்
* மேன் முறையீடுகள்
* மனிதாபிமான அடிப்படையில் விண்ணப்பங்கள்
* ஸ்பொன்சர் சம்பந்தமான சகல விடயங்கள்
* வீடு வியாபார ஸ்தாபனங்கள் வாங்கல் விற்றல்
* குடும்ப விவகாரங்கள்
  (விவாகரத்து, பிள்ளைகள் பராமரிப்பு,
  பிள்ளைகள் பாதுகாப்பு, சொத்துக்கள் பிரித்தல்)



# P. KAYILASANATHAN

**B.A. (Cey.) LLB. (Cey.)**
Barrister & Solicitor
2401 Eglinton Avenue East, Suite #302
Scarborough, Ontario M1K 2M5
**Tel.: (416) 752-9561 Fax: (416) 752-7262**

# TRAFFIC TICKET ADVOCATE

* All Traffic Tickets
* Speeding
* Careless
* Accidents
* Insurance
* Licence Suspension

2857 Lawrence Ave. E.
Suite 12
Scarborough, ON
M1P 2S8

**C.S. Bala, LLB. (Lond. U.K)**
**Defence Agent**

**Tel.: (416) 261-2168**
**(416) 294-4166**

**PHYSICIANS & HEALTH SERVICES**

# குடும்ப வைத்திய நிலையம்

Experienced female / male physicians

Personal & Family Counselling

Special arrangements for ladies



**Raj Kiruba, MD,MBBS,CCFP**

*Family Physician*

**Dr. Raj Kiruba MBBS, MD, CCFP**
**Family Physician**

2, Fenton Road
Unit 4, Markham
Ont. L3R 7B3

Tel: 905 - 948 - 9455
905 - 948 - 9534
Fax: 905 - 948 - 0570

**Tel.: (416) 267-0010**



# ஸ்ரீ வித்யா பீடம்

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும்
சிவஸ்ரீ தியாக முருகானந்த குருக்கள்
(நந்தன் ஐயா)
நுணாவில் கிழக்கு சாவகச்சேரி

திருமணம், பதிவுத் திருமணம்
மற்றும் அனைத்து இந்துமத கிரியைகளுக்கும்
மங்கள வைபவங்களுக்கும்
மண்டப ஒழுங்குகளுக்கும் அழையுங்கள்

**101 DUNDALK DRIVE UNIT # 24**
**SCARBOROUGH, ONT.**
**(KENNEDY & ELLESMERE)**
**TEL.: (416) 299-4957**

"பூவரசம் பொழுது"விற்கு எமது நல்வாழ்த்துக்கள்

**மங்கள நாட்கள் தொடக்கம் விருந்துபசாரங்களென**
**மக்கள் மனம் விரும்பிச் சுவைப்பது.....**

# அசோக் பீடா

அதே மண்வாசனை பொருந்திய ஊர் சுவையுடன் கூடிய
உங்கள் வைபவங்களுக்கு விருந்தினரை மனம் குளிர வைப்பது



"அசோக் பீடாவே"
தொடர்புகளுக்கு:
(416) 438-2077
(905) 948-1706



# AIR LINK TRAVEL LTD.

*Best travel agent on your heart!!*

It is a time to fly your home country!!

TORONTO
LONDON
COLOMBO

நீங்கள் தாயகம் நோக்கிப்
பயணமாகின்றீர்களா?
குறைந்த கட்டணத்துடன் சொகுசான
பயணத்திற்கு அழையுங்கள்

**Tel: (416) 292-6200**

5200 Finch Avenue, Suite# G 115 (Middlefield & Finch)

# ALANKAR DECOR

**Elegant Interior Designers**

**www.alankardecor.com**

Colour Selection and Coordination
Space Planning
Drapery and Blinds
Accessories Selection
Furniture Selection

தொடர்புகளுக்கு:
ஈசன் ஆறுமுகம்
(திருப்பூங்குடி)

**416 284 7464**
**416 910 7465**
info@alankardecor.com

**அலங்கார் டேக்கோர்**

மகிழ்வுதரும் மனையலங்காரம்

189 Oakmeadow Blvd., Scarborough, ON M1E 4H7

# M. KASIPPILLAI & SONS INC.

துரித பணமாற்று சேவை

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!"


பூவரசம் பொழுதிற்கு எமது
நல்வாழ்த்துக்கள்!

1957 -2002
45 ஆண்டுகள்

கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?

மு. காசிப்பிள்ளை
சக புத்திரர்கள்

* 45 ஆண்டுகள் வர்த்தகத் துறையில் முன்னோடிகள்.
* 12 ஆண்டுகள் கனடாவாழ் தமிழ் மக்களின்
மனங்களில் நம்பிக்கை, நாணயம் என்ற
நன்மதிப்பைப் பெற்றவர்கள்





3228 EGLINTON AVE. E. SUITE #3
SCARBOROUGH, ONT.
TEL.: (416) 267-8221



# ஐயம்ஸ் குறோசறிஸ்

# IYAM GROCERY

துரித பணமாற்றுச் சேவை, Fax Service


PHONE CARDS
20% OFF


உங்களுக்குத் தேவையான அனைத்துவகை
உணவுப் பொருட்களும் பசுமையான மரக்கறிகள்,
தாயக மணங்கமழும் கடலுணவுகள், உடன் மீன்,
உடன் இறைச்சி வகைகள், நண்டு, கணவாய் மற்றும்
இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் அனைத்தும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



WE
ACCEPT
VISA,
INTERACT

2877 Jane Street # 6, Yorkwood Plaza
North York, Ontario
Tel./ Fax: (416) 636-0884





# மதுரா கேற்றறிங் அன் ரேக் எவே

# MATHURA CATERING & TAKE AWAY



Mathura

திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் கொண்டாட்டங்கள் மற்றும் ஒன்றுகூடல் அனைத்துக்கும் அழையுங்கள்.

உங்களுக்குத் தேவையான அனைத்து சிற்றுண்டி வகைகளும் எம்மிடம் கிடைக்கும்.

25 பேர் கொண்ட கொண்டாட்டங்களுக்கு உறவினர்களுடன் கூடி உண்டு மகிழ்வதற்கு தேவையான 6 வகையான உணவு (Packages) பக்கேஜ் களை மதுரா கேற்றறிங் ஸ்தாபனத்தினர் அறிமுகப்படுத்தி உள்ளனர்.

மதுராவின் உணவு வகைகளோ ஒருவிதம்....! ஒவ்வொன்றும் தனி ரகம்....!



**5790 SHEPPARD AVE. EAST**
**SCARBOROUGH, ONT.**
**Tel.: (416) 754-0110**



# மெஹா பாங்குவற் ஹால்

**50 பேர் முதல் 500 பேர் வரை கலந்து கொள்ளும் அழகிய மண்டபம்**

திருமணமா, பிறந்ததினமா, பூப்புனித நீராட்டு விழாவா, கல்லூரியின் அல்லது ஸ்தாபனங்களின் வருடாந்த விழாக்களா, வேறு வைபவங்களா, அந்தியஷ்டியா, திவஷமா, வீட்டில் நடக்கும் சிறு வைபவமா? எதுவானாலும் கூறுங்கள்; வகை செய்வோம்.

எந்தவித வைபவங்களுக்கும் அறுசுவை உணவுகளுடன் Full Package (சகலதும் அடங்கும்) உங்கள் விழாக்களை இனிதே நடத்திட அழையுங்கள்



# MEGA BANQUET HALL

3330 Pharmacy Ave. Scarborough, Ontario
(Pharmacy & McNicoll)
**Tel.: (416) 457-8224 / 492-5589**

R.V JEWELLERS

R. V. ஜுவலர்ஸ்

*"Handmade Custom Jewellery 22K High Quality Gold"*

*Whole Sale and Retail*

**Call: Satha**

**2397 FINCH AVE. WEST**
**NORTH YORK, ON**
**M9M 2X1**

**Tel.: (416) 459-0821**
**(416) 747-7771**
**Fax: (416) 747-8994**

"பூவரசம் பொழுது"விற்கு எமது நல்வாழ்த்துக்கள்

# SEYON FINANCIAL SERVICES

3852 Finch Ave. E., Unit #205, Scarborough, Ont. M1T 3T9
**Tel.: (416) 289-8860 Fax: (416) 609-9889**

* Prior Years Tax Returns Filing Available
* RRSP., RESP and mutual funds

Tax Service Available For:

* Partnership
* Rental Units
* Small Business

Contact the expert for all your mortgage and loan requirements

Accident Claim & Traffic Tickets

Progressive Institute
Grade 9 to OAC
Maths, Science and English

# நினைவில் நிறைந்தவைகள்

## புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் கனிஷ்ட மகா வித்தியாலயம்

**சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய கல்விமான் மார்க்கண்டு சோதிநாதர் அவர்களால் 1925 இல் அவரது சொந்தக் காணியில் (2 ஏக்கர்) உருவாக்கப்பட்டதே புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் கனிஷ்ட மகா வித்தியாலயம்.**

*ஸ்ரீமான் மார்க்கண்டு சோதிநாதர் இப்பாடசாலையின் முதல் தலைமையாசிரியராகக் கடமையாற்றியதோடு இவ்வுலகில் 106 ஆண்டுகள் (1845-1951) வாழ்ந்த மாமனிதர்.*

### புங்குடுதீவில் கல்விப்பணி செய்த கல்விக்கூடங்கள்:

| இல: | பாடசாலைகள் | வட்டாரம் |
|---|---|---|
| 01. | புங்குடுதீவு மகா வித்தியாலயம் | 11 |
| 02. | புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் | 12 |
| 03. | புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயம் | 05 |
| 04. | புங்குடுதீவு ஸ்ரீ கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயம் | 08 |
| 05. | புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் கனிஷ்ட மகா வித்தியாலயம் | 09 |
| 06. | புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம் | 01 |
| 07. | புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க த.க.வித்தியாலயம் | 02 |
| 08. | புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் த.க.வித்தியாலயம் | 03 |
| 09. | புங்குடுதீவு இறுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் த.க.வித்தியாலயம் | 04 |
| 10. | புங்குடுதீவு சேர் துரைச்சாமி வித்தியாலயம் | 04 |
| 11. | புங்குடுதீவு அரியநாயகம்புலம் வித்தியாலயம் | 06 |
| 12. | புங்குடுதீவு இராசராஜேஸ்வரி வித்தியாலயம் | 10 |
| 13. | புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம் | 07 |
| 14. | புங்குடுதீவு குறிகாட்டுவான் அரசினர் த.க.வித்தியாலயம் | 03 |
| 15. | புங்குடுதீவு பராசக்தி வித்தியாலயம் | 03 |

# "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"

## "பூவரசம் பொழுது 2002 சிறப்புற அமைய என் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்"

வாழ்த்துபவர்: **திரு.சின்னத்தம்பி கோபாலபிள்ளை**
முன்னாள் செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் கனிஷ்ட மகா வித்தியாலயம்.

# நன்றி நவில்கின்றோம்

2002 ம் ஆண்டில் மலர்ந்துள்ள பூவரசம் பொழுதைக் கண்டு களித்து மனநிறைவுடன் இருக்கும் இவ்வினிய மாலைப் பொழுதில் தங்களனைவரையும் நன்றியரங்கில் சந்திப்பதையிட்டுப் பெருமகிழ்வு அடைகின்றோம்.

எமது அழைப்பையேற்று பிரதம விருந்தினராகக் கலந்து விழாவைச் சிறப்பித்த **Dr**.திரு.திருமதி.யோகநாதன் அவர்களுக்கும்,

விழாவுக்கான நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கிய கலைஞர்களுக்கும், பங்கு பற்றிய இயல், இசை, நாடக கலைஞர்களுக்கும்,

விளம்பரம் தந்துதவிய வாத்தகப் பெருமக்களுக்கும், மதகுருமார்களுக்கும், வாழ்த்துச் செய்திகளை வழங்கிய பெரியோர்களுக்கும்,

இவ்விழா மலரினை கணனி அச்சுப்பதிப்பு செய்துதவிய திருமதி.மதி தர்மபாலன் அவர்களுக்கும், வர்த்தக விளம்பரங்களை வடிவமைப்புச் செய்த செல்வா கிருபா, டிஜி கிறாபிக் கருணா ஆகியோருக்கும், அழகுற அச்சமைப்புச் செய்த விவேகா அச்சகத்தினருக்கும்,

நிகழ்ச்சிகளைப் வீடியோ படமாக்கிக் கொண்டிருக்கும் **S.V.Productions**, புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்கும் **QuickSnaps** ஆகிய நிறுவனத்தினருக்கும்,

பூவரசம் பொழுது விழாவை விளம்பரப்படுத்திய பத்திரிகைகள், வானொலி நிறுவனங்களுக்கும், ஒலி - ஒளி அமைப்புக்களைச் செய்து உதவியவர்களுக்கும்,


அரங்கைத் தந்துதவிய ரொறன்ரோ கல்விச் சபையினருக்கும், இம்மண்டபத்திற்கான செலவினை பொறுப்பேற்றுக் கொண்ட "விமிக்கா" மண்டப நிறுவனத்தினருக்கும்,

சிறப்பாக இம்மலர் வெளிவரக் காரணமாக இருந்த மலர்க்குழுவினருக்கும்,

மற்றும் பலவிதங்களில் உதவிகள் செய்து **"பூவரசம் பொழுது 2002"** ஐ இவ்வருடமும் வெற்றி விழாவாக்கிய அனைவருக்கும்,

இன்று வரை தங்களின் பெறுமதிமிக்க நேரங்களை எல்லாம் சங்க வளர்ச்சிக்காக அர்ப்பணித்து ஆக்கமும், ஊக்கமும் தந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து நிர்வாக உறுப்பினர்களுக்கும், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகள்.

**புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் - கனடா**


TO GET THE BEST DEAL IN TOWN...
Toronto Real Estate Board
AGREEMENT OF PURCHASE AND SALE
CONDOMINIUM RESALE
(FOR USE IN THE PROVINCE OF ONTARIO)
RATNAM INDIRAN
CHAI CHIN LOU AND ELIZHABETH CHOU
123 MAIN STREET
CITY OF TORONTO
YCC/420
111
1/#139
SEVENTY TWO
One Hundred and Sixty Thousand Dollars and Zero Cents
Five Thousand Dollars and Zero Cents
PURCHASE PRICE:
DEPOSIT:
upon acceptance
Ahilan Thanabalasingham
Sales Representative
Bus: (416) 284-4751
Dir: (416) 410-4645
E-mail: ahilan@royallepage.ca
www.royallepage.ca
How you find a great real estate agent
ROYAL LEPAGE
ROYAL LEPAGE REAL ESTATE SERVICES LTD., BROKER
Residential Real Estate Services
4218 Lawrence Avenue East
Toronto, Ontario M1E 4X9




துருவப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட
21ம் நூற்றாண்டு ஏடு



**ROYAL LEPAGE**

**Tam Sivathasan,** B. Sc. Eng.
**Royal LePage R.E.Svcs. Ltd.**
4218 Lawrence Ave. East
West Hill, ON
**416.284.4751**
**416.804.3443**